# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# அரசியலமைப்பு

*(2022, ஒற்றோபர் 31 ஆந் தேதி வரையிலான திருத்தங்களுடன்)*

*(இருபத்தோராவது திருத்தம்வரைக்குமான திருத்தங்களை உள்ளடக்கியது)*

*மறுபதிப்பு 2023*

பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# *அரசியலமைப்பு*

***(2022, ஒற்றோபர் 31 ஆந் தேதி வரையிலான திருத்தங்களுடன்)***

*(இருபத்தோராவது திருத்தம் வரைக்குமான திருத்தங்களை உள்ளடக்கியது)*

*மறுபதிப்பு 2023*

***பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது***

***அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது***

*மறுபதிப்பு 2023*

**பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது**

*இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் சட்டமூல அலுவலகத்தினால் பதிப்பிக்கப்பெற்ற இப்பதிப்பு, பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான இருத்தோராவது திருத்தம் வரைக்குமான திருத்தங்களை உள்ளடக்கிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீளச் சமர்ப்பிக்கின்ற உத்தியோகப்பற்றற்ற பதிப்பாகும். அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட உரிய திருத்தங்கள் யாவை என்பதை அடிக்குறிப்புகள் காட்டுகின்றன.*

2 - PL 013529 - 500 (2022/12)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

**பொருளடக்கம்**

**அத்தியாயம் I**

**மக்களும், அரசும், இறைமையும்**


| உறுப்புரை | | பக்கம் |
|---|---|---|
| 1 | அரசு | 1 |
| 2 | ஒற்றையாட்சி அரசு | 1 |
| 3 | மக்களின் இறைமை | 1 |
| 4 | இறைமையைப் பிரயோகித்தல் | 1 |
| 5 | குடியரசின் ஆள்புலம் | 2 |
| 6 | தேசியக் கொடி | 2 |
| 7 | தேசிய கீதம் | 2 |
| 8 | தேசிய தினம் | 2 |


**அத்தியாயம் II**
**பௌத்த மதம்**


| | | |
|---|---|---|
| 9 | பௌத்த மதம் | 3 |


**அத்தியாயம் III**
**அடிப்படை உரிமைகள்**


| | | |
|---|---|---|
| 10 | சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன | 4 |
| 11 | சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம் | 4 |
| 12 | சமத்துவத்துக்கான உரிமை | 4 |
| 13 | ஏதேச்சையாகக் கைதுசெய்யப்படாமலும் தடுத்துவைக்கப் படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும், கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயனுடையனவான தண்டனைச் சட்டவாக்கங்களைத் தடைசெய்தலும் | 5 |
| 14 | பேச்சுச் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு செய்வதற்கான சுதந்திரம், முயற்சிசெய்வதற்கான சுதந்திரம், தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம் முதலியன | 6 |
| 14அ | தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை | 7 |
| 15 | அடிப்படை உரிமைகளின் மீதான மட்டுப்பாடுகள் | 8 |
| 16 | இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் தொடர்ந்தும் வலுவிலிருத்தல் | 9 |
| 17 | ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கெதிரான பரிகாரம் | 9 |

**உறுப்புரை** **பக்கம்**

**அத்தியாயம் IV**
**மொழி**


| | | |
|---|---|---|
| *18* | *அரசகரும மொழி* | *10* |
| *19* | *தேசிய மொழிகள்* | *10* |
| *20* | *பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் உள்ளூரதிகார சபைகளிலும் தேசிய மொழிகளைப் பயன்படுத்துதல்* | *10* |
| *21* | *கல்வி மொழி* | *10* |
| *22* | *நிருவாக மொழிகள்* | *11* |
| *23* | *சட்டவாக்க மொழி* | *13* |
| *24* | *நீதிமன்றங்களின் மொழிகள்* | *14* |
| *25* | *இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மொழிகளைப் பயன்படுத்துவதற்குப் போதிய வசதிகளை ஏற்பாடு செய்தல்* | *16* |
| *25 அ* | *இவ்வத்தியாயத்துடன் ஒவ்வாததாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின், ஏற்பாடு நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்* | *16* |


**அத்தியாயம் V**
**பிரசாவுரிமை**


| | | |
|---|---|---|
| *26* | *இலங்கைப் பிரசாவுரிமை* | *17* |


**அத்தியாயம் VI**
**அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்**


| | | |
|---|---|---|
| *27* | *அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள்* | *18* |
| *28* | *அடிப்படைக் கடமைகள்* | *20* |
| *29* | *அரச கொள்கைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் நீதிமன்ற ஆய்வுக்குட்படாமை* | *21* |


**அத்தியாயம் VII**
**ஆட்சித்துறை**
**குடியரசின் சனாதிபதி**


| | | |
|---|---|---|
| *30* | *குடியரசின் சனாதிபதி* | *22* |
| *31* | *சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தலும் அவரது பதவிக்காலமும்* | *22* |
| *32* | *பதவியேற்றல்* | *26* |
| *33* | *சனாதிபதியின் தத்துவங்கள் மற்றும் பணிகள்* | *27* |
| *33அ.* | *நீக்கப்பட்டுள்ளது* | |
| *34* | *மன்னிப்பு வழங்கல்* | *28* |
| *35* | *சனாதிபதிக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கான விடுபாட்டுரிமை* | *30* |
| *36* | *சம்பளமும் ஓய்வூதியமும்* | *31* |
| *37* | *சனாதிபதிக்குரிய தத்துவங்களும் கடமைகளும், பணிகளும், முதலமைச்சரால் பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும், நிறைவேற்றப்படுதலும்* | *31* |

| உறுப்புரை | | பக்கம் |
|---|---|---|


| | | |
|---|---|---|
| 38 | சனாதிபதி பதவியை வறிதாக்கல் | 32 |
| 39 | சனாதிபதி உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லையென அல்லது சனாதிபதியின் தேர்தல் வறிதாகிவிட்டதென உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படல் | 34 |
| 40 | சனாதிபதி பதவியை வறிதாக்கலும், அடுத்து வரும் சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தலும் | 35 |
| 41 | சனாதிபதியின் பணியாட்டொகுதியினர் | 36 |


### அத்தியாயம் VII அ

### அரசியலமைப்புப் பேரவை


| | | |
|---|---|---|
| 41 அ | அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பு | 38 |
| 41 ஆ | பேரவையானது நியமனங்களை விதந்துரைத்தல் | 41 |
| 41 இ | பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல் | 42 |
| 41 ஈ | பேரவையானது செயலாளர் நாயகமும் ஏனைய அலுவலர்களும் | 43 |
| 41 உ | பேரவையின் கூட்டங்கள் | 43 |
| 41 ஊ | பேரவையின் உறுப்பினர்கள் பதவியில் தொடர்ந்திருத்தல் | 45 |
| 41 எ | பேரவையின் தத்துவங்களும் கடமைகளும் | 45 |
| 41 ஏ | செலவுகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் | 45 |
| 41 ஒ | பேரவையின் முடிபுகளின் முடிவாந்தன்மை | 45 |


### அத்தியாயம் VIII

### ஆட்சித்துறை

### அமைச்சரவை


| | | |
|---|---|---|
| 42 | சனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் | 46 |
| 43 | பிரதம அமைச்சரும் அமைச்சரவையும் | 46 |
| 44 | அமைச்சர்கள் மற்றும் அவர்களுடைய விடயங்களும் பணிகளும் | 46 |
| 45 | அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள் | 48 |
| 46 | பிரதி அமைச்சர்கள் | 48 |
| 47 | பிரதம அமைச்சரின் பதவிக் காலமும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்போரின் எண்ணிக்கையினதும் பதவிக் காலத்தினதும் வரையறை | 49 |

| உறுப்புரை | | பக்கம் |
|---|---|---|
| 48 | பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரான அமைச்சரவை | 50 |
| 49 | அமைச்சரவையைக் கலைத்தல் | 51 |
| 50 | பதில் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் | 52 |
| 51 | பிரதம அமைச்சரின் செயலாளரும் அமைச்சரவையின் செயலாளரும் | 52 |
| 52 | அமைச்சுக்களின் செயலாளர்கள் | 53 |
| 53 | பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை | 53 |

**அத்தியாயம் IX**
**நிறைவேற்றுத் துறை**
**பகிரங்க சேவை**

| | | |
|---|---|---|
| 54 | பகிரங்க சேவை ஆணைக்குழு | 54 |
| 55 | அமைச்சரவையினதும் ஆணைக்குழுவினதும் தத்துவங்களும் பணிகளும் | 56 |
| 56 | ஆணைக்குழுவின் குழுக்கள் | 57 |
| 57 | ஒரு பகிரங்க அலுவலருக்குப் பணிகள் கையளிக்கப்படுதல் | 57 |
| 58 | மேன்முறையீட்டு உரிமை | 58 |
| 59 | நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை | 58 |
| 60 | கையளிப்புள்ளவிடத்து ஆணைக்குழு தத்துவத்தைப் பிரயோகிக்காதிருத்தல் | 59 |
| 61 | கூட்டங்களிலான நடவடிக்கை முறை | 59 |
| 61 அ | சட்ட நடவடிக்கைகளிலிருந்தான விடுபாட்டுரிமை | 59 |
| 61 ஆ | வலுவிலுள்ள விதிகளும் ஒழுங்குவிதிகளும் பற்றிய பேணல்கள் | 60 |
| 61 இ | ஆணைக்குழுவுடன் தலையிடுதல் | 60 |
| 61 ஈ | பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை | 60 |
| 61 உ | சனாதிபதியினாலான நியமனங்கள் | 61 |
| 61 ஊ | பொருள் கோடல் | 61 |

**அத்தியாயம் X**
**சட்டமன்றம்**
**பாராளுமன்றம்**

| | | |
|---|---|---|
| 62 | பாராளுமன்றம் | 62 |
| 63 | பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை | 62 |
| 64 | சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் | 62 |
| 65 | பாராளுமன்றச் செயலாளர் நாயகம் | 63 |
| 66 | ஆசனங்களை வறிதாக்கல் | 64 |
| 67 | பாராளுமன்றத்தினதும் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன | 65 |
| 68 | உறுப்பினர்களின் படிகள் | 65 |
| 69 | வெற்றிடங்கள் இருப்பதைப் பொருட்படுத்தாது செயலாற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கு இருக்கும் தத்துவம் | 66 |

**உறுப்புரை** **பக்கம்**

## அத்தியாயம் XI
## சட்டமன்றம்
## நடவடிக்கைமுறையும் தத்துவங்களும்

70 பாராளுமன்றத்தின் அமர்வுகள் 67
71 ஒத்திவைத்தல் 69
72 வாக்களித்தல் 69
73 கூட்டநடப்பெண் 70
74 நிலையியற் கட்டளைகள் 70
75 சட்டமாக்கற் தத்துவம் 70
76 சட்டமாக்கற் தத்துவத்தைக் கையளித்தல் 71
77 வெளியிடப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமைகள் 72
78 சட்டமூலங்களை வெளியிடுதலும் சட்டமூலங்களையும் தீர்மானங்களையும் நிறைவேற்றுதலும் 72
79 சபாநாயகரது சான்றுரை 72
80 சட்டமூலம் எப்பொழுது சட்டமாகும் என்பது 73
81 உறுப்பினர்களை விலக்குதலும் குடியியற்றகுதியீனத்தை விதித்தலும் 74

## அத்தியாயம் XII
## சட்டமன்றம்
## அரசியலமைப்பைத் திருத்துதல்

82 அரசியலமைப்பைத் திருத்துதல் அல்லது நீக்குதல் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும் 76
83 மக்கள் தீர்ப்பினால் சிலவகைச் சட்டமூலங்கள் அங்கீகரிக்கப்படுதல் 77
84 அரசியலமைப்புடன் ஒவ்வாதனவாயிருக்கும் சட்டமூலங்கள் 77

## அத்தியாயம் XIII
## மக்கள் தீர்ப்பு

85 சட்டமூலங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களுக்குச் சமர்ப்பித்தல் 79
86 தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல் 79
87 நடவடிக்கைமுறை பற்றி பாராளுமன்றம் ஏற்பாடுசெய்தல் வேண்டும் 79

## அத்தியாயம் XIV
## வாக்குரிமையும் தேர்தல்களும்

88 தேருநர் ஒருவராக இருப்பதற்கான உரிமை 81
89 தேருநரொருவராக இருக்க இயலாமற்செய்யும் தகைமையீனங்கள் 81
90 பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமை 85

| உறுப்புரை | | பக்கம் |
|---|---|---|
| 91 | பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமற் செய்யும் தகைமையீனங்கள் | 85 |
| 92 | சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமற் செய்யும் தகைமையீனங்கள் | 88 |
| 93 | தேர்தல்கள் சுதந்திரமானவையும், சமத்துவமானவையும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமானவையுமாகவிருத்தல் | 89 |
| 94 | சனாதிபதிக்கான தேர்தல் | 89 |
| 95 | வரையறை ஆணைக்குழு | 90 |
| 96 | தேர்தல் மாவட்டங்கள் | 91 |
| 96 அ | நீக்கப்பட்டுள்ளது | |
| 97 | தேர்தல் மாவட்டங்களின் பெயர்கள் முதலியவற்றைப் பிரகடனஞ் செய்தல் | 92 |
| 98 | பல்வேறு தேர்தல் மாவட்டங்களாலும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவ் உறுப்பினர்களைத் தேர்தல் மாவட்டங்களிடையே பங்குபோடலும் | 92 |
| 99 | விகிதாசாரப் பிரதிநிதித்துவம் | 94 |
| 99 அ | பொதுத் தேர்தல் ஒன்றில் பெறப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் | 98 |
| 100 | தகைமையீனத்துக்குட்பட்டிருக்கும்போது பாராளுமன்றத்தில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்குமான தண்டம் | 100 |
| 101 | தேர்தல்கள் தொடர்பிலான ஏற்பாடுகளைப் பாராளுமன்றம் செய்யலாம் | 100 |
| 102 | வேட்பாளராக நிற்கும் பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் தேர்தல் காலத்தின்போது பணிபுரிதல் ஆகாது | 102 |


## அத்தியாயம் XIV அ
## தேர்தல் ஆணைக்குழு


| | | |
|---|---|---|
| 103 | தேர்தல் ஆணைக்குழு | 103 |
| 104 | ஆணைக்குழுவின் கூட்டங்கள் | 104 |
| 104 அ | முடிபுகளின் முடிவாந்தன்மையும் துடர்ச்சியிலிருந்து விடுபாட்டுரிமையும் | 105 |
| 104 ஆ | ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் | 105 |
| 104 இ | ஆணைக்குழுவால் பொலிசைப் பரவிச் சேவையிலிடுதல் | 108 |
| 104 ஈ | ஆயுதப்படையினரை பரவிச் சேவையிலிடுதல் | 109 |
| 104 உ | தேர்தல்கள் ஆணையார் தலைமையதிபதியும் ஆணைக்குழுவின் வேறு அலுவலர்களும் | 109 |
| 104 ஊ | தெரிவத்தாட்சி அலுவலர்கள் | 111 |
| 104 எ | பகிரங்க அலுவலர்கள் | 111 |
| 104 எஎ | பணிப்புக்களுடன் இணங்கியொழுகத் தவறுதல் குற்றமொன்றாதல் | 111 |
| 104 ஏ | எழுத்தாணைகளை வழங்குவதற்கான உயர் நீதிமன்றத்தின் தத்துவம் | 112 |
| 104 ஒ | பொருள் கோடல் | 112 |

**உறுப்புரை** **பக்கம்**

## அத்தியாயம் XV
## நீதித்துறை


| | | |
|---|---|---|
| 105 | நீதிமன்றங்கள் முதலியன தாபிக்கப்படுதல் | 113 |
| 106 | பகிரங்க அமர்வுகள் | 114 |


### நீதித்துறைச் சுதந்திரம்


| | | |
|---|---|---|
| 107 | உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தலும் அகற்றுதலும் | 115 |
| 108 | உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளின் சம்பளங்கள் | 116 |
| 109 | பதில் நியமனங்கள் | 116 |
| 110 | நீதிபதிகள் வேறு பணிகளை நிறைவேற்றுதலும் வேறுகடமைகளைப் புரிதலும் | 117 |
| 111 | மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தலும், அகற்றுதலும், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் | 117 |
| 111 அ | மேல் நீதிமன்ற ஆணையாளர்கள் | 118 |
| 111 ஆ | தீவு முழுவதற்குமான பிசுக்கால் | 119 |
| 111 இ | நீதித்துறையில் தலையிடுதல் தவறொன்றாகும் | 119 |


## அத்தியாயம் XV அ
## நீதித்துறைச் சேவை ஆணைக்குழு


| | | |
|---|---|---|
| 111 ஈ | நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அமைப்பு | 120 |
| 111 உ | ஆணைக்குழுவின் கூட்டங்கள் | 120 |
| 111 ஊ | ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் | 121 |
| 111 எ | ஆணைக்குழுச் செயலாளர் | 121 |
| 111 ஏ | ஆணைக்குழுவின் தத்துவங்கள் | 121 |
| 111 ஒ | நீதித்துறை அலுவலர்களும் பகிரங்க அலுவலர்களும் பதவி துறக்கலாம் | 122 |
| 111 ஓ | சட்ட நடவடிக்கைகளிலிருந்தான விடுபாட்டுரிமை | 122 |
| 111 ஔ | ஆணைக்குழுவுடன் தலையிடுதல் தவறொன்றாதல் | 123 |
| 111 க | பொருள் கோடல் | 123 |
| 112-115 | [நீக்கப்பட்டுள்ளன] | |
| 116 | உறுப்புரை 111இ என மீளளிலக்கமிடப்பட்டுள்ளது | |
| 117 | [நீக்கப்பட்டுள்ளது] | |


## அத்தியாயம் XVI
## மேனிலை நீதிமன்றங்கள்
### உயர்நீதிமன்றம்


| | | |
|---|---|---|
| 118 | உயர்நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கம் | 125 |
| 119 | உயர்நீதிமன்றத்தின் அமைப்பு | 125 |

**உறுப்புரை** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 120 | உயர்நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம் | 125 |
| 121 | சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கத்தினை சாதாரணமாகப் பிரயோகித்தல் | 127 |
| 122 | அவசரச் சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கத்தின் விசேட பிரயோகம் | 127 |
| 123 | சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் | 128 |
| 124 | சட்டமூலங்களினதும் சட்டவாக்க நடவடிக்கைகளினதும் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்குட்படுத்தப்படலாகாது | 129 |
| 125 | அரசியலமைப்பின் பொருள்கோடலில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம் | 129 |
| 126 | அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கமும் அதனைப் பிரயோகித்தலும் | 130 |
| 127 | மேன்முறையீட்டு நியாயாதிக்கம் | 131 |
| 128 | மேன்முறையீட்டு உரிமை | 131 |
| 129 | ஆலோசனை நியாயாதிக்கம் | 133 |
| 130 | தேர்தல் ஆட்சேபனை மனுக்களும் மக்கள் தீர்ப்பு மனுக்களும் தொடர்பிலான நியாயாதிக்கம் | 133 |
| 131 | பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம் | 134 |
| 132 | உயர்நீதிமன்ற அமர்வுகள் | 134 |
| 133 | நிமித்த நீதிபதிகளின் நியமனம் | 134 |
| 134 | உயர்நீதிமன்றத்தில் உரைப்பதற்கான உரிமை | 135 |
| 135 | உயர்நீதிமன்றப் பதிவகமும் பதிவாளர் பதவியும் | 135 |
| 136 | உயர்நீதிமன்ற விதிகள் | 135 |


## மேன்முறையீட்டு நீதிமன்றம்


| | | |
|---|---|---|
| 137 | மேன்முறையீட்டு நீதிமன்றம் | 137 |
| 138 | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் | 138 |
| 139 | மேன்முறையீடு தொடர்பிலான தத்துவங்கள் | 138 |
| 140 | ஆட்கொணர் எழுத்தாணைகள் தவிர்ந்த எழுத்தாணைகள் வழங்குவதற்குத் தத்துவம் | 139 |
| 141 | ஆட்கொணர் எழுத்தாணைகளை வழங்குவதற்கான தத்துவம் | 139 |
| 142 | மறியற்காரர்களைக் கொணருவதற்கும் அகற்றுவதற்குமான தத்துவம் | 140 |
| 143 | உத்தரவுகள் வழங்குவதற்கான தத்துவம் | 141 |
| 144 | பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் | 141 |
| 145 | பதிவேடுகளைப் பரிசோதனை செய்தல் | 141 |
| 146 | மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வுகள் | 141 |
| 147 | மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகமும் பதிவாளர் பதவியும் | 142 |

**உறுப்புரை** **பக்கம்**

**அத்தியாயம் XVII**
***நிதி***

| | | |
|---|---|---|
| *148* | *பாராளுமன்றம் பகிரங்க நிதி மீது கொண்டுள்ள கட்டுப்பாடு* | *143* |
| *149* | *திரட்டு நிதியம்* | *143* |
| *150* | *திரட்டு நிதியத்திலிருந்து பணத்தொகைகளை மீளப்பெறுதல்* | *143* |
| *151* | *எதிர்பாராச் செலவு நிதியம்* | *144* |
| *152* | *பொது அரசிறையைப் பாதிக்கும் சட்டமூலங்கள் பற்றிய சிறப்பேற்பாடுகள்* | *145* |
| *153* | *கணக்காய்வாளர் தலைமையதிபதி* | *145* |
| *153அ* | *கணக்காய்வுச்சேவை ஆணைக்குழுவின் அமைப்பு* | *146* |
| *153ஆ* | *ஆணைக்குழுவின் கூட்டங்கள்* | *147* |
| *153இ* | *ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும்* | *147* |
| *153ஈ* | *ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரசு கணக்காய்வுச் சேவையின் எவரேனும் ஏதேனும் முடிபை செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செல்வாக்கு செலுத்த எத்தனித்தல் தவறொன்றாதல்* | *148* |
| *153உ* | *சட்ட நடவடிக்கை முறைகளிலிருந்தான விடுபாட்டு உரிமை* | *149* |
| *153ஊ* | *செலவுகளும் செலவினங்களும்* | *149* |
| *153எ* | *நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்* | *149* |
| *153ஏ* | *ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகை சொல்ல வேண்டியதாக இருத்தல் வேண்டும்* | *149* |
| *154* | *கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளும் பணிகளும்* | *150* |

**அத்தியாயம் XVII அ**

| | | |
|---|---|---|
| *154 அ* | *மாகாண சபைகளைத் தாபித்தல்* | *153* |
| *154 ஆ* | *ஆளுநர்* | *153* |
| *154 இ* | *ஆளுநராக நிறைவேற்றுத் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல்* | *156* |
| *154 ஈ* | *மாகாண சபையின் உறுப்பாண்மை* | *156* |
| *154 உ* | *பதவிக்காலம்* | *157* |
| *154 ஊ* | *அமைச்சர்கள் சபை* | *157* |
| *154 எ* | *மாகாணசபைகளின் நியதிச்சட்டங்கள்* | *158* |
| *154 ஏ* | *சம்மதம்* | *161* |
| *154 ஒ* | *பொதுமக்கள் பாதுகாப்பு* | *162* |
| *154 ஓ* | *பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுகை* | *163* |
| *154 ஔ* | *நிருவாக ஒழுங்குமுறைத் தவறுகை* | *163* |
| *154 க* | *மாகாண சபையின் தத்துவங்களைப் பாராளுமன்றம் சனாதிபதிக்கு அளித்தல்* | *166* |
| *154 ங* | *நிதிசார் உறுதிச்சமநிலையின்மை* | *166* |
| *154 ஞ* | *மேல்நீதிமன்றம்* | *167* |
| *154 ட* | *மாகாண சபைகளின் பணிகள், தத்துவங்கள், தேர்தல் முதலியன* | *169* |
| *154 ண* | *நிதி ஆணைக்குழு* | *169* |
| *154 த* | *இந்த அத்தியாயத்தின் கீழ் மாகாண சபைகள், அவற்றின் தத்துவங்களைப் பிரயோகிக்காமல் இருக்க இயலச் செய்வதற்கான சிறப்பேற்பாடுகள்* | *171* |
| *154 ந* | *நிலைமாறுகால ஒழுங்குகள்* | *171* |

**உறுப்புரை** **பக்கம்**

## அத்தியாயம் XVIII
## பொதுமக்கள் பாதுகாப்பு


| | | |
|---|---|---|
| 155 | பொதுமக்கள் பாதுகாப்பு | 172 |


## அத்தியாயம் XVIII அ
## தேசிய பொலிசு ஆணைக்குழு


| | | |
|---|---|---|
| 155 அ | தேசிய பொலிசு ஆணைக்குழுவின் அமைப்பு | 175 |
| 155 ஆ | ஆணைக்குழுவின் கூட்டங்கள் | 176 |
| 155 இ | சட்ட நடவடிக்கைகளிலிருந்து விடுபாட்டுரிமை | 177 |
| 155 ஈ | ஆணைக்குழுவின் செயலாளர் | 177 |
| 155 உ | கிரயச் செலவுகளும் மற்றும் செலவுகளும் | 177 |
| 155 ஊ | ஆணைக்குழுவுடன் தலையிடுதல் | 177 |
| 155 ஊஊ | ஆணைக்குழுவின் தத்துவங்கள் | 178 |
| 155 ஊஊஊ | ஆணைக்குழு விதிகளையாக்குதல் | 178 |
| 155 எ | ஆணைக்குழுவின் தத்துவங்கள் | 178 |
| 155ஏ | ஆணைக்குழுவின் குறித்தசில தத்துவங்களைக் குழுவொன்றுக்குக் கையளித்தல் | 179 |
| 155ஒ | ஆணைக்குழுவினால் குறித்தசில பணிகள் கையளிக்கப்படுதல் | 179 |
| 155ஓ | மேன்முறையீடு செய்யும் உரிமை | 179 |
| 155ஔ | நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல் | 180 |
| 155 க | உளதாம் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் பேணல் | 180 |
| 155 ங | ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு வகை சொல்லற்பாலதாதல் | 181 |


## அத்தியாயம் XIX
## நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்


| | | |
|---|---|---|
| 156 | நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் | 181 |


## அத்தியாயம் XIXஅ
## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு


| | | |
|---|---|---|
| 156அ | இலஞ்சம் அல்லது ஊழலை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 182 |


## அத்தியாயம் XIXஆ
## தேசிய பெறுகை ஆணைக்குழு


| | | |
|---|---|---|
| 156ஆ | தேசிய பெறுகை ஆணைக்குழு | 183 |
| 156இ | ஆணைக்குழுவின் பணிகள் | 184 |
| 156ஈ | ஆணைக்குழுவின் தத்துவங்கள் | 185 |
| 156உ | ஆணைக்குழுவின் கூட்டங்கள் | 186 |
| 156ஊ | ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி | 186 |

**உறுப்புரை** **பக்கம்**


156எ ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் 187
156ஏ பொருள்கோடல் 187


**அத்தியாயம் XX**
**பொது**


157 சர்வதேச பொருத்தனைகளும் உடன்படிக்கைகளும் 188
157 அ இலங்கையின் ஆள்புல கட்டுக்கோப்பை மீறுவதற்கெதிரான தடை 188
158 கையளிப்பு 193
159 பிரதிச் சபாநாயகர் சபாநாயகருக்காகப் பதிற்கடமையாற்றுதல் 193


**அத்தியாயம் XXI**
**நிலைமாறுகால ஏற்பாடுகள்**


160 முதலாவது சனாதிபதி 194
161 முதலாவது பாராளுமன்றம் 194
162 குறித்த சில ஏற்பாடுகளின் ஏற்புடைமை 201
163 உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேல் நீதிமன்ற நீதிபதிகளும் பதவிவகியாதொழிதல் 201
164 நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும் ஏனையோரும் பதவியில் தொடர்ந்திருத்தல் 201
165 பகிரங்க அலுவலர்களாலும் ஏனையோராலும் செய்யப்பட வேண்டிய சத்தியம் அல்லது மொழியப்பட வேண்டிய உறுதியுரை 202
166 குடியரசின் தத்துவங்களும், சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் 203
167 குடியரசின் உரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளும் 203
168 சட்டங்களின் சென்றகாலச் செயற்பாடு, முன்னைய செயல்கள், தவறுகள், முடிவுறாதிருக்கும் வழக்குகள் முதலியன 203
169 நீதித்துறை தொடர்பிலான ஏற்பாடுகள் 204
169 அ இராணி வழக்குரைஞர்கள், சிரேட்ட சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பான ஏற்பாடு 211


**அத்தியாயம் XXII**
**பொருள்கோடல்**


170 பொருள்கோடல் 211


**அத்தியாயம் XXIII**
**நீக்கம்**


171 நீக்கம் 215


**அத்தியாயம் XXIV**
**அரசியலமைப்பினைப் பிரசித்தஞ் செய்தல்**


172 அரசியலமைப்பினைப் பிரசித்தஞ் செய்தல் 216

அரசியலமைப்பிற்கான இருபதாவது திருத்தத்தின் மற்றைய இடை நேர்விளைவான ஏற்பாடுகள் 217

**உறுப்புரை** **பக்கம்**

**அட்டவணைகள்**


| | |
|---|---|
| *முதலாம் அட்டவணை* | *221* |
| *இரண்டாம் அட்டவணை* | *222* |
| *மூன்றாம் அட்டவணை* | *224* |
| *நான்காம் அட்டவணை* | *225* |
| *ஐந்தாம் அட்டவணை* | *226* |
| *ஆறாம் அட்டவணை* | *227* |
| *ஏழாம் அட்டவணை* | *228* |
| *எட்டாம் அட்டவணை* | *229* |
| *ஒன்பதாம் அட்டவணை - நிரல்* I *மாகாண சபை நிரல்)* | *230* |
| *பின்னிணைப்பு -* I | *237* |
| *பின்னிணைப்பு -* II | *245* |
| *பின்னிணைப்பு -* III | *248* |
| *- நிரல்* II *(ஒதுக்கிய நிரல்)* | *250* |
| *- நிரல்* III *(ஒருங்கியை நிரல்)* | *259* |

## நலமே ஆகுக

*பௌத்த ஆண்டு ஈராயிரத்து ஐந்நூற்று இருபத்தொன்று* ***அதி நிக்கினி*** *மாதம் வளர்திங்கள் ஆறாம் நாளன்று, அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு யூலை மாதம் இருபத்தோராம் நாளாகிய வியாழக்கிழமையன்று,* ***இலங்கை மக்கள்*** *சுதந்திரமாகத் தெரிவித்து வழங்கிய அவர்களது ஆணையினால், அந்த நாளன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம்,* ***சனநாயக சோசலிசக் குடியரசின்*** *குறிக்கோள்களை எய்தும் வண்ணம் புதியதோர் குடியரசு அரசியலமைப்பை வரைவதற்கும், வகுத்தமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஆன தத்துவத்தை வழங்கி அப்பணியை அவர்களிடம் நம்பியொப்படைத்திருப்பதாலும், அத்தகைய ஆணையை வழங்கியதன் மூலமும் அபரிமிதமான பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்படி பிரதிநிதிகளில் வைத்த நம்பிக்கை மூலமும், மாற்றொணாத குடியரசுச் சித்தாந்தமான* ***பிரதிநிதி முறைச் சனநாயகத்தை*** *ஒப்புறுதிப்படுத்துகின்றதும், எல்லா மக்களுக்கும் சுதந்திரம், சமத்துவம், நீதி, அடிப்படை மனித உரிமைகள் ஆகியவற்றையும்* ***நீதித்துறைச் சுதந்திரத்தையும் இலங்கை*** *மக்களின் வருங்காலச் சந்ததியினரதும்,* ***நீதியானதும் சுதந்திரமானதுமான சமூகம்*** *ஒன்றை ஏற்படுத்திப் பேணிக்காக்கவென எடுக்கப்படும் முயற்சியில் அத்தகைய சந்ததியினரோடு ஒத்துழைக்கவரும் உலகத்து வேறெல்லா மக்களினதும் மாண்புக்கும் நல்வாழ்வுக்கும் உத்தரவாதமளிக்கின்ற புலங்கடந்த மரபுரிமையாக காப்புறுதி செய்கின்றதும் ஆன ஒரு* ***சனநாயகச் சோசலிசக் குடியரசாக இலங்கையை*** *அமைத்துவிடப் பயபக்தியாகத் தீர்மானமெடுத்திருப்ப தாகும்:*

***இலங்கை மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாங்கள்,*** *அத்தகைய ஆணையைப் பின்பற்றி, எங்களுடைய மக்களுக்கு நாம் கடப்பாடுடையோம் என்பதைப் பணிவுடன் ஒப்புக்கொண்டு, தனிமனித மாண்பும் சுதந்திரமும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும், நீதியான சமூக, பொருளாதார, கலாசார ஒழுங்குமுறையை எய்தவேண்டு மென்பதற்காகவும், நாட்டின் ஒற்றுமையை மீளவும் நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவும், ஏனைய தேசங்களுடன் சமூக உறவு ஏற்படவேண்டுமென்பதற்காகவும், தமது உரிமைகள், சிறப்புரிமைகள் என்பனவற்றைத் திரும்பவும் பெற்றுப் பேணுவதற்கென இலங்கை மக்கள் நடாத்திய ஓயாத துணிகரமான போராட்டத்தை நன்றியுணர்வுடன் நினைவுகூர்ந்து,*

***இந்த அரசியலமைப்பை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீயுயர் சட்டம் ஆக இத்தால் வகுத்தமைத்துச் சட்டமாக்கிக் கொள்கிறோம்.***

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அத்தியாயம் I

## மக்களும் அரசும் இறைமையும்

*1*. இலங்கை, சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட சனநாயக சோசலிசக் குடியரசாகும் என்பதோடு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும். **அரசு**

*2*. இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சி உடைய அரசாகும். **ஒற்றையாட்சி அரசு**

*3*. இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை, ஆகியவற்றை உள்ளடக்கும். **மக்களின் இறைமை**

*4*. மக்களின் இறைமை பின்வரும் விதமாகப் பிரயோகிக்கப்படவும் அனுபவிக்கப்படவும் வேண்டும்:- **இறைமையைப் பிரயோகித்தல்**

(அ) மக்களது சட்டமாக்கற்றத்துவம், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட, மக்களது ஆட்சித் துறைத்தத்துவம், மக்களால் தெரிவுசெய்யப்படும் குடியரசின் சனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(இ) மக்களது நீதிமுறைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயத்தில் தவிர, அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், நிறுவனங்கள் ஆகியன மூலம் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களில் மக்களது நீதிமுறைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினால் சட்டத்துக்கிணங்க நேரடியாகப் பிரயோகிக்கப்படலாம்;

(ஈ) அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள், அரசாங்கத்தின் எல்லா உறுப்புக்களாலும் போற்றப்படவும் பேணப்படவும் ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதோடு, அவை, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முறையிற்றவிரவும் அத்தகைய அளவுக்குத் தவிரவும் சுருக்கப்படுதலோ, மட்டுப்படுத்தப்படுதலோ, மறுக்கப்படுதலோ ஆகாது ; அத்துடன்

(உ) பதினெட்டு வயதை அடைந்நதவரும், குடியரசுச் சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலிலும் ஒவ்வொரு மக்கள் தீர்ப்பிலும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட விதமாகத் தேருநராக இருப்பதற்குத் தகைமைகொண்டுள்ளமையால் தேருநர் இடாப்பில் தம் பெயர் பதிவுசெய்யப்பட்டவரும் ஆன ஒவ்வொரு பிரசையினாலும் வாக்குரிமை பிரயோகிக்கப்படும்.

**குடியரசின் ஆள்புலம்**

**5**. இலங்கைக் குடியரசின் ஆள்புலமானது [1][இருபத்தைந்து] நிருவாக மாவட்டங்களையும் (அவற்றின் பெயர்கள் முதலாம் அட்டவணையில் தரப் பட்டுள்ளன) அதன் [2][ஆள்புல நீர்ப்பரப்புகளையும் கொண்டிருக்கும்:

ஆயின், பாராளுமன்றம், தீர்மானத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறாக வெவ்வேறான நிருவாக மாவட்டங்களை அமைக்கு வகையில் அத்தகைய நிருவாக மாவட்டங்கள் உப்பிரிவாகப் பிரிக்கப்படலாம் அல்லது ஒன்றிணைக்கப்படலாம்].

**தேசியக் கொடி**

**6**. இலங்கைக் குடியரசின் தேசியக்கொடி, இரண்டாம் அட்டவணையில் குறித்து வரையப்பட்டிருக்கும் சிங்கக்கொடியாக இருத்தல் வேண்டும்.

**தேசிய கீதம்**

**7**. இலங்கைக் குடியரசின் தேசிய கீதம் "ஸ்ரீ லங்கா தாயே" என்பதாக இருத்தல் வேண்டும்: அதன் சொற்களும் இசையமைப்பும் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

**தேசிய தினம்**

**8**. இலங்கைக் குடியரசின் தேசிய தினம் பெப்புருவரி நான்காம் நாளாக இருத்தல் வேண்டும்.

---

1. அரசியலமைப்புக்கான ஏழாவது திருத்தத்தின் 2 (அ) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

2. அரசியலமைப்புக்கான ஏழாவது திருத்தத்தின் 2(ஆ) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

*அத்தியாயம் II*

### பௌத்த மதம்

**பௌத்த மதம்**

***9***. *இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப் படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10 ஆம், 14(1)(உ) ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனத்தைப் பாதுகாத் தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும்.*

## அத்தியாயம் III

### அடிப்படை உரிமைகள்

**சிந்தனைசெய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன**

**10.** ஆளொவ்வொருவரும், தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக் கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திர முட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**சித்திரவதைக் குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம்.**

**11.** ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமான மற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட லாகாது.

**சமத்துவத்துக் கான உரிமை**

**12.** (1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள்.

(2) இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்கட்டுதல் ஆகாது.

ஆயின், பகிரங்க சேவையில், நீதித்துறைச் சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவையில் உள்ள ஏதேனும் ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் மொழியை அறிந்திருத்தல் நியாயமாக அவசியமானதாகவுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான தகைமையாக அம்மொழியில் போதிய அறிவை நியாயமான காலத்தினுள் பெறுதல் வேண்டு மென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், மேலும் அத்தகைய ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான பணி களுள் எவற்றையும் ஏதேனும் மொழியை அறிந்திருந்தால் தவிர வேறு விதத்தில் நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத் துக்கு அல்லது பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான தகைமையாக அம் மொழியில் போதிய அறிவை உடையவராக இருத்தல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) எந்த ஆளும், இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும், கடைகள், பொது உணவுச்சாலைகள், விடுதிகள், பொதுக் களியாட்டங்கள், தனது மதத்துக்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்துக்கு, பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு உட்பட்டவராதலாகாது.

(4) இவ்வுறுப்புரையிலுள்ளதெதுவும், பெண்களின், பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின்மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்படுவதைத் தடுத்தலாகாது.

**ஏதேச்சையாகக் கைதுசெய்யப்படாமலும் தடுத்துவைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும் கடந்த காலத்தை உள்ளடக்கும் பயனுடையனவான தண்டனைச் சட்டவாக்கங்களைத் தடை செய்தலும்**

**13.** (1) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்கவன்றி, ஆளெவரும் கைது செய்யப்படுதலாகாது. கைதுசெய்யப்படுவதற்கான காரணம் கைதுசெய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும், தடுத்துவைத்திருக்கப்படும் அல்லது வேறுவகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வோராளும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க மிக்க அண்மையிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக் கிணங்க அத்தகைய நீதிபதியினால் ஆக்கப்படும் கட்டளைப்படியன்றியும் அதன் நியதிகளுக்கிணங்கவன்றியும், தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலோ, தடுத்துவைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது:

(3) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எவரேனுமாள், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணிமூலம் உரைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

(4) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கத் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி, ஆள் எவரும் மரணதண்டனையினால் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலாகாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைதுசெய்து வைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்துவைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் தண்டனையாக அமையலாகாது.

(5) ஆளொவ்வொருவரும், அவர் குற்றவாளியென எண்பிக்கப்படும்வரை, சுத்தவாளியென ஊகிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், குறிப்பிட்ட நிகழ்வுகளை எண்பிப்பதற்கான பொறுப்பை குற்றஞ் சாட்டப்பட்ட ஆளொருவர்மீது சட்டம் சுமத்தலாம்.

(6) புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாகவிருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாத லாகாது என்பதுடன், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டத் திலும் பார்க்கக் கடுமையான தண்டமெதுவும் அத்தகைய ஏதேனும் தவறுக்கு விதிக்கப்படுதலுமாகாது.

தேசங்கள் என்ற சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் பொது வான நெறிகளுக்கிணங்க எச்செயல் அல்லது செய்யாமை, அது புரியப்பட்ட

நேரத்தின்போது குற்றவியலானதாக இருந்திருக்குமோ, அச்செயலுக்காக அல்லது செய்யாமைக்காக எவரேனும் ஆளை விளங்குதலையும் அவருக்குத் தண்டனையளித்தலையும் இவ்வுறுப்புரையிலுள்ள எதுவும் பங்கப் படுத்துதலாகாது.

தவறொன்றுக்கு ஆகக்குறைந்த தண்டமொன்றை விதிக்கும்படி தேவைப்படுத்துதல், அத்தகைய தவறுபுரியப்பட்ட நேரத்தில் அத்தகைய தவறுக்கென விதிக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டத்தை அத்தகைய தண்டம் விஞ்சுவதாயில்லாதிருப்பின், இவ்வுறுப்புரையின் மீறுகையாக இருத்தலாகாது.

(7) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் அல்லது 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய-இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டத்தின் அல்லது அவற்றிற்குப் பதிலாக வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட அகற்றற் கட்டளையின் காரணமாக அல்லது துறை கடத்தும் கட்டளையின் காரணமாக ஆளொருவரைக் கைது செய்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்துவைத்திருத்தல் அல்லது அவரின் சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் இவ்வுறுப்புரையை மீறுவதாக அமையாது.

**பேச்சு சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், முயற்சி செய்வதற்கான சுதந்திரம், தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம் முதலியன**

*14.*(1) ஒவ்வொரு பிரசையும் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராவர் :-

(அ) வெளியிடுதலுட்படப் பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்;

(ஆ) அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்;

(இ) ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம்;

(ஈ) தொழிற்சங்கமொன்றை அமைக்கவும் அதிற்சேரவும் உள்ள சுதந்திரம்;

(உ) தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்;

(ஊ) தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து, தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் ஆன சுதந்திரம்;

(எ) ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர்தொழிலில், வியாபாரத்தில், தொழில் அல்லது தொழில் முயற்சியில் தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கான சுதந்திரம்;

(ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும் ஆன சுதந்திரம்; அத்துடன்

(ஐ) இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான சுதந்திரம்.

(2) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராக இல்லாதிருப்பவரும், இவ்வரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னர் இலங்கையில் நிரந்தரமாகவும் சட்டப்படியும் வதிவிலிருந்தவரும், தொடர்ந்து அவ்வாறு

வதிவிலிருப்பவரும் ஆன ஆளொருவர், அரசியலமைப்பு தொடங்கிய திலிருந்து பத்து ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்கு இவ் வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் வெளிப்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை**

[3][**14அ.** (1) ஒவ்வொரு பிரசையும், பிரசையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்வருவபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு;

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு;

(இ) ஏதேனும் உள்ளூரதிகார சபை; அத்துடன்

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்.

(2) ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைப் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமைமீது இடப்படுதல் ஆகாது.

3 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

(3) இவ்வுறுப்புரையில் ''பிரசை'' என்பது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது.]

**அடிப்படை உரிமைகளின் மீதான மட்டுப்பாடுகள்**

**15.** (1) 13(5) ஆம், 13(6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''சட்டம்'' என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

(2) 14(1)(அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(3) 14(1)(ஆ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமூக வாழ்வு, மதச் சுமூகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(4) 14(1)(இ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும் இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதி அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(5) 14(1)(எ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதியோ அல்லது பின்வருவன தொடர்பிலோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்: அதாவது :-

(அ) ஏதேனும் உயர்தொழிலைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் முயற்சியை, வியாபாரத்தை, தொழிலை அல்லது தொழில் முயற்சியைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான உயர்தொழில்சார், தொழிநுட்பம்சார், கல்விசார், நிதிசார் தகைமைகளும் வேறு தகைமைகளும் என்பன தொடர்பிலும், அத்தகைய அப்படை உரிமைகக்கு உரித்துடைய ஆட்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடும் என்பன தொடர்பிலும் ; அத்துடன்

(ஆ) முழுக்க முழுக்க பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது பகுதியளவில் பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, கைத்தொழிலை, சேவையை அல்லது தொழில்முயற்சியை அரசு, அரச முகாமை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும்.

(6) 14 (1) (ஏ)ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(7) 12ஆம், 13(1)ஆம், 13(2)ஆம், 14ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா அடிப்படை உரிமைகளினதும் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத் தைப் பாதுகாத்தல் என்பனவற்றின் நலன்கருதி அல்லது மற்றவர்களின் உரிமைகள், சுதந்திரங்கள் என்பனவற்றிற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது சனநாயகச் சமூகத்தின் பொதுச் சேமநலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காகச் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக சட்டம் என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

(8) 12(1) ஆம், 13 ஆம், 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், அவ்வுரிமைகளை ஆயுதந்தாங்கிய படைகள், பொலிசுப் படை, பொது அமைதிபேணும் பொறுப்புடைய ஏனைய படைகள் ஆகிய வற்றின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாக்கும்போது, அத்தகைய படையுறுப்பினர் தத்தமது கடமைகளை முறையாகப் புரிதல், அவர்கட் கிடையே ஒழுக்கக் கட்டுப்பாட்டினைப் பேணுதல் என்பனவற்றின் நலன் கருதிச் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

**இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் தொடர்ந்தும் வலுவிலிருத்தல்**

**16.** (1) இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் கட்டளையின்பேரில் எவரேனும் ஆளை, இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அங்கீகரிக்கப் பட்ட எந்தவிதமான ஒரு தண்டனைக்கேனும் உள்ளாக்குதல், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகாது.

**ஆட்சித்துறை நடவடிக்கைமூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கெதிரான பரிகாரம்**

**17.** ஆளொவ்வொருவரும், இந்த அத்தியாயத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவருக்குரித்தாகவுள்ள அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் நிருவாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் 126 ஆம் உறுப்புரை யினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப் பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### மொழி

**அரசகரும மொழி**

**18.** [4][(1)] இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்.

[5][(2) தமிழும் அரசகரும மொழியாதல் வேண்டும்.

(3) ஆங்கிலம் இணைப்பு மொழி ஒன்றாதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும்.]

**தேசிய மொழிகள்**

**19.** இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்.

**பாராளுமன்றத்திலும் மாகாண சபையிலும் உள்ளூரதிகார சபையிலும் தேசிய மொழிகளைப் பயன்படுத்துதல்**

**20.** பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் [6] [அல்லது மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவர்.] பாராளுமன்றத்திலோ [7][அத்தகைய மாகாண சபையிலோ அல்லது உள்ளூரதிகார சபையிலோ] எந்தவொரு தேசிய மொழியிலும் தமது கடமைகளைப் புரியவும் பணிகளை நிறைவேற்றவும் உரித்துடையராதல் வேண்டும்:

**கல்வி மொழி**

**21.** (1) ஆள் ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், தேசிய மொழியல்லாத ஒரு மொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கின்ற ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு இப்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(2) அரசினால் நேரடியாகவோ நேரடியல்லாமலோ நிதியளிக்கப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஏதேனும் கற்கைநெறியில் அல்லது பகுதியில் அல்லது துறையில், ஒரு தேசிய மொழியே கல்வி மொழியாக இருக்கின்றவிடத்து, அத்தகைய பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு முன்னர் மற்றத் தேசிய மொழியில் கல்வி கற்றுவந்த மாணவர்களுக்கு அத்தகைய கற்கைநெறியில், பகுதியில் அல்லது துறையில், அந்த மற்றத் தேசிய மொழியையும் கல்வி மொழியாக ஆக்குதல் வேண்டும்:

---

4 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 2(அ) ஆம் வாசகத்தினால் 18 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியென மீள இலக்கமிடப்பட்டது.

5 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 2(ஆ) வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

6 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 2(1) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

7 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 2(2) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

ஆயின், இந்தப் பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது, அந்த மற்றத் தேசிய மொழியானது, அத்தகைய பல்கலைக்கழகத்தின் அல்லது அதையொத்த வேறேதேனும் பல்கலைக்கழகத்தின் வேறேதேனும் வளாகத்தில் உள்ள அல்லது கிளையில் உள்ள, ஏதேனும் ஒத்த கற்கைநெறியில், பகுதியில் அல்லது துறையில் கல்விமொழியாக இருக்குமாயின், இந்தப் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டுமென்பது கட்டாயமானதாக இருத்தலாகாது.

(3) இந்த உறுப்புரையில், "பல்கலைக்கழகம்" என்பது, உயர்கல்விக்கான எந்த நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

**நிருவாக மொழிகள்**

[8][**22.** (1) சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழிகளாக இருத்தல் வேண்டும். அத்துடன் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிருவாக மொழியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பொதுப் பதிவேடுகளைப் பேணிவருவதற் காகவும் பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடாத்தப்படுவதற்காகவும் சிங்களமொழி பயன்படுத்தப்படுதலும் வேண்டும். வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ்மொழி அவ்வாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், உதவி அரசாங்க அதிபரின் பிரிவொன்றை உள்ளடக்கும் கூறு எதனதும் மொத்தச் சனத்தொகைக்குச் சிங்கள அல்லது தமிழ் மொழிவாரியான சிறுபான்மை சனத்தொகை என்ன விகிதாசாரத்தை கொண்டுள்ளதோ அதனைக் கருத்திற்கொண்டு சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அல்லது அத்தகைய இடப்பரப்பு அமைந்திருக்கக்கூடியதான மாகாணத்தில் நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் மொழி தவிர்ந்த ஒரு மொழி அத்தகைய இடப்பரப்பிற்கான நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படலாம் எனச் சனாதிபதி பணிக்கலாம்.

(2) சிங்களம் நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடப்பரப்பில், ஆளொருவர் (அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் அலுவலரொருவர் நீங்கலாக) பின்வருவனவற்றுக்கு உரித்துடையராதல் வேண்டும் :-

(அ) ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அலுவலர் என்ற தன்மையில் எவரேனும் அலுவலரிடமிருந்து செய்தித் தொடர்புகள் பெறுவதற்கும், அந்த அலுவலருடன் தொடர்புகொள்வதற்கும், அவருடன் அலுவல் கொண்டுநடாத்துவதற்கும்;

(ஆ) ஏதேனும் அலுவலகமுறையான இடாப்பை, பதிவேட்டை, வெளியீட்டை அல்லது வேறு ஆவணத்தைச் சோதனைசெய்வதற்கு அல்லது அவற்றிலிருந்து பிரதிகளை அல்லது பொழிப்புக்களை எடுப்பதற்கு அவருக்குள்ள உரிமையைச் சட்டம் ஏற்றுக்கொண்டால், ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அத்தகைய இடாப்பிலிருந்து, பதிவேட்டிலிருந்து, வெளியீட்டிலிருந்து அல்லது வேறு ஆவணத்

8 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

திலிருந்து பிரதியொன்றை அல்லது பொழிப்பொன்றைப் பெறுவதற்கும் அல்லது விடயத்துக்கேற்ப, மொழிபெயர்ப் பொன்றைப் பெறுவதற்கும் ; அத்துடன்,

(இ) அவருக்கு வழங்கப்படும் நோக்கத்துக்கென ஆவணமொன்று எவரேனும் அலுவலரினால் எழுதி நிறைவேற்றப்படுமிடத்து, ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அத்தகைய ஆவணத்தை அல்லது அதன் மொழிபெயர்ப்பைப் பெறுவதற்கும்.

(3) தமிழ் மொழியானது நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடப்பரப்பில், ஆளொருவர் (அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் அலுவலரொருவர் நீங்கலாக) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில், இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ), (ஆ) அத்துடன் (இ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைகளைப் பிரயோகிப்பதற்கும் சேவைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) சிங்களத்தில் அதன் அலுவல்களை நடாத்துகின்ற ஒரு மாகாண சபை அல்லது ஓர் உள்ளூரதிகாரசபை, அலுவலர் என்ற தன்மையில் எவரேனும் அலுவலரிடமிருந்து சிங்களத்தில் செய்தித் தொடர்புகள் பெறுவதற்கும் அந்த அலுவலருடன் சிங்களத்தில் தொடர்பு கொள்ளுவதற்கும் அவருடன் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கும் உரித்துடையதாதல் வேண்டும். தமிழில் அதன் அலுவல்களை நடாத்துகின்ற ஒரு மாகாணசபை அல்லது ஓர் உள்ளூரதிகாரசபை, அலுவலர் என்ற தன்மையில் எவரேனும் அலுவலரிடமிருந்து தமிழில் செய்தித் தொடர்புகள் பெறுவதற்கும் அவ்வலு வலருடன் தமிழில் தொடர்பு கொள்வதற்கும் அவருடன் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கும் உரித்துடையதாதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், வேறொரு மொழி நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் இடப்பரப்பொன்றில் உள்ள வேறு ஏதேனும் மாகாணசபை, உள்ளூரதிகாரசபை, பகிரங்க நிறுவனம் என்பவற்றிடமிருந்து அல்லது பணியாற்றுகின்ற ஓர் அலுவலரிடமிருந்து செய்தித் தொடர்புகளைப் பெறுகின்ற அல்லது அலுவல்களைக் கொண்டு நடாத்துகின்ற ஒரு மாகாணசபை, உள்ளூரதிகாரசபை, பகிரங்க நிறுவனம் அல்லது எவரேனும் அலுவலர் ஆங்கிலத்தில் செய்தித் தொடர்புகளைப் பெறுவதற்கும் ஆங்கிலத்தில் தொடர்புகொள்வதற்கும் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கும் உரித்துடையதாதலும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) பகிரங்க சேவை, நீதித்துறைச் சேவை, மாகாணப் பகிரங்க சேவை, உள்ளூராட்சிச் சேவை அல்லது ஏதேனும் பகிரங்க நிறுவனம் என்பவற்றுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான ஏதேனும் பரீட்சையில் ஆளொருவர் ஒன்றில் சிங்களமூலம் அல்லது தமிழ் மூலம் அல்லது அவர் தெரிந்தெடுக்கும் மொழியொன்றின் பரீட்சிக்கப்பட உரித்துடையவராதல் வேண்டும் ; ஆயின் இந்த உரித்து, அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தமிழில் அல்லது

சிங்களத்தில் போதிய அறிவைப் பெறுதல் நியாயமாக அவசியமாகவுள்ள விடத்து, அவர் அத்தகைய ஏதேனும் சேவையில் அல்லது பகிரங்க நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் நியாயமான காலத் தினுள், விடயத்துக்கேற்றாற்போல சிங்களத்தில் அல்லது தமிழில் போதிய அறிவைப் பெறுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படலாம் என்ற நிபந்தனைக்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும்:

ஆயின், அவர் ஆட்சேர்க்கப்படும் அத்தகைய பதவிக்கான அல்லது ஊழியத்திற்கான பணிகளுள் எவற்றையும், சிங்களத்தை அல்லது தமிழை அறிந்திருந்தால் தவிர வேறு விதத்தில் நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, அத்தகைய ஏதேனும். சேவைக்கு அல்லது பகிரங்க நிறுவனத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனையொன்றாக சிங்களத்தில் அல்லது தமிழில் போதிய அறிவை உடையவராக இருத்தல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படலாம்.

(6) இந்த உறுப்புரையில்–

"அலுவலர்" என்பது சனாதிபதி, எவரேனும் அமைச்சர், பிரதியமைச்சர் என்று அல்லது மாகாணமொன்றின் ஆளுநர், பிரதம அமைச்சர் அல்லது அமைச்சர் சபையின் அமைச்சர் என்று அல்லது ஒரு பகிரங்க நிறுவனத்தின் அல்லது ஓர் உள்ளூரதிகார சபையின் அல்லது மாகாண சபையின் எவரேனும் அலுவலர் என்று பொருளாகும்; அத்துடன்

"பகிரங்க நிறுவனம்" என்பது, அரசாங்கத் திணைக்களம் அல்லது நிறுவனம், பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச் சட்டமுறையான நிறுவனம் என்று பொருளாகும்.]

**சட்டவாக்க மொழி**

[9][**23.** (1) எல்லாச் சட்டங்களும் துணைநிலைச் சட்டவாக்கங்களும் சிங்களத்திலும் தமிழிலும் சட்டமாக்கப்படுதலும் அல்லது இயற்றப்படுதலும், வெளியிடப்படுதலும் வேண்டும் ; அவை ஆங்கில மொழி பெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்;

ஆயின், பாராளுமன்றம், ஏதேனும் சட்டம் சட்டமாக்கப்படும் கட்டத்தில், உரைகளிடையே ஒவ்வாமையெதுவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் எந்த உரை மேலோங்கி நிற்றல் வேண்டுமெனத் தீர்மானித்தல் வேண்டும்;

ஆயின், மேலும், வேறெல்லா எழுத்திலான சட்டங்கள் தொடர்பிலும், அத்தகைய சட்டங்கள் எந்த உரையில் சட்டமாக்கப்பட்டனவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அல்லது இயற்றப்பட்டனவோ அந்த உரையானது, அத்தகைய உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

9 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 3 ஆவது வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

(2) மாகாண சபையொன்றினால் அல்லது உள்ளூரதிகார சபையொன்றினால் தவிர எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், பிரகடனங்களும், விதிகளும், துணைவிதிகளும், ஒழுங்குவிதிகளும், அறிவிப்புகளும் அத்துடன் கசெற்றும், சிங்களத்திலும், தமிழிலும் வெளியிடப்படுதல் வேண்டும் ; இவை ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் மாகாண சபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், பிரகடனங்களும், விதிகளும், துணைவிதிகளும், ஒழுங்குவிதிகளும், அறிவிப்புகளும் அத்துடன் அத்தகைய குழுவால் அல்லது ஏதேனும் பகிரங்க நிறுவனத்தால் வழங்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் சுற்றறிக்கைகளும் படிவங்களும் உள்ளிட்ட எல்லா ஆவணங்களும், அவை பணியாற்றும் அந்தந்த இடப்பரப்புகளில் நிருவாகத்தில் பயன்படுத்தப்படும் மொழியில் வெளியிடப்படுதல் வேண்டும் ; இவை ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுடையனவாயிருந்த எல்லாச் சட்டங்களும் துணைநிலைச்சட்டவாக்கங்களும்கூடிய விரைவில் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.]

*நீதிமன்றங்களின் மொழிகள்*

**24.**[10][(1) சிங்களமும் தமிழும் நீதிமன்றங்களின் மொழிகளாக இலங்கை எங்கணும் இருத்தல் வேண்டும்; அத்துடன், தமிழ்மொழி நிருவாக மொழியாகவிருக்கும் ஏதேனும் இடப்பரப்புத் தவிர்ந்த இலங்கையின் எல்லா இடப்பரப்புகளிலும் அமைந்திருக்கும் நீதிமன்றங்களின் மொழியாகச் சிங்களம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். பதிவேடும் நடவடிக்கைகளும் நீதிமன்ற மொழியில் இருத்தல் வேண்டும். ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நீதிமன்றத்தின் மொழியானது மேன்முறையீடானது எந்நீதிமன்றத்திலிருந்து முன்வைக்கப் படுகின்றதோ அந்நீதிமன்றத்தினால் பயன்படுத்தப்படும் மொழியிலிருந்து வேறானதானால், மேன்முறையீட்டைக் கேட்கும் நீதிமன்றத்தின் மொழியிலும் பதிவேடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

10 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 4 (1)ஆவது வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

ஆயின், நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், ஏதேனும் நீதிமன்றத்தின் பதிவேடானது நீதிமன்ற மொழி தவிர்ந்த ஒரு மொழியிலும் பேணப்படுதல் வேண்டுமெனவும், நடவடிக்கைகள் நீதிமன்ற மொழி தவிர்ந்த ஒரு மொழியில் நடத்தப்படுதல் வேண்டும் எனவும் பணிக்கலாம்.]

(2) எவரேனும் கட்சிக்காரர், அல்லது விண்ணப்பகாரர் அல்லது அத்தகைய கட்சிக்காரரின் அல்லது விண்ணப்பகாரரின் பிரதிநிதியாக இருப்பதற்குச் சட்டப்படி உரித்துடைய எவரேனும் ஆள் நடவடிக்கைகளை ஒன்றில் [11][சிங்களத்தில் அல்லது தமிழில்] தொடுக்கலாம் என்பதுடன், வழங்குரைகளையும் ஏனைய ஆவணங்களையும் ஒன்றில் சிங்களத்தில் அல்லது தமிழில் சமர்ப்பிக்கலாம்; அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒன்றில் சிங்களத்தில் அல்லது தமிழில் பங்குபற்றலாம்.

(3) நீதிமன்றத்திற் பயன்படுத்தப்படும் மொழியை அறிந்திராத எவரேனும் நீதிபதி, யூரர், கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர், அல்லது அத்தகைய கட்சிக்காரரின் அல்லது விண்ணப்பகாரரின் பிரதிநிதியாக இருக்கவெனச் சட்டப்படி உரித்துடையவரான எவரேனும் ஆள், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னருள்ள நடவடிக்கைகளை விளங்கிக்கொள்வதனையும் அவற்றில் பங்குபற்றுவதனையும் அவருக்கு இயலச்செய்வதற்காக அரசினால் ஏற்பாடு செய்யப்படும் [12][சிங்களத்தில் அல்லது தமிழில்] அமைந்த பேச்சு மொழிபெயர்ப்பையும், மொழிபெயர்ப்பையும் பெறும் உரிமையையும், சட்டத்துக்கிணங்க அவர் பெறுவதற்கு உரித்துடையவராயிருக்கக் கூடிய பதிவேட்டின் அத்தகைய ஏதேனும் பாகத்தை [13][அத்தகைய மொழியில்] அல்லது அதன் மொழிபெயர்ப்பில் பெறும் உரிமையையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், ஏதேனும் நீதிமன்றத்திலுள்ள பதிவேடுகளிலும் நடவடிக்கைகளிலும் அல்லது அவை தொடர்பாகவும் எல்லா நோக்கங்களுக்குமாக அல்லது பணிப்புகளிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்குமாக [14][ஆங்கிலத்தை] ஏதேனும் நீதிமன்றத்தில் பயன்படுத்துவதை அனுமதித்துப் பணிப்புகளை வழங்கலாம். ஒவ்வொரு நீதிபதியும் அத்தகைய பணிப்புகளைச் செயற்படுத்துவதற்குப் பணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

---

11 அரசியலமைப்புக்கான பதினறாவது திருத்தத்தின் 4(2) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்படுள்ளது.

12 அரசியலமைப்புக்கான பதினறாவது திருத்தத்தின் 4(3) (அ) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்படுள்ளது.

13 அரசியலமைப்புக்கான பதினறாவது திருத்தத்தின் 4(3) (ஆ) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்படுள்ளது.

14 அரசியலமைப்புக்கான பதினறாவது திருத்தத்தின் 4(4) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்படுள்ளது.

(5) இவ்வுறுப்புரையில் :–

"நீதிமன்றம்" என்பது, நீதி நிருவாகத்துக்கென (கைத்தொழிற் பிணக்குகளையும் ஏனைய பிணக்குகளையும் விளங்கித்தீர்த்து இணக்கமேற்படுத்தல் உட்பட) உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாயசபை என்று, அல்லது நீதிப்பணிகளை அல்லது நீதிமருவிய பணிகளைப் பிரயோகிக்கின்ற வேறேதேனும் நியாயசபை அல்லது நிறுவனம் என்று, அல்லது பிணக்குகளை இணக்கித் தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியாயசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும் ;

"நீதிபதி" என்பது ஏதேனும் நீதிமன்றத்தின் தலைவர், தவிசாளர், தலைமைதாங்கும் அலுவலர், உறுப்பினர் ஆகியோரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"பதிவேடு" என்பது, வழக்குரைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள், ஏனைய நீதிமுறைச் செயல்கள், நிருவாக முறைச்செயல்கள் என்பனவற்றையும் உள்ளடக்கும்.

**இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மொழிகளைப் பயன்படுத்துவதற்குப் போதிய வசதிகளை ஏற்பாடு செய்தல்**

**25.** இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான மொழிகளைப் பயன்படுத்துவதற்குப் போதுமான வசதிகளை அரசு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**இவ்வத்தியாயத்துடன் ஒவ்வாததாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடு நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்**

[15][**25அ.** ஏதேனும் சட்டத்தினதும் இவ்வத்தியாயத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.]

---

15 அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத்தின் 5 ஆம் வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

அத்தியாயம் V

**பிரசாவுரிமை**

**26.** (1) "இலங்கைப் பிரசை அந்தஸ்து" என அறியப்படும் பிரசாவுரிமை அந்தஸ்து ஒன்று இருத்தல் வேண்டும். **இலங்கைப் பிரசாவுரிமை**

(2) ஆளொருவர் வம்சாவளி உரிமை மூலம் பிரசாவுரிமைக்கு உரித்துடைய வராக வந்திருப்பினுஞ்சரி அல்லது பிரசாவுரிமை பற்றிய சட்டத்துக்கிணங்கப் பதிவுசெய்வதன் பயனாகப் பிரசாவுரிமைக்கு உரித்துடையவராக வந்திருப் பினுஞ்சரி, அவ் ஆள் எல்லா நோக்கங்களுக்காகவும் இலங்கைப் பிரசை என்றே விவரிக்கப்படுதல் வேண்டும்.

(3) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்து பெறப்பட்டிருப் பினுஞ்சரி அல்லது பதிவு செய்வதன் பயனாக அத்தகைய அந்தஸ்து பெறப்பட்டிருப்பினுஞ்சரி, அதனை விவரித்துக் குறிப்பீடு செய்வதன் மூலம் இலங்கைப் பிரசைகளுக்கிடையே வேறுபாடு எதுவும் காட்டப்படுதல் ஆகாது.

(4) பிரசாவுரிமைச் சட்டத்தின் 19, 20, 21, 22 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழன்றியும் அவற்றின் பயனைக் கொண்டன்றியும், இலங்கைப் பிரசை எவரதும் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைப் பறித்தலாகாது:

ஆயின், பிரசாவுரிமைச் சட்டத்தின் 23 ஆம், 24 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், அச்சட்டத்தின் 11 ஆம் 12 ஆம் அல்லது 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்ப் பதிவுசெய்வதன் பயனாக இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்துக்கு உரித்துடையவராக வந்த ஆளொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர், வம்சாவளி மூலமாகவாயினுஞ்சரி அல்லது பிரசாவுரிமை பற்றிய ஏதேனும் சட்டத்துக் கிணங்கப் பதிவு செய்வதன் பயனாகவாயினுஞ்சரி, இலங்கைப் பிரசை யாகவிருந்த ஒவ்வோர் ஆளும், இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்துக்கும் இலங்கைப் பிரசைக்குள்ள உரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) பிரசாவுரிமை பற்றிய இப்போதுள்ள எழுத்திலான எல்லாச் சட்டங்களின் ஏற்பாடுகளும், பிரசாவுரிமை பற்றிய குறிப்பீடுகளைக் கொண்டுள்ளனவான இப்போதுள்ள எழுத்திலான ஏனைய எல்லாச் சட்டங்களும் இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக வாசிக்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் VI

## அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்

**அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள்**

**27.** (1) இதன்கண் அடங்கியுள்ள அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள், நீதியானதும் சுதந்திரமானதுமான சமூகத்தைத் தாபிப்பதற்கான சட்டங்களையாக்குவதிலும் இலங்கையை ஆளுவதிலும் பாராளுமன்றத்துக்கும் சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் வழிகாட்டுதல் வேண்டும்.

(2) இலங்கையில் சனநாயக சோசலிசச் சமூகம் ஒன்றைத் தாபிக்க அரசு உறுதிபூண்டுள்ளது ; அதன் குறிக்கோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:—

(அ) எல்லா ஆட்களும் தமது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவித்தல் ;

(ஆ) தேசிய வாழ்வின் அமைவுகளெல்லாம், சமூக, பொருளாதார, அரசியல் நீதியால் வழிப்படுத்தப்படுவனவாக அமைந்த ஒரு சமூக ஒழுங்கு முறைமையைச் செவ்வையான முறையில் ஆக்கிப் பாதுகாப்பதன் மூலம் மக்களின் சேமநலனை மேம்படுத்தல் ;

(இ) போதிய உணவு, உடை, வீட்டு வசதி, வாழ்க்கை நிலைமைகளில் தொடர்ச்சியான சீர்திருத்தம், ஓய்வுநேரத்தை முழுமையாகத் துய்த்தல், சமூக, கலாசார வாய்ப்புக்கள் என்பன உட்பட, எல்லாப் பிரசைகளும் அவர்களது குடும்பத்தினரும் போதியதான வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தல் ;

(ஈ) பகிரங்கப் பொருளாதார முயற்சியின் மூலமும் தனியார் பொருளாதார முயற்சியின் மூலமும், அத்தகைய பகிரங்கப் பொருளாதார முயற்சியையும் தனியார் பொருளாதார முயற்சியையும் சமூகக் குறிக்கோள்களுக்காகவும் பொதுமக்கள் நலனுக்காகவும் நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்காகவும் உகந்ததாக இருக்கக்கூடிய அத்தகைய திட்டமிடலையும் கட்டுப்பாடுகளையும் விதித்துரைக்கின்ற சட்டங்களின் மூலமும் நாடு முழுவதனையும் விரைவாக அபிவிருத்தி செய்தல் ;

(உ) சமுதாயத்தின் பருப்பொருள் மூலவளங்களையும் சமூகத்தால் விளைவிக்கப்பட்டவற்றையும், ஆகக்கூடிய அளவு பொது நலனுக்குப் பயன்படக்கூடிய வண்ணம் எல்லாப் பிரசைகளின் இடையேயும் ஒப்புரவான முறையில் பகிர்ந்தளித்தல் ;

(ஊ) உற்பத்தி, விநியோகம், பரிமாற்றல் ஆகியவற்றுக்கான சாதனங்கள் அரசில், அரச முகாமைகளில் அல்லது சலுகை படைத்த சிலரில் செறிந்தும் குவிந்தும் இராமல், இலங்கையிலுள்ள எல்லா மக்களிடை யேயும் பரந்தனவாயும் அவர்களினால் சொந்தமாக வைத்திருக்கப் பட்டனவாயும் உள்ள நீதியான சமூக ஒழுங்குமுறைமையைத் தாபித்தல் ;

(எ) மக்களின் ஒழுக்கத் தரத்தையும் கலாசாரத் தரத்தையும் உயர்த்துதலும், மனித ஆளுமையின் முழு வளர்ச்சியை உறுதிப்படுத்துதலும் ; அத்துடன்

(ஏ) எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாதொழித்தலும் எல்லா நிலைகளிலும் உலகளாவியதும் சமத்துவமானதுமான கல்வி வாய்ப்புக்கான உரிமையை எல்லாப் பிரசைகளுக்கும் உறுதிப் படுத்தலும்.

(3) அரசானது இலங்கையின் சுதந்திரத்தையும், இறைமையையும், ஐக்கியத்தையும், ஆள்புல ஒருமையையும் பாதுகாத்தல் வேண்டும்.

(4) அரசானது, நிருவாகத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலமும், தேசிய வாழ்விலும் அரசாங்கத்திலும் உள்ள ஒவ்வொரு மட்டத்திலும் பங்குபற்று வதற்கு இயன்ற எல்லா வாய்ப்புக்களையும் மக்களுக்கு அளிப்பதன் மூலமும் அரசாங்கத்தின் சனநாயக அமைப்பையும் மக்களின் சனநாயக உரிமைகளையும் பலப்படுத்துதலும் விரிவுபடுத்துதலும் வேண்டும்.

(5) இனக் கூட்டத்தினர், மதக் கூட்டத்தினர், மொழிக் கூட்டத்தினர் என்போரும் வேறு கூட்டத்தினரும் உட்பட, இலங்கையிலுள்ள எல்லாப் பிரிவினரான மக்களிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதன்மூலம் அரசானது தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஓரங்காட்டுதலையும் பட்சபாதத்தையும் நீக்குவதற்கென போதித்தல், கல்வி ஊட்டல், தகவலறிவிப்பு ஆகிய துறைகளில் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

(6) அரசானது, பிரசை எவரும், இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அரசியல் அபிப்பிராயம் காரணமாக அல்லது முயற்சி காரணமாக ஏதேனும் தகுதியீனத்துக்குட்படாத வண்ணம் பிரசைகளுக்குச் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(7) அரசானது, பொருளாதார, சமூகச் சலுகையையும் ஏற்றத் தாழ்வினையும், மனிதன் மனிதனைச் சுரண்டுதலையும் அல்லது அரசு மனிதனைச் சுரண்டுதலையும் ஒழித்தல் வேண்டும்.

*(8)* பொருளாதாரக் கட்டமைப்பின் செயற்பாடானது, செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் ஒரு சிலரிடம் குவியாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(9)* அரசானது, சமூகப் பாதுகாப்பையும் சேமநலத்தையும் உறுதிப் படுத்துதல் வேண்டும்.

*(10)* மக்களின் கலாசாரங்களையும் மொழிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு அரசு உதவுதல் வேண்டும்.

*(11)* பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்கள் தத்தமது மதக் கோட்பாடுகளை மெய்யாக உணர்வதை இயலச் செய்வதற்கு அவசியமான பொருளாதார, சமூகச் சூழலை அரசானது உருவாக்குதல் வேண்டும்.

*(12)* அரசானது, குடும்பத்தைச் சமூகத்தின் அடிப்படைக் கூறாக ஏற்றுக்கொள்ளுதலும் பாதுகாத்தலும் வேண்டும்.

*(13)* பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல்வளர்ச்சியை உள வளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை, முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலி லிருந்தும் ஓரங்காட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும்.

*(14)* சமுதாயத்தின் நன்மைக்கென அரசானது, சூழலைப் பாதுகாத்தலும், பேணிக்காத்தலும், சீராக்குதலும் வேண்டும்.

*(15)* அரசானது, நாடுகளிடையேயான சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் நீதியானதும் ஒப்புரவானதுமான நாட்டிடைப் பொருளாதார, சமூக ஒழுங்குமுறைமையைத் தாபித்தலையும் மேம்படுத்துதல் வேண்டும் என்பதுடன், நாடுகளின் இடையேயான தொடர்புகளில் நாட்டிடைச் சட்டத்துக்கும் உடன்படிக்கைக் கடப்பாடுகளுக்குமான மதிப்பை வளர்க்க முயலுதலும் வேண்டும்.

**அடிப்படைக் கடமைகள்**

**28.** உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகித்தல், துய்த்தல் என்பன, கடமைகளையும் கடப்பாடுகளையும் புரிதலிலிருந்து பிரிக்கொணாதவை ; அத்துடன் அதற்கிணங்க, பின்வருவனவற்றைச் செய்தல் இலங்கையிலுள்ள ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும் :—

(அ) அரசியலமைப்பையும் சட்டத்தையும் போற்றிப் பாதுகாத்தல் ;

(ஆ) தேசிய நலனை மேம்படுத்துதலும் தேசிய ஐக்கியத்தை வளர்த்தலும் ;

(இ) தாம் தேர்ந்தெடுத்த முயற்சியை மனச்சாட்சியுடன் புரிதல் ;

(ஈ) *அரசாங்க ஆதனத்தைப் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும், அரசாங்க ஆதனம் பிழையானமுறையில் பயன்படுத்தப்படுதலையும் வீணாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும் ;*

(உ) *மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்தல் ; அத்துடன்*

(ஊ) *இயற்கையைப் பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும்.*

**அரச கொள்கைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் நீதிமன்ற ஆய்வுக்குட் படாமை**

***29.*** *இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகள் சட்ட உரிமைகளை அளிக்கவுமில்லை, சட்டக் கடப்பாடுகளைச் சுமத்தவுமில்லை என்பதுடன், அவற்றை எந்த நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் வலுப்படுத்தவும் முடியாது. அத்தகைய ஏற்பாடுகளுடன் ஒவ்வாமை காணப்படுகிறது என்று கூறும் பிரச்சினை எதுவும் நீதிமன்றம் அல்லது நியாயசபை எதிலும் எழுப்பப் படுதலுமாகாது.*

அத்தியாயம் VII

## ஆட்சித்துறை

## குடியரசின் சனாதிபதி

[16][**குடியரசின் சனாதிபதி**

**30.** (1) இலங்கைக் குடியரசிற்குச் சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும்: அவரே அரசின் தலைவராகவும், ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவராகவும், ஆயுதந்தாங்கிய படைகளின் படைத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) குடியரசின் சனாதிபதி மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் ஐந்தாண்டுகள் கொண்டவொரு தவணைக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.]

**சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தலும் அவரது பதவிக்காலமும்**

**31.** (1) சனாதிபதி பதவிக்கெனத் தேர்ந்தெடுக்கக்கூடிய தகைமை கொண்ட எந்தப் பிரசையும் –

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியினால், அல்லது

(ஆ) அவர், சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பவராயின் அல்லது இருந்தவராயின், வேறேதேனும் அரசியற் கட்சியினால் அல்லது ஏதேனும் தேர்தல் இடாப்பில் தமது பெயரைப் பதிந்துள்ளவரான ஒரு தேருநரால்,

அத்தகைய பதவிக்கான வேட்பாளராகப் பெயர்குறித்து நியமிக்கப்படலாம்.

[17][(2) சனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும், அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகைமையுடையவராகார்.]

(3) சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு, பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாமலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாமலும் நடைபெறுதல் வேண்டும்.

[18][(3அ)(அ)(i) இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக உள்ள எது எவ்வாறிருப்பினும், சனாதிபதியானவர், [19][அவரது [20][முதலாவது] பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து நான்காண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் எந்நேரத்திலும்] [21][இரண்டாவது] தவணைக்குப் பதவி] வகிப்பதற்காக தேர்தல் மூலம் ஆணையொன்றுக்கென மக்களை வேண்டி நிற்பதற்கான தமது முன்னத்தைப் பிரகடனம் மூலம் வெளிப்படுத்தலாம்.

[[22]நீக்கப்பட்டது.]

---

16 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

17 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 4(1) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

18 அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் 2(1) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

19 அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் 2(2)(அ) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

20 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 4(2)(அ) (i) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

21 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

22 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 4(2)(அ) (ii)(1) ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது.

(ii) ஓராம் உட்பந்தியின்கீழ் பிரகடனமொன்று செய்யப்படுவதன்மீது, சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனத் தேதிக்குப் பின்னரும், அத்தகைய பிரகடனத்தைப் பின்பற்றி நடாத்தப்படும் தேர்தலிலான வாக் கெடுப்பு முடிவடைவதன் முன்னரும் ஆன எந்நேரத்திலும், பதவியிலிருக்கும் சனாதிபதி இறப்பின், அத்தகைய பிரகடனமானது, அத்தகைய இறப்பு நிகழ்ந்த தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரகடத்தைப் பின்பற்றி நடாத்தப்படவுள்ள தேர்தலானது இல்லாதாக்கப்பட்டதெனக் கருதப்படுதலும் வேண்டும். அத்தகைய இறப்பினால் ஏற்பட்ட சனாதிபதிப் பதவியிலான வெற்றிடம் 40 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

(இ) (i) இப்பந்தியின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றிலான வாக்கெடுப்பு முடிவடைவதற்கும் அத்தகைய தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படுவதற்கும் இடையிலான எந்நேரத்திலும் அத்தகைய தேர்தலிலான வேட்பாளரொருவர் இறப்பின், தேர்தல்கள் ஆணையாளரானவர் அத்தகைய வேட்பாளரின் இறப்பைப் பொருட்படுத்தாது வாக்கெண்ணுதலைத் தொடர்ந்து நடாத்தி அத்தகைய தேர்தலின் முடிவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ii) அத்தகைய தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படும் நேரத்தில், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட உரித்துடைய வரான ஆள் இறந்திருப்பின், தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய தேர்தலின் முடிவினை வெளிப்படுத்துதலாகாது ; ஆனால், சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான புதிய வாக்கெடுப்பொன்றினை நடாத்துதல் வேண்டும்.

(iii) உட்பந்தி (i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட இறப்பின் காரணத்தால் சனாதிபதிப் பதவியில் வெற்றிடமொன்றிருக்குமெனில், முதலமைச்சரானவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்துக்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்துக்கும் இடையிலான காலப்பகுதியின்போது சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுள் ஒருவரை, முதலமைச்சர் பதவியில் பதிற்கடமையாற்று வதற்கென நியமித்தலும் வேண்டும்.

ஆயின், அந்நேரத்தில் முதலமைச்சர் பதவியானது வறிதாயிருக்குமெனில், பிரதம அமைச்சர் அல்லது முதலமைச்சர் பதிற் கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பாரெனின், சனாதிபதிப் பதவியில் சபாநாயகர் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(ஈ) இப்பந்தியின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளானவர்,:–

(i) அத்தகைய ஆள் பதவியிலிருக்கும் சனாதிபதியாவாரெனின், அவரது முதலாவது பதவிக்காலம் தொடங்கிய தேதிக்கு நேரொத்த தான, அந்தத் தேர்தல் நடாத்தப்பட்ட ஆண்டின் (அத்தகைய தேர்தலுக்குப் பின்னரான தேதியொன்றாக இருப்பதான), அல்லது அடுத்துவரும் ஆண்டின், அத்தகைய தேதிகளுள் எத்தேதி முந்தியதோ அத்தேதியிலிருந்து தொடங்குவதாக [23][ஐந்தாண்டுகள் கொண்ட தவணையொன்றுக்குப்] பதவி வகித்தல் வேண்டும் ; அல்லது

(ii) அத்தகைய ஆள் பதவியிலிருக்கும் சனாதிபதியல்லரெனின், அத்தகைய தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படும் தேதியன்று தொடங்குவதாக [24][ஐந்தாண்டுகள் கொண்ட தவணையொன்றுக்குப்] பதவி வகித்தல் வேண்டும்.

(உ) நாற்பதாம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதிப் பதவியில் அடுத்துறுபவரான ஆளொருவர், இப்பந்தியின் (அ) என்னும் உட் பந்தியினால் சனாதிபதியொருவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(ஊ) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, 160 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்படும் முதலாவது சனாதிபதியின் முதலாவது பதவிக்காலமானது, 1978, பெப்புருவரி 4 ஆம் தேதியன்று தொடங்கியிருந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.]

[25](4) [(சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப் பொன்று நடாத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய தேர்தலில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஆளின் பதவிக்காலமானது, பதவியிலிருக்கும் சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதன் மீது தொடங்குதல் வேண்டும்:

ஆயின், 40 ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்வாறிருப்பினும்:–

---

23 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 4 (2) (ஆ) ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

24 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 4 (2) (ஆ) ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

25 அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் 2 (2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(அ) சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட எவரேனுமாள், சனாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாரென வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரும் அவரது இறப்பு நிகழாதிருந்திருப்பின் அவரது பதவிக்காலம் எத்தேதியன்று தொடங்கியிருந்திருக்குமோ அத்தேதிக்கு முன்னரும் ஆன எந்நேரத்திலேனும் இறப்பின், தேர்தல்கள் ஆணையாளர், சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென புதிய வாக்கெடுப்பொன்றை நடாத்துதல் வேண்டும். அத்தகைய புதிய வாக்கெடுப்புக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதி, முதலாவதாகக் குறிப்பிடப்பெற்ற அத்தகைய தேதிக்குப் பிந்திய தேதியொன்றாக இருப்பின், இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளின் பதவிக்காலமானது முதலாவதாகக் குறிப்பிடப்பெற்ற அத்தகைய தேதியன்று தொடங்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். 38(1) (ஈ) என்னும் உறுப்புரையின் நோக்கங்களுக்காக மாத்திரம், புதிய சனாதிபதியினது பதவிக்காலம் தொடங்கும் தேதியானது, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியாதல் வேண்டும்.

(ஆ) பதவியிலிருக்கும் சனாதிபதியானவர், சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றில் வேட்பாளரொருவராக இல்லாதவிடத்து, அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படாதுள்ளவிடத்து, அவரது பதவிக்காலமானது அத்தகைய தேர்தல் முடிவு வெளிப்படுத்தப்படும் தேதியன்று முடிவடைந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்தலில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆள் உடனடியாக ஆனால் அத்தகைய தேதியிலிருந்து இரு கிழமைகளுக்குப் பிந்தாது பதவியேற்றல் வேண்டும்:

ஆயின், பதவியிலிருக்கும் சனாதிபதி, 30 ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரென வெளிப்படுத்தப்பட்ட ஆள் பதவி ஏற்கும்வரை, தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும். சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆள் பதவியேற்கத் தவறியமை காரணமாக சனாதிபதிப் பதவி வறிதாகவருமெனின், பதவியிலிருக்கும் சனாதிபதியானவர், முதலமைச்சர், அல்லது முதலமைச்சர் பதவி அந்த நேரத்தில் வறிதாக இருந்தால் அல்லது பதிற்கடமையாற்ற இயலாதவராக முதலமைச்சர் இருந்தால், சபாநாயகர், 40 ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கிணங்க சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றத் தொடங்கும் வரை, சனாதிபதிப் பதவியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(இ) உட்பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள இறப்பின் காரணத்தால் சனாதிபதிப் பதவியில் வெற்றிடமொன்று இருக்குமெனில், முதலமைச்சரானவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்துக்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்துக்கும் இடையிலான காலப்பகுதியின்போது சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுள் ஒருவரை முதலமைச்சராகப் பதிற்கடமை யாற்றுவதற்கென நியமித்தலும் வேண்டும்:

ஆயின், அந்நேரத்தில் முதலமைச்சர் பதவியானது வறிதாயிருக்குமெனின், அல்லது முதலமைச்சர் பதிற்கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பாரெனின், சனாதிபதிப் பதவியில் சபாநாயகர் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.]

(5) சனாதிபதியின் தேர்தல், தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்படுதல் வேண்டும். அவர் அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்கள் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய தேதியையும் வாக்கெடுக்கப்பட வேண்டிய தேதியையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(6) பாராளுமன்றம், சட்டத்தின்மூலம், பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் :—

(அ) சனாதிபதித்தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமித்தலும் ;

(ஆ) சனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்படவேண்டிய தேருநர் இடாப்பும், அத்தேர்தலுக்கான நடவடிக்கை முறையும் ;

(இ) அத்தகைய தேர்தல் தொடர்பான தவறுகள் யாவையென எடுத்தியம்பலும் அத்தவறுகளுக்கான தண்டனைகளும் ;

(ஈ) அத்தகைய தேர்தலை வெற்றும் வறிதுமானதென வெளிப்படுத்தற்கும் ஆட்சேபிக்கப்பட்ட தேர்தல் எதனையும் பற்றித் தீர்மானிப்பதற்குமான ஏதுக்களும் முறையும் ; அத்துடன்

(உ) அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறு எல்லாக் கருமங்களும்.

பதவியேற்றல்.

**32.** (1) சனாதிபதியின் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அப் பதவிக்கு அடுத்து பின்வரும் ஆள், இலங்கையில் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசரின் முன்னிலையில், அல்லது அந்நீதிமன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதியின் முன்னிலையில், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடுவதன்மேல் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடுவதன் மேல் பதவியேற்றல் வேண்டும்.

(2) அவ்வாறு பதவியேற்றதன்மேல், சனாதிபதி, அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவிருப்பின், பாராளுமன்றத்தின் அவரது ஆசனத்தை வறிதாக்குதலும் வேண்டும். சனாதிபதி, எப்பதவியையேனும் எத்தகையது மான இலாபந்தரும் பதவியையேனும் வகித்தலாகாது.

[26] [(3) சனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கொரு தடவை பாராளுமன்றத்துக்கு வருகை தருதல் வேண்டும். இப்பணியை நிறைவேற்றுவதில், சனாதிபதி, வாக்களிப்பதற்கான உரித்துடைமையைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினரொருவருக்குள்ள எல்லாச் சிறப்புரிமை களுக்கும், விடுபாட்டுரிமைகளுக்கும், தத்துவங்களுக்கும் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் அல்லது அதன் உறுப்பினர்களின் ஏதேனும் சிறப்புரிமைகளினது மீறுகைக்காக ஆளாதலுமாகாது.]

[27] [(4) சனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம், பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் அதற்குச் சமாசாரம் அனுப்புவதற்கும் உரிமை யுடையவராக இருத்தல் வேண்டும்.]

**சனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும்**

[28][**33.** அரசியலமைப்பினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக, சனாதிபதி பின்வரும் தத்துவங்களைக் கொண்டவராதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்கக் கொள்கைக் கூற்றை அளிப்பதற்கும்;

(ஆ) பாராளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளில் தலைமை தாங்குவதற்கும்;

(இ) தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில், சுதந்திர மானவையும் நியாயமானவையுமான தேர்தல்களை நடாத்துவதற் குத் தகுந்த நிலைமைகள் உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்து வதற்கும்;

(ஈ) அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்கும் அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும்;

(உ) உயர்தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் நடத்தையில் உயர்தராதரங்களையும் உயர்தொழிலில் நேர்மையையும் பேணிவந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும், இப்பந்தியின்

---

26 அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் 3(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

27 அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் 3(2) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

28 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்;

(ஊ) குடியரசின் பொது இலச்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், பிரதம அமைச்சரினதும் அமைச்சரவையின் வேறு அமைச்சர்களினதும், பிரதம நீதியரசரினதும் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரினதும் ஏனைய நீதிபதிகளினதும் நியமனப் பத்திரங்கள் மற்றும் அவர் செய்வதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறான குடியரசிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் அசையா ஆதனங்களின் அத்தகைய மானியக்கொடைகள் மற்றும் கையுதிர்ப்புகள், ஆகியவற்றைப் பொது இலச்சினையின்கீழ் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அந்த இலச்சினை பொறிக்கப்படவேண்டிய எத்தன்மைத்தான எல்லா ஆவணங்களிலும் இலச்சினையிடுவதற்கும் இலச்சினையை பயன்படுத்துவதற்கும்;

(எ) போர் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்வதற்கும்; அத்துடன்

(ஏ) அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதனவற்றையும் அவர் செய்வதற்கு சர்வதேச சட்டத்தினால், வழக்கறாறினால் அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப்படுவனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும்.]

[29][33. அ நீக்கப்பட்டது]

மன்னிப்பு வழங்கல்

**34.** (1) இலங்கைக் குடியரசினுள்ளே நீதிமன்றம் எதிலும் எத்தவறுக்காகவும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவரான தவறாளின் எவரினதும் விடயத்தில், சனாதிபதி –

(அ) கட்டற்ற ஒரு மன்னிப்பை, அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம் ;

29 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது

(ஆ) அத்தகைய தவறாளிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதில், காலவரையற்ற அல்லது சனாதிபதி பொருத்தமென எண்ணக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கான காலந்தாழ்த்துதலையும் வழங்கலாம்;

(இ) அத்தகைய தவறாளியின்மீது விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாகக் கடூரம் குறைந்த ஒரு தண்டனையை விதிக்கலாம்; அல்லது

(ஈ) அத்தகைய தவறு தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, அல்லது அத்தகைய தவறு தொடர்பில் வேறு விதத்தில் குடியரசுக்குச் செல்மதியான ஏதேனும் தண்டம் அல்லது பறிமுதல் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைத் தளர்த்தலாம்:

ஆயின், நீதிமன்றம் எதனாலும் வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் மூலம் தவறாளி எவரும் மரணதண்டனைக்குள்ளாதல் வேண்டுமெனத் தீர்க்கப்பட்டுள்ளவிடத்து, சனாதிபதி, அவ்வழக்கை விளங்கிய நீதிபதி தமக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும். சனாதிபதி அங்ஙனம் அனுப்பும்போது, சட்டத்துறைத் தலைமையதிபதி அவ்வறிக்கை மீது தமது ஆலோசனையைக் கூறியபின், அவ்வறிக்கை, சட்டத்துறைத் தலைமையதிபதியின் ஆலோசனையுடன் நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அனுப்பப்படல் வேண்டுமெனவும், அவ்வமைச்சர் அவ்வறிக்கையைத் தமது விதப்புரையுடன் சனாதிபதிக்கு அனுப்புதல் வேண்டுமெனவும் கூறும் அறிவுறுத்துரைகளுடன் அனுப்புதல் வேண்டும்.

(2) சனாதிபதி, 89 ஆம் உறுப்புரையின் (ஈ), (உ), (ஊ), (எ) அல்லது (ஏ) என்னும் பந்திகளில் அல்லது 91 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராயுள்ள அல்லது அமைந்தவராக வந்துள்ள எவரேனுமாளின் விடயத்தில் —

(அ) கட்டற்ற ஒரு மன்னிப்பை, அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம், அல்லது

(ஆ) அந்தத் தகைமையீனக் காலப்பகுதியைக் குறைக்கலாம்.

(3) ஏதேனும் தவறு புரியப்பட்டு அத்தவறுக்காகத் தவறாளி இலங்கைக் குடியரசினுள்ளே விளங்கக்கூடியவராய் இருக்கும்போது, சனாதிபதி, முக்கிய தவறாளியின்மீது அல்லது தவறாளிகள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயின், அத்தகைய முக்கிய தவறாளிகளில் எவரேனும் ஒருவரின் மீது குற்றத்தீர்ப்பு அளிப்பதற்கு இட்டுச்செல்லும் அத்தகைய தகவலைத் தருகின்றவரான அத்தகைய கூட்டுக்குற்றவாளி எவருக்கும் சனாதிபதி ஒரு மன்னிப்பை வழங்கலாம்.

**30[சனாதிபதிக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கான விடுபாட்டுரிமை**

**35.** *(1)* எவரேனும் ஆள் சனாதிபதியாக பதவி வகிக்கின்றபோது, அவரது பதவிமுறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது:

ஆயின், இப்பந்தியிலுள்ளது எதுவும் சனாதிபதியினால் தமது பதவிமுறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் 126 ஆம் உறுப்புரையின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எதிராக விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு எவரேனுமாளுக்குள்ள உரிமையை மட்டுப்படுத்துவதாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது:

ஆயின் மேலும் 33 ஆம் உறுப்புரையின் (எ) என்னும் பந்தியின் கீழான சனாதிபதியின் தத்துவங்களின் பிரயோகம் மீது உயர் நீதிமன்றம் தீர்ப்பை விளம்புவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தலாகாது.

*(2)* எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் விவரணத்தினவையுமான வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான காலவெல்லையை வரையறுத்து சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அச்சட்டத்தினால் விதித்துரைக்கப் பட்ட காலப்பகுதியைக் கணிப்பதில் அத்தகைய ஆள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

*(3)* இந்த உறுப்புரையின் *(1)* ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்டுள்ள விடுபாட்டுரிமை, 44 ஆம் உறுப்புரையின் *(2)* ஆம் பந்தியின் கீழ் சனாதிபதிக்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது சனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது 129 ஆம் உறுப்புரையின் *(2)* ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் செல்லுபடியாந்தன்மை தொடர்பாக 130(அ) என்னும் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவரின் தேர்தல் தொடர்பாக 144 ஆம் உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலான அல்லது உயர்நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகாது:

ஆயின், அத்தகைய ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான எதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பான அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகள், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எதிராகத் தொடுக்கப்படுதல் வேண்டும்.]

30 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 5 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**சம்பளமும் ஓய்வூதியமும்**

***36.*** *(1) அரசியலமைப்புத் தொடங்குவதிலிருந்து ஒரு மாதகாலத்தினுள், சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறுவதற்கு உரித்துடையராயிருக்கும் சம்பளத்தையும் படிகளையும் ஓய்வூதியத்தையும் பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய ஓய்வூதியம், ஏதேனும் முந்திய சேவையின் பயனாக அத்தகைய ஆளுக்கு உரித்தான வேறேதேனும் ஓய்வூதியத்திற்கு மேலதிகமானதாயிருத்தல் வேண்டும்.*

*(2) சனாதிபதி என்ற பதவியை ஏற்பதன்மேல் அத்தகைய பதவியைத் தாங்குபவர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளத்தையும் படிகளையும் பெறுவதற்கும், அதன் பின்னர் அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன் இந்த உறுப்புரை பின்னர் திருத்தப்படுவதும், நீக்கப்படுவதும் அல்லது மாற்றீடு செய்யப்படுவதும், இந்த உறுப்புரையுடன் ஒவ்வாததாக வுள்ள ஏதேனும் பின்னரான சட்டம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு, கடந்த காலத்தை உள்ளடக்கும் பயனுடையதாகாது.*

*(3) சனாதிபதியின் சம்பளமும் படிகளும் ஓய்வூதியமும் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*(4) பாராளுமன்றம், தீர்மானத்தின் மூலம், சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறுவதற்கு உரித்துடையவராயிருக்கும் சம்பளத்தை அல்லது ஓய்வூதியத்தை அதிகரிக்கலாம், ஆனால் குறைத்தலாகாது.*

**சனாதிபதிக்குரிய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் முதலமைச்சரால் பிரயோகிக்கப் படுதலும் புரியப்படுதலும் நிறைவேற்றப் படுதலும்**

***37.*** *(1) சனாதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறேதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதிருப்பாரெனக் கருதுவாரெனில், அத்தகைய காலத்தின்போது சனாதிபதி என்ற பதவியில், முதலமைச்சரைச் சனாதிபதி என்ற பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவர் நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய காலத்தின்போது முதலமைச்சர் என்ற பதவியில் பதிற்கடமை ஆற்றுதற்கென ஏனைய அமைச்சர்களில் ஒருவரையும் நியமிக்கலாம் :*

*ஆயின், அப்போது முதலமைச்சர் பதவி வறிதாகவிருப்பின் அல்லது முதலமைச்சர் செயலாற்ற இயலாதிருப்பின், அத்தகைய காலப்பகுதியின்போது சனாதிபதியின் பதவிக்கான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், அவர் சபாநாயகரை நியமிக்கலாம்.*

(2) சனாதிபதி அவரது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதிருக்கின்றாரெனச் சபாநாயகரைக் கலந்தாலோசித்த பின்னர் பிரதம நீதியரசர் அபிப்பிராயப்படுவதோடு, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க நியமனமொன்றைச் செய்ய இயலாத வராயிருப்பின், அவரது அபிப்பிராயத்தை அவர் சபாநாயகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் அத்தகைய காலத்தின் போது முதலமைச்சர், சனாதிபதியின் பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும். அத்துடன், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாறு அத்தகைய நியமனம் எதுவும் செய்யப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், அத்தகைய காலத்தின்போது முதலமைச்சர் என்ற பதவியில் பதிற்கடமை ஆற்றுதற்கெனப் பதில் சனாதிபதி, அமைச்சரவை உறுப்பினரொருவரை நியமித்தலும் வேண்டும்:

ஆயின், அப்போது முதலமைச்சர் பதவி வறிதாகவிருப்பின் அல்லது முதலமைச்சர் செயலாற்ற இயலாதிருப்பின், அத்தகைய காலப்பகுதியின்போது சனாதிபதியின் பதவிக்கான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளை யும், சபாநாயகர் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி பற்றியனவான அரசியலமைப்பின் ஏற்பாடுகள் (32 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நீங்கலாக), அவை ஏற்புடையனவாக்கப்படக்கூடிய அந்த அளவுக்கு, சனாதிபதி என்ற பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அவ்வாறு பிரயோகித்துப் புரிந்து நிறைவேற்றும் ஆளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையிலும் உறுப்புரை 38 (1) (ஆ), 40 (1) என்பவற்றிலும் "சபாநாயகர்" என்பது, பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள ஏதேனும் காலத்தின்போது, பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் சபாநாயகர் என்ற பதவியை வகித்த ஆளையும் உள்ளடக்கும்.

**சனாதிபதி பதவியை வறிதாக்கல்**

**38.** (1) சனாதிபதியின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும் :-

(அ) அவர் இறப்பதன்மேல் ;

(ஆ) அவர், சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் தம்கைப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறந்தால் ;

(இ) அவர் இலங்கையின் ஒரு பிரசையாக இல்லாதொழிந்தால் ;

(ஈ) சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஆள், தமது பதவிக்காலம் தொடங்கிய தேதியிலிருந்து [31][இரு கிழமைகளுக்குள்ளாக] வேண்டு மென்று பதவியேற்கத் தவறினால் ;

31 அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(உ) அடுத்துப் பின்வரும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அவர் பதவியினின்றும் அகற்றப்பட்டால் ; அல்லது

(ஊ) 130 (அ) என்னும் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றம் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவர் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை வெற்றும் வறிதுமானதெனத் தீர்மானிப்பதுடன் வேறெவரேனும் ஆள் சனாதிபதியாக முறையாகத் தெரிவு செய்யப் பட்டாரெனத் தீர்மானிக்காவிடில்.

(2) (அ) பாராளுமன்ற உறுப்பினரெவரும், சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம், மனப்பலவீனம் அல்லது உடற் பலவீனம் காரணமாகச் சனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளாரெனச் சார்த்துகின்ற, அல்லது சனாதிபதி, பின்வருவனவற்றைப் புரிந்ததற்குக் குற்றவாளியாகவுள்ளாரெனச் சார்த்துகின்ற தீர்மானம் பற்றிய அறிவித்தலொன்றைக் கொடுக்கலாம் :-

(i) அரசியலமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றம்,
(ii) தேசத்துரோகம் புரிந்த குற்றம்,
(iii) இலஞ்சம் பெற்ற குற்றம்,
(iv) தமது பதவிக்குரிய அதிகாரங்களைத் துர்ப்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம், அல்லது
(v) ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும், ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு ;

அத்துடன் சுமத்தப்பட்ட குற்றச்சார்த்தல் அல்லது குற்றச்சார்த்தல்கள் பற்றிய முழு விபரங்களையும் அத்தீர்மானம் தருதல் வேண்டுமென்பதுடன், உயர்நீதிமன்றத்தினால் அதன்மீது விசாரணை நடாத்தப்படுதல் வேண்டுமெனவும் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் கோருதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தலெதுவும், (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகினாலொழியவும்–

(i) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினர்களுக்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தாலொழியவும், அல்லது

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையிலும் அரைவாசிப் பங்கினர்க்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப் பட்டிருப்பதுடன், அத்தகைய குற்றச்சார்த்தல் அல்லது குற்றச்சார் தல்கள் நீதிமன்றத்தினால் அதன்மீது அல்லது அவற்றின் மீது விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கை செய்யப்படத் தகவுடையது அல்லது தகவுடையன எனச் சபாநாயகர் திருப்தியடைந்தாலொழியவும், சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுதலோ ஆகாது.

(இ) அத்தகைய தீர்மானம், உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்கினர்க்குக் குறையாதவர்கள் அதற்குச் சாதகமாக வாக்களிப்பதன்மூலம் நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள குற்றச்சார்த்தல் அல்லது குற்றச்சார்தல்கள் விசாரணைக்கும் அறிக்கைக்குமெனச் சபாநாயகரினால் உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) உயர்நீதிமன்றம், முறையான விசாரணையின் பின் (அத்தகைய விசாரணையின் போது தாமே தோற்றவும் தாமாகவே அல்லது தமது சட்டத்தரணி மூலம் தம் வழக்குரைக்கவும் சனாதிபதிக்கு உரிமையிருத்தல் வேண்டும்) அதன் தீர்மானம் பற்றி, (அவற்றிற்கான காரணங்களுடன் சேர்த்து) பாராளுமன்றத்துக்கு அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(உ) உயர்நீதிமன்றமானது, சனாதிபதி உளக்குறைபாடு காரணமாக அல்லது உடற்குறைபாடு காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராயிருக்கிறார் என்று, அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச் சார்த்தல்களுள் எவற்றுக்கும் சனாதிபதி குற்றவாளியாகவிருக்கிறார் என்று தாம் அபிப்பிராயப்படுவதாகப் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யுமிடத்து, பாராளுமன்றம், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டு பங்கினர்க்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் சனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

**சனாதிபதி உரியமுறையில் தேர்ந்தெடுக்கப் படவில்லையென அல்லது சனாதிபதியின் தேர்தல் வறிதாகிவிட்டதென உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படல்**

**39.** (1) உயர்நீதிமன்றமானது, 130 ஆம் உறுப்புரையின் கீழான அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்–

(அ) சனாதிபதியின் தேர்தல் வறிதானதெனத் தீர்மானிக்கின்றவிடத்தும் வேறேவரேனும் ஆள் சனாதிபதியாக முறையாகத் தெரிவு செய்யப்பட்டாரெனத் தீர்மானிக்காதவிடத்தும், அத்தீர்மானத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல், சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) வேறு எவரேனும் ஆள் சனாதிபதியாக உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய வேறு ஆள், அத்தீர்மானத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சனாதிபதிப் பதவியை ஏற்றல் வேண்டும்.

முப்பத்தெட்டாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் நோக்கங்களுக்கென புதிய சனாதிபதியின் பதவிக்காலம் தொடங்கும் தேதி, விடயத்துக்கேற்ப அவரது தேர்தல் தேதியாக அல்லது தீர்மானத் தேதியாக இருத்தல் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தீர்மானத்தை உயர்நீதிமன்றம் செய்ததன்மேல், சனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பவரும் புரிபவரும் நிறைவேற்றுபவருமான ஆள், அத்தகைய தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தலையும்

புரிதலையும் நிறைவேற்றுதலையும் உடனடியாக விட்டொழிதல் வேண்டும். அத்தகைய தீர்மானத் தேதிக்கும் புதிய சனாதிபதி பதவியேற்கும் தேதிக்குமிடையில் உள்ள காலத்தின்போது, முதலமைச்சரே சனாதிபதியின் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டுமென்பதுடன், அவர், முதலமைச்சரின் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கென அமைச்சரவையின் வேறு அமைச்சர்களுள் ஒருவரைப் பெயர் குறித்து நியமித்தலும் வேண்டும் :

ஆயின், அந்நேரத்தில் முதலமைச்சரின் பதவி வறிதானதாயிருக்குமெனின், அல்லது முதலமைச்சர் பதிற்கடமையாற்றுவதற்கு இயலாதவராயிருப்பா ரெனின், சபாநாயகரே சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(3) முப்பத்தோராம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 30 (2) ஆம் உறுப்புரையின் நோக்கங்களுக்கான, புதிய சனாதிபதியின் பதவிக் காலமானது, எந்த ஆளின் தேர்தல் வறிதாக விருந்ததென அல்லது முறையற்றதாகவிருந்ததெனத் தீர்மானிக்கப்பட்டதோ அந்த ஆளின் பதவிக்காலம், அத்தகைய தீர்மானஞ் செய்யப்படாவிடின் எத்தேதியன்று தொடங்கியிருக்குமோ அத்தேதியன்று தொடங்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் எவரேனும் ஆளால் பிரயோகிக்கப்படுதலும் புரியப்படுதலும் நிறைவேற்றப்படு தலும், அத்தகைய ஆள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை வறிதானதென அல்லது முறையற்றதானதென உயர்நீதிமன்றம் பின்னர் தீர்மானித்துள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றனவா தலாகாது.

(5) நாற்பதாம் உறுப்புரையில் முரணாக எது எவ்விதமிருப்பினும் இந்த உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**சனாதிபதி பதவியை வறிதாக்கலும், அடுத்துவரும் சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தலும்**

**40.** (1) (அ) சனாதிபதியின் பதவி அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக வறிதாகினால், பாராளுமன்றம், சனாதிபதி என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராயுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைச் சனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். சனாதிபதிப் பதவிக்கு அங்ஙனம் வருகின்ற ஆள் எவரும், பதவியை வறிதாக்கிச் செல்லும் சனாதிபதியின் பதவிகாலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய தேர்தல், வெற்றிடம் ஏற்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும் அத்தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமலும் நடாத்தப்படுதல் வேண்டும். பாராளுமன்றம் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறைக்கிணங்க அத்தகைய தேர்தல், இரகசிய வாக்களிப்பு மூலமும் அளிக்கப்பட்ட வாக்குகளின் பூரண பெரும்பான்மை மூலமும் நடைபெறுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய வெற்றிடம், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டால், சனாதிபதியானவர், புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்ற தேதியிலிருந்து ஒரு மாத காலத்துள் பாராளு மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்துக்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தின் போது, சனாதிபதிப் பதவியில் முதலமைச்சர் பதிற்கடமையாற்ற வேண்டும் என்பதுடன், முதலமைச்சர் என்ற பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கென அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுள் ஒருவரை முதலமைச்சர் நியமித்தலும் வேண்டும்:

ஆயின், அந்நேரத்தில் முதலமைச்சர் பதவி வறிதாயிருக்குமெனின் அல்லது முதலமைச்சர் பதிற்கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பாரெனின், சனாதிபதி என்ற பதவியில் சபாநாயகர் பதிற்கடமை யாற்றுதல் வேண்டும்.

(2) சனாதிபதி பற்றிய அரசியலமைப்பின் ஏற்பாடுகள் (32 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நீங்கலாக), அவற்றை ஏற்புடையதாக்கக்கூடிய அளவுக்கு, பதிற் சனாதிபதிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) சனாதிபதியைப் பாராளுமன்றம் தேர்ந்தெடுத்தலுக்கான நடவடிக்கை முறை பற்றிய எல்லாக் கருமங்களுக்கும், அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர் விளைவான ஏனைய எல்லாக் கருமங்களுக்கும் சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

சனாதிபதியின் பணியாட்டொகுதியினர்

**41.** (1) சனாதிபதி, தமது பதவிக்குரிய தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் தமக்கு உதவுவதற்கு அவசியமானவர்களென அவர் கருதுகின்றவாறான அத்தகைய செயலாளர்களையும், அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து அத்தகைய வேறு அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் நியமிப்பதற்கும், அவர்களது சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிப்பதற்கும் தத்துவ முடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்டொகுதியினர் என்போரின் சம்பளங்கள், திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படல் வேண்டும்.

(3) அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்டொகுதியினர் என்போரைப் பதவி விலக்குவதற்கும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் ஆன தத்துவங்கள் சனாதிபதிக்கு உரித்தானவை என்பதைத் தவிர, அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்டொகுதி யுறுப்பினர் ஆகியோர் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும் ; சனாதிபதி, அத்தகைய எவரேனும் அலுவலர்கள் அல்லது பணியாட்டொகுதியுறுப்பினர்கள் தொடர்பில் பதவி விலக்குதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தமது தத்துவங்களை அத்தகைய எவரேனும் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

(4) அத்தகைய செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதி யுறுப்பினர் ஒவ்வொருவரும், புதிய ஒரு சனாதிபதி பதவியேற்பதன்மேல் பதவிவகிக்காதொழிதல் வேண்டும்.

(5) அத்தகைய செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதி யுறுப்பினர் எவரும் அங்ஙனம் பதவிவகிக்காதொழியுமிடத்து, அமைச்சரவை, அத்தகைய செயலாளரை, அலுவலரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரைப் பகிரங்க சேவையிலுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கலாம் :

ஆயின், செயலாளராக, அலுவலராக அல்லது பணியாட்டொகுதி உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் பகிரங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் சேவையில் இருந்தவரான அத்தகைய எவரேனும் செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதியுறுப்பினர், புதிய ஒரு சனாதிபதி பதவியேற்பதன் மேல், முதுமுறையை இழக்காமல் அத்தகைய சேவையை மீள வகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கான காப்புவாசகம், அக்காப்பு வாசகத்திற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கு–

(அ) ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக பதவி விலகுவதன் மூலமாக வன்றி வேறுவகையாக அத்தகைய ஆளின் சேவைகளைச் சனாதிபதி முடிவுறுத்தியதன்மேல் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் பதவிதுறக்கும் தேதியன்று அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறாதிருந்தாலொழிய அல்லது அந்நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசமிருந்தாலொழிய, அத்தகைய ஆள் பதவிதுறந்ததன்மேல்,

ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் (5) ஆம், (6) ஆம் பந்திகளின் நோக்கங்களுக்கென, சனாதிபதியின் செயலாளர் பதவியை, ஏதேனும் அமைச்சின் செயலாளர் பதவியை அல்லது சனாதிபதியின் பணியாட்டொகுதியில் ஏதேனும் பதவியை அல்லது அத்தகைய பதவிகளில் ஏதேனும் ஒன்றோ பலவோவாய பதவிகளைத் தொடர்ந்து வகித்தவரான எவரேனுமாள், அவர் கடைசியாக எந்தப் பதவியை வகித்தாரோ அந்தப் பதவியைத் தொடர்ந்து வகித்தவராகக் கருதப்படல் வேண்டும்.

## [32] [அத்தியாயம் VIIஅ

### அரசியலமைப்புப் பேரவை

*அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பு*

**41அ.** (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சர்;

(ஆ) சபாநாயகர்;

(இ) பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(உ) பின்வருமாறாக பெயர்குறிக்கப்பட்டதன் மேல், சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்கள்: -

(i) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர் களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்;

(ii) எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்; மற்றும்

(iii) பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடனான உடன்பாட்டின்மீது சாபநாயகரினால் பெயர்குறிக்கப்படும் மூன்று ஆட்கள்; அத்துடன்

(ஊ) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த,

---

32 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தின் மூலம் அத்தியாயம் VIIஅ பதிலீடு செய்யப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்பட்டு சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் உட்பந்தி (உ) அல்லது உட்பந்தி (ஊ) என்பதன் கீழான நியமனங்களுக்கான பெயர்குறித்த நியமனங்கள், அத்தகைய பெயர்குறித்த நியமனங்களுக்கான சந்தர்ப்பமொன்று எழுகின்றபொழுதெல்லாம் செய்யப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை பெயர்குறித்து நியமிக்கையில், விடயத்துக்கேற்ப பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவை, உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும். இவர்களது பெயர்குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1) ஆம் பந்தியின் (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட பெயர்குறித்த நியமனங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமனங் களைச் செய்தல் வேண்டும்.

(7) (அ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பேரவையின் உறுப்பின ரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப் பினர்களாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், விடயத்திற்கேற்ப, பிரதம அமைச்சராக நியமிக்கப்படும்

அல்லது எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அல்லது (1) ஆம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்தி களின்கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(8) (அ) ஓராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் உறுப்பினர், அவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டா லொழிய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) ஓராம் பந்தியின் (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின்கீழ் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், சனாதிபதிக்கு முகவரி யிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது உடல்ரீதியான அல்லது உளரீதியான ஆற்றலின்மை என்ற ஏதுக்கள் மீதும் அத்துடன் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராக உள்ளார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை மீது (சமூகமளிக்காதோர் உட்பட) அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்குத் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந் தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41உ என்னும் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின் கீழ் அவருடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியி லிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) ஓராம் பந்தியின் (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிடமேற்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாறோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுயின்போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) ஓராம் பந்தியின் (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலாகாது.

(11) ஓராம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப் படுதல் வேண்டும்.

**பேரவையானது நியமனங்களை விதந்துரைத்தல்**

**41ஆ.** (1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றில் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக் குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப் படலாகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம், சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட இலங்கைச் சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக் குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டு மென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதின்நான்கு நாட்களினுள் இவ்வுறுப் புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற்கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் மறுமொழி கூறற் பாலதாதலும் வேண்டும்.

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு.

(ஈ) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு.

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

(எ) நிதி ஆணைக்குழு.

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

**பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல்**

**41இ.** (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதின்நான்கு நாட்களை விஞ்சுமொரு காலப் பகுதிக்குப் பதிற்கடமையாற்றுவதற்கென நியமிக்கப் படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின் மீது அத்தகைய பதில் நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, பதின்நான்கு நாட்களை விஞ்சாத தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும், அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதனது பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினது அபிப்பிராயத்தைப் பெறுதல் வேண்டும்.

**அட்டவணை**

பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும்.

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

(இ) தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

பாகம் II

(அ) சட்டத்துறை தலைமையதிபதி.

(ஆ) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்.

(இ) கணக்காய்வாளர் தலைமையதிபதி.

(ஈ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.

(உ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணை யாளர் (ஓம்புட்சுமான்).

(ஊ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

**பேரவையானது செயலாளர் நாயகமும் ஏனைய அலுவலர்களும்**

**41ஈ.** (1) மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கென பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன்மேல், செயலாளர் நாயகம் மீளநியமிப்பதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

**பேரவையின் கூட்டங்கள்**

**41உ.** (1) பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும், அத்துடன் இவ்வத்தியாயத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்று வதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின் மீது பேரவையின் செயலாளர் நாயகத்தினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங் களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின், பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிபையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர் களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டா லொழிய, வலிதுடையதாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்கு கின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41ஆ இன் அல்லது உறுப்புரை 41இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப் பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் முன் அனுமதியின்றி, பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவரான உறுப்புரை 41அ வின் (1) ஆம் பந்தியின் (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் எவரேனும் உறுப்பினர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயன்பட, பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவையானது, அது, முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது செய்யப்பட்ட பேரவையின் செயல், நடபடி அல்லது முடிபு, எதுவும்

பேரவை முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் நிகழ்வின் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப் படுதலுமாகாது.

**பேரவையின் உறுப்பினர்கள் பதவியில் தொடர்ந்திருத்தல்**

***41ஊ***. பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றது எதுஎவ்வாறிருப்பினும், பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

**பேரவையின் தத்துவங்களும் கடமைகளும்**

***41எ***. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப்பகுதியின்போதான அதன் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தால் அதன்மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்று வதற்கும் புரிவதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண் டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

**செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப் பிக்கப்படுதல்**

***41ஏ***. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**பேரவையின் முடிபுகளின் முடிவாந்தன்மை**

***41ஒ***. நூற்றி இருபத்தாறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிபை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக்கவனிப் பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டி ருத்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங் களுக்காகவும் முற்றும் முடிவானதாக இருத்தலும் வேண்டும்.]

## [33] [அத்தியாயம் VIII

### ஆட்சித்துறை

### அமைச்சரவை

**சனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக விருத்தல்**

**42.** சனாதிபதி, அரசியலமைப்பின் கீழும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான அப்போதைக்குள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

**பிரதம அமைச்சரும் அமைச்சரவையும்**

**43.** (1) குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சரவையின் தலைவராகவிருத்தலும் வேண்டும்:

ஆயின், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவது எது எவ்வாறிருப் பினும், சனாதிபதி தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, அவரது அபிப்பிராயப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் சாத்திய முள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

**அமைச்சர்கள் மற்றும் அவர்களுடைய விடயங்களும் பணிகளும்**

**44.** (1) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுமிடத்து, பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரவையின் அமைச்சர்களினதும், அமைச்சுக்களிதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப்படவுள்ள விடயங்களையும் பணிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

---

33 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் அத்தியாயம் VIII மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, பாதுகாப்பு எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது உறுப்புரை 45 இன் (1) ஆம் பந்தியின்கீழ் அத்தகைய எவரேனும் அமைச்சருக்கு குறித்தளிக்கப்படாத ஏதேனும் விடயம் அல்லது பணியை பதினான்கு நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் அமைச்சரவையின் அமைச்சரின் அல்லது அமைச்சரவையின் உறுப்பினரல்லாத எவரேனும் அமைச்சரின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலான ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்து பொருள்கொள்ளப்படுத லும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் சனாதிபதிக்கான ஏதேனும் விடயம் அல்லது பணியை பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அவருக்குக் குறித்தொதுக்குவதிலிருந்து தடைசெய்த லாகாது. அத்துடன் அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சருக்கு அரசிய லமைப்பிலுள்ள அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப் படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி எந்நேரத்திலும் அமைச்சரவையின் விடயங்களினதும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும், அமைப்பையும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் தொடர்ச்சியையும் பாராளுமன்றத் துக்கு அதற்குள்ள பொறுப்புடைமையின் தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

*அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள்*

**45.** (1) சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களாக நியமிக்கலாம்.

(2) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்களினதும் மற்றும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும் அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்கள் ஏதேனுமிருப்பின், அமைச்சுக் களையும் தீர்மானிக்கலாம்.

(3) சனாதிபதி (2) ஆம் பந்தியின் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்கு தலை எந்தநேரத்திலும் மாற்றலாம்.

(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதலும் வகைசொல்ல வேண்டியவராதலும் வேண்டும்.

(5) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத எவரேனும் அமைச்சருக்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் கையளிக்கலாம் அத்துடன் அவருக்கு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அத்தகைய தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சர்மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், பிரயோகித்தலும் புரிதலும் அத்தகைய வேறு அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

*பிரதி அமைச்சர்கள்*

**46.** (1) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களி லிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அவரது பிரதியமைச்சருக்கு கையளிக்கலாம் அத்துடன் அந்தத் தத்துவம் அல்லது கடமை அத்தகைய அமைச்சருக்கு அல்லது அவர்மீது எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், இப்பந்தியின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் அத்தகைய பிரதியமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேணடும்.

**பிரதம அமைச்சரின் பதவிக் காலமும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்போரின் எண்ணிக்கையினதும் பதவிக் காலத்தினதும் வரையறை**

**47.** (1) அமைச்சரவை–

(அ) அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும், கூட்டுமொத்த எண்ணிக்கை மொத்தத்தில் நாற்பதை விஞ்சுதலாகாது.

(2) பிரதம அமைச்சர்–

(அ) சனாதிபதியின் கைப்பட்ட கடிதத் தின் மூலம் அகற்றப்பட்டாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந் தாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினரொரு வராக இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச் சரவை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரவையின் அமைச்சரொருவர் அல்லது அமைச்சரவை உறுப்பின ரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர்–

(அ) பிரதம அமைச்சருடனான கலந்தா லோசனையுடன் அவர் சனாதிபதி யின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப் பட்டிருந்தாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் அவருடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணி யாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக்குழு, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குமிடத்து, அமைச் சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கையும், பிரதி அமைச்சர்களின் எண் ணிக்கையும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) பந்தி (4) இன் நோக்கத்துக்காக ''தேசிய அரசாங்கம்'' என்பது, பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழு அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களுடன் ஒன்றுசேர்ந்து உருவாக்கப்படும் ஓர் அரசாங்கம் எனப் பொருள்படும்.

**பாரளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரான அமைச்சரவை**

**48.** (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றாதொழிதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 47ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் (அ) என்னும் உட்பந்தியில் அல்லது (3) ஆம் பந்தியில் உட்பந்தி

(அ) அல்லது (ஆ) இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பதவி வகிக்கா தொழிந்தாலன்றி, அத்தகைய அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் அத்தேர்தல் ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுக்கப்படும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுதலும் மற்றும் பொதுத்தேர்தலின் போது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிக்காது இருத்தலும் வேண்டும்.

(2) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்துள்ளமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியை துறந்தமை எவ்வாறிருப்பினும், அமைச்சரவையானது, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்துபணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறப்ப தன் மீது, பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மீது அல்லது பதவி துறப்பதன் மீது, சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும் அமைச்சரை நியமிக்கலாம்.

**அமைச்சரவையைக் கலைத் தல்**

**49.** (1) பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுத லுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது தவிர, இறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது பதவி துறப்பதன் மூலம் அல்லது வேறு வகையாக பதவி வகிக்காதொழிந்த தன்மேல், சனாதிபதி 70 ஆம் உறுப்புரையின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, அமைச்சரவை கலைக்கப் பட்டதாதல் வேண்டும் என்பதுடன், சனாதிபதி 43, 44, 45 மற்றும் 46 என்னும் உறுப்புரைகளின் நியதிகளின்படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவை யின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர் களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தலும் வேண்டும்:

ஆயின், பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன்

உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்தகைய அமைச்சர்களுள் ஒருவரை நியமிக்கலாம், என்பதுடன், 48 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பாராளுமன்றம், அரசாங்கக் கொள்கைக் கூற்றை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால், அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி 70 ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, 43, 44, 45 மற்றும் 46ஆம் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களை யும் நியமித்தல் வேண்டும்.

**பதில் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும்**

**50.** அமைச்சரவையின் அமைச்சரொருவர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர் அவருடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும்போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், அமைச்சரவையின் உறுப்பினரொருவரல்லாத அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற் கென சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம்.

**பிரதம அமைச்சரின் செயலாளரும் அமைச்சரவையின் செயலாளரும்**

**51.** (1) (அ) பிரதம அமைச்சருக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) பிரதம அமைச்சரின் செயலாளர் பிரதம அமைச்சரின் அலுவலகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புகளுக்கமைய, அவரது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) (அ) அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் சனாதிபதி யினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) செயலாளர், சனாதிபதியின் பணிப்புக்கு அமைய, அமைச்சரவையின் அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும், கடமைகளையும் அவர் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

**5 2.** (1) அமைச்சரவை அமைச்சரொருவரின் அமைச்சு ஒவ்வொன்றுக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். ***அமைச்சுக்களின் செயலாளர்கள்***

(2) அமைச்சொன்றின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களின் மீது மற்றும் வேறு நிறுவனங்களின்மீது மேற்பார்வைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவையின் கலைவு எது எவ்வாறிருப்பினும், அமைச்சொன்றின் அத்தகைய அமைச்சுக்கு புதிய செயலாளர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியமிக்கப் படும்வரை தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அமைச்சொன்றிற்கான செயலாளர் அத்தகைய அமைச்சின் உளதாம் தன்மையை இல்லாதொழிப்பதில் முடிவடைகின்ற 44 ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினாலான தீர்மான மொன்றின்மேல் பதவியை வகிப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, சனாதி பதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம், கணக்காய்வாளர்-தலைமையதிபதியின் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்றசெயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்க திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**5 3.** இந்த அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட் டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொரு வர், அத்தகைய ஆள் நான்காம் அட்டவணையிலும் ஏழாம் அட்டவணையிலும் தரப்பட்டுள்ள சத்தியங்களைச் செய்து கீழொப்பமிடும்வரை அல்லது உறுதியு ரைகளை மொழிந்து கீழொப்பமிடும் வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.] ***பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை***

[34] [அத்தியாயம் IX

**நிறைவேற்றுத்துறை**

**பகிரங்க சேவை**

**பகிரங்க சேவை ஆணைக் குழு**

**54.** [35] [(1) (இவ்வத்தியாயத்தின் ''ஆணைக்குழு'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.]

(2) ஆளெவரும், அவர் பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வருவாராயின் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினரொருவராகத் தொடர்ந்து பதவி வகித்தலோ ஆகாது.

(3) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப் படுவதற்கு நேர் முன்னர் அரச சேவையில் பகிரங்க அலுவலரொருவராக விருந்த அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய நியமனம் பயனுறத் தொடங்கியதும் அத்தகைய பதவியை வகியாதொழிதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேற்கொண்டு நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது :

ஆயின், அத்தகைய எவரேனும் ஆள், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்ற வரைக்கும், அல்லது அத்தகைய ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருக்கின்றபோது விடயத்துக்கேற்ப, அவர் ஒரு பகிரங்க அலுவலராக அல்லது நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின் எந்த வயதில் ஓய்வுபெறும்படி தேவைப்படுத்தப்படுவாரோ அந்த வயதை எய்தினால், அத்தகைய சேவை தொடர்பிலான ஓய்வூதியங்கள், பணிக் கொடைகள் அல்லது வேறு படிகள் கொடுத்தல் பற்றிய ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காகப் பகிரங்க அலுவலரொருவராகவும் அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவும் அத்துடன் அரச சேவையில் ஓய்வூதியங்கொண்ட பதவியொன்றை வகிக்கின்றவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

---

34 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் அத்தியாயம் IX மாற்றீடு செய்யப்பட்டது.

35 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 4 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[36][(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் (2) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்னரே தமது பதவியை துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியி னால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது (6) ஆம் பந்தியின் கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டாலொழிய, அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.; ]

(5) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்; ஆனால், உறுப்பினராக அவரது பதவிக்காலம் காலாவதியான பின்னர் பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலாகாது. உறுப்பினரெவரும், இரு தடவைகளுக்குமேல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகப் பதவி வகிப்பதற்குத் தகவுடையவராதலாகாது.

(6) ஆணைக்குழுவின் முன்கூட்டிய அனுமதியைப் பெறாது ஆணைக் குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் ஆணைக் குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது.

[37][(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு உறுப்பினரொருவர் ஆணைக்குழு தொடர்பான கடமைகளைப் புரிவதிலிருந்து அவருக்கு லீவு வழங்கலாமென்பதுடன், அவர் அத்தகைய காலப் பகுதியின்போது, [38][ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு

36 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 4(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
37 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 10(3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
38 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தில் 8(3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[39] அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது] தகைமைபெற்ற ஆளொருவரை அத்தகைய லீவுக் காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராக நியமித்தலும் வேண்டும்.]

(8) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்குப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனாதிகள் செலுத்தப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்குச் செலுத்தப்படும் வேதனாதிகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப் படுதலுமாகாது.

(9) ஆணைக்குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் அத்தகைய வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(10) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டிய ஆணைக்குழுச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும்.

(11) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

**அமைச்சரவையினதும் ஆணைக்குழுவினதும் தத்துவங்களும் பணிகளும்**

[40] [**55.** (1) அமைச்சரவையானது, பகிரங்க அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கொள்கை விடயங்களுக்கும், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன தொடர்பான கொள்கையுட்பட, ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) எல்லாத் திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன அமைச்சரவைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, சட்டத்தினால் தாபிக்கப்படுகின்றவாறான மாகாண பகிரங்க சேவையின் தத்துவங்களையும் பணிகளையும் திறக்குறைவு செய்தலாகாது.

---

39 அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் மூலம் வாசகம் 4(3) மாற்றீடு செய்யப்பட்டது.

40 அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தினால் வாசகம் 8 மாற்றீடு செய்யப்பட்டது.

(5) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவும் வகைசொல்லவேண்டியதாகவும் இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும், அத்தகைய ஆண்டு தொடர்பிலான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.]

**ஆணைக்குழுவின் குழுக்கள்**

**56.** (1) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட (ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவிராத) மூன்று பேரைக் கொண்ட குழுவொன்றுக்கு, 41[அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான] அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பனவற்றுக்கான தத்துவங்களை ஆணைக்குழு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய ஏதேனும் குழுவின் நியமனத்தை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) அத்தகைய ஏதேனும் குழுவின் கூட்டங்களுக்கான நடவடிக்கைமுறையும் கூட்டநடப்பெண்ணும் அதற்கென ஆக்கப்படும் விதிகளின் மூலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது அத்தகைய விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவினால் நியமிக்கப்படவேண்டிய செயலாளரொருவர் ஒவ்வொரு குழுவுக்கும் இருத்தல் வேண்டும்.

**ஒரு பகிரங்க அலுவலருக்குப் பணிகள் கையளிக்கப்படுதல்**

**57.** (1) ஆணைக்குழுவானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடவடிக்கை முறைக்கும் அமைய, 42[ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான] அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலரின் நியமன, பதவியுயர்வு, இடமாற்ற, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அல்லது பதவிநீக்கத் தத்துவங்களைப் பகிரங்க அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய நோக்கத்துக்காக ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளும் நடவடிக்கைமுறையும் உட்பட, அத்தகைய ஏதேனும் கையளிப்பைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

---

41 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 11 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

42 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 12ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**மேன்முறையீட்டு உரிமை**

***58.*** *(1) எவரேனும் பகிரங்க அலுவலரொருவர் தொடர்பில் 56 ஆம் உறுப்புரையின் கீழான அல்லது 57 ஆம் உறுப்புரையின் கீழான குழுவொன்றினால் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரினால் ஆக்கப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம் தொடர்பான கட்டளையொன்றினால் அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம் மீதான ஏதேனும் கட்டளையொன்றினால் அவ்வாறு இன்னலுறும் அலுவலர், ஆணைக்குழுவுக்கான மேன்முறையீடொன்றைச் செய்வதிலும், கேட்பதிலும், தீர்மானிப்பதிலும் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறையும், மேன்முறையீடொன்று கேட்கப்பட்டு முடிவுறுத்தப்படும் காலப்பகுதியும் தொடர்பாகக் காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் அத்தகைய விதிகளுக்கிணங்க அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.*

*(2) ஆணைக்குழுவானது, அத்தகைய மேன்முறையீட்டின் மீது, எக்கட்டளைக் கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றதோ அக்கட்டளையை மாற்றுவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான, அல்லது அது தொடர்பாகப் பணிப்புகள் விடுப்பதற்கான அல்லது ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணையைக் கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(3) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் அதனால் ஆக்கப்படும் விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.*

**நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை**

***59.*** *(1) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிருவாக மேன் முறையீடுகள் நியாயசபையொன்றிருத்தல் வேண்டும்.*

*(2) நிருவாக மேன் முறையீடுகள் நியாயசபை, ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது ஒழிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.*

*(3) மேன் முறையீடுகளைச் செய்வதற்கான காலவரையறைகள் உட்பட, அத்தகைய நியாயசபையின் அமைப்பும் தத்துவங்களும் நடவடிக்கைமுறையும் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்படுதல் வேண்டும்.*

**60.** விடயத்துக்கேற்ப, 56 ஆம் உறுப்புரையின் கீழ் அல்லது 57 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு குழுவுக்கு அல்லது பகிரங்க அலுவலருக்கு ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களுள் எவற்றையும் கையளிப்பதன்மீது, அத்தகைய கையளிப்பு வலுவிருக்கையில் ஆணைக்குழு வானது, 58 ஆம் உறுப்புரையின், (1) ஆம், (2) ஆம் பந்திகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கையளிப்பு எந்த வகுதியினரான பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வகுதியினரான பகிரங்க அலுவலர்கள் தொடர்பாக அதன்பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தலோ அல்லது புரிதலோ ஆகாது.

**கையளிப்புள்ள விடத்து ஆணைக்குழு தத்துவத்தைப் பிரயோகிக்கா திருத்தல்**

**61.** (1) ஆணைக்குழுவின் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

**கூட்டங்களிலான நடவடிக்கை முறை**

(2) ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் எடுக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் கூட்டத்துக்குத் தலைமைதாங்குகின்ற உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவரா தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக் கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், அவர் வருகை தராதிருப்பின் வருகை தந்த உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைவகித்தல் வேண்டும்.

**61அ.** [43][59 ஆம் உறுப்புரையினதும், 126 ஆம் உறுப்புரையினதும்] ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது ஒரு குழுவுக்கு அல்லது பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி ஆணைக்குழுவால், ஒரு குழுவினால் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரிப்பதற்கான, அதன்மீது எடுத்து மொழிவதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்து வதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

**சட்ட நடவடிக்கை களிலிருந்தான விடுபாட்டுரிமை**

43 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 13 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டன.

**வலுவிலுள்ள விதிகளும் ஒழுங்கு விதிகளும் பற்றிய பேணல்கள்**

***61ஆ.*** ஆணைக்குழு வேறுவகையாக ஏற்பாடு செய்யும்வரை, இவ்வத்தியாயம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று வலுவிலுள்ளவாறான பகிரங்க சேவை தொடர்பான எல்லா விதிகளும், ஒழுங்குவிதிகளும். நடவடிக்கைமுறைகளும், அவை, இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்பட்டிருந்தன அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்றாற்போன்று, பகிரங்க சேவை தொடர்பான விதிகளாகவும் ஒழுங்குவிதிகளாகவும், நடவடிக்கைமுறைகளாகவும் ஏற்றமாற்றங்களுடன் தொடர்ந்து வலுவிலுள்ளவனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவுடன் தலையிடுதல்**

***61இ.*** (1) தமது சட்டமுறையான கடமையின்போது தவிர வேறுவகையாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது, தாமே அல்லது எவரேனும் ஆள் மூலம் அல்லது ஆளுடன் சேர்ந்து எத்தகையதுமான ஏதேனும் முறையில், ஆணைக்குழுவின் அல்லது குழுவொன்றின் அல்லது இவ்வத்தியாயத்தின்கீழ் ஆணைக்குழு எந்தப் பகிரங்க அலுவலருக்கு ஏதேனும் தத்துவத்தைக் கையளித்துள்ளதோ அந்தப் பகிரங்க அலுவலரொருவரின், ஏதேனும் முடிபின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செலுத்த முயற்சிக்கின்ற அல்லது அதனோடு தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் அல்லது குழுவொன்றின் எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செலுத்த முயற்சிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒருலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஒ ஆம் உறுப்புரையின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதிமன்றம் இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கேட்டுத் தீர்மானிக்க நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

**பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை**

***61ஈ.*** இவ்வத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், [44][அரசியலமைப்புக்கான நான்காம் அல்லது ஏழாம் அட்டவணைகளில் தரப்பட்டுள்ள சத்தியங்களைச் செய்து கீழொப்பமிடும்வரை அல்லது உறுதியுரைகளை மொழிந்து] கீழொப்பமிடும் வரை தமது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதல் ஆகாது.

---

44 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 9 ஆம் வாசகம் மூலம் மாற்றீடு செய்யப்பட்டது.

[45][**61உ.** சனாதிபதி பின்வருவோரை நியமித்தல் வேண்டும்:- **சனாதிபதியினாலான நியமனங்கள்**

(அ) தரைப்படையின், கடற்படையின் மற்றும் வான்படையின் தலைவர்கள்; அத்துடன்

(ஆ) [46][அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது,] சட்டத்துறைத் தலைமையதிபதி மற்றும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.

**பொருள் கோடல்**

[47][**61ஊ.** இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, "பகிரங்க அலுவலர்" என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை, தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை, நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை அல்லது கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப் படும் இலங்கை கணக்காய்வு சேவையிலிருக்கும் உறுப்பினரொருவரை உள்ளடக்காது.]

45 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 10 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

46 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 5 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

47 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 6 வாசகத்தின்மூலம் மாற்றீடு செய்யப்பட்டது.

## அத்தியாயம் X

## சட்டமன்றம்

### பாராளுமன்றம்

*பாராளுமன்றம்*

***62.*** [48][(1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூற்றிருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமொன்று இருத்தல் வேண்டும்.]

[49][(2) பாராளுமன்றமானது முன்னதாகக் கலைக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்துக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும். அதற்கு மேற்பட்ட காலத்துக்கு அல்ல. அத்துடன் சொல்லப்பட்ட ஐந்து ஆண்டு காலம் முடிவடைதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகச் செயற்படுதலும் வேண்டும்.]

*பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை*

***63.*** சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காகத் தவிர உறுப்பினர் எவரும் பாராளுமன்றத்தின் முன்னர், கீழ்க்காணும் சத்தியத்தை செய்து கீழே கையொப்பம் இடும்வரை, அல்லது கீழ்க்காணும் உறுதியுரையை மொழிந்து கீழே கையொப்பம் இடும் வரை பாராளுமன்றத்தில் அமர்தலோ வாக்களித்தலோ ஆகாது:-

"........................................................................................... ஆகிய யான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைப் போற்றிப் பாதுகாப்பேன் என்று **பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கிறேன்/ சத்தியஞ் செய்கிறேன்".**

*சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதிச் தவிசாளர் ஆகியோர்*

***64.*** (1) பாராளுமன்றமானது, ஒரு பொதுத்தேர்தலின் பின்னரான அதன் முதலாவது கூட்டத்தின்போது, முறையே சபாநாயகராகவும், பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் ஆனவராகவும் (அவர் இதனகத்துப் பின்னர் "பிரதிச் சபாநாயகர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) குழுக்களின் பிரதித் தவிசாளராகவும் இருப்பதற்கென மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபாநாயகராக அல்லது பிரதிச் சபாநாயகராக அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளராகப் பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர், தன் கைப்பட எழுதி சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பிய கடிதத்தின் மூலம் தனது பதவியை முன்னரே துறந்தாலொழிய அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதொழிந்தாலொழிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன்மேல் தனது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

---

48 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது

49 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 15 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(3) சபாநாயகரின், பிரதிச் சபாநாயகரின் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரின் பதவியானது, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக வல்லாது வேறுவிதமாக வறிதாகின்றவிடத்து, பாராளுமன்றமானது அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் கூடும் முதற் கூட்டத்தின்போது, விடயத்துக்கேற்ப, சபாநாயகராக, பிரதிச் சபாநாயகராக அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளராக இருப்பதற்கென வேறோர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) கலைக்கப்பட்டதன் பின்னர், பாராளுமன்றமானது, 70 ஆம் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின்கீழ், கூடும்படி அழைக்கப்பட்டால், இந்த உறுப்புரையின் (2) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும், அதன்கண் எது எவ்விதம் இருப்பினும், அந்தப் பாராளுமன்றத்தை அமர்வில் வைத்திருக்கும்போது தமது பதவியை மீளவும் தொடங்குதல் வேண்டும் என்பதோடு, அந்தப் பதவியைத் தொடர்ந்து வைத்திருத்தலும் வேண்டும்.

(5) சபாநாயகர், அல்லது அவர் இல்லாதபோது பிரதிச் சபாநாயகர், அல்லது அவர்கள் இருவரும் இல்லாதபோது குழுக்களின் பிரதித் தவிசாளர் பாராளுமன்றத்தின் அமர்வுகளின் போது தலைமைதாங்குதல் வேண்டும். மேற்கூறியவர்களுள் எந்த ஒருவரும் இல்லாதவிடத்து, அந்த அமர்வுக்கெனப் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் அமர்வின்போது தலைமைதாங்குதல் வேண்டும்.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**

[50][**65.** (1) [51][அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது,] சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவரும் நன்னடத்தையின்போது பதவி வகிக்க வேண்டியவருமான பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும்.]

(2) செயலாளர் நாயகத்தின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அது திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், அவரது பதவிக்காலத்தின்போது அது குறைக்கப்படுதலும் ஆகாது.

(3) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் சம்பளங்கள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படல் வேண்டும்.

(5) செயலாளர் நாயகத்தின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும்; அதாவது –

(அ) அவர் இறப்பதன் மேல்;

---

50 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 11(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

51 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 7(1) ஆம் வாசகத்தால் திருத்தப்பட்டது.

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்திலான கடிதத்தின் மூலம் அவர் பதவிதுறப்பதன் மேல் ;

(இ) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்தாலன்றி, அறுபது வயதினை அவர் அடைவதன் மேல் ;

(ஈ) உடனலமின்மை காரணமாக அல்லது உடற்பலவீனம் காரணமாக அல்லது மனப்பலவீனம் காரணமாக சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன் மேல் ; அல்லது

(உ) பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் மீது சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன் மேல்.

[52][(6) செயலாளர் நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு, இயலாதவராகவுள்ள பொழுதிலெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென ஆளொருவரை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதி நியமிக்கலாம்.]

**ஆசனங்களை வறிதாக்கல்**

***66.*** பின்வரும் சூழ்நிலையில் ஓர் உறுப்பினரின் ஆசனம் வறிதாதல் வேண்டும் ; அதாவது-

(அ) அவர் இறந்தவுடனே வறிதாதல் வேண்டும் ;

(ஆ) தன்கைப்பட எழுதி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிட்டனுப்பிய கடிதத்தின் மூலம் தனது ஆசனத்தை அவர் துறந்தால் வறிதாதல் வேண்டும்;

(இ) மக்களினால் அல்லது பாராளுமன்றத்தினால் சனாதிபதிப் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் விளைவாக சனாதிபதிப் பதவியை அவர் ஏற்றுக்கொண்டதன்மேல் வறிதாதல் வேண்டும் ;

(ஈ) 89 ஆம் அல்லது 91 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அவர் இலக்காகினால் வறிதாதல் வேண்டும் ;

(உ) அவர் பகிரங்க சேவையில் ஓர் உறுப்பினராக வந்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஓர் ஊழியராக வந்தால் அல்லது பகிரங்க சேவையின் உறுப்பினராக இருந்துகொண்டு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஓர் ஊழியராக இருந்துகொண்டு, பாராளுமன்றத்தில் அவர் அமர்வதற்கு

52 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 7(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

முன்னர் அத்தகைய சேவையின் உறுப்பினராக அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஊழியராக இல்லாதொழியாமல் இருந்தால், வறிதாதல் வேண்டும் ;

(ஊ) பாராளுமன்றத்தின் அனுமதியை முன்கூட்டியே பெறாமல், பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்குத் தொடர்ச்சியாக, மூன்று மாதங்களுக்கு வருகை தராதிருந்தால் வறிதாதல் வேண்டும் ;

(எ) அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை, அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் சட்டத்தின்கீழ் வெற்றானதென வெளிப்படுத்தப்பட்டால், வறிதாதல் வேண்டும் ;

(ஏ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மேல் வறிதாதல் வேண்டும் ; அல்லது

(ஐ) அவரை விலக்குவதற்கானவொரு தீர்மானம் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்படுவதன் மேல் வறிதாதல் வேண்டும்.

**பாராளுமன்றத்தினதும் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன**

**67.** பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன, சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படலாம் ; அத்துடன் அவ்வாறு தீர்மானித்து ஒழுங்குபடுத்தும்வரைக்கும், பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**உறுப்பினர்களின் படிகள்**

**68.** (1) சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் உட்பட, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்குச் சட்டத்தால் அல்லது தீர்மானத்தால் பாராளுமன்றம் ஏற்பாடு செய்யும் அத்தகைய ஊதியம் அல்லது படி வழங்கப்படுதல் வேண்டும் ; அத்தகைய ஊதியத்தை அல்லது படியைப் பெறுதலானது, அதனைப் பெறுவோரைப் பாராளுமன்றத்தில் அமரமுடியாதவாறோ வாக்களிக்க முடியாதவாறோ தகைமையீனப்படுத்தாது.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்கின்றவரைக்கும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு (சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் என்போர் உட்பட) கொடுபடற்பாலதான ஊதியமானது, அரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னே தேசிய அரசுப் பேரவையில் இருந்த சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் உட்பட அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட அதே ஊதியமாதல் வேண்டும்.

**வெற்றிடங்கள் இருப்பதைப் பொருட்படுத்தாது செயலாற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கு இருக்கும் தத்துவம்**

***69.*** பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எப்படி இருப்பினும், பாராளுமன்றம் செயலாற்றுவதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் என்பதோடு, ஓர் ஆள் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளின்போது அமர்ந்திருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது வேறு விதமாகப் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராகவிராமலே அவ்வாறு செய்துள்ளார் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்படினும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் செல்லுபடியுடையனவாதலும் வேண்டும்.

அத்தியாயம் XI

## சட்டமன்றம்

### நடவடிக்கை முறையும் தத்துவங்களும்

பாராளுமன்றத்தின் அமர்வுகள்

**70.** [53][(1) சனாதிபதி, காலத்துக்குக் காலம், பிரகடனத்தின் மூலம், பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்:

ஆயின் -

(அ) (ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பாராளுமன்றம் தீர்மானத்தின்மூலம் சனாதிபதியை வேண்டினாலொழிய, அதனது முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கும் ஆறு மாதங்களுக்கும் குறையாத காலப்பகுதியொன்று முடிவடையும் வரை, சனாதிபதி, பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது ;

(ஆ) பொதுத் தேர்தலொன்றின் பின்னர் வரும் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் தொடக்கத்தின்போது அரச கொள்கைக் கூற்று நிராகரிக்கப்பட்டதன்மேல் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது ;

(இ) உட்பந்தி (ஈ) இன் ஏற்பாடுகளுக்கமைய, 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ), (ஆ) என்னும் உட்பந்திகளின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகும் தீர்மானமொன்றைச் சபாநாயகர் ஏற்றுக்கவனித்த பின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது ; அதாவது -

(i) 38 ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படாதிருந்தாலொழிய ;

(ii) சனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராகவில்லை என அல்லது அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச்சார்த்தல்கள் எவற்றுக்கும் சனாதிபதி குற்றவாளியாக இருக்கவில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்து அறிக்கை செய்தாலொழிய ;

53 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 12 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(iii) சனாதிபதியை அகற்றுவதற்கான விளைவாந்தன்மையான தீர்மானம், 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்ட வாறாக நிறைவேற்றப்படாதிருந்தாலொழிய ; அல்லது

(iv) பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு சனாதிபதியை பாராளுமன்றம் தீர்மானத்தின்மூலம் வேண்டினா லொழிய ;

சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது ;

(ஈ) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பாராளுமன்றம் நிராகரித்ததன் விளைவாக சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்காதுள்ள விடத்து, அடுத்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தையும் பாராளுமன்றம் நிராகரித்தால் சனாதிபதி பாராளு மன்றத்தைக் கலைத்தல் வேண்டும்.]

(2) ஒவ்வோராண்டும் குறைந்தது ஒரு தடவையாவது கூடும்படி பாராளுமன்றம் அழைக்கப்படுதல் வேண்டும்.

(3) பாராளுமன்றத்தின் அமர்வை நிறுத்தும் பிரகடனமானது அடுத்த அமர்வுக்கான ஒரு தேதியை நிர்ணயித்தல் வேண்டும் ; அத்தேதி பிரகடனத் தேதிக்கு பின்னர் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலமாக இருத்தலாகாது ;

ஆயின், பாராளுமன்றம், அமர்வு நிறுத்தப்பட்டிருக்கும் காலத்தின்போது எந்த நேரத்திலாயினும், சனாதிபதி, பிரகடனத்தின் மூலம் –

(i) அமர்வுக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முந்திய ஒரு தேதியில் (இத்தேதி அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறைந்த ஒரு தேதியாக இருத்த லாகாது) கூடுமாறு பாராளுமன்றத்தை அழைக்கலாம்; அல்லது

(ii) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய பாராளு மன்றத்தைக் கலைக்கலாம்.

(4) பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொணரப் பட்டுள்ளவையும் பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவுசெய்யப்படாதிருந்தவையுமான எல்லாக் கருமங்களும், அடுத்த அமர்வின்போது, விட்ட நிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம்.

(5) (அ) பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற ஒரு பிரகடனம், பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிற்படாத ஒரு தேதியில் கூடுமாறு புதிய பாராளுமன்றத்தை அழைத்தலும் வேண்டும்.

(ஆ) அறுபத்திரண்டாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மேல், சனாதிபதி உடனடியாகப் பிரகடனத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாத தேதியொன்றில் கூடும்படி புதிய பாராளுமன்றத்தை அழைத்தலும் வேண்டும்.

(இ) (அ) என்னும் உட்பந்தியின்கீழான அல்லது (ஆ) என்னும் உட்பந்தியின்கீழான பிரகடனமொன்றின்மூலம் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியானது பின்னரான பிரகடனமொன்றின் மூலம் வேறுபடுத்தப்படலாம்; ஆயின் பின்னரான பிரகடனத்தின்மூலம் நிர்ணயிக்கப்பட்ட தேதியானது அத்தகைய மூலப் பிரகடனத் தேதியின்பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாக இருத்தல் வேண்டும்.

(6) சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எடுக்கப்பட வேண்டிய தேதி, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதிக்கும், எத்தேதிக்கு முன்னர் இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ அத்தேதிக்கும் இடையில் வருமிடத்து, அப்பந்தியில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் நான்கு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படுதல் வேண்டும்.

(7) பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் எந்த நேரத்திலேனும், பாராளுமன்றம் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னராகக் கூட வேண்டுமென்பதை அவசியமாக்குகின்ற அத்தகைய இயல்பினதான நெருக்கடி நிலை ஒன்று எழுந்துள்ளதெனச் சனாதிபதி திருப்திப்பட்டால், அவர், கலைக்கப்பட்டிருந்த பாராளுமன்றத்தைப் பிரகடனத்தின் மூலம், அத்தகைய பிரகடனத் தேதியில் இருந்து மூன்று நாட்களுக்கு முற்படாத ஒரு தேதியில் கூடுமாறு அழைக்கலாம் என்பதோடு, அத்தகைய பாராளுமன்றம் அந்த நெருக்கடி நிலை முடிவுற்றவுடனும், அல்லது பொதுத்தேர்தல் முடிவுற்றவுடனும், இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அது முடிவடைந்தவுடனும், கலைக்கப்பட்டு விடும்.

**71.** பாராளுமன்றமானது அமர்வு நிறுத்தப்படும்வரை அல்லது கலைக்கப்படும்வரை, தீர்மானத்தின் மூலம் அல்லது நிலையியற் கட்டளைமூலம் அது தீர்மானிக்கக்கூடிய முறையில் காலத்துக்குக் காலம் அதன் கூட்டங்களை ஒத்திவைக்கலாம். **ஒத்திவைத்தல்**

**72.** (1) அரசியலமைப்பில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்ப தனைத் தவிர, பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படவெனப் பிரேரிக்கப்பட்ட **வாக்களித்தல்**

எந்தப் பிரச்சினையும், சமூகமாகவிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தலைமை தாங்கும் ஆள், முதற் கட்டத்தில் வாக்களித்தலாகாது ; ஆனால் வாக்குகள் சமமாகப் பிரிந்திருக்கின்றவிடத்து அவருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, அவர் அதனைப் பிரயோகித்தலும் வேண்டும்.

**கூட்ட நடப்பெண்**

**73.** பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் எந்த நேரத்திலாயினும் இருபது உறுப்பினர்களுக்குக் குறைவானவர்களே சமுகமாக உள்ளார்களென்ற விடயம் தலைமைதாங்கும் ஆளின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுமாயின், தலைமைதாங்கும் ஆள், ஏதேனும் நிலையியற் கட்டளைக்கு அமைய, வேறெந்தக் கேள்வியுமில்லாமல் கூட்டத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

**நிலையியற் கட்டளைகள்**

**74.** (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் அல்லது நிலையியற் கட்டளை மூலம் பின்வருவன வற்றிற்கு ஏற்பாடுசெய்யலாம் –

(i) சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தலும் அவர்கள் ஓய்வு பெறுதலும் ; அத்துடன்

(ii) பாராளுமன்றத்தின் அலுவல்களை ஒழுங்குபடுத்துதல் அதன் கூட்டங்களின்போது ஒழுங்கை நிலைநாட்டுதல் அத்துடன் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென அரசியலமைப்பினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறேதேனும் கருமம்,

(2) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் அல்லது தீர்மானத்தின் மூலம் வேறுவகையாக ஏற்பாடு செய்கின்றவரைக்கும், அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் செயற்பாட்டில் இருந்த தேசிய அரசுப் பேரவையின் நிலையியற் கட்டளைகள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையாக, ஏற்ற மாற்றங்களுடன், இருந்துவருதல் வேண்டும்.

**சட்டமாக்கற் தத்துவம்**

**75.** கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயன்கொண்ட சட்டங்களை, (அரசியலமைப்பின் ஏதேனும், ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும், அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் புதிய ஏற்பாட்டைச் சேர்க்கும் சட்டங்கள் உட்பட்ட சட்டங்களை) ஆக்குவதற்குப் பாராளுமன்றம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் ;

*ஆயின், பாராளுமன்றமானது பின்வரும் சட்டங்களை ஆக்குதலாகாது ;*

*அதாவது–*

(அ) *அரசியலமைப்பை முழுமையாகவோ அல்லது பகுதியள விலோ இடைநிறுத்திவைக்கின்ற ஏதேனும் சட்டத்தை ; அல்லது*

(ஆ) *இயற்றப்படுகின்ற சட்டமானது ஏலவேயுள்ள அரசியல மைப்பை மாற்றீடு செய்கின்ற ஒரு புதிய அரசியலமைப்பை இயற்றினாலொழிய, அரசியலமைப்புச் சட்டத்தை முழுமை யாக நீக்குகின்ற ஏதேனும் சட்டத்தை.*

**சட்டமாக்கற்றத் துவத்தைக் கையளித்தல்**

***76.*** *(1) பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தைத் துறத்தலோ, எந்தவிதத்திலும் பராதீனப்படுத்துதலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டமாக்கற்றத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது.*

*(2) பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய ஏதேனும் சட்டத்துக்கிணங்க அவசரகால விதிகளை ஆக்குவதற்குச் சனாதிபதிக்குத் தத்துவமளிக்கின்ற ஏற்பாடுகளை அத்தகைய பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய சட்டத்தில் பாராளுமன்றம் செய்வது, இவ்வுறுப்புரையின்(1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுவதாகாது.*

*(3) விதிக்கப்பட்ட நோக்கங்களுக்காகத் துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்குத் தத்துவமளிக்கின்ற (பின்வருவனவற்றுக்கான தத்துவம் உட்பட) ஏதேனும் ஏற்பாட்டைக் கொண்ட ஏதேனும் சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றுவது, இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுவதாகாது :-*

(அ) *ஏதேனும் சட்டம் அல்லது அதன் ஏதேனும் பாகம் நடைமுறைக்கு வருகின்ற அல்லது நடைமுறையிலில்லாதொழிகின்ற தேதியை நியமித்தல் ;*

(ஆ) *ஏதேனும் சட்டத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஏதேனும் பிரதேசத்துக்கு அல்லது எவரேனும் வகுப்பினருக்குக் கட்டளைமூலம் ஏற்புடையதாக்கல் ; அத்துடன்*

(இ) *ஒரு கட்டளை மூலம் அல்லது செயல்மூலம் சட்ட ஆள் ஒருவரை உருவாக்கல்.*

*இப்பந்தியின் (அ), (ஆ) என்னும் உட்பந்தியில், "சட்டம்" என்பது இப்போதுள்ள சட்டத்தையும் உள்ளடக்கும்.*

*(4) மேற்சொல்லியவாறான ஏதேனும் ஏற்பாட்டைக் கொண்டிருக்கும் இப்போதுள்ள சட்டம் எதுவும், செல்லுபடியும் செயற்பாடும் கொண்டதாதல் வேண்டும்.*

**வெளியிடப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமைகள்**

**77.** (1) எண்பத்திரண்டாம் உறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளுள் எதுவேனும் மீறப்பட்டுள்ளதா என்று பார்ப்பதற்காகவும் அரசியலமைப்பினால் விதிக்கப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டல்லாது செல்லுபடியாக்கக்கூடிய விதமாக நிறைவேற்றப்படமுடியாத ஏதேனும் ஏற்பாடு உள்ளதா என்று பார்ப்பதற்காகவும், ஒவ்வொரு சட்டமூலத்தையும் ஆராய்ந்து பார்த்தல் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு, அல்லது இவ்வுறுப்புரையின் மீது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குள்ள கடமையைப் புரிவதில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவியளிக்கும் எவரேனும் அலுவலர்க்கு அத்தகைய கடமைகளைப் புரிவதற்குத் தேவையான எல்லா வசதிகளும் அளிக்கப்படலும் வேண்டும்.

(2) சட்டமூலம் ஒன்று 82 ஆம் உறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளுள் எதனையேனும் மீறியுள்ளது என, அல்லது சட்டமூலத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்பினால் விதிக்கப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டல்லாது செல்லுபடியாகக்கூடிய விதமாக நிறைவேற்றப்படமுடியாது எனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப் பட்டால், சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய அபிப்பிராயத்தைச் சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

ஆயின், பாராளுமன்றத்திலுள்ள சட்டமூலமொன்றில் திருத்தங்களைச் செய்யுமாறு முன்மொழியப்படும் சந்தர்ப்பத்தில், சட்டத்துறைத் தலைமை யதிபதி, ஏற்புக்கெனப் பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படத் தயாராகவுள்ள கட்டத்தில், தமது அபிப்பிராயத்தைச் சபாநாயகருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**சட்டமூலங்களை வெளியிடுதலும் சட்டமூலங்களையும் தீர்மானங்களையும் நிறைவேற்றுதலும்**

**78.** (1) [54][(1) ஒவ்வொரு சட்டமூலமும், அது பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் இடப்படுவதற்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.]

(2) பாராளுமன்றத்தினால் சட்டமூலமொன்று அல்லது தீர்மானமொன்று நிறைவேற்றப்படுதலானது, அரசியலமைப்புக்கும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கும் இணங்கியிருத்தல் வேண்டும். நிலையியற் கட்டளைகளுள் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை, நிலையியற் கட்டளைகளினால் விதிக்கப்பட்ட சூழ்நிலைகளிலும் முறையிலும் பாராளுமன்றத்தினால் இடைநிறுத்திவைக்கப்படலாம்.

[55][(3) பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றுக்கு முன்மொழிவு செய்யப்படும் ஏதேனும் திருத்தம் அத்தகைய சட்டமூலத்தின் தகைமைகள் மற்றும் கொள்கைகளிலிருந்து விலகுதலாகாது.]

**சபாநாயகரது சான்றுரை**

**79.** சபாநாயகர், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் ஒவ்வொன்றிலும், பின்வரும் முறையிலமைந்த சான்றுரை ஒன்றை எழுதுதல் வேண்டும் :-

"இந்தச் சட்டமூலம் (இங்கே சட்டத்தின் சுருக்கப்பெயரைக் கூறுக) பாராளு மன்றத்தினால் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது."

---

54 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 13(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

55 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 13(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

அத்தகைய சட்டமூலம் எவ்வளவு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டது என்பதையும் அத்தகைய சான்றுரை எடுத்துக்கூறலாம் :

ஆயின், அரசியலமைப்பின் 82 ஆம் உறுப்புரையின் அல்லது 83 ஆம் உறுப்புரையின் அல்லது 84 ஆம் உறுப்புரையின் அல்லது 123 (2) என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகள் காரணமாக, சட்டமூலமொன்றை நிறைவேற்றுவதற்கு விசேட பெரும்பான்மை தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலம் அத்தகைய விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே, அத்தகைய சட்டமூலத்துக்குச் சபாநாயகர் சான்றுரை அளித்தல் வேண்டும் ;

ஆயின், மேலும், 83 ஆம் உறுப்புரையின் பண்பினால், அந்தச் சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு மக்களின் அங்கீகாரத்தை மக்கள் தீர்ப்பில் பெறவேண்டுமென்ற அவசியமிருக்கின்றவிடத்து, அத்தகைய சான்றுரை, அத்தகைய சட்டமூலமோ அதன் ஏற்பாடோ மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படும் வரை சட்டமாதலாகாது எனக் கூறுதலும் வேண்டும்.

**சட்டமூலம், எப்பொழுது சட்டமாகும் என்பது**

**80.** (1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் ஒன்று, சபாநாயகரின் சான்றுரை அதன் மீது எழுதப்பட்டவுடனேயே சட்டமாதல் வேண்டும்.

(2) ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு, எதுவும் மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரை அளித்துள்ளவிடத்து, அல்லது சட்டமூலம் ஒன்றுக்கு அல்லது அதன் ஏற்பாடெதற்கேனும் மக்கள் தீர்ப்பில் மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளவிடத்து, அல்லது ஏதேனும் சட்டமூலம் 85 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு, 85 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்திக்கிணங்க மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல் இச்சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனச் சனாதிபதி சான்றுரை அளித்த பின்னர் மட்டுமே சட்டமாகவருதல் வேண்டும். சனாதிபதி அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலம் ஒவ்வொன்றிலும் பின்வரும் முறையிலமைந்த சான்றுரை ஒன்றை எழுதுதல் வேண்டும் :-

"இச்சட்டமூலம்/இந்த ஏற்பாடு [56][மக்கள் தீர்ப்பில் மக்களால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது."

அத்தகைய சான்றுரையெதுவும்-

(அ) சட்டமூலமொன்று எந்த மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதோ அந்த மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகின்ற மனுவெதுவும் தாக்கல்செய்யப்பட்டி

56 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

ராத ஏதேனும் விடயத்தில் அத்தகைய மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகின்ற, அதன் சார்பில் ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் எக்காலப்பகுதிக்குள் மனுவொன்று தாக்கல் செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் வரையும் ;

(ஆ) சட்டமூலமொன்று எந்த மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப் பட்டதோ அந்த மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகின்ற மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், உயர்நீதிமன்றம் அத்தகைய மக்கள் தீர்ப்பு செல்லுபடியானதெனத் தீர்மானித்த பின்னர் வரையும்

அத்தகைய சட்டமூலத்தில் சனாதிபதியினால் புறக்குறிப்பிடப்படுதலாகாது.]

அத்தகைய சான்றுரை ஒவ்வொன்றும் இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன், எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப் படுதலுமாகாது.

(3) சட்டமூலமொன்று, விடயத்துக்கேற்றாற்போல, சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்டதன் மேல் சட்டமாகவருகின்றவிடத்து, எத்தன்மைத்தான எவ் ஏதுவின் மீதும் நீதிமன்றம், அல்லது நியாயசபை எதுவும் அதன் செல்லுபடி பற்றி விசாரித்தலோ, தீர்ப்பளித்தலோ அல்லது எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.

**உறுப்பினர்களை விலக்குதலும் குடியியற்றகுதியீனத்தை விதித்தலும்**

***81.*** (1) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் உயர்நீதிமன்ற நீதிபதியாக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக அல்லது மேல் நீதிமன்ற நீதிபதியாக அல்லது மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் ஓர் உறுப்பினரை அல்லது உறுப்பினர்களைக் கொண்டதும் ஆன விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு எவரேனும் ஆள் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது அதன் பின்னர் ஏதேனும் செயலைச் செய்தார் அல்லது செய்யாதுவிட்டார் என்ற காரணத்துக்காக அவர்மீது குடியியற்றகுதியீனத்தை விதிக்கவேண்டுமென்று விதந்துரைக்குமிடத்து, பாராளுமன்றமானது, அதன் முழு உறுப்பினர்களினதும் எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறை வேற்றப்படும் தீர்மானத்தின் மூலம் :-

(அ) ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக்கு அத்தகைய ஆளின்மீது குடியியற்றகுதியீனத்தை விதிக்கலாம், அத்துடன்

(ஆ) அவர் பாராளுமன்ற உறுப்பினராகவிருப்பின் அவரைப் பாராளு மன்றத்திலிருந்து விலக்கலாம்.

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவானது ஓர் உறுப்பினருக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளவிடத்து, அவர்களிடையே ஏதேனும்

கருத்து வேறுபாடு இருக்கும் சந்தர்ப்பத்திலும் அத்தகைய உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் செய்யப்படும் விதப்புரையே அத்தகைய விசாரணை ஆணைக்குழுவின் விதப்புரையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் அவ்வாறெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய தீர்மானம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முதலமைச்சரினால் கொணரப்பட்டாலொழிய, அத்தகைய தீர்மானமெதுவும் சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படுதலோ ஆகாது,

(3) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்திலும் பின்வரும் முறையிலமைந்த சான்றுரையைச் சபாநாயகர் எழுதுதல் வேண்டும் :-

> "இத்தீர்மானம், அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்தினால் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது."

அத்தகைய சான்றுரை ஒவ்வொன்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன், அது எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது, அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாய சபை எதுவும் அத்தகைய தீர்மானத்தின் செல்லுபடியாந்தன்மை பற்றி எத்தகைய ஏதுவின் மீதும் விசாரணை நடாத்தலோ தீர்ப்பளித்தலோ எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.

(4) இவ்வுறுப்புரையில், "மாவட்ட நீதிமன்றம்" என்பது இப்போதுள்ள சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாவதோடு, மாவட்ட நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களுக்கும், நிறைவேற்றப்படும் பணிகளுக்கும் நேரொத்த அல்லது பெருமளவு ஒத்த தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கெனவும் நிறைவேற்றுவதற்கெனவும் பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படக்கூடிய நீதிமன்றம் ஒன்றையும் உள்ளடக்கும்.

அத்தியாயம் XII

## சட்டமன்றம்

### அரசியலமைப்பைத் திருத்துதல்

**அரசியலமைப்பைத் திருத்துதல் அல்லது நீக்குதல் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும்**

**82.** (1) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான சட்டமூலம் எதுவும் அவ்வாறு நீக்கப்படுவதற்கான, திருத்தப்படுவதற்கான அல்லது சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடும், விளைவாந்தன்மையினவான திருத்தங்களும் (எவையேனும் இருப்பின்) அச்சட்டமூலத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, அந்தச் சட்டமூலமானது அரசியலமைப்பைத் திருத்துவதற்கான ஒரு சட்டம் என அதன் விரிவுப்பெயரில் விபரிக்கப்பட்டும் இருந்தாலொழிய, பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடம்பெறுதலாகாது.

(2) அரசியலமைப்பை நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும் அந்த அரசியலமைப்பை மாற்றீடு செய்வதற்கான ஏற்பாடுகள் அந்தச் சட்டமூலத்தில் அடங்கியிருந்தாலொழியவும், அந்தச் சட்டமூலம் அரசியலமைப்பினை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டம் என அதன் விரிவுப்பெயரில் விபரிக்கப்பட்டிருந்தாலொழியவும், பாராளுமன்றத்தின், நிகழ்ச்சித்தாளில் இடம்பெறுதல் ஆகாது.

(3) சபாநாயகரின் அபிப்பிராயப்படி, ஒரு சட்டமூலம் இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் அல்லது (2) ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிராதவிடத்து, அவர் அந்தச் சட்டமூலம் அந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்க அமையும்வண்ணம் திருத்தப்பட்டாலொழிய, அச்சட்டமூலம் தொடர்பில் எச்செயலும் செய்யவேண்டாம் எனப் பணித்தல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்விதமிருப்பினும், இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் அல்லது (2) ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ள ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தினால் திருத்தப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்; எனினும் அவ்வாறு திருத்தப்பட்ட வடிவத்திலான சட்டமூலம் அத்தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம், அதற்குச் சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை, உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாததாக இருப்பதுடன், 80 ஆம் அல்லது 79 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் சான்றுரை அதன்மீது எழுதப்பட்டும் இருந்தால் சட்டமாக வருதல் வேண்டும்.

(6) இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கிணங்க இயற்றப்பட்டாலொழிய, ஏதேனும் சட்டத்திலுள்ள எந்த ஏற்பாடும் அரசியலமைப்பை அல்லது அதன் ஏதேனும் ஏற்பாட்டினைத் திருத்துதலோ,

நீக்குதலோ, மாற்றீடு செய்தலோ அல்லது திருத்துவதாக, நீக்குவதாக அல்லது மாற்றீடு செய்வதாகக் கருதப்படலோ ஆகாது, அல்லது அவ்வாறு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதலோ பொருளமைத்துக்கொள்ளப்படுதலோ ஆகாது.

(7) இந்த அத்தியாயத்தில் "திருத்தம்" என்பது நீக்கம், மாற்றம் அத்துடன் சேர்ப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

***மக்கள் தீர்ப்பினால் சிலவகைச் சட்டமூலங்கள் அங்கீகரிக்கப்படுதல்***

**83.** எண்பத்திரண்டாம் உறுப்புரையின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்விதம் இருப்பினும் :-

(அ) 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம் உறுப்புரைகளின் அல்லது இந்த உறுப்புரையின் எவையேனும் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான சட்டமூலமும் அல்லது மேற்கூறிய 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம் உறுப்புரைகளின் அல்லது இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிருக்கும் ஒரு சட்டமூலமும் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, சனாதிபதியின் பதவிக்காலத்தை அல்லது பாராளுமன்றத்தின் வாழ்காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கு நீடிக்கின்ற 30 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை, அல்லது 62 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான அல்லது மேற்கூறிய 30 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் அல்லது 62 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இருக்கும் ஒரு சட்டமூலமும்,

அவற்றுக்குச் சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாததாக இருப்பதோடு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு, 80 ஆம் உறுப்புரைக்கிணங்க சனாதிபதியினால் சான்றுரை ஒன்று அதன்கண் எழுதப்பட்டால் சட்டமாக வருதல் வேண்டும்.

***அரசியலமைப்புடன் ஒவ்வாதன வாயிருக்கும் சட்டமூலங்கள்***

**84.** (1) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலமாக இல்லாமல் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாகவிருக்கின்ற ஒரு சட்டமூலம் 82 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் அல்லது (2) ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி அமையாமலே பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படலாம்.

(2) சட்டமூலமொன்று இவ்வுறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரை அளித்துள்ளவிடத்து அல்லது அத்தகைய விசேட பெரும் பான்மையினால் சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டியுள்ளதென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளவிடத்து அத்தகைய சட்டமூலம், அதற்குச் சாதகமாக மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாததாக இருப்பதுடன், 80 ஆம் அல்லது 79 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் சான்றுரை அதன்மீது எழுதப்பட்டும் இருந்தால் சட்டமாக வருதல் வேண்டும்.

(3) அத்தகையதொரு சட்டமூலம் சட்டமாக இயற்றப்பட்டதும், அது அரசியலமைப்பை அல்லது அதன் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்தலோ, நீக்குதலோ, மாற்றீடுசெய்தலோ ஆகாது என்பதுடன் திருத்துவதாகவோ, நீக்குவதாகவோ, மாற்றீடு செய்வதாகவோ கருதப்படுதலும் ஆகாது ; அத்துடன் அவ்வாறு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதல் அல்லது பொருளமைத் துக்கொள்ளப்படுதல் ஆகாது ; அந்தச் சட்டமூலம், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால், அதன்பின்னர் நீக்கப்படலாம்.

## அத்தியாயம் XIII

## மக்கள் தீர்ப்பு

**சட்டமூலங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களுக்குச் சமர்ப்பித்தல்**

**85.** (1) மக்கள் தீர்ப்புக்கென மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரை அளித்துள்ள, அல்லது மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுதல் அவசியமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள ஒவ்வொரு சட்டமூலத்தையும், அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அத்தகைய சட்டமூலத்துக்குச் சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாததாகவிருப்பின், சனாதிபதி மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

57[(2) சனாதிபதி, அவரது தற்றுணிபின்படி, பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள (அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்குவதற்கான அல்லது திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் ஏற்பாட்டைச் சேர்ப்பதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்கிவிட்டு மாற்றீடு செய்வதற்கான சட்டமூலமாகவிராத அல்லது அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாகவுள்ள) ஏதேனும் சட்டமூலத்தை மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கலாம்.]

(3) மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏதேனும் ஏற்பாடு அது அத்தகைய மக்கள் தீர்ப்பின்போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் முழுப் பெரும்பான்மையான வாக்குகளினால் அங்கீகரிக்கப்படின், மக்களால், அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்தத் தொகை தேருநர் இடாப்பில் பதியப்பட்ட தேருநர்களின் முழுத்தொகையில் மூன்றிலிரண்டை விஞ்சாதிருக்கின்றவிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது ஏற்பாடு அத்தகைய மொத்த தேருநர் தொகையில் மூன்றிலொரு பகுதியினருக்குக் குறையாதோரால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல்**

**86.** சனாதிபதி, 85 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய அவரது அபிப்பிராயப்படி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேறு ஏதேனும் கருமத்தை மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கலாம்.

**நடவடிக்கை முறை பற்றி பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும்**

**87.** (1) மக்கள் தீர்ப்பு ஒவ்வொன்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்படுதல் வேண்டும் ; அவர் அதன் முடிவு பற்றிச் சனாதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

57 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 14ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

*(2) சட்டமூலங்களையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமங்களையும் மக்களின் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை முறை, மக்கள் தீர்ப்பின்போது பயன்படுத்தப்படவேண்டிய தேருநர் இடாப்பு, மக்கள் தீர்ப்புத்தொடர்பிலான தவறுகள் யாவையென எடுத்தியம்பல் அத்தவறு களுக்கான தண்டனை ஆகியன பற்றிய எல்லாக் கருமங்களுக்கும் அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறெல்லாக் கருமங்களுக்கும் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

அத்தியாயம் XIV

## வாக்குரிமையும் தேர்தல்களும்

**88.** ஆள் ஒவ்வொருவரும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதமாகத் தகைமையற்றவரானாலொழிய, சனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும் தேருநர் ஒருவராக இருப்பதற்கு அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராவார் :

**தேருநர் ஒருவராக இருப்பதற்கான உரிமை**

ஆயின், அத்தகைய ஆள் எவரும், அவரது பெயர் தோதான தேருநர் இடாப்பில் பதியப்பட்டிருந்தாலொழிய, வாக்களிப்பதற்கு உரித்துடைய வராகார்.

**89.** எவரேனும் ஆள் பின்வரும் தகைமையீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராயிருந்தால், சனாதிபதிக்கான அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கான தேர்தலில் தேருநராகவிருப்பதற்கு அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராதல் ஆகாது ; அதாவது –

**தேருநர் ஒருவராக இருக்க இயலாமல் செய்யும் தகைமையீனங்கள்**

(அ) அவர் இலங்கைப் பிரசையல்லவெனில் ; அல்லது

(ஆ) 101 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின்கீழ் சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்படும் தகைமைபெறும் தேதியன்று பதினெட்டு வயதினை அடையாதவராக அவர் இருந்தால் ;

(இ) அவர் இலங்கையில் வலுவுடையதாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அதனால் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனையை (அது எப்பெயரினால் அழைக்கப்படினுஞ் சரி) இப்போது அனுபவித்து வருப வராயிருந்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக் காலப்பகுதியின்போது அத்தகைய தண்டனை அனுபவித்து முடித்தவராயிருந்தால், அல்லது மரண தண்டனைத் தீர்ப்பளிக் கப்பட்டவராயிருந்தால், அல்லது அத்தகைய மரண தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு குறையாதவொரு காலத்துக்கான மறியற் றண்டனையை அனுபவிப்பராயிருந்தால், அல்லது நேர்முற் போந்த ஏழு ஆண்டுக் காலப்பகுதியின்போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருந்தால் :

ஆயின், இப்பந்தியின்கீழ்த் தகைமையற்றவராக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு கட்டற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டால், அத்தகைய தகைமையீனம், அம்மன்னிப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும் ;

(உ) (i) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின் 52 (1) ஆம் அல்லது 53 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட இரண்டு பிரிவுகளில் ஏதேனுமொன்றின் கீழான தவறுக்கு நேரொத்ததாகவிருக்கக்கூடியதும், மக்கள் தீர்ப்புக்கள் பற்றிய அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழானதும் ஆன அத்தகைய தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(ii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ் ஓர் ஊழற்பழக்கத்திற்கு, அல்லது சொல்லப்பட்ட ஊழற்பழக்கத்தோடு நேரொத்ததாக இருக்கக்கூடியதும், மக்கள் தீர்ப்புகள் பற்றிய அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின்கீழானதும் ஆன அத்தகைய தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(iii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ், அல்லது மக்கள் தீரப்புக்கள் பற்றிய அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அப்போதைக்கான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் ஊழற்பழக்கத்திற்கு அவரைக் குற்றவாளியாகக் காணும் ஒரு நீதிபதியினாற் செய்யப்பட்ட அறிக்கைத் தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து (இத்தேதி அரசியலமைப்பு தொடங்கும் தேதிக்குப் பின்னரான தேதியாகவிருத்தல் வேண்டும்) ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(iv) இலஞ்சச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், அல்லது இலஞ்சச் சட்டத்திற்கு நேரொத்ததாக இருக்கக்கூடிய ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவர் மீது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது அவர் குற்றவாளியாகக் காணப்பட்ட தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(ஊ) (i) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 77 ஆம் பிரிவு முதல் 82 ஆம் பிரிவுவரை (இரண்டுமுட்பட) உள்ள பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட பிரிவுகளின்கீழான ஏதேனும் தவறுக்கு நேரோத்ததாக இருக்கக்கூடியதும், ஏதேனும் எதிர்காலச்சட்டத்தின் கீழானதுமான அத்தகைய தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகளுள் (எவையேனு மிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து ஐந்தாண்டுக்காலம் கழியாதிருந்தால் ; அல்லது

(ii) பகிரங்க குழுக்கள் (ஊழற்றடுப்பு) கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழான ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட தவறுக்கு நேரொத்ததாக இருக்கக் கூடியதும், ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழானதும் ஆன அத்தகைய தவறுக்கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியி லிருந்து ஐந்தாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(எ) (i) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ் சட்டவிரோதமான பழக்கம் ஒன்றுக்கு அல்லது சொல்லப்பட்ட சட்டவிரோதமான பழக்கத்துடன் நேரொத்ததாக இருக்கக்கூடியதும், மக்கள் தீர்ப்புகள் பற்றிய அல்லது சனாதிபதியின் அல்லது பாராளு மன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின்கீழானதும் ஆன அத்தகைய தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலம் கழியாதிருந்தால் ;

(ii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ் அல்லது மக்கள் தீர்ப்புக்கள் பற்றிய அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அப்போதைக்கான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் சட்டவிரோதமான பழக்கத்துக்கு அவரைக் குற்றவாளியாகக் காணும் ஒரு நீதிபதியினால் செய்யப்பட்ட அறிக்கைத் தேதிகளுள் (எவையேனுமிருப்பின்) கடைசியான தேதி யிலிருந்து (இத்தேதி அரசியலமைப்புத் தொடங்கும் தேதிக்குப் பின்னரான தேதியாக இருத்தல் வேண்டும்) மூன்றாண்டுக் காலம் கழியாதிருந்தால் ;

(ஏ) அவர்மீது குடியியற்றகுதியீனம் விதிப்பதற்கான தீர்மான மொன்று 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்கீழ் நிறை வேற்றப்பட்டிருப்பதோடு, அத்தகைய தீர்மானத்தில் குறித் துரைக்கப்பட்ட குடியியற்றகுதியீனக்காலம் முடிவுறாமலு மிருப்பின்;

(ஐ) (i) தண்டனைச் சட்டக்கோவையின் 188 முதல் 201 வரையிலான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட பிரிவுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு நேரொத்ததாக இருக்கக்கூடியதும், ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழானதும் ஆன அத்தகைய வேறு தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ; அல்லது

(ii) 81 ஆம் உறுப்புரையிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் அடங்கிய ஏதேனும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறுக்குப் பின்வரும் காரணத்துக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால் ; அதாவது -

(1) அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆணைக்குழு வழங்குவதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் அழைப்புக் கட்டளையிற் கூறப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு அத்தகைய ஆள் தவறுதல், அல்லது

(2) அத்தகைய ஆள் சத்தியம் செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத்தல், அல்லது அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படும்படி பணிக்கப்பட்ட கருமங்களையிட்டு அத்தகைய ஆளிடம் கேட்கப்படும் ஏதேனும் வினாவுக்கு மறுமொழியிறுக்க அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல், அல்லது

(3) அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதும், அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் அத்தகைய ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படவேண்டிய கருமங்களின் உண்மையைக் கண்டறிவதற்கு அவசியமாக உள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அத்தகைய ஆணைக்குழுவிடம் கொணர்ந்து காண்பிக்க அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல் ;

(ஒ) [58][விடயத்துக்கேற்ப, 116 ஆம் உறுப்புரைக்கு அல்லது 111இ என்னும் உறுப்புரைக்குக்கீழ்], விதிக்கப்பட்ட அவரது தகைமையீனத்துக்கான காலம் கழியாதிருந்தால்.

58 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 6 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்கான தகைமை**

***90.*** *தேருநராக இருப்பதற்குத் தகைமையுடையவரான ஆள் ஒவ்வொருவரும், 91 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் அவர் தகைமையற்ற வராயிருந்தாலொழிய, பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படு வதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.*

**பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படமுடியாமற் செய்யும் தகைமையீனங்கள்**

***91.*** *(1) ஆள் எவரும் –*

*(அ) அவர் 89ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமை யீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராக இருந்தால் அல்லது உட்பட்டவராக வந்தால் ;*

*(ஆ) (i) அவர் பொதுத் தேர்தலொன்றில் ஒன்றுக்குமேற்பட்ட தேர்தல் மாவட்டங்களுக்கான வேட்பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால்,*

*(ii) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக அவர் இருந்தால், அல்லது*

*(iii) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருப்பதோடு, அத்தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் முடிவுறுமுன்னர் வேறேதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால், அல்லது*

*(iv) 70 (7) ஆம் உறுப்புரையின் அல்லது 155 (4) (i) ஆம் உறுப் புரையில் குறிப்பீடுசெய்யப்பட்ட சந்தர்ப்பங்களிற்றவிர, பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும்போது, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலில் வேட்பாளர் ஒருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால் ;*

*(இ) குடியரசின் சனாதிபதியாக இருந்தால் ;*

*(ஈ) (i) நீதித்துறை அலுவலராக இருந்தால்,*

*(ii) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளராக இருந்தால்,*

*(iii) பாராளுமன்றச் செயலாளர் நாயகமாக இருந்தால் அல்லது அவரின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக இருந்தால்,*

[59][(iv) [60][41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில்] குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆணைக் குழுவின் உறுப்பினரொரு வராகவிருந்தால்,

(v) ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பின ரொருவராகவிருந்தால்,

(vஅ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியாக இருந்தால்]

[61][(vஆ) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் தவிர்ந்த 41அ ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் குறிப்பீடு செய்யப்படும் அரசியலமைப்புப் பேரவையின் ஓர் உறுப்பினராகவிருந்தால்]

(vi) கணக்காய்வாளர் தலைமையதிபதியாக இருந்தால்,

[62][(vii) 1970, நவெம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும் 1970, நவெம்பர் 18 ஆந் தேதியன்று அதன் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளமாக ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்கு குறையாத சம்பளத்தை, அல்லது ஏதேனும் பின்னைய சம்பள அளவுத் திட்டங்களின் மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான [63][ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராகவிருந்தால்,]

(viii) 1970, நவெம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்டதும், அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (vii) ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திற்குக் குறையாததாகவிருக்கின்ற சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்தை அல்லது ஏதேனும் பின்னைய சம்பள அளவுத்திட்டங்களின் மீளாய்வின்கீழ் முதலாவதாகக் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்தாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான [64][ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராகவிருந்தால்,]

---

59 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 15(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டன.

60 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 8 (1) ஆம் வாசகத்தால் உட்புகுத்தப்பட்டது,

61 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 8(2) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

62 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் வாசகம் 2 ஆக பிரிவு (VII) - (XII) மாற்றீடு செய்யப்பட்டது.

63 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 20(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

64 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 20 (3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[65][(viiiஅ) 1988, பெப்புருவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று பாராளுமன்றத் தீர்மானத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத தொடக்கச் சம்பளத்தை சம்பள அளவுத் திட்டமாகக் கொண்டதுமான அல்லது அத்தகைய சம்பள அளவுத் திட்டங்களின் ஏதேனும் பின்னைய மீளாய்வின் கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைச் சம்பள அளவுத் திட்டமாகக் கொண்டது மான ஏதேனும் பதவியை வகிக்கும் ஒரு மாகாணப் பகிரங்க சேவையின் ஓர் அலுவலராக இருந்தால்,]

(ix) 1970, நவெம்பர் 18 ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப் பட்டதும், 1970, நவெம்பர் 18 ஆம் தேதியன்று அதன் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளமாக ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவுக்குக் குறையாத சம்பளத்தை, அல்லது ஏதேனும் பின்னைய சம்பள அளவுத்திட்டங்களின் மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான ஏதேனும் பதவியை வகிக்கும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலுள்ள அலுவலராக இருந்தால்,

(x) 1970, நவெம்பர் 18 ஆம் தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்டதும், அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (ix) ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத் தேதியன்று ஏற்புடைத்தான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திற்குக் குறையாததாகவிருக்கின்ற சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளத்தை, அல்லது ஏதேனும் பின்னைய சம்பள அளவுத்திட்டங்களின் மீளாய்வின்கீழ் முதலாவதாகக் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான ஏதேனும் பதவியை வகிக்கும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலுள்ள அலுவலராக இருந்தால்,

(xi) தரைப்படையின் , கடற்படையின் அல்லது வான் படையின் நிலையான படை உறுப்பினராக இருந்தால், அல்லது

(xii) பொலிசு அலுவலரொருவராக அல்லது பொலிசுப் பணி களைப் பிரயோகிக்கும் பகிரங்க அலுவலரொருவராக இருந்தால் ;]

[66][(xiii) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராகவுள்ளவரான இலங்கைப் பிரசையொருவர்]

---

65அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 7(4) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

66 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 8 (3) ஆம் வாசகத்தால் உட்புகுத்தப்பட்டது,

(உ) பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் விதித்துரைக்கப்பட வேண்டியதும், அரசினால் அல்லது அதன் சார்பில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்டதுமான அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தில் அவ்வாறு விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய ஏதேனும் அக்கறையையுடையவராக இருந்தால் ;

(ஊ) வங்குரோத்தானவர் என அல்லது கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டவராயிருந்து அந்நிலையிலிருந்து விடுவிக்கப் படாத வங்குரோத்தானவராக அல்லது கடனிறுக்க வகையற்ற வராக இருந்தால் ;

(எ) பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அல்லது அரசியலமைப்புத் தொடங்குவதன் முன்னர் இருந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவரின் நிதானிப்பைத் திசைதிருப்பும் நோக்கத்துடன் வழங்கப்பட்ட இலஞ்சத்தை அல்லது அவாநிறைவை ஏற்றுள்ளாரெனத் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினால் நேர் முற்போந்த ஏழாண்டுக் காலத்துள் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருந்தால்,

அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமையுடையவராதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியின் நோக்கங்களுக்கென ஏதேனும் தொழிற்சங்கத்தினால் அல்லது வேறு அமைப்பினால் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவருக்கு அவரது பராமரிப்பு நோக்கங்களுக்கென மட்டும் கொடுக்கப்படும் ஏதேனும் படியை அல்லது வேறு கொடுப்பனவை அவர் ஏற்பது இலஞ்சத்தை அல்லது அவாநிறைவை ஏற்பதாகக் கருதப்படுதலாகாது.

**சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் படமுடியாமற் செய்யும் தகைமையீனங்கள்**

**92.** பின்வரும் தகைமையீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராயிருந்தாலொழிய, தேருநராகவிருப்பதற்குத் தகைமையுடைய ஆள் ஒவ்வொருவரும் சனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராவர் :-

(அ) அவர் [67][ முப்பது ] வயதையடையாதவராக இருந்தால் ;

(ஆ) அவர் 91 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ), (உ), (ஊ) அல்லது (எ) எனும் உட்பந்திகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையற்றவராக இருந்தால் ;

[68][(இ) அவர் சனாதிபதி பதவிக்கு மக்களினால் இரு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தால்]; அத்துடன்

67 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 16 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
68 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 21(2) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

(ஈ) அவர் 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (உ) எனும் உட்பந்தியினது ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதிப் பதவியிலிருந்து அகற்றப்பட்டவராக இருந்தால்.

**தேர்தல்கள் சுதந்திரமானவையும், சமத்துவமானவையும், இரகசிய வாக்கெடுப்பின் மூலமானவையுமாகவிருத்தல்**

**93.** குடியரசின் சனாதிபதிக்கான தேர்தலிலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும், ஏதேனும் மக்கள் தீர்ப்பிலும் வாக்களிப்பது, சுதந்திரமானதாகவும், சமத்துவமானதாகவும், இரகசியமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**சனாதிபதிக்கான தேர்தல்**

**94.** (1) சனாதிபதிக்கான தேர்தலில் ஒவ்வொரு வாக்காளரும், தமது வாக்கினை எவரேனும் வேட்பாளருக்கு அளிக்கின்ற போது -

(அ) அத்தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் இருக்கின்றவிடத்து, இரண்டாவது ஆளாக யாரை விரும்புகின்றார் என்பதையும் தெரிவிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அத்தேர்தலில் மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருக்கின்றவிடத்து, இரண்டாவது ஆளாகவும், மூன்றாவது ஆளாகவும் யார் யாரை விரும்புகிறார் என்பதையும் தெரிவிக்கலாம்.

(2) அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர், அப்படிப் பெறுகின்ற ஒருவர் இருந்தால், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் வேட்பாளர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என வெளிப்படுத்தப்படுகின்றவிடத்து, ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் அதற்கடுத்தபடியாகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் தவிர்ந்த ஏனைய வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கிவிடப்படுதல் வேண்டும் என்பதோடு :-

(அ) போட்டியிலிருந்து நீக்கிவிடப்பட்ட ஒரு வேட்பாளருக்குத் தமது வாக்கை அளித்துள்ள ஒவ்வொரு வாக்காளரதும் இரண்டாவது விருப்புத்தெரிவானது எஞ்சியுள்ள இரண்டு வேட்பாளர்களுள் யாதேனுமொருவர்க்கானதாக இருப்பின், அது அந்த வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட ஒரு வாக்காக எண்ணப்படுதலும் வேண்டும் ; அத்துடன் (2) ஆம் பந்தியின் கீழ் எண்ணப்பட்ட அவருக்குரிய வாக்குகளுடன் அது சேர்க்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) உட்பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு வாக்காளரின் இரண்டாவது விருப்புத்தெரிவானது அந்த உட்பந்தியின் கீழ் எண்ணப்படாவிட்டால், அவரது மூன்றாவது விருப்புத்தெரி வானது எஞ்சியுள்ள இரண்டு வேட்பாளர்களுள் யாரேனுமொரு வர்க்கானதாக இருப்பின் அந்த மூன்றாவது விருப்புத்தெரிவு அந்த வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட ஒரு வாக்காக எண்ணப்படுதலும் வேண்டும் ; அத்துடன் (2) ஆம் பந்தியின் கீழும் (அ) என்னும் உட்பந்தியின் கீழும் எண்ணப்பட்ட அவருக்குரிய வாக்குகளுடன் சேர்க்கப்படுதலும் வேண்டும் ;

இவ்வாறெண்ணப்பட்ட வாக்குகளில் மிகக்கூடுதலான வாக்குகளை பெறும் வேட்பாளர் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தப் படல் வேண்டும்.

(4) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சரிசமமாக உள்ளவிடத்து, அவர்களுள் எவரேனும் ஒருவருக்கு ஒரு வாக்கினைச் சேர்ப்பது –

(அ) இவ்வுறுப்புரையின் கீழ் எந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவராக வெளிப்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கு மாயின் ; அல்லது

(ஆ) இவ்வுறுப்புரையின்கீழ் எந்த வேட்பாளரை நீக்கிவிடக்கூடாது என்பதைத் தீர்மானிக்குமாயின்,

அத்தகைய தீர்மானிப்பின் நோக்கத்துக்காக அத்தகைய மேலதிக வாக்கு எந்த வேட்பாளருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டின் மூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

**வரையறை ஆணைக்குழு**

**95.** (1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும் ; அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும் ; அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்தியுறுதல் வேண்டும் ; அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், [69][இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதும்] சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

---

69 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 9 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது,

**தேர்தல் மாவட்டங்கள்**

***96.*** *(1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் [70] [இருபத்தைந்துக்கு] மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.*

*(2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம் அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.*

*(3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை அல்லது இரண்டோ பலவோ வாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம், அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.*

*(4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும் ;(இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப்பார்க்கும்போது எத்தனை உறுப்பினர் களை அம்மாவட்டங்கள் தெரிவுசெய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) ; வரையறை ஆணைக்குழு வானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.*

*(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கிநிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிருக்குமிடத்து தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங்கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.*

---

*70 அரசியலமைப்புக்கான ஏழாவது திருத்தத்தின் மூன்றாம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்பிராயங்கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

[71][96அ. நீக்கப்பட்டது.]

**தேர்தல் மாவட்டங்களின் பெயர்கள் முதலியவற்றைப் பிரகடனஞ் செய்தல்**

**97.** சனாதிபதி, வரையறை ஆணைக்குழுவின் முடிவுக்கிணங்கத் தேர்தல் மாவட்டங்களின் பெயர்களையும் எல்லைகளையும், 96 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பண்பினால் அத்தகைய தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிவுசெய்து அனுப்புவதற்கு உரித்துடையது என்பதையும் பிரகடனத்தின் மூலம் வெளியிடுதல் வேண்டும். பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அடுத்துவரும் பொதுத்தேர்தலில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அதன்பின் அரசியலமைப்பின் நோக்கங்களுக்காகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பற்றியதும், அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஏதேனும் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் இலங்கையின் தேர்தல் மாவட்டங்களாக இருத்தலும் வேண்டும்.

**பல்வேறு தேர்தல் மாவட்டங்களாலும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவ் உறுப்பினர்களைத் தேர்தல் மாவட்டங்களிடையே பங்கு போடலும்**

**98.** (1) பல்வேறு மாவட்டங்களும் ஒன்றாக நூற்றுத் தொண்ணூற்றாறு உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப உரித்துடையனவாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் எத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உரித்துடையதாதல் வேண்டுமென்பது முப்பத்தாறு உறுப்பினர்களின் விடயத்தில், 96 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் எத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உரித்துடையதாதல் வேண்டுமென்பது மிச்சத் தொகையான நூற்றறுபது உறுப்பினர்களின் விடயத்தில் இவ்வுறுப்புரையின் இனிவரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) எல்லாத் தேர்தல் மாவட்டங்களினதும் தேருநர் இடாப்புக்களில் தமது பெயர்களைக் கொண்டுள்ள தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது நூற்றறுபதால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிப்பினால் வரும் முழு எண் (பின்னம் எதுவும் கணக்கிலெடுபடாது) இதனகத்துபின்னர் "தகைமைபெறுதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

---

71 அரசியலமைப்புக்கான பதினைந்தாவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது.

(5) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் உள்ள தேருநர் இடாப்புகளில் தமது பெயர்களைக் கொண்டுள்ள அத்தகைய தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது தகைமைபெறுதொகையினால் பிரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அந்தத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள அத்தகைய தேருநர்களின் மொத்த எண்ணிக்கையைத் தகைமைபெறு தொகையால் பிரிக்க வருகின்ற முழு எண்ணுக்குச் சமமான அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் உரித்துக்கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு பிரித்ததன் பின்னர் எச்சமாக இருக்கும் அத்தகைய தேருநர் தொகை, அப்படி எவரேனும் மிச்சமாக இருப்பின், அவசியமாயின், இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்திக்கிணங்கக் கையாளப்படுதல் வேண்டும்.

(6) தகைமைபெறு உறுப்பினரின் தொகையோடு தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கிணங்க நிச்சயிக்கப்படுபவர்களான எல்லாத் தேர்தல் மாவட்டங்களினாலும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்தத் தொகை நூற்றறுபது உறுப்பினர்களுக்குக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, எஞ்சிய உறுப்பினர் தொகையைப் பெறுவதற்கான உரித்தைத் தேர்தல் மாவட்டங்களிடையே எப்படிப் பங்குபோடுவது என்பது, அத்தகைய எஞ்சிய தேருநர் தொகையின் அடிப்படையிலும், (5) ஆம் பந்தியின் கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானிப்புக்கிணங்க ஓர் உறுப்பினரைத்தானும் தெரிந்தனுப்ப உரித்துப்பெறாத ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் விடயத்தில் அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் மொத்தத் தொகையின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும் ; ஆகக்கூடிய எஞ்சிய தேருநர் தொகையை அல்லது ஆகக்கூடிய மொத்தத் தேருநர் தொகையைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டம் மேலும் ஓர் உறுப்பினரைப் பெறுதல் வேண்டும் ; இவ்வாறே, நூற்றறுபது உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படும் வரை, இம்முறை தொடரும்.

(7) இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின் கீழான ஒரு பங்கு போடலைச் செய்யும்போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எஞ்சிய தேருநர் தொகைகள் சமமாகவிருந்து அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொத்தத் தேருநர் தொகைகள் சமமாகவிருந்து அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கை சமமாகவிருந்து, ஒரு தேருநரைக் கூட்டுவது, ஒரு மேலதிக உறுப்பினரைத் தெரிந்தனுப்ப ஒரு தேர்தல் மாவட்டத்துக்கு உரித்தளிக்குமாயின், அந்த ஒரு தேருநரை எந்தத் தேர்தல் மாவட்டத்திற்குக் கூட்டுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(8) [72][தேர்தல்கள் ஆணையாளர், எல்லாத் தேர்தல் மாவட்டங்களுக்குமான தேருநர் இடாப்புக்களை அத்தாட்சிப்படுத்திய பின்னர் இயன்றளவு விரைவாக, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 97 ஆம் உறுப்புரையின்கீழும், இவ்வுறுப்புரையின்கீழும் செய்யப்படும் பிரகடனத்தின் பயனைக்கொண்டு தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துக்கொண்டுள்ளது என்பதை அத்தாட்சிப் படுத்துதல் வேண்டும்.]

(9) இந்த உறுப்புரையின் நோக்கங்களுக்காக, "தேருநர் இடாப்பு" என்பது அப்போதைக்கு நடைமுறையிலிருப்பதும் தேர்தலொன்று நடாத்துவதற்கு அடிப்படையான இடாப்பாக இருப்பதும் ஆன தேருநர் இடாப்பு என்று பொருளாகும்.

**விகிதாசாரப் பிரதிநிதித்துவம்**

[73][**99.** (1) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏதேனும் தேர்தலில் ஒரு தேர்தல் மாவட்டம் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகவிருக்கும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 98 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்ட கட்டளையில் தேர்தல்கள் ஆணையாளரால் குறித்துரைக்கப்படும் அந்த எண்ணிக்கையாக இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலான தேருநர் ஒவ்வொருவரும், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக, அதே அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்றுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்கான தனது முந்துரிமைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது (இதனகத்துப் பின்னர் சுயேச்சைக் குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற ஏதேனும் ஆட்கள் குழு, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏதேனும் தேர்தலின் நோக்கத்துக்காக, அத்தேர்தல் மாவட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப் படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையோடு மூன்றைக்கூட்டிவரும் எண்ணிக்கையினரான வேட்பாளர் களின் பெயர்களைத் தருகின்ற ஒரு நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம்.

(4) தேருநர் இடாப்பில் தமது பெயர் தோன்றுகின்ற ஒவ்வொரு தேருநரும், அவரது பெயர் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களில் தேர்தல் இடாப்பில் தோன்றுவது எப்படியிருப்பினும், ஒரு வாக்குக்கு மட்டுமே உரித்துடையவராதல் வேண்டும்.

72 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 6 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
73 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 7 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(5) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு, ஆகக்கூடிய எண்ணிக்கையிலான முந்துரிமைகளைப் பெற்றுள்ளவரும், அதனால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(6) (அ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான தேர்தல் எதிலும் பெறப்பட்ட மொத்த வாக்குகளில் [74] [இருபதிலொன்றுக்குக் குறைவான] வாக்குகளைப் பெறுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் சுயேச்சைக் குழுவும், அத்தேர்தல் மாவட்டத்துக்கு அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் எவரேனும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து தகைமை யிழந்ததாதல் வேண்டும்.

(ஆ) தகைமையிழந்த கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் பெறப்பட்ட வாக்குகள் எவையேனுமிருப்பின் அவை அத்தேர்தல் மாவட்டத்திலான தேர்தலில் பெறப்பட்ட மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழித்துவரும் வாக்குகள் இதனகத்துப்பின்னர் "இயைபான வாக்குத் தொகை" எனக் குறிப்பீடு செய்யவும்படும்.

(7) இயைபான வாக்குத்தொகை, அத்தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒன்றினால் குறைத்த பின்னர் வரும் எண்ணிக்கையினால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரித்தலின் விளைவான எண் பூரணியாகவிருப்பின், அப்பூரணி, அல்லது அவ்வெண் பூரணியாகவும் பின்னமாகவும் இருப்பின் அப்பூரணியிலும், பின்னத்திலும் பார்க்க அடுத்தபடி கூடியதாகவுள்ள பூரணி, இதனகத்துப்பின்னர் "விளைதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(8) (இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின் கீழ் தகைமையிழந்தனவான அக்கட்சிகள் அல்லது குழுக்கள் நீங்கலாக) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றினாலும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினாலும் பெறப்பட்ட வாக்குகளின் தொகை, ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து தொடங்கி விளைதொகையினால் பின்னர் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய ஒவ்வொரு கட்சியிலிருந்தும் அல்லது குழுவிலிருந்தும், அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுள் ஒவ்வொருவராலும் பெறப்பட்ட முந்துரிமைகளுக்கிணங்க, (ஆகக்கூடிய எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெறுகின்ற வேட்பாளர் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்டும், அடுத்து ஆகக்கூடிய

74 அரசியலமைப்புக்கான பதினைந்தாவது திருத்தத்தின் 4 (1) ஆம்வாசகத்தால் பதிலாக மாற்றீடு செய்யப்பட்டது.

எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெறுகின்ற வேட்பாளர் அடுத்தபடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்டும், அவ்வாறாகவும்) (இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர் நீங்கலாக) அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் பெறப்பட்ட வாக்குகளின் விளைதொகையினால் பிரிப்பதன்மூலம் விளையும் முழுத்தொகைக்குச் சமமானதாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்துதலும் வேண்டும். அத்தகைய பிரித்தலின் பின்னர் எவையேனும் வாக்குகள் எஞ்சியிருப்பின், அவை அவசியமாயின் இவ்வுறுப்புரையின் (9) ஆம் பந்தியின் கீழ் கையாளப்படுதல் வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் (8) ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தமை பற்றி வெளிப்படுத்திய பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்துவதற்கு இன்னும் ஓர் உறுப்பினர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்குமிடத்து, அவ்வாறு இன்னமும் வெளிப்படுத்தப்படவேண்டியுள்ள உறுப்பினர் அல்லது உறுப்பினர் தொகை, அப்பந்தியின் கீழ் ஏலவே வெளிப்படுத்துதல் செய்யப்பட்ட பின்னர் அத்தகைய ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் கணக்கிலுமுள்ள (8) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எஞ்சிய வாக்குகளையும், (8) ஆம் பந்தியின் கீழ் அதன் வேட்பாளர்களுள் எவரையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களென வெளிப்படுத்தியிராத ஏதேனும் கட்சியினால் அல்லது குழுவினால் பெறப்பட்ட வாக்குகளையும் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய வாக்குகளில் ஆகக்கூடிய தொகையைக் கொண்டுள்ள கட்சியினால் அல்லது குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும், ஆகக்கூடிய அல்லது அடுத்தபடியாக ஆகக்கூடிய எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்றுள்ளவரான வேட்பாளர் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வராக வெளிப்படுத்துதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படும் வரை இம்முறை தொடரும்.

(10) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, இவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விளை தொகைக்குக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, ஆகக் கூடுதலான வாக்கு களைப் பெற்ற கட்சி அல்லது குழு, அக் கட்சியினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் (இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர் நீங்கலாக) ஆகக் கூடிய எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்றவருமான வேட்பாள ரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கு உரித்துடை யதாதல் வேண்டுமென்பதோடு, இன்னமும் உறுப்பினர் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்டவர்களையோ தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப் படுத்தவேண்டியிருப்பின், அடுத்தபடியாக ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற

கட்சி அல்லது குழு, அக்கட்சியினால் அல்லது குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வரும் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்றவருமான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்து வதற்கு உரித்துகொண்டிருத்தலும் வேண்டும்; அந்தத் தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் இப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படும் வரை இவ்வாறு தொடரும்.

(ஆ) பந்தி (அ) வின் கீழான தீர்மானத்தின் பின்னர், இன்னமும் ஓர் உறுப்பினரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட உறுப்பினர்களை அந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவரென அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்தவேண்டியிருப்பின், அப் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பில், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(11) இவ்வுறுப்புரையின் (5) ஆம் அல்லது (9) ஆம் அல்லது (10) ஆம் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரசியற் கட்சிகளினால் அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களினால் அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கையினால் பெறப்பட்ட வாக்குகள் சமமாகவிருப்பதாகக் காணப்படுமிடத்தும் ஒரு வாக்கைச் சேர்த்தல் அத்தகைய ஒரு கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கு உரித்தளிக்குமிடத்தும், அத்தகைய மேலதிக வாக்கு எக்கட்சிக்கு அல்லது எக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(12) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையானது, நிராகரிக்கப்பட்ட வாக்குகள் நீங்கலாக எண்ணப்பட்ட வாக்குகளின் தொகையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(13) (அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அத்தகைய பாராளுமன்ற உறுப்பினராக வந்த நேரத்தில் அவரது பெயர் எந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் நியமனப்பத்திரத் தில் (இது இதனகத்துப் பின்னர் இயைபான நியமனப் பத்திரம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) காணப்பட்டதோ அந்தக் கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து விலகுவதன் மூலம் அல்லது விலக்கப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையில் அக்கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினராக இல்லாதொழியுமிடத்து, அவர் அத்தகைய உறுப்பினராக இல்லா தொழியும் தேதியிலிருந்து ஒரு மாதகாலப்பகுதி முடிவுற்றதன்பின்னர் அவரது ஆசனம் வறிதாதல் வேண்டும்;

ஆயின், பாராளுமன்ற உறுப்பினரொருவரை விலக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட ஒரு மாதகாலப்பகுதி முடிவுறு முன்னர் அவர் எழுத்து மூலமான மனுவின் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து, அத்தகைய விலக்கல் செல்லுபடியற்றதென அத்தகைய விண்ணப்பத்தின் மேல் உயர் நீதிமன்றம் தீர்மானிக்குமெனில், அவரது ஆசனம் வறிதானதாதலாகாது. அத்தகைய மனு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளால் விளங்கப்படல் வேண்டும் ; அத்தகைய மனுதாக்கல்செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாத காலப் பகுதிக்குள்ளாக அவர்கள் தமது தீர்மானத்தைச் செய்தலும் வேண்டும். அத்தகைய விலக்கல் செல்லுபடியானதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்ற விடத்து, அத்தகைய தீர்மானிப்புத் தேதியிலிருந்து அந்த வெற்றிடம் உண்டாகும்.

(ஆ) அறுபத்தாறாம் உறுப்புரையில் (அவ்வுறுப்புரையின் (எ) என்னும் பந்தி தவிர) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, அல்லது இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் பயனாக, பாராளுமன்ற உறுப்பினரொருவரின் ஆசனம் வறிதாகுமிடத்து, அடுத்தபடியாக ஆகக்கூடிய எண்ணிக்கையின வான முந்துரிமைகளைப் பெற்ற இயைபான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்தான அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்தான வேட்பாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.]

[75][(14) நீக்கப்பட்டுள்ளது]

**பொதுத் தேர்தலொன்றில் பெறப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்**

[76][**99அ.** உறுப்புரை 98 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நூற்றித்தொண்ணூற்றி யாறு உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய பொதுத் தேர்தலில் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அத்தகைய பொதுத் தேர்தலில் பெறப்பட்ட விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில், அத்தகைய பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமிடையே எஞ்சியுள்ள இருபத்தொன்பது ஆசனங்களை உடனடியாகப் பங்கு போடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பங்கு போடுதல் நோக்கங்களுக்காக, 98 ஆம் உறுப்புரையின் (4), (5), (6), (7) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

75 அரசியலமைப்புக்கான பதினைந்தாம் திருத்தத்தின் 4 (2) ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது.

76 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 8 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

ஒரு பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும், அத்தகைய தேர்தலுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட நியமன காலப்பகுதியினுள், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களின் நிரலொன்றை ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்தகைய பங்குபோடுதலின் மேல் அத்தகைய கட்சி அல்லது குழு எந்த ஆசனங்களுக்கு உரித்துடையதாக வருமோ அந்த ஆசனங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை நிரப்புவதற்கு அந்நிரலிலிருந்து அது ஆட்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம். தேர்தல்கள் ஆணையாளர் இவ்வுறுப்புரையின் கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலையும் பெயர் நியமன காலப்பகுதி முடிவுறுவதன்மேல் உடனடியாக கசெற்றில் சிங்கள, தமிழ், அத்துடன் ஆங்கிலப் புதினத்தாள் ஒன்றிலும் வெளியிடுவித்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட பங்குபோடுதலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒன்று ஆசனமொன்றுக்கு உரித்துடையதாகவுள்ளவிடத்து, தேர்தல்கள் ஆணையாளர் ஓர் அறிவித்தல் மூலம், அத்தகைய ஆசனங்களை நிரப்புதற்கென இவ்வுறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலில் அல்லது அத்தேர்தலில் அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நியமனப் பத்திரத்தில் அவர்களின் பெயர் உள்ளடக்கப்பட்ட ஆட்களாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களை, அத்தகைய அறிவித்தலிலிருந்து ஒரு கிழமையினுள் பெயர்குறித்து நியமிக்கும்படி அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவரைத் தேவைப் படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்துதலும் வேண்டும்.

[77] [தேர்தல்கள் ஆணையாளர், மேற்கூறப்பட்ட அறிவித்தலை வழங்கும் முன்னர், 98 ஆம் உறுப்புரையின்கீழ் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களும், இனரீதியான அல்லது வேறு வகையான ஏதேனும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுமான உறுப்பினர்களின் எண்ணிக்கை தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயையவுள்ளதாவெனத் தீர்மானித்தல் வேண்டுமென்ப துடன், பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பதில், செயல்முறைக்குகந்தவரை, எல்லாச் சமூகத்தினரையும் பிரதிநிதித்துவபடுத்தலானது, அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயையவுள்ளதென்பதனை உறுதிப்படுத்துமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்.]

77 அரசியலமைப்புக்கான பதினைந்தாம் திருத்தத்தின் 5 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காகப் பொதுத் தேர்தலொன்றில் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை உண்மையாக எண்ணப்பட்ட எண்ணிக்கையினவான வாக்குகள் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் வறிதானவையென நிராகரிக்கப்பட்ட எவையேனும் வாக்குகளை உள்ளடக்கு தலுமாகாது.]

**தகைமையீனத்துக் குட்பட்டிருக்கும் போது பாராளுமன்றத்தில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கு மான தண்டம்**

***100.*** ஆளெவரும்–

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு தகைமையற்றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், தேர்தலின்போது தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமையைக் கொண்டிராமலே பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் அமர்ந்தால் அல்லது வாக் களித்தால் ; அல்லது

(ஆ) அவர், பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு தகைமையற்றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், பாராளுமன்றத்தில் அவர் வகித்த ஆசனம் வெற்றான பின்னர் அல்லது பாராளுமன்றத்தில் அமர்வதற்கோ வாக் களிப்பதற்கோ தகைமையற்றவராகிவிட்ட பின்னர் பாராளு மன்றத்தில் அமர்ந் தால் அல்லது வாக்களித்தால்,

அவர் அவ்வாறு அமர்ந்து வாக்களிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாத் தண்டம் செலுத்த ஆளாதல் வேண்டும் ; இத்தொகை சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்கின்மூலம், குடியரசுக்கு வருமதியான கடனென்றாற்போன்று அறவிடப் படலாம்.

**தேர்தல்கள் தொடர்பிலான ஏற்பாடுகளைப் பாராளுமன்றம் செய்யலாம்**

***101.*** (1) பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம் :–

(அ) தேருநர்களைப் பதிவு செய்தல் ;

(ஆ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர் இடாப்பில் பதியப்படுவதற்காக ஆள் ஒருவர் அத்தேர்தல் மாவட்டத்தில் எந்தத் தேதியன்று வசித்திருக்க வேண்டுமோ அந்தத் தகைமை பெறு தேதியை விதித்துரைத்தல் ;

(இ) தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படும் நோக்கங்களுக்காக எந்தத் தேதியன்று ஆள் ஒருவர் பதினெட்டு வயதினை அடைந்தவராக இருக்கவேண்டுமோ, அந்தத் தகைமை பெறு தேதியை விதித்துரைத்தல் ;

(ஈ) தேருநர் இடாப்புகளைத் தயாரித்தலும் திருத்தியமைத்தலும் ;

(உ) பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கான நடவடிக்கை முறை ;

(ஊ) அத்தகைய தேர்தல்கள் தொடர்பான தவறுகள் யாவை எனக் கூறுதலும், அவற்றுக்கான தண்டனையும் ;

(எ) அத்தகைய தேர்தலை வெற்றும் வறிதுமென வெளிப்படுத்துவதற்கான ஏதுக்களும், தேர்தலொன்று வெற்றானதெனத் தீர்க்கப்படுமிடத்து, புதிய தேர்தல்களை நடாத்தும் முறையும் ;

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் தமது பெயர்களைக் கொண்டுள்ள வேட்பாளர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் அல்லது வேறுவகையாகத் தீர்ந்துபோன பின்னர் [78][அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று 157அ என்னும் உறுப்புரையின்கீழ் தடைசெய்யப்பட்டுள்ளவிடத்து] ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாதிரியும் முறையும் ; அத்துடன்

(ஐ) ஆட்சேபிக்கப்பட்ட தேர்தல்களை தீர்மானிக்கும் முறையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கு அவசியமான அல்லது அதன் இடைநேர் விளைவான அத்தகைய வேறு கருமங்களும் ;

ஆயின், அத்தகைய சட்டம் எதுவும் 89 ஆம், 91 ஆம் உறுப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமையீனங்களை விட மேலதிகமாக எத்தகைமையீனங்களையும் சேர்த்தல் ஆகாது.

(2) பாராளுமன்றம் அத்தகைய கருமங்களுக்காகச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யும்வரை, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளை ஏற்றமாற்றங்களுடனும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் ஏற்புடையதாதல் வேண்டும்.

---

78 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

**வேட்பாளராக நிற்கும் பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபன மொன்றின் அலுவலர் தேர்தல் காலத்தின்போது பணிபுரிதல் ஆகாது**

***102.*** பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் ஒருவர் ஏதேனும் தேர்தலில் வேட்பாள் ஒருவராகவிருப்பின், அவர் எத்தேதியன்று வேட்பாளர் ஒருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ அத்தேதியலிருந்து தேர்தல் முடியும்வரை லீவில் இருப்பதாகக் கருதப்படல் வேண்டும். அத்தகைய பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர் இக்காலப்பகுதியின்போது தமது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையும் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் ஆகாது.

*[79] [103 நீக்கப்பட்டுள்ளது*

*104 நீக்கப்பட்டுள்ளது]*

---

*79 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 8 ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டன.*

[80] [அத்தியாயம் XIV அ

## தேர்தல் ஆணைக்குழு

[81] [**103.** (1) ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாகம் அல்லது கல்வி என்ற துறைகளில் சிறப்பெய்தியுள்ள [82] ஆட்களிடமிருந்து [அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளதும் (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) தேர்தல் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர், பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக அல்லது அதற்கு மேற்பட்டவராகப் பதவிவகித்துள்ள தேர்தல்கள் திணைக்களத்தை அல்லது தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அலுவலரொருவராயிருத்தல் வேண்டும். சனாதிபதி, அதன் தவிசாளராக ஓர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.]

**தேர்தல் ஆணைக்குழு**

(2) ஆணைக்குழுவின் குறிக்கோளானது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துவதற்கானதாக விருத்தல் வேண்டும்.

(3) ஆளெவரும், பாராளுமன்றத்தின், மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வருவாராயின் அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவிருப்பின் அல்லது பகிரங்க அலுவலரொருவராகவிருப்பின் அல்லது நியமிக்கப்படின் அல்லது எத்தகையதுமான ஏதேனும் பதவியில் அரசின் ஊழியத்திலிருப்பின் அல்லது அரச ஊழியத்தை மேற்கொள்ளின் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்திருத்தலோ ஆகாது.

(4) உயர்நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைப் பதவியிலிருந்து அகற்றுதல் தொடர்பான அரசியலமைப்பினதும் வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுதலுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் முன்கூட்டிய அனுமதியைப் பெறாமல் ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத் தேதியிலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர், இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் தம் பதவியை முன்னரே துறந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (4) ஆம்

---

80 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 9 ஆம் வாசகத்தால் புதிய அத்தியாயம் XIVஅ சேர்க்கப்பட்டது.

81 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 18(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

82 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தினால் 10 (1) ஆம் வாசகம் மாற்றீடு செய்யப்பட்டது.

பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக் கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனம் விதிப்பதற்கான தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின்கீழ் பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

[83] [(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு தொடர்பான தமது கடமைகளைப் புரியாதிருப்பதற்கு உறுப் பினரொருவருக்கு லீவு வழங்கலாம் என்பதுடன் அத்தகைய லீவுக்காலப் பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கு, ஆணைக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரையும், [84] [அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது நியமிக்கலாம்.]

(8) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனாதிகள் செலுத்தப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பின ரொருவருக்குச் செலுத்தப்படும் வேதனாதிகள் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உறுப்பினரின் பதவிக்காலத் தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(9) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

**104.** (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதிருப்பின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பின ரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவானது எக்கூட்டத்தில் எடுக்கப்படுகின்றதோ அக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் எடுக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் கூட்டத்தின் தவிசாளர் அல்லது அதில் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதலும் வேண்டும்.

---

83 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 18(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது

84 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 10(2) ஆம் வாசகத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது

(3) ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அல்லது முடிபு அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

**முடிபுகளின் முடிவாந் தன்மையும் துடர்ச்சியிலிருந்து விடுபாட்டுரிமையும்**

***104அ.*** தேர்தல் மனுக்களை அல்லது மக்கள் தீர்ப்பு மனுக்களைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு 126 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழும் உறுப்புரை 104ஏ அத்துடன் உறுப்புரை 130இன் கீழும் உயர்நீதிமன்றத்துக்கும் 144 ஆம் உறுப்புரையின்கீழ் மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கும் அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்துக்கும் அத்துடன் ஏதேனும் சட்டத்தினால் ஏதேனும் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்துக்கும் அமைய–

(அ) அரசியலமைப்பின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது மக்கள் தீர்ப்பை எடுத்தல் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது புரியப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஆணைக்குழுவின் ஏதேனும் முடிபை, பணிப்பை அல்லது செயலை ஏதேனும் ஏதுவின் மீதும் எத்தகையதுமான எம்முறையிலும் ஏற்றுக்கவனிப்பதற்கு அல்லது கேட்பதற்கு அல்லது முடிபு செய்வதற்கு அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கு நீதிமன்றமெதுவும் தத்துவமோ அல்லது நியாயாதிக்கமோ கொண்டிருத்தலாகாது ; அத்துடன் அந்த முடிபுகள், பணிப்புகள் அல்லது செயல்கள் முற்று முடிவானவையாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கெதிராக, அரசியலமைப்பின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது மக்கள் தீர்ப்பை எடுத்தல் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும் அமைதலாகாது.

**ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்**

***104ஆ.*** (1) ஆணைக்குழுவானது, அரசியலமைப்பினால், சனாதிபதியின் தேர்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல், மாகாண சபைகளின் உறுப்பினர்களின் தேர்தல், உள்ளூரதிகாரசபைகளின் உறுப்பினர்களின் தேர்தல் அத்துடன் மக்கள் தீர்ப்பொன்று எடுத்தல் தொடர்பான அப்போதைக்கான சட்டத்தினால் –

(அ) ஆணைக்குழுவுக்கு ; அல்லது

(ஆ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு,

அளிக்கப்பட்டதான அல்லது அதன்மீது அல்லது அவர்மீது சுமத்தப்பட்டதான அல்லது அதற்கு அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டதான எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அத்தகைய தேர்தல்களினதும், மக்கள் தீர்ப்புக்களினதும் நோக்கங்களுக்காக தேருநர் இடாப்புகளைத் தயாரித்தலுக்கும் மீளாய்தலுக்கும் அத்துடன் அத்தகைய தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துதல் தொடர்பான எல்லாத் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் மட்டுப்படுத்தாது அவை உட்பட, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் தேர்தலை அல்லது மக்கள் தீர்ப்புக்களை நடாத்துதல் அல்லது எடுத்தல் தொடர்பான எல்லாச் சட்டங்களையும் வலுவாக்குவதனை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சட்டங்களை வலுவுக்கிடுதல் பொறுப்பிக்கப்பட்ட எல்லா அரச அதிகாரிகளும் அத்தகைய வலுவுக்கிடுதலை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்பது அவர்களது கடமையாதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க, பாராளுமன்றத்துக்குப் பொறுப்பைக் கொண்டதாகவும் வகை சொல்லற்பாலதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை அத்தகைய ஆண்டினபோது பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

[85][(4) (அ) ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்மீது தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான பணிப்பொன்றின் மூலம்,-

(i) [86][அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரை அல்லது ஏதேனும் அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுத்தலை] ஊக்கப்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத்துக்காக ;

(ii) அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரினால் அல்லது அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால்,

---

85 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 23 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

86 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 19 (1)ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்வதற்கு தத்துவமுடையாதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல், மற்றும் பயன்கொடுத்தல், அத்தகைய ஆதனம் அப்போதைக்கு எந்த அலுவலரின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதோ அந்த ஆள் அல்லது அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

[87][(4அ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான கட்டளையொன்றை ஆக்கும் தேதியன்று அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடாத்தும்படி தேவைப்படுத்துகின்ற பிரகடனமொன்றைச் செய்யும் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதியின்போது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டுநெறியானது -

(அ) விடயத்துக்கேற்ப, முறையே தேர்தல் நடாத்துவதுடன் அல்லது முறையே மக்கள் தீர்ப்பை நடாத்துவதுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் கருமத்துடன் அல்லது அரசியலமைப்பின்கீழ் நியமிக்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிருவாக நோக்கெல்லைக்குள் உள்ள ஏதேனும் கருமத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருத்தலாகாது,

எனக் குறிப்பிடப்படுகின்றது.]

(5) [88] "(அ) ஆணைக்குழுவானது, ஒரு சுதந்திர மானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறு விடயத்துக்கேற்ப, ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் அல்லது ஒரு செய்தித்தாளொன்றின் எவரேனும் உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பை நடாத்துதல் தொடர்பில் ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டிநெறிகளைக் காலத்துக்காலம் வழங்கத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.".

[89][(ஆ) விடயத்துக்கேற்ப, எவரேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புத் தொழிற்படுத்துநர் அல்லது செய்தித்தாளொன்றின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர், பந்தி (அ) இன் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டவாறான எவையேனும் வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அவர்களின் கடமையாதல் வேண்டும்.]

(இ) (i) ஆணைக்குழு முறையே (4) (அ) மற்றும் 5(அ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணிப்புக்களையும் வழிகாட்டிநெறிகளையும் சிங்களம்,

---

87 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 19(2) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

88 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 11 இன் மூலம் மாற்றம் செய்யப்பட்டது.

89 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 19(3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள குறைந்தபட்சம் ஒரு செய்தித்தாளிலாவது வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு பணிப்பும் வழிகாட்டிநெறியும் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய வழிகாட்டிநெறி மற்றும் பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(iii) அத்தகைய ஒவ்வொரு பணிப்பும் வழிகாட்டிநெறியும் வர்த்தமானியின் வெளியீட்டு தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் வழிகாட்டிநெறி அல்லது பணிப்பு அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.]

**ஆணைக் குழுவால் பொலிசைப் பரவிச் சேவையிலிடுதல்**

***104இ.*** *(1)* விடயத்திற்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்காக கட்டளையொன்றை ஆக்குவதன் மீது அல்லது மக்கள் தீர்ப்பை எடுக்கத் தேவைப்படுத்திப் பிரகடனமொன்று ஆக்கப்படுவதன்மீது ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய தேர்தலை அல்லது மக்கள் தீர்ப்பை நடாத்துவதற்கு அல்லது எடுப்பதற்கு ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்படும் வசதிகளையும் பொலிசு அலுவலர்களின் எண்ணிக்கையையும் பற்றி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

*(2)* பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட வசதிகளையும் பொலிசு அலுவலர்களையும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெறுவித்தல் வேண்டும்.

*(3)* ஆணைக்குழுவானது, அதற்குக் கிடைக்கப்பெற்ற பொலிசு அலுவலர்களையும் வசதிகளையும் விடயத்திற்கேற்ப, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பு நடாத்தப்படுவதை உந்தக்கருதி அத்தகைய முறையில் பரவி சேவையிலிடலாம்.

*(4)* இவ்வுறுப்புரையின் *(2)* ஆம் பந்தியின்கீழ் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறச் செய்த பொலிசு அலுவலர் ஒவ்வொருவரும் ஒரு தேர்தல் காலப்பகுதியின்போது ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தலும் அதன் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயற்படுதலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின்கீழ் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறச் செய்த எவரேனும் பொலிசு அலுவலருக்கெதிராக ஆணைக்குழுவின் பணிப்பைப் பின்பற்றி அல்லது ஆணைக்குழுவின்கீழ்ப் பணியாற்றுகையில் நல்லெண்ணத்துடன் அத்தகைய பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக அல்லது காரியத்துக்காக துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அமைதலாகாது.

**104ஈ.** விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான கட்டளையொன்று ஆக்கப்படுவதன்மீது அல்லது மக்கள் தீர்ப்பொன்றை எடுக்குமாறு தேவைப்படுத்திப் பிரகடனமொன்று செய்யப்படுவதன்மீது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவதற்கு அல்லது எடுப்பதற்குப் பாதகமாக அமையக்கூடிய எவையேனும் செயல்களை அல்லது சம்பவங்களைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு எனக் குடியரசின் ஆயுதப் படையினரைப் பரவிச் சேவையிலிடுதல் தொடர்பில் சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்வது ஆணைக்குழுவுக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

**ஆயுதப் படையினரை பரவிச் சேவையிலிடுதல்**

**104உ.** [90][(1) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும். அவர், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.]

**தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியும் ஆணைக்குழுவின் வேறு அலுவலர்களும்**

(2) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி, அதனால் அவர் தொடர்பான ஏதேனும் விடயம் கருத்துக்கெடுக்கப்படுமிடத்துத் தவிர, ஆணைக்குழுவின் கூட்டங்களிற் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அவர் அத்தகைய கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமையுடையவராத லாகாது.

(3) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு அலுவலர்களை அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது நியமிக்கலாம்.

(4) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினதும் ஆணைக்குழுவின் வேறு அலுவலர்களினதும் சம்பளங்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன், திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(5) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, ஆணைக்குழுவின் முடிபுகளை நடைமுறைப்படுத்துதலும், ஆணைக்குழுவின் அலுவலர்கள்மீது கண்காணிப்பைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(6) ஆணைக்குழு, அதன் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணைக்குழுவின் வேறு அலுவலருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் அல்லது புரிதலும் வேண்டும்.

---

90 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 20(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(7) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் பதவியானது,

(அ) அவரது இறப்பின்மீது ;

(ஆ) ஆணைக்குழுவுக்கு முகவரியிடப்பட்டு எழுத்தில் அவர் பதவி துறப்பதன்மீது ;

(இ) அவர் [91][அறுபது] வயதை அடைவதன்மீது ;

(ஈ) சுகயீனம் அல்லது உடல் அல்லது உளப்பலவீனம் காரணமாக ஆணைக்குழுவால் அவர் அகற்றப்படுவதன்மீது ; அல்லது

(உ) (8) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடனிணங்கியொழுகும் வண்ணம், எண்பிக்கப்பட்ட துர்நடத்தையின் அல்லது ஆற்றலின்மையின் ஏதுவின்மீது அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் பிரேரணையின்பேரில் அவர் ஆணைக் குழுவால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மீது,

வறிதானதாக வருதல் வேண்டும்.

(8) (அ) இவ்வுறுப்புரையின் ஏழாம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை (சமுகமாயிராதவர்கள் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும் பான்மையொன்றினால் ஆதரிக்கத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிரேரணையொன்றை முன்வைப்பதற்கான தீர்மான மெதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையா தோரால் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன் சார்த்துரைக்கப்பட்ட துர்நடத்தை யின் அல்லது ஆற்றலின்மையின் முழு விவரங்களும் அதில் தரப்பட்டிருந்தா லன்றி சபாநாயகரால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது பாராளு மன்றத்தின் ஒழுங்குபத்திரத்தில் இடப்படுதலோ ஆகாது.

(ஆ) பாராளுமன்றமானது, அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற் கான நடவடிக்கை முறை. சார்த்துரைக்கப்பட்ட துர்நடத்தையின் அல்லது ஆற்றலின்மையின் புலனாய்வு மற்றும் எண்பிப்பு, நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமாகவோ தோன்றி விசாரிக்கப்படுவதற்கான தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் உரிமை என்பன உட்பட, பிரேரணை யொன்று முன்வைக்கப்படுதல் தொடர்பிலான எல்லா விடயங்களுக்கும் சட்டத்தால் அல்லது நிலையியற் கட்டளைகளால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

91 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 20 (2)ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**104ஊ.** (1) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் ஒரு தெரிவத்தாட்சி அலுவலராக இருக்கவென ஓர் ஆளைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் நியமித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவுவதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கலாம்.

**தெரிவத்தாட்சி அலுவலர்கள்**

(2) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் அலுவலரும் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டனவான அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவினால் வழங்கப்படற்பாலதான அத்தகைய பணிப்புகளுக்கமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், அதற்காக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டவராதலும் வகைசொல்லற்பாலராதலும் வேண்டும்.

**104எ.** ஏதேனும் தேர்தல்களில் அல்லது மக்கள் தீர்ப்புகளில் கடமைகளையும் பணிகளையும் புரிகின்ற எல்லாப் பகிரங்க அலுவலர்களும், அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் ஆணைக்குழுவின் பணிப்பின்கீழ்ச் செயலாற்ற வேண்டும் என்பதுடன், அதற்காக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டவர்களாகவும் வகைசொல்லற்பாலனராகவும் இருத்தலும் வேண்டும்.

**பகிரங்க அலுவலர்கள்**

[92][**104ஏ.** (1)(அ) தேர்தல் ஒன்றை நடாத்துவது அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவது தொடர்பிலான ஏதேனும் சட்டத்தினை வலுவுக்கிடலை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைவதற்கு நியாய மான காரணமன்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

**பணிப்புக் களுடன் இணங்கியொழுகத் தவறுதல் குற்றமொன்றாதல்**

(ஆ) 104ஆ ஆம் உறுப்புரையின் முறையே (4)ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் அல்லது (5) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுடன் அல்லது வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற,

எவரேனும் பகிரங்க அலுவலர், ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், தொழிலின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட வேறு பொறுப்புமுயற்சியின் எவரேனும் ஊழியர், அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாக கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனம்

---

92 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 25 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

அல்லது உள்ளூர் அதிகாரசபை ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கின்றதோ அந்தக் கம்பெனியின் ஊழியர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்குமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.]

**எழுத்தாணைகளை வழங்குவதற்கான உயர்நீதிமன்றத்தின் தத்துவம்**

***104ஏ.*** (1) அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கமானது, அரசியலமைப்பால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் அதனால் பிரயோகிக்கப்படுகையில் எழக்கூடியதான ஏதேனும் விடயம் தொடர்பில், உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டுகின்ற ஒவ்வொரு விண்ணப்பமும், எச்செயலை அவ்விண்ணப்பம் தொடர்புறுத்துகின்றதோ அச்செயல் புரியப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பம் கோப்பிடப்பட்ட திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் உயர்நீதிமன்றம் அதனைக் கேட்டலும் இறுதியாகத் தீர்த்துவைத்தலும் வேண்டும்.

**பொருள்கோடல்**

***104ஒ.*** இவ்வத்தியாயத்தில் "ஒரு தேர்தல் காலப்பகுதியின்போது" என்பது, விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான அல்லது மக்கள் தீர்ப்பொன்றை எடுப்பதற்கான பிரகடனமொன்று அல்லது கட்டளையொன்று ஆக்கப்படுவதன்மீது தொடங்கி, விடயத்துக்கேற்ப, அத்தகைய தேர்தலில் அல்லது மக்கள் தீர்ப்பில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் பெறுபேறு வெளிப்படுத்தப்படுகின்ற தேதியன்று முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாதல் வேண்டும்.]

அத்தியாயம் XV

## நீதித்துறை

**105.** (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றை நிலைநாட்டி நடைமுறைப்படுத்தும் நீதி நிருவாகத்துக் கான நிறுவனங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :- **நீதிமன்றங்கள் முதலியன தாபிக்கப்படுதல்**

(அ) இலங்கைக் குடியரசின் உயர்நீதிமன்றம்,

(ஆ) இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம்,

(இ) இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்றமும், பாராளுமன்றம் காலத்துக்குக்காலம் ஆணையிட்டமர்த்தித் தாபிக்கக்கூடிய அத்தகைய வேறு முதனிலை நீதிமன்றங்களும் நியாய சபைகளும் அல்லது அத்தகைய நிறுவனங்களும்.

(2) உயர்நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய எல்லா நீதிமன்றங்களும், அத்துடன் நீதியை நிருவகிப்பதற்காகவும், கைத்தொழில் பிணக்குகளையும், வேறு பிணக்குகளையும் விளங்கித்தீர்த்து இணக்கம் ஏற்படுத்துவதற்காகவும் இப்போதுள்ள எழுத்திலான சட்டத்தின் மூலம் உருவாக்கித் தாபிக்கப்பட்ட நியாயசபைகளும் நிறுவனங்களும், பாராளுமன்றத்தினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களாகவும் நியாயசபைகளாகவும் நிறுவனங்களாக வும் கருதப்படுதல் வேண்டும். பாராளுமன்றமானது அத்தகைய நீதிமன்றங் களினதும் நியாயசபைகளினதும் நிறுவனங்களினதும் தத்துவங்களையும், கடமைகளையும், நியாயாதிக்கத்தினையும் நடவடிக்கைமுறையையும் மாற்றீடு செய்யலாம் அல்லது நீக்கலாம் அல்லது திருத்தலாம்.

(3) இலங்கைக் குடியரசின் உயர்நீதிமன்றம், இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம், ஆகியன ஒவ்வொன்றும் மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நீதிமன்றத் துக்குரிய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; மேற்படி தத்துவம், தம்மை அவமதித்தமைக்காக (அத்தகைய அவமதிப்பு நீதிமன்றத்திலேயே புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது வேறெங்கும் புரியப்பட்டிருப்பினுஞ்சரி) நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறு மறியற்றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவம், இவ்வுறுப்புரையின் (1) (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபையை அல்லது நிறுவனத்தை அவமதித்தமைக்காக (அத்தகைய அவமதிப்பு அத்தகைய நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் முன்னிலையில் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, வேறெங்கும் புரியப்பட்டிருப்பினுஞ்சரி) தண்டிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்:

ஆயின், இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளை ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபையை அல்லது நிறுவனத்தை அவமதித்தமைக்காகத் தண்டிப்பதற்கு என அத்தகைய வேறு நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது நிறுவனத்துக்கு ஏதேனும் சட்டத்தால் இப்போது உரித்தாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உரித்தாக்கப்படும் உரிமையைப் பங்கப்படுத்தவோ பாதிக்கவோ மாட்டாது.

(4) பிக்குகளின் ஒழுக்காறு பற்றிய கருமங்களை அல்லது பிக்குகளுக்கிடையிலான ஏதேனும் பிணக்கை, அல்லது கோயில்களில் அல்லது கோயில்கள் தொடர்பில் சேவைகள் புரிதல் பற்றிய வேறு ஏதேனும் பிணக்கை விளங்கித்தீர்த்து, இணக்கம் ஏற்படுத்துவதற்கென நீதிமன்றங்களையும் நியாயசபைகளையும் அல்லது நிறுவனங்களையும் ஏற்பாடு செய்யலாம். அத்தகைய சட்டம், இவ்வத்தியாயத்தில் அல்லது XVI ஆம் அத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும்,-

(அ) அத்தகைய நீதிமன்றங்களின், நியாயசபைகளின் அல்லது நிறுவனங்களின், உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் சனாதிபதியினால், அல்லது அத்தகைய சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறாக அத்தகைய வேறு ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் நியமிக்கப்படவும், இடமாற்றப்படவும், பதவிவிலக்கப்படவும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகிக்கப் படவும் ஏற்பாடு செய்யலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கருமங்களும் பிணக்குகளும் பற்றி இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் நியாயாதிக்கத்தினைத் தவிர்ப்பதற்கெனவும் ஏற்பாடு செய்யலாம்.

இப்பந்தியிலுள்ள "பிக்கு", "கோயில்" என்னும் சொல்லமைப்புக்கள் அரசியலமைப்பு தொடங்கும்போது பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக்கொண்டிருத்தல் வேண்டும்.

பகிரங்க அமர்வுகள்

**106.** (1) அரசியலமைப்பின் கீழ்த் தாபிக்கப்படும் அல்லது பாராளுமன்றத்தினால் ஆணையிட்டமர்த்தித் தாபிக்கப்படும் நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறு நிறுவனம் ஒவ்வொன்றினதும் அமர்வுகள், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பகிரங்கமாக நடைபெறுதல் வேண்டும் என்பதுடன், எல்லா ஆட்களும், அத்தகைய அமர்வுகளுக்குச் சுதந்திரமாகச் சமுகம் கொடுப்பதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்தின், நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் நீதிபதியொருவர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் -

(அ) குடும்ப உறவுகள் தொடர்பிலான வழக்குநடவடிக்கைகளில்;

(ஆ) பாலியல்சார் விடயங்கள் தொடர்பிலான வழக்கு நடவடிக்கை களில்;

(இ) தேசிய பாதுகாப்பினது அல்லது பொதுமக்கள் பாதுகாப்பினது நன்மைகருதி ; அல்லது

(ஈ) அத்தகைய நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் வளவுகளுக்குள் ஒழுங்கையும் பாதுகாப்பினையும் நிலைநாட்டக் கருதி,

அவரது தற்றுணிபில், அவ்வாறு செய்தல் விரும்பத்தக்கதென அவர் கருதும்போதிலெல்லாம், அங்கு நடைபெறும் வழக்கு நடவடிக்கைகளில் நேரடியாக அக்கறை கொண்டிராதவர்களான அத்தகைய ஆட்களை அதிலிருந்து விலக்கிவைக்கலாம்.

## நீதித்துறைச் சுதந்திரம்

**உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தலும் அகற்றுதலும்**

**107.** [93][(1) பிரதம நீதியரசரும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும், உயர்நீதிமன்றத்தின், மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறொவ்வொரு நீதிபதியும், சனாதிபதியின் கைப்பட ஆணைமூலம் அவரினால் [94] அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய நியமிக்கப்படுதல் வேண்டும்.]

(2) அத்தகைய நீதிபதி ஒவ்வொருவரும் நன்னடத்தையுடையவராயிருக்கும் வரை பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை அவர்பால் உள்ளது என்ற ஏதுவின்மீது அத்தகைய நீதிபதியை அகற்றும்படி கூறும் பாராளுமன்றப் பிரேரணையொன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மையினால் (சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட) ஆதரவளிக்கப்பட்டு சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலமாகவன்றி அகற்றப்படுதலும் ஆகாது :

ஆயினும், அத்தகைய பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரால் கையொப்பமிடப்பட்டிருப்பதோடு, சார்த்தப்பட்ட துர்

93 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 21 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

94 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 12 ஆல் மாற்றீடு செய்யப்பட்டது.

நடத்தை பற்றிய அல்லது தகவின்மை பற்றிய முழு விபரங்களையும் அது கொண்டிருந்தாலன்றி, சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது, அல்லது பாராளுமன்ற, நிகழ்ச்சித்தாளில் இடம்பெறுதல் ஆகாது.

(3) அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைமுறை, சார்த்தப்பட்ட துர்நடத்தைபற்றி அல்லது தகவின்மை பற்றிய புலனாய்தலும் எண்பித்தலும், அத்துடன், அத்தகைய நீதிபதி தாமாகவோ, அல்லது பிரதிநிதி மூலமாகவோ தோற்றுவதற்கும் தம்பக்க வழக்கை உரைப்பதற்கும் ஆன உரிமை என்பன உட்பட, அத்தகைய பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் தொடர்பிலான எல்லா விடயங்களுக்கும், சட்டத்தின்மூலம் அல்லது நிலையியற் கட்டளைகள் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(4) பிரதம நீதியரசராக, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக அல்லது உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக இருப்பதற்கென அல்லது அத்தகையவராகச் செயற்படுவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், அவர் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தினைச் செய்து அல்லது உறுதியுரையினை சனாதிபதி முன்னிலையில் மொழிந்து அதில் ஒப்பமிடும்வரை, தமது பதவிக்குரிய கடமைகளைப் புரியத் தொடங்குதல் ஆகாது.

(5) உயர் நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வுபெறுவதற்கான வயது அறுபத்தைந்தாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வுபெறவதற்கான வயது அறுபத்துமூன்றாகவும் இருத்தல் வேண்டும்.

**உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளின் சம்பளங்கள்**

**108.** (1) உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளினது சம்பளங்கள், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

(2) உயர்நீதிமன்ற நீதிபதியொருவருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவருக்கும் செலுத்தப்படற்பாலதான சம்பளமும் ஓய்வூதியம் பெறுவதற்கு அவருக்குள்ள உரித்தும், அவர் நியமிக்கப்பட்ட பின்னர் குறைக்கப்படுதல் ஆகாது.

**பதில் நியமனங்கள்**

[95][**109.** (1) பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது முறையே பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் பதவியில் செயலாற்றுவதற்கென, விடயத்திற்கேற்ப, உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறு ஒரு நீதிபதியை சனாதிபதி [96][அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது நியமித்தல் வேண்டும்.

95 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 22 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

96 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 13(1) ஆல் மாற்றீடு செய்யப்பட்டது.

(2) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறை வேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப் பகுதியின்போது விடயத்திற்கேற்ப, உயர்நீதிமன்ற நீதிபதியாக அல்லது மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை சனாதிபதி [97][அரசியலமைப்புப் பேரவையின் அங்காரத்தின்மீது நியமிக்கலாம்.]

**110.** (1) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவர், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் வேறெவையேனும் தோதான பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றும்படி அல்லது புரியும்படி குடியரசின் சனாதிபதியினால் பணிக்கப்படலாம்.

**நீதிபதிகள் வேறு பணிகளை நிறை வேற்றுதலும் வேறு கடமை களைப் புரிதலும்**

(2) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி எவரும், அரசியலமைப்பினால் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறு தவிர, அல்லது சனாதிபதியின் எழுத்திலான சம்மதத்துடன் தவிர (சம்பளம் பெறும் அல்லது சம்பளம் பெறாத) வேறெப்பதவியையும் புரிதல் ஆகாது, அல்லது இலாபம் தரும் அல்லது ஊதியம் தரும் வேறெத்தொழிலையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(3) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியொருவராகப் பதவி வகித்துள்ள ஆள் எவரும், சனாதிபதியின் எழுத்திலான சம்மதத்துடனல்லாது, ஏதேனும் நீதிமன்றத்தில், நியாய சபையில் அல்லது நிறுவனத்தில் சட்டத்தரணியொருவராகத் தோற்றுதல், வழக்குரைத்தல், செயற்படுதல் அல்லது தொழில்புரிதல் ஆகாது.

**111.** [98][(1) இலங்கையின் மேல் நீதிமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும். அது பாராளுமன்றம் சட்டம் மூலம் உரித்தாக்கக்கூடியவாறான அல்லது அதிகாரமளிக்கக்கூடியவாறான அத்தகைய நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.]

**மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தலும், அகற்றுதலும், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும்**

[99][(2) மேல் நீதிமன்ற நீதிபதிகள்–

(அ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியால் அவர் கைப்பட்ட ஆணையின்மூலம் நியமிக்கப் படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விதப்புரையானது, சட்டத்துறைத் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையின் பின்னர் செய்யப்படுதல் வேண்டும் :

(ஆ) நீதித்துறைச்சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதி பதியினால் அகற்றப்படக்கூடியவர்களாதலும் சனாதிபதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.]

97 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 13(2) இன் மூலம் மாற்றீடு செய்யப்பட்டது.
98 அரசியலமைப்புக்கான பதினோராவது திருத்தத்தின் இரண்டாம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
99 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 12(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(3) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய மேல்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபேறு தொடர்பான கருமங்களுக்கு, பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யலாம்.

[100][(4) மேல் நீதிமன்ற நீதிபதி எவரும் தமது கைப்பட சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.]

**மேல் நீதிமன்ற ஆணையாளர்கள்**

[101] [**111.அ.** (1) ஏதேனும் நீதிநிருவாக வலயத்தில் மேல்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் பிரயோகிக்கின்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது தற்காலிகமாக அதிகரிக்கப்படுதல் வேண்டுமென்பது உகந்தது என நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் சனாதிபதிக்கு எடுத்தியம்புமிடத்து சனாதிபதியானவர், ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட மேல்நீதிமன்ற ஆணையாளர்கள், அத்தகைய மேல்நீதிமன்ற ஆணையாளரின் நியமன ஆணையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நீதிநிருவாக வலயத்துள் மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கென [102][நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது ஆணைமூலம் நியமிக்கலாம்.]

(2) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் மேல்நீதிமன்ற ஆணையாளர் ஒவ்வொருவரும், அவரது நியமன ஆணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதோடு, நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் அகற்றப்படக் கூடியவராதலும் சனாதிபதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் மேல்நீதிமன்ற ஆணையாளர் ஒவ்வொருவரும், பாராளுமன்றத்தினால் மேல்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப் பட்டுள்ளதான அல்லது உரித்தாக்கப்பட்டுள்ளவையான அல்லது ஆணையிட்டுப் பணிக்கப்பட்டுள்ளதான அல்லது ஆணையிட்டுப் பணிக்கப் பட்டுள்ளவையான அத்தகைய நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் அவரின் பதவிக்காலத்தின்போது சட்டத்துக்கிணங்கப் பிரயோகிக்கலா மென்பதோடு, மேல்நீதிமன்ற நீதிபதியொருவரின் பதவிக்காலம் தொடர்பான அத்தகைய உரிமைகளும் சிறப்புரிமைகளும் தவிர்ந்த எல்லா உரிமைகளும் தத்துவங்களும் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் உரித்தாக்கப்பட்ட வராக இருத்தலும் வேண்டும். அத்துடன், இந்நோக்கத்துக்காக சந்தர்ப்பம் வேறு

100 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 12(2) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

101 அரசியலமைப்புக்கான ஏழாவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

102 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 13 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி அரசியலமைப்பில் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தில் "மேல்நீதிமன்ற நீதிபதி" ஒருவர் பற்றிய குறிப்பீடொன்று "மேல்நீதிமன்ற ஆணையாளர்" ஒருவருக்கான குறிப்பீடொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.]

**தீவு முழுவதற்குமான பிசுக்கால்**

[103][**111ஆ.** பிசுக்கால் ஒருவர் இருத்தல் வேண்டும், அவர் தீவு முழுவதற்குமான பிசுக்காலாதல் வேண்டுமென்பதுடன், எல்லா முதனிலை நீதிமன்றங்களையும் சார்ந்த பிரதிப் பிசுக்கால்கள் மீதான கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் பிரயோகித்தலும் வேண்டும்.]

**நீதித்துறையில் தலையிடுதல் தவறொன்றாகும்**

[104][**111இ**] (1) சட்டத்தின்மூலம் நீதித்துறைத் தத்துவங்கள் அல்லது நீதித்துறைப் பணிகள் அல்லது இந்த அத்தியாயத்தின் கீழான பணிகள், அல்லது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழான அதேபோன்ற பணிகள் பொறுப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நீதிபதியும், தலைமைதாங்கும் அலுவலரும், பகிரங்க அலுவலரும், அல்லது வேறு ஆளும், அத்தகைய தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில் அல்லது நிறைவேற்றுவதில் அத்தகைய நீதிபதியை, தலைமைதாங்கும் அலுவலரை, பகிரங்க அலுவலரை அல்லது அத்தகைய வேறு ஆளைப் பணிப்பதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்குச் சட்டப்படி உரித்துடையதாயிருக்கின்ற மேனிலை நீதிமன்றம், நியாயசபை, நிறுவனம் அல்லது வேறு ஆள் தவிர்ந்த, வேறு எந்த ஆளிடமிருந்தும் வரும் ஏதேனும் பணிப்புக்கு அல்லது பிற தலையீட்டுக்கு உட்படாமல் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் நீதிபதியின், தலைமைதாங்கும் அலுவலரின், பகிரங்க அலுவலரின் அல்லது அத்தகைய வேறு ஆளின் நீதித்துறைத் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் சட்டமுறையான அதிகாரமில்லாமல், தலையிடும் அல்லது தலையிட எத்தனிக்கும் ஒவ்வோர் ஆளும், ஓர் ஆண்டுக்கு நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டணையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற்தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டினாலும் யூரர்சபை இல்லாத விளக்கத்தின் பின்னர் மேல் நீதிமன்றத்தினால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் ; அத்துடன், இவற்றோடு சேர்த்து அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குத் தேருநராவிருக்கும் தகைமையையும், மக்கள் தீர்ப்பில் அல்லது குடியரசின் சனாதிபதிக்கான தேர்தல் எதிலும் அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கான தேர்தல் எதிலும் அல்லது உள்ளூரதிகார சபைத்தேர்தல் எதிலும் வாக்களிக்கும் தகைமையையும் இழத்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் பகிரங்கப் பதவியை வகிப்பதற்கும் பகிரங்க அலுவலர் ஒருவராக வேலைக்கமர்த்தப்படுவதற்கும் தகைமை யிழந்தவராதலும் வேண்டும்.

---

103 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 14ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

104 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 15 ஆம் வாசகத்தால் உறுப்புரை 116 உறுப்புரை 111இ என மீள இலக்கமிடப்பட்டது.

[105][ அத்தியாயம் XV அ

**நீதித்துறைச் சேவை ஆணைக்குழு**

[106][**நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அமைப்பு**

**111ஈ.** (1) [107][“உறுப்புரை [108] அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால்] நியமிக்கப்படும் பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு அதிசிரேட்ட நீதிபதிகளையும் கொண்ட நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும். (இது இவ்வத்தியாயத்தில் “ஆணைக் குழு” என்று குறிப்பீடுசெய்யப்படும்.)

(2) பிரதம நீதியரசரும், உயர்நீதிமன்றத்தின் அதிசிரேட்ட இரண்டு நீதிபதிகளும் [109][நீதிவான் அல்லது மாவட்ட] நீதிபதியொருவராக சேவையாற்றிய ஏதேனும் நீதிதுறை அனுபவத்தை கொண்டிராது உள்ளவிடத்து, ஆணைக்குழுவானது பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி மற்றும் முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதியாக அனுபவத்தை கொண்டுள்ள அத்தகைய நீதிமன்றத்தின் அடுத்துவரும் அதிசிரேட்ட நீதிபதி என்போரை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.]

**ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

**111உ.** (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவர், அவர் முன்கூட்டியே பதவி துறந்தாலன்றி அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட வாறு அதிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அல்லது உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக இல்லாதொழிந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். அத்துடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் முடிபுகள் யாவும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் ஒரு பெரும்பான்மையின் மூலமாதல் வேண்டும் ; அத்துடன் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில் கூட்டத்தின் தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றையுடையவராதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அத்தகைய வெற்றிடம் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

---

105 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 16 ஆம் வாசகத்தால் அத்தியாயம் XVஅ உட்புகுத்தப்பட்டது.
106 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 28 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
107 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 14(1) ஆல் திருத்தப்பட்டது.
108 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 14(2) ஆல் திருத்தப்பட்டது.
109 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 14(2) ஆல் திருத்தப்பட்டது.

[110][(5) சனாதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அவரது கடமைகளிலிருந்தான லீவை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய லீவுக் காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராகவிருப்பதற்கு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரை [111][அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய] நியமிக்கலாம்.

(6) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.]

**ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள்**

***111ஊ.*** ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது; அத்துடன் அது உறுப்பினரின் நிலையான நியமனத்திற்குரியவையும் அதினின்று பெறப்படுபவையுமான சம்பளத்திற்கும் வேறு படிகளுக்கும் மேலதிகமானதாயிருத்தல் வேண்டும் :

ஆயினும், இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ்ப் படிகளாகச் செலுத்தப்படவேண்டிய தொகை தீர்மானிக்கப்படும் வரை, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இவ்வத்தியாயம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று அவர்கள் பெற்ற அத்தகைய தொகையைப் படிகளாகத் தொடர்ந்து பெறுதல் வேண்டும்.

**ஆணைக்குழுச் செயலாளர்**

***111எ.*** ஆணைக்குழுவுக்குச் செயலாளர் ஒருவரிருத்தல் வேண்டும். அவர் முதனிலை நீதிமன்றங்களின் சிரேட்ட நீதித்துறை அலுவலர்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் தத்துவங்கள்**

***111ஏ.*** (1) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவுக்கு–

(அ) மேல்நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்வதற்கும் ;

(ஆ) நீதித்துறை அலுவலர்களையும் அட்டவணைப்படுத்தப்பட்ட எல்லாப் பகிரங்க அலுவலர்களையும் நியமனம் செய்வதற்கும், இடமாற்றம் செய்வதற்கும், ஒழுக்காற்றுதல் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் பதவிநீக்கம் செய்வதற்கும்,

ஆன தத்துவம் இத்தால் உரித்தாக்கப்படுகின்றது.

---

110 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 24 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டன.

111 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 15 ஆல் மாற்றீடு செய்யப்பட்டது.

(2) ஆணைக்குழுவானது–

(அ) மேல்நீதிமன்ற நீதிபதிகளின் பயிற்சி தொடர்பான விதிகளையும் நீதித்துறை அலுவலர்களினதும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களினதும் ஆட்சேர்ப்பு, பயிற்சி, நியமனம், பதவியுயர்வு அத்துடன் இடமாற்றத்துக்கான திட்டங்களையும் ஆக்கலாம் ;

(ஆ) ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

(3) விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எவரும் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தை அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் பேணப்படும் பதிவேடுகளையும் இடாப்புகளையும் வேறு ஆவணங்களையும் பரிசோதனை செய்வதற்கும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்துவதற்கும் ஆன தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், சம்பள உயர்வை உட்படுத்தும் இடமாற்றங்களைத் தவிர, அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் இடமாற்றங்களைச் செய்வதற்கான அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விடயங்களிலும் அத்தகைய வரையறைகளுக்கமையவும் பதிற் கடமையாற்றும் நியமனங்களைச் செய்வதற்கான தத்துவத்தை ஆணைக் குழுவின் செயலாளருக்கு கையளிக்கலாம்.

**நீதித்துறை அலுவலர்களும் பகிரங்க அலுவலர்களும் பதவி துறக்கலாம்**

***111ஒ.*** நீதித்துறை அலுவலர் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் எவரும் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட எழுத்தின் மூலம் பதவிதுறக்கலாம்.

**சட்ட நடவடிக்கைகளிலிருந்தான விடுபாட்டுரிமை**

***111ஓ.*** ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக ஆணைக்குழுவின் அத்தகைய தவிசாளராக, உறுப்பினராக, செயலாளராக அல்லது அலுவலராக, தமது கடமைகளை அல்லது பணிகளைப் புரிகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

**ஆணைக் குழுவுடன் தலையிடுதல் தவறொன்றாதல்**

***111ஔ.*** *(1) தமது சட்டமுறையான கடமையின்போது தவிர, வேறு வகையாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது. தனியே அல்லது எவரேனும் ஆள்மூலம் அல்லது ஆளுடன் சேர்ந்து, எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஆணைக்குழுவால் எடுக்கப்படும் ஏதேனும் முடிபின்மீது அல்லது ஆக்கப்படும் கட்டளையின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது அதனது எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஒவ்வோராளும், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒருலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ;*

*ஆயின், எவ்வாறாயினும் ஏதேனும் நீதித்துறைப் பதவிக்கான அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்கப் பதவிக்கான எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது வேட்பாளருக்கு ஒரு சான்றிதழை அல்லது நற்குணச்சான்றை வழங்குதல் தவறொன்றாதல் ஆகாது.*

*(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மேல்நீதிமன்றமும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை கேட்டுத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

**பொருள்கோடல்**

***111க.*** *(அ) இவ்வத்தியாயத்தில் -*

*"நியமனம்" என்பது இவ்வத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கான நியமனத்தையும் உள்ளடக்கும் ;*

*"நீதித்துறை அலுவலர்" என்பது, ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின், நியாய சபையின், அல்லது நீதி நிருவாகத்துக்காக அல்லது ஏதேனும் தொழில் அல்லது வேறு பிணக்குத் தொடர்பில் நீதித் தீர்ப்பளிப்பதற்காக உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட நிறுவனத்தின் ஒரு நீதிபதியாக, தலைமைதாங்கும் அலுவலராக அல்லது உறுப்பினராக பதவிவகிக்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும். ஆனால், உயர்நீதிமன்ற, [112]மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை அல்லது நடுத்தீர்ப்புப் பணிகளைப் புரிகின்றவோர் ஆளை அல்லது எந்தப் பகிரங்க அலுவலரொருவரின் பிரதான கடமை நீதித்துறைத் தன்மைத்தான பணிகளைப் புரிதலற்றதோ அந்தப் பகிரங்க அலுவலரை உள்ளடக்காது ;*

*112 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 16 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

"அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்" என்பது உயர்நீதிமன்றப் பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர், மேல் நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் பதிவாளர், பிரதிப் பதிவாளர், அல்லது உதவிப் பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல்நீதிமன்றத்தின் பிசுக்கால், பிரதிப் பிசுக்கால், உயர்நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் பதிவகத்தில் தொழிலுக்கமர்ப்பட்டுள்ளவர்களும் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வகுதியொன்றில் அல்லது நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சரால் ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வகுதிகளில் உள்ளடக்கப்பட்டவருமான எவரேனும் பகிரங்க அலுவலர் என்று பொருள்படுதல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பின் கருத்தெல்லைக்கு ஆளொருவர் நீதித்துறை அலுவலரொருவரா அல்லரா என்னும் வினாவை ஏற்றுக் கவனிப்பதற்கு, அல்லது தீர்மானிப்பதற்கு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனம் எதுவும் நியாயாதிக்கம் கொண்டதாதலாகாது; ஆனால் அத்தகைய வினா ஆணைக்குழுவால் மட்டுமே தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் மீதான அதனது முடிபு முற்றுமுடிபானதாதலும் வேண்டும்.

(இ) உட்பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தீர்மானத்திற்கு முன்னர் அத்தகைய ஆளின் செயல் அல்லது அத்தகைய ஆளின் முன்னிலையில் நடைபெற்ற வழக்கு நடவடிக்கை எதுவும் அத்தகைய தீர்மானத்தின் காரணமாக செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.]

[113][112. நீக்கப்பட்டது.

113. நீக்கப்பட்டது.

113அ நீக்கப்பட்டது.

114. நீக்கப்பட்டது.

115. நீக்கப்பட்டது.

[114][ 116 111 இ என்னும் உறுப்புரையாக மீள இலக்கமிடப்பட்டது.]

[115][117. நீக்கப்பட்டது.]

---

113 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் பதினேழாம் வாசகத்தால் 112, 113, 113அ 114, 115 ஆம் உறுப்புரைகள் நீக்கப்பட்டன.

114 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 15 ஆம் வாசகத்தால் உறுப்புரை 111இ மீள இலக்கமிடப்பட்டது.

115 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 15 ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது.

அத்தியாயம் XVI

## மேனிலை நீதிமன்றங்கள்

### உயர் நீதிமன்றம்

**118.** இலங்கைக் குடியரசின் உயர்நீதிமன்றமானது குடியரசிலுள்ள மிகமேலானதும் முடிவானதுமான மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாக விருத்தல் வேண்டும் என்பதுடன், அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக் கமைய, பின்வரும் விடயங்களில் நியாயாதிக்கம் பிரயோகித்தலும் வேண்டும்; அதாவது - *உயர் நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கம்*

(அ) அரசியலமைப்புக் கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம்;

(ஆ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான நியாயாதிக்கம்;

(இ) மேன்முறையீட்டுக்கான இறுதி நியாயாதிக்கம்;

(ஈ) ஆலோசனை நியாயாதிக்கம்;

(உ) தேர்தல் ஆட்சேபனை மனு வழக்குகளிலான நியாயாதிக்கம்;

(ஊ) பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம்; அத்துடன்

(எ) சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் உரித்தாக்கும் அல்லது ஆணையிட்டளிக்கும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம்.

**119.** (1) உயர்நீதிமன்றம் பிரதம நீதியரசரையும் ஆறு பேருக்குக் குறையாத ஆனால் [116][பதினாறு] பேருக்கு அதிகமாகாத ஏனைய நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்கள் 107 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நியமிக்கப்படுதல் வேண்டும். *உயர் நீதிமன்றத்தின் அமைப்பு*

(2) உயர் நீதிமன்றமானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பினும் செயற்படுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது நீதிபதியொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், உயர்நீதிமன்றத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

**120.** ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புக்கு ஒவ்வாததாக உள்ளதா எனும் கேள்வி எதனையும் தீர்மானிப்பதற்குத் தனியானதும், பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்துக்கு இருத்தல் வேண்டும்; *உயர் நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம்*

ஆயின் -

(அ) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டினைத் திருத்துவதற் கானதென, அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்பட்ட ஒரு சட்டமூலத்தின் விடயத்தில், 83 ஆம் உறுப்புரையினது ஏற்பாடுகளின் பண்பினால் அத்தகைய சட்டமூலத்துக்கு மக்கள்

116 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 25 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

*தீர்ப்புக்கான வாக்கெடுப்புமூலமான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்ற கேள்வியை மாத்திரம் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம் ;*

(ஆ) *அரசியலமைப்பின் எவையேனும் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கானதென, அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்பட்ட ஒரு சட்டமூலம், 83 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து, உயர்நீதிமன்றம், அத்தகைய சட்டமூலம் தொடர்பில் எவ்வித நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தலும் ஆகாது, பிரயோகித்தலும் ஆகாது ;*

(இ) *அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டினைத் திருத்துவதற்கானதென, அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்படாத ஒரு சட்டமூலம், 84 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து, 83 ஆம் உறுப்புரையினது ஏற்பாடுகளின் பண்பினால் அத்தகைய சட்டமூலத்துக்கு, மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பு மூலமான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்ற அல்லது அச்சட்டமூலம் 82 ஆம் உறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளுக்கிணங்கவிருக்கவேண்டும் என்று தேவைப்படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வியை மாத்திரம் உயர்நீதிமன்றம் தீர்மானிக்கலாம் ; அல்லது*

(ஈ) *அரசியலமைப்பின் ஏற்பாடெதனையும் திருத்துவதற்கானதென அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்கும் ஆனதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்படாத சட்டமூலத்தின் ஏற்பாடெதுவும், 84 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து, அத்தகைய சட்டமூலத்தின் வேறு ஏற்பாடுகள் எவையும், 84 ஆம் உறுப்புரையினால் தேவைப் படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமா என்பதை அல்லது 83 ஆம் உறுப்புரையின் பண்பினால் அத்தகைய சட்டமூலத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு மக்கள் தீர்ப்பின் போதான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்பதை அல்லது அத்தகைய சட்டமூலம், 82 ஆம் உறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகவேண்டுமென்ற அவசியம் உண்டா என்பதைப் பற்றிய கேள்வியை மாத்திரமே உயர்நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.*

**121.** (1) மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய கேள்வி எதனையும் சாதாரணமாகத் தீர்மானிப்பதற்கு உயர்நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக் கத்தைப் பிரயோகிக்குமாறு சனாதிபதி, பிரதம நீதியரசரக்கு முகவரி யிட்டனுப்பப்பட்ட எழுத்திலான ஆற்றுப்படுத்துகை மூலம் வேண்டலாம் அல்லது எவரேனும் பிரசை உயர்நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான மனுவொன்றின் மூலம் வேண்டலாம். சட்டமூலமானது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் சேர்க்கப்பட்ட [117] பதின்நான்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்படுதல் வேண்டும் அல்லது அத்தகைய மனு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ; அதே நேரத்தில் அதன் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படுதலும் வேண்டும். இப்பந்தியில் பிரசை என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத ஒரு குழுவையும் (அதன் உறுப்பினர்களில் நாலில் மூன்று பங்குக்குக் குறையாத எண்ணிக்கையினர் பிரசைகளாகவிருப்பின்) உள்ளடக்கும்.

**சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கத்தினைச் சாதாரணமாகப் பிரயோகித்தல்**

(2) உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அவ்வாறு வேண்டப்பட்டுள்ள விடத்து, உயர்நீதிமன்றத்தினால் அச்சட்டமூலம் தீர்மானிக்கப்படும் வரையில், அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் தேதியிலிருந்து அல்லது மனுவின் தேதியிலிருந்து, மூன்று வாரகாலம் முடிவடையும் வரையில், இவற்றுள் எது முதல் நிகழ்கிறதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது.

(3) விடயத்துக்கு ஏற்றாற்போல, ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்டு அல்லது மனு சமர்ப்பிக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள்ளாக உயர் நீதிமன்றம் அதுபற்றித் தீர்மானித்து, அதன் தீர்மானத்தைச் சனாதிபதிக்கும் அறிவித்தல் வேண்டும்.

[118][**122.** (1) அமைச்சரவையின் கருத்துப்படி தேசிய பாதுகாப்புக்கு அல்லது பேரழிவு முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் கருமத்தின் நோக்கத்துக்காக அவசரமாகவுள்ளதும் அமைச்சரவைச் செயலாளரின் கைப்பட அப்பொருள்பட புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான சட்டமூலமொன்றின் விடயத்தில் -

**அவசரச் சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார் நியாயாதிக்கத்தின் விசேட பிரயோகம்**

(அ) 78 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியினதும் 121 ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, எந்த ஏற்புடைமையையும் கொண்டிருத்தலாகாது;

(ஆ) சனாதிபதி, பிரதம நீதியரசருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலானவொரு குறிப் பீட்டின் மூலம், சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாகவுள்ளதா வென்பது பற்றி உயர் நீதிமன்றத்தின் விசேட தீர்மானத்தைத் தேவைப் படுத்துதல் வேண்டும். அத்தகைய குறிப்பீட்டின் பிரதியொன்று அதே நேரத்தில் சபாநாயகருக்கு வழங்கப்படுதல் வேண்டும்;

117 அரசியலமைப்பின் இருபத்தோராவது திருத்தத்தின் 17 ஆம் வாசகத்தால் மாற்றம் செய்யப்பட்டது.

118 அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தின் 26 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

(இ) உயர் நீதிமன்றமானது, நீதிமன்றம் கூடுவதிலிருந்து இருபத்தி நான்கு மணித்தியாலங்களினுள் (அல்லது சனாதிபதி குறித்துரைக்கக் கூடியவாறு மூன்று நாட்களை விஞ்சாத அத்தகைய நீட்டிய காலப்பகுதியினுள்) அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டு மென்பதுடன் அதன் தீர்மானத்தைச் சனாதிபதிக்கும் சபாநாயகருக் கும் மட்டுமே அறிவித்தலும் வேண்டும்.

(2) உறுப்புரை 121 இன் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டமூலத்துக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டின் திருத்தம், நீக்கி விடுதல் மற்றும் மாற்றீடு செய்தல், திருத்தியமைத்தல் அல்லது சேர்த்தலுக்கான அல்லது அரசியலமைப்பை நீக்கிவிடுதல் மற்றும் மாற்றீடு செய்தலுக்கான ஏதேனும் சட்டமூலத்திற்கு ஏற்புடையதாதலாகாது.]

**சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம்**

**123.** (1) உயர்நீதிமன்றத்தின் தீர்மானம், அதற்கான, காரணங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு எதுவும் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாகவுள்ளதா என்பது பற்றியும், ஒவ்வாதிருப்பின் அரசியலமைப்பின் எந்த ஏற்பாடு அல்லது ஏற்பாடுகள் அவ்வாறு ஒவ்வாததாக அல்லது ஒவ்வாதனவாக உள்ளது என்பது பற்றியும் அத்தீர்மானம் கூறுதல் வேண்டும்.

(2) சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு எதுவும் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து–

(அ) 82 ஆம் உறுப்புரையின் (1) ஆம் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அத்தகைய சட்டமூலம் இணங்கியிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்டமூலம், அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு 84 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே நிறைவேற்றப்படலாமா என்பதையும்; அல்லது

(இ) அத்தகைய சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு 84 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு, 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பண்பினால் மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பொன்றில் மக்களினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமா என்பதையும்,

கூறுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சட்டமூலத்தை அல்லது அத்தகைய ஏற்பாட்டை அவ்வாறு ஒவ்வாததாக இராமற் செய்யக்கூடிய திருத்தங்களின் இயல்பையும் குறிப்பிடலாம்.

[119][(3) உறுப்புரை 122 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகப் புறக்குறிப்பிடப்பட்ட சட்டமூலமொன்றின் விடயத்தில், சட்டமூலமானது அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாக உள்ளதென்று ஐயத்தை உயர் நீதிமன்றம் ஏற்று கவனித்தால், சட்டமூலம் அல்லது சட்டமூலத்தின் அத்தகைய ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றம் இவ்வுறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.]

(4) ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடு அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக் கின்றவிடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது ;

ஆயினும், அத்தகைய சட்டமூலத்தை அரசியலமைப்பிற்கு ஒத்ததாக இருக்கச்செய்யும் அத்தகைய திருத்தத்தைச் செய்த பின்னர் அத்தகைய சட்டமூலத்தை நிறைவேற்றுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**சட்டமூலங்களினதும் சட்டவாக்க நடவடிக்கைகளினதும் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்குட் படுத்தப்படலாகாது**

**124.** எத்தகையதுமான வேறு ஏதேனும் ஏதுவின்மீது ஏதேனும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு ஒவ்வாததாக இருக்கின்றதா என்பது பற்றி அல்லது சட்டமியற்று நடவடிக்கைக்கு அது முறையாக இணங்கியொழுகியுள்ளதா என்பது பற்றி விசாரிப்பதற்கோ, அவைமீது தீர்ப்பளிப்பதற்கோ நீதி நிருவாகத்திற்கென உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டுள்ள நீதிமன்றம் எதற்கும் அல்லது நியாயசபை எதற்கும், அல்லது வேறு நிறுவனம் எதற்கும், ஆள் எவருக்கும் அல்லது ஆட்களின் குழு எதற்கும், [120][120 ஆம், 121 ஆம் மற்றும் 122 ஆம்] உறுப்புரைகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாறு தவிர, எவ்வித தத்துவமோ, அல்லது நியாயாதிக்கமோ கிடையாது.

**அரசியலமைப்பின் பொருள்கோடலில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம்**

**125.** (1) உயர்நீதிமன்றமானது, அரசியலமைப்பைப் பொருள்கொள்ளுதல் பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் அதுபற்றித் தீர்மானிப்பதற்கும் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க, வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில், அல்லது நீதி நிருவகிப்பதற்கு அல்லது நீதிமுறையான அல்லது நீதிமருவிய பணிகளைப் பிரயோகிப்பதற்கு சட்டத்தால் தத்துவமளிக்கப்பட்ட வேறு நிறுவனத்தில் நிகழும் ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது அத்தகைய ஏதேனும் பிரச்சினை எழும்போதெல்லாம்

---

119 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 27 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

120 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 28 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

அத்தகைய பிரச்சினை தீர்மானிப்புக்கென உயர்நீதிமன்றத்துக்கு உடனடியாக ஆற்றுப்படுத்தப்படுதலும் வேண்டும். உயர்நீதிமன்றம், அத்தகைய பிரச்சினை தீர்மானிக்கப்படும்வரையில் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி பணிக்கலாம்.

(2) உயர்நீதிமன்றம், அத்தகைய பிரச்சினை ஆற்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அப்பிரச்சினையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், வழக்கின், சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடிய வாறான விளைவாந்தன்மையினதான அத்தகைய ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

**அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கமும் அதனைப் பிரயோகித்தலும்**

**126.** (1) மூன்றாம் அல்லது நான்காம் அத்தியாயத்தால் வெளிப் படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் அடிப்படை உரிமை யானது அல்லது மொழி உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் ;

(2) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் தொடர்பிலான ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளதென அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்த்துமிடத்து, அத்தகைய மீறல் தொடர்பில் நிவாரணம் அல்லது பரிகாரம் வழங்குமாறு கோரி, அந்த நிகழ்ச்சித் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் அத்தகைய நீதிமன்ற விதிகளுக்கிணங்க உயர்நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான மனுவொன்றின் மூலம், அவர் தாமாகவோ, அல்லது அவரது சார்பில் சட்டத்தரணியொருவர் மூலமாகவோ அத்தகைய நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து விசாரிக்கப்படுவதற்கான உயர் நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் கேட்டுப் பெற்ற பின்னரே அவ்விண்ணப்பம் மேற்கொண்டுசெல்லப்படலாம்; அத்தகைய அனுமதி இரண்டு பேர்களுக்குக் குறையாத நீதிபதியினால் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

(3) ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, மேற்செல் என்னும் எழுத்தாணை, அல்லது யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளுக்கான விண்ணப்பமொன்றை மேன்முறையீட்டு நீதிமன்ற மொன்றில் விசாரணைசெய்கின்றபோது, அத்தகைய விண்ணப்பத்திற்கான கட்சிக்காரர் ஒருவரால் III ஆம் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்றோற்றவளவிலான சான்று உள்ளது என்று அத்தகைய நீதிமன்றத் துக்குத் தோன்றுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்ன்றம், உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்கான அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப் படுத்துதல் வேண்டும்.

(4) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்புரையின் (2) ஆம், (3) ஆம் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் மனு அல்லது ஆற்றுப்படுத்துகை தொடர்பில், அச்சந்தர்ப்பத்தில் நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதக்கூடியவாறான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புகளை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படாவிட்டால் அந்தக் கருமத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(5) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்புரையின்கீழான ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை, அத்தகைய மனு கோப்பிடப்பட்ட அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்ளாக அதனை விசாரணைசெய்து முற்றாக முடிவு செய்தலும் வேண்டும்.

**மேன்முறையீட்டு நியாயாதிக்கம்**

**127.** (1) உயர்நீதிமன்றமானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால், நியாய சபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்ட எல்லா நிகழ்வுப் பிழைகளையும் அல்லது சட்டப் பிழைகளையும் திருத்துதல் தொடர்பில், இலங்கைக் குடியரசுக்காகவும் குடியரசுக்குள்ளும் குடியியல், குற்றவியல், மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட இறுதியான நீதிமன்றமாக, அரசியலமைப்புக்கமைய இருத்தல் வேண்டுமென்பதோடு, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் அத்தகைய எல்லாக் கருமங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முற்றும் முடிவுமானவையாக இருத்தலும் வேண்டும்.

(2) ஏதேனும் மேன்முறையீட்டை உயர்நீதிமன்றத்துக்குச் சட்டப்படி செய்யக்கூடியதாயிருக்குமிடத்து, உயர்நீதிமன்றமானது, அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக, தீர்ப்புக்கெதிராக, தீர்வைக் கெதிராக அல்லது தண்டனைத்தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடென்ற வகையில் கவனத்துக்குட்படுத்தத் தனியானதும் பிரத்தியேகமானதுமான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய ஏதேனும் கட்டளையை, தீர்ப்பினை, தீர்வையை, அல்லது தண்டனைத்தீரப்பினை உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம், அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்துக்கு எவையேனும் பணிப்புகளை விடுக்கலாம் அல்லது, ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது வழக்கினை நியாயத்தன்மை தேவைப்படுத்துவதற் கேற்ப புதிய விசாரணையொன்றை நடாத்துமாறு அல்லது மேலும் விசாரணை நடாத்துமாறு பணிக்கலாம் ; அத்துடன், அது, நீதியின் நலன்கள் எவ்வாறு தேவைப்படுத்துமெனில், புதிய அல்லது மேலதிகச் சான்றுகளைக் கோரி அனுமதிக்கலாம் என்பதோடு, அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய சான்றுகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலோ அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினாலோ பதியப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

**மேன்முறையீட்டு உரிமை**

**128.** (1) மேன்முறையீட்டு நீதிமன்றம் தன்னிச்சையாக அல்லது ஏதேனும் கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இன்னலுற்ற கட்சிக்காரராக உள்ளவரின் வேண்டுதலின் பேரில் உயர்நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு

செய்வதற்கு அனுமதி வழங்குமெனின், கணிசமானதொரு சட்டப் பிரச்சினையை உள்ளடக்கும் அத்தகைய ஏதேனும் கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில், குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ்சரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏதேனும் இறுதிக்கட்டளைக்கெதிராக, தீர்ப்பிற்கெதிராக, தீர்வைக்கெதிராக அல்லது தண்டனைத்தீர்ப்புக்கெதிராக சொல்லப்பட்ட கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடுசெய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுக்குமிடத்து, அல்லது உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அவ்வழக்கு அல்லது அக்கருமம் உயர் நீதிமன்றத்தால் மீளாய்வு செய்யப்படுவதற்குப் பொருத்தமான ஒன்றாக இருக்குமிடத்து, ஏதேனும் கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில், குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ்சரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் இறுதியான அல்லது வழக்கிடையான கட்டளைக்கெதிராக, தீர்ப்புக்கெதிராக, தீர்வைக்கெதிராக அல்லது தண்டனைத் தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான சிறப்பான அனுமதியை உயர்நீதிமன்றமானது, அதன் தற்றுணிபில் வழங்கலாம்;

ஆயின், உயர்நீதிமன்றம், முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சினையானது பொதுசன முக்கியத்துவம் வாய்ந்ததென அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்ததென அது திருப்தியடைகின்ற அத்தகைய ஒவ்வொரு கருமத்திலும், அல்லது வழக்கு நடவடிக்கையிலும் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை வழங்குதல் வேண்டும்.

(3) 139 ஆம், 140 ஆம், 141 ஆம், 142 ஆம் அல்லது 143 ஆம் உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றம் அதனது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அதன் கட்டளையொன்றிலிருந்து அல்லது தீர்ப்பிலிருந்து எழுகின்றதும், சனாதிபதியை, அமைச்சரொருவரை, பிரதியமைச்சர் ஒருவரை, அல்லது அலுவலர் என்ற தன்மையில் பகிரங்க அலுவலர் ஒருவரைக் கட்சிக்காரராகக் கொண்டதும் ஆன ஒரு மேன்முறையீடு, அது கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் கருமம் மீதான மேன்முறையீடொன்று உயர்நீதிமன்றத்துக்கு நேரிடையாகவும், அத்துடன் அதற்கெனப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட வேறு ஏதேனும் சட்டத்தினால் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்திலும் செய்யப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

[121][(5) இவ்வுறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான அல்லது மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதிக்கான ஏதேனும் விண்ணப்பம் உயர் நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளுக்குக் குறையாதோரினால் விடயத்திற்கேற்ப வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.]

121 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 29 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

**129.** (1) உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைப் பெறுவதை உசிதமான தாக்குகின்ற அத்தகைய தன்மையும் அத்தகைய பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்ததான சட்டப்பிரச்சினை அல்லது நிகழ்வுப் பிரச்சினை எழுந்துள்ளதென அல்லது எழக்கூடுமெனக் குடியரசின் சனாதிபதிக்கு எந்த நேரத்திலேனும் தோன்றினால், அவர் அப்பிரச்சினையை அந்த நீதிமன்றத்தின் பரிசீலனைக்கென ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், அந்த நீதிமன்றமானது, அது பொருத்தமானதென எண்ணும் அத்தகைய விசாரணைக்குப் பின்னர், அப்பிரச்சினை மீதான அதனது அபிப்பிராயத்தை அத்தகைய ஆற்றுப் படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள், அல்லது சனாதிபதியினால் நீடிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துக்குள், சனாதிபதிக்கு அறிக்கை செய்யலாம். **ஆலோசனை நியாயாதிக்கம்**

(2) முப்பத்தெட்டாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தீர்மானத்தில் அடங்கியுள்ள எல்லாச் சார்த்தல்கள் பற்றியும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்று பற்றி விசாரணை செய்து அறிக்கை செய்வதற்கென உயர்நீதிமன்றத்துக்குச் சபாநாயகர் ஆற்றுப்படுத்துகின்றவிடத்து, உயர்நீதிமன்றமானது 38 (2) (ஈ) என்னும் உறுப்புரைக்கிணங்க அத்தகைய சார்த்தல்கள் குறித்து விசாரித்தல் வேண்டும் என்பதுடன், ஆற்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அதனது தீர்மானத்தைச் சபாநாயகருக்கு அறிக்கை செய்தலும் வேண்டும்.

(3) அத்தகைய அபிப்பிராயம், தீர்மானம், அறிக்கை என்பன ஐந்து பேர்களுக்குக் குறையாத உயர்நீதிமன்ற நீதிபதிகளால் (பிரதம நீதியரசர் வேறுவிதமாகப் பணித்தாலொழிய இவர்களில் ஒருவர் பிரதம நீதியரசராக இருத்தல் வேண்டும்) பரிசீலிக்கப்பட்ட பின்னர் கூறப்படுதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழான நடவடிக்கை ஒவ்வொன்றும், விசேட காரணங்களுக்காக நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, அந்தரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டும்.

[**130.** உயர்நீதிமன்றமானது, பின்வருவனவற்றை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும், சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்குவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். **[122] [தேர்தல் ஆட்சேபனை மனுக்களும் மக்கள் தீர்ப்பு மனுக்களும் தொடர்பிலான] நியாயாதிக்கம்**

(அ) [123][சனாதிபதியின் தேர்தல் பற்றிய அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் செல்லுபடியாந்தன்மை பற்றிய] ஏதேனும் சட்ட நடவடிக்கை;

(ஆ) தேர்தல் ஆட்சேபனை மனு வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு அல்லது தீர்ப்புக்கு எதிரான ஏதேனும் மேன்முறையீடு ;

ஆயின், [124][சனாதிபதியின் தேர்தல் பற்றிய அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் செல்லுபடியாந்தன்மைபற்றிய] நடவடிக்கைகளை விசாரித்தலும் தீர்மானித்தலும், ஆகக்குறைந்தது ஐந்து உயர்நீதிமன்ற நீதிபதிகளால் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, பிரதம நீதியரசர் வேறுவகையாகப் பணித்தாலன்றி, அவ் ஐவருள் பிரதம நீதியரசரும் ஒருவராக இருத்தலும் வேண்டும்.

---

122 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 9 (3) ஆம் வாசகத்தினால் ஓரக்குறிப்பு மாற்றீடு செய்யப்பட்டது.

123 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 9 (1) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

124 அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தத்தின் 9 (2) ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

*பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம்*

**131.** பாராளுமன்றத்தின் தத்துவங்களையும் சிறப்புரிமைகளையும் மீறியமையைக் கவனத்துக்குட்படுத்தவும் மீறியமைக்காக எவரேனும் ஆளைத் தண்டிக்கவும், உயர்நீதிமன்றம் சட்டத்துக்கிணங்கியதான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

*உயர் நீதிமன்ற அமர்வுகள்*

**132.** (1) உயர்நீதிமன்றத்தின் பல்வேறு நியாயாதிக்கங்கள் பிரதம நீதியரசர் வேறுவிதமாகப் பணித்தாலொழிய, சாதாரணமாக கொழும்பிலேயே பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு நீதிபதிகளும் வெவ்வேறாக அமர்வதன் மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம் :

ஆயின், அதன் நியாயாதிக்கம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளுக்குக் குறையாதோர் உயர் நீதிமன்றமாக ஒருங்கமர்தல் மூலம் சாதாரணமாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரதம நீதியரசர் ,-

(i) அவரது சொந்தப் பிரேரணையில் ; அல்லது

(ii) ஏதேனும் கருமத்தை விசாரணைசெய்கின்ற இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நீதிபதிகளின் வேண்டுதலின்பேரில்; அல்லது

(iii) சம்பந்தப்பட்ட பிரச்சினை பிரதம நீதியரசரின் அபிப்பிராயத்தில் பொது முக்கியத்துவமும் பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்குமெனின், ஏதேனும் மேன்முறையீட்டுக்கு, நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்குக் கட்சிக்காரராயுள்ள ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில்,

அத்தகைய மேன்முறையீடு, வழக்கு நடவடிக்கை, அல்லது கருமம் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளை அல்லது ஐந்துக்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட தவிசினால் விசாரணை செய்யப்படல் வேண்டும்.

(4) தீர்ப்பு ஏகமனதான முடிவாக இல்லாதபோது, பெரும்பான்மையினரின் முடிபே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாதல் வேண்டும்.

*நிமித்த நீதிபதிகளின் நியமனம்*

**133.** (1) நீதிமன்றத்தின் எவையேனும் அமர்வுகளை நடத்துவதற்கு அல்லது தொடர்ந்து நடத்துவதற்கு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் கூட்டநடப்பெண் எந்த நேரத்திலாவது கிடைக்காது போனால், பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரை அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதியை, தேவைப்படக்கூடிய அத்தகைய காலத்துக்கு நிமித்த நீதிபதி யொருவராக உயர்நீதிமன்ற அமர்வுகளில் வந்திருக்குமாறு சனாதிபதியின் முற்சம்மதத்தோடு எழுத்தில் வேண்டுதல் செய்யலாம்.

(2) அவ்வாறு வேண்டுதல் செய்யப்பட்ட அத்தகைய நீதிபதியொருவர், அவரது பதவியின் வேறு கடமைகளைவிட இதற்கு முதன்மையளித்து, சமுகம் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட அந்த நேரத்திலும் அக்காலத்துக்கும் உயர்நீதிமன்றத்தின் அமர்வுகளுக்கு வந்திருத்தல் அவரது கடமையாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வந்திருக்கின்ற சமயத்தில், உயர்நீதிமன்ற நீதிபதியொருவருக்குரிய எல்லா நியாயாதிக்கங்களையும் தத்துவங்களையும் சிறப்புரிமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், உயர்நீதிமன்ற நீதிபதியொருவருக்குரிய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

**உயர்நீதிமன்றத்தில் உரைப்பதற்கான உரிமை**

**134.** (1) உயர்நீதிமன்றம், 120 ஆம், [125][121 ஆம், 122 ஆம், 125 ஆம்], 126 ஆம், 129 (1) ஆம், 131 ஆம் உறுப்புரைகளின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், உயர்நீதிமன்றத்தின் எல்லா வழக்கு நடவடிக்கைகள் பற்றியும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் உரைப்பதை உயர்நீதிமன்றம் செவிமடுத்தலும் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், உயர்நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்குக் கட்சிக்காரராக உள்ளவர், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் நேரில், தாமாகவோ அல்லது எவரேனும் சட்டத்தரணி மூலமோ உரைப்பதை உயர்நீதிமன்றம் செவிமடுத்தல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின்கீழ் உயர்நீதிமன்றம் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அவசியமென நீதிமன்றத்துக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய உரைப்பதற்கான உரிமையை வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது அவரது சட்டப் பிரதிநிதிக்கு உயர்நீதிமன்றம் அதன் தற்றுணிபில் வழங்கலாம்.

**உயர்நீதிமன்றப் பதிவகமும் பதிவாளர் பதவியும்**

**135.** உயர்நீதிமன்றத்தின் பதிவகமானது, உயர்நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயர் சூட்டப்படும் அலுவலரொருவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டுமென்பதோடு அவர், பிரதம நீதியரசரின், கண்காணிப்பு, பணிப்பு, கட்டுப்பாடு என்பவற்றுக்கமைந்தவராதலும் வேண்டும்.

**உயர்நீதிமன்ற விதிகள்**

**136.** (1) அரசியலமைப்பினதும் ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பிரதம நீதியரசரும் அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளும், பின்வருவன உட்பட, நீதிமன்றங்களின் வழக்காறையும் நடவடிக்கைமுறையையும் பொதுவாக ஒழுங்குபடுத்தும் விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்கலாம் :–

(அ) எந்நியதிகளின்கீழ் உயர்நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குமான மேன்முறையீடுகள் ஏற்றுக்கவனிக்கப் படுதல் வேண்டுமோ அந்நியதிகளும், அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகாமைக்காக அத்தகைய மேன்முறையீடுகளைத் தள்ளுபடிசெய்வதற்கான ஏற்பாடு உட்பட, மேன்முறையீடுகளை விசாரித்தற்கான நடவடிக்கைமுறை பற்றியவையும், மேன்முறையீடுகள் தொடர்பிலான வேறு விடயங்கள் பற்றியவையுமான விதிகள் ;

125 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 30 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(ஆ) உயர்நீதிமன்றத்தின் முன்னரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரும் அத்தகைய விடயங்கள் எக்காலத்திற்குள் தொடுக்கப் படலாம் அல்லது கொணரப்படலாம் என்பதுவும், அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகாமைக்காக அத்தகைய விடயங் களைத் தள்ளுபடி செய்தலும் உட்பட, அரசியலமைப்பினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அத்தகைய நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு நியாயாதிக்கங்களைப் பிரயோகித்தலில் அந்நீதிமன்றங்களிலான நடவடிக்கைமுறை பற்றிய விதிகள் ;

(இ) பிணையில் விடுதல் பற்றிய விதிகள் ;

(ஈ) நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் பற்றிய விதிகள் ;

(உ) அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் மனு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ கொணரப்பட்டதும், விழலானதாகவும், அலைக்கழிக்குந்தன்மையதாகவும், அல்லது தாமதப்படுத்தும் நோக்கத்துக்காகக் கொணரப்பட்டதாகவும் நீதிமன்றத்துக்குத் தோன்றுவதுமான ஏதேனும் மேன்முறையீட்டை அல்லது வேறேதேனும் விடயத்தைச் சுருக்கமுறையாகத் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுசெய்யும் விதிகள் ;

(ஊ) உயர்நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நடவடிக்கைகளில் அல்லது வேறு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காகப் பதிவேட்டுப் பிரதிகளைத் தயாரித்தல் பற்றிய விதிகள் ;

(எ) சட்டத்தரணிமாரைச் சேர்த்துக்கொள்ளுதல், அனுமதித்தல், இடைநிறுத்திவைத்தல், அகற்றுதல், [126] [ ] பற்றியவையுமான விதிகளும், அத்தகைய சட்டத்தரணிமாரின் நடத்தை, ஒழுங்கா சாரம் பற்றியவையுமான விதிகளும் ;

(ஏ) அரசியலமைப்பினாலோ, அல்லது பாராளுமன்றத்தினாலோ அல்லது இப்போதுள்ள சட்டத்தினாலோ தாபிக்கப்பட்ட வையான இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் சமுகமளிக்கும் நீதிபதிகளினதும், சட்டத்தரணிமாரினதும், நீதிமன்ற அலுவலர்களினதும், ஆட்களினதும் உடை பற்றிய விதிகள் ;

(ஐ) யூரர்மார் குழாங்களைத் தயாரிக்கும் மாதிரியும் யூரர்மாரைக் கட்டளைவிட்டழைக்கும் முறையும் குழாத்திற் சேர்க்கும் முறையும் அவர்களை ஆட்சேபிக்கும் முறையும் பற்றிய விதிகள் ;

---

126 அரசியலமைப்புக்கான எட்டாவது திருத்தத்தின் 3 ஆம் வாசகத்தால் நீக்கப்பட்டது.

(ஒ) அத்தகைய நீதிமன்றங்களின் பிசுக்கால்மாரினதும் வேறு நிருவாகமுறை அலுவலர்களினதும் நடவடிக்கைகளும், அத்தகைய நீதிமன்றங்களின் மன்றாணைகளும், அவற்றை நிறைவேற்றும் முறையும் பற்றிய விதிகள் ;

(ஓ) உயர்நீதிமன்ற முடிபுகளின் பிணிக்கும் பயன் பற்றிய விதிகள் ;

(ஔ) ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் சிறப்பாக ஏற்பாடு செய்யப்படாதவையும், உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், முதனிலை நீதிமன்றம் என்பனவற்றில் அளிக்கப்படக்கூடிய செலவு தொகைகளின் தன்மையும் அளவும், அத்தகைய செலவு தொகைகள் அறவிடப்படக்கூடிய முறையும் ஆவணங்களில் முத்திரையிடுதலும் உட்பட அவற்றின் வழக்காறும் நடவடிக்கைமுறையும் தொடர்பிலான எல்லா விடயங்களும் பற்றிய விதிகள்.

(2) இவ்வுறுப்புரையின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியன்று அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும், அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் விதி, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பிரதம நீதியரசரும், அவராற் பெயர் குறித்து நியமிக்கப்படும் உயர்நீதிமன்றத்தின் வேறு எவரேனும் மூன்று நீதிபதிகளும், அத்தகைய நீதிமன்ற விதிகள் எவற்றையும் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அழிக்கலாம் என்பதுடன், அத்தகைய திருத்தம், மாற்றம் அல்லது அழிப்பு, நீதிமன்ற விதிகளை ஆக்குதல் தொடர்பில் முற்போந்த பந்தியில் காட்டப்பட்ட அதேமாதிரியாகச் செயலுறும்.

## மேன்முறையீட்டு நீதிமன்றம்

**137.** மேன்முறையீட்டு நீதிமன்றம், 107 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நியமிக்கப்படவேண்டிய மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரையும் ஆறு பேருக்குக் குறையாத ஆனால் [127][பத்தொன்பது] பேர்களுக்கு அதிகமாகாத வேறு நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். **மேன்முறையீட்டு நீதிமன்றம்**

127 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 31 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**மேன் முறையீட்டு நீதிமன் றத் தின் நியாயாதிக்கம்**

***138.*** *(1)* மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, [128][மேல் நீதிமன்றம் அதன் மேன்முறையீட்டு அல்லது தொடக்க நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், மேல் நீதிமன்றத்தால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால்], நியாயசபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்டதான நிகழ்வுப் பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் அதனைப் பிரயோகித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய [129][மேல் நீதிமன்றம், முதனிலை நீதிமன்றம்], நியாயசபை அல்லது வேறு நிறுவனம் கவனத்துட் படுத்தியிருக்கக்கூடியவையான வழக்குகள், தொடர்ச்சிகள், வழக்கு நடவடிக் கைகள், குற்றவழக்குகள், கருமங்கள், காரியங்கள் ஆகிய எல்லாவற்றையும் மேன்முறையீடு என்ற வகையிலும் மீளாய்வு என்றவகையிலும் தொன்னிலை மீட்பு என்ற வகையிலும் கவனத்துட்படுத்துவதற்குத் தனியானதும் பிரத்தியேகமானதுமான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதனைப் பிரயோகித்தலும் வேண்டும் ;

ஆயின், ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை எதுவும், ஏதேனும் பிழை, குறை அல்லது முறையீடு என்பன கட்சிக்காரர்களின் கணிசமான உரிமைகளைப் பங்கப்படுத்தியிருந்தாலன்றி அல்லது நீதிநெறிப் பிறழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலன்றி, அந்தப் பிழை, குறை அல்லது முறைகேடு காரணமாக நேர்மாறாக்கப்படுதலோ வேறுபடுத்தப்படுதலோ ஆகாது.

*(2)* மேன்முறையீட்டு நீதிமன்றமானது, பாராளுமன்றச் சட்டத்தால் உரித்தாக்கக் கூடியவாறான அல்லது ஆணையிட்டளிக்கக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தையும் முதனிலை நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைப் பிரயோகித்தலும் வேண்டும்.

**மேன் முறையீடு தொடர் பிலான தத் துவங் கள்**

***139.*** *(1)* மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத்தீர்ப்பைச் சட்டத்துக்கிணங்க உறுதிப்படுத்தலாம். நேர்மாறாக் கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம், அல்லது பொருத்தமானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் எண்ணுகின்றவாறான அத்தகைய நியதிகளின் மேல், அத்தகைய முதனிலை நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது வேறு நிறுவனத்திற்குப் பணிப்புகளை வழங்கலாம், அல்லது புதுவதாக விளக்கம் நடாத்தும்படி கட்டளையிடலாம் அல்லது மேற்கொண்டு விளங்குமாறு கட்டளையிடலாம்.

---

128 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 3 (அ) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

129 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 3 (ஆ) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, ஏதேனும் முதனிலை வழக்கில், தொடர்ச்சியில், குற்றவழக்கில் அல்லது நடவடிக்கையில் பிணக்காகவுள்ள விடயங்கள் சம்பந்தப்பட்ட புதிய சான்றினை முதனிலை நீதிமன்றத்தில் ஏலவே பெறப்பட்ட சான்றுக்கு மேலதிகமாக அல்லது குறைநிரப்பியாக, அவ்விடயத்தின் நீதி தேவைப்படுத்துகின்றவாறு மேலும் பெற்று அனுமதிக்கலாம்.

**ஆட்கொணர் எழுத்தாணைகள் தவிர்ந்த எழுத்தாணைகள் வழங்குவதற்குத் தத்துவம்**

**140.** அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் பதிவேடுகளைச் சோதனையிடுவதற்கும் பரிசோதிப்பதற்கும், மேன்முறையீட்டு நீதிமன்றம் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் நீதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது நியாய சபைக்கெதிராக உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்செல் என்னும் எழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளைச் சட்டப்படி அனுமதித்து வழங்கவும் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

[130] [ஆயின் பாராளுமன்றம், சட்டத்தின் மூலம் அத்தகைய சட்டத்தில் குறிப்பிடக்கூடிய அத்தகைய ஏதேனும் வகுதியைச் சேர்ந்த விடயங்களில், இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டுமேயொழிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல என்று ஏற்பாடு செய்யலாம்.]

**ஆட்கொணர் எழுத்தாணைகளை வழங்குவதற்கான தத்துவம்**

**141.** மேன்முறையீட்டு நீதிமன்றமானது–

(அ) சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக எவரேனும் ஆளை; அல்லது

(ஆ) பகிரங்கக் கட்டுக்காவலில் அல்லது தனிப்பட்ட கட்டுக்காவலில் சட்டவிரோதமாக அல்லது முறையீனமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளை,

அந்நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவருமாறும் அவ்வாறு கொண்டு வரப்பட்ட எவரேனும் ஆளை விடும்படியும் அல்லது விளக்க மறியலில் வைக்கும்படியும் அல்லது சட்டப்படி வேறுவகையாக அத்தகைய ஆளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும்படியும், ஆட்கொணர் எழுத்தாணைகளை என்ற வகையிலான கட்டளைகளை வழங்கலாம், அத்துடன் விடுக்கலாம் ;

130 அரசியலமைப்புக்கான முதலாவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

ஆயின், அவ்வாளை மிகவும் வசதியான முதனிலை நீதிமன்றத்துக்குக் கொண்டுவரும்படி பணிப்பதும், சார்த்தப்படும் மறியல் வைப்புப் பற்றி அல்லது தடுத்துவைப்புப் பற்றி உடனடியாக விசாரித்து அறிக்கை செய்யுமாறு அத்தகைய நீதிமன்றத்தின் நீதிபதியைப் பணிப்பதும், கொண்டுவரப்பட்ட ஆளின் தற்காலிகக் கட்டுக்காவலுக்கென அத்தகைய நீதிமன்றம் சரியானதெனவெண்ணும் ஏற்பாட்டைச் செய்வதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் ; அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மேல் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவ்வாறு மறியல் வைக்கப்பட்டிருப்பதாக அல்லது தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகச் சார்த்தப்படும் அவ்வாளை விடும்படி அல்லது விளக்கமறியலில் வைக்கும்படி அல்லது சட்டப்படி அத்தகைய ஆளுக்கு எதிராக வேறுவகையில் நடவடிக்கை எடுக்கும்படி கட்டளையிடுதல் வேண்டும் ; அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அவ்வாறு எடுத்துமொழியப்பட்ட அல்லது செய்யப்பட்ட கட்டளைக்கு முதனிலை நீதிமன்றம் இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதோடு அதனை உடனடியாக நடைமுறைக்கிடுதலும் வேண்டும் ;

ஆயின், மேலும், பராயமடையாத பிள்ளைகளின் கட்டுக்காவல், கட்டுப்பாடு என்பன தொடர்பிலான நியாயாதிக்கத்தைத் தகுதிவாய்ந்த ஏதேனும் நீதிமன்றம் பிரயோகிப்பதற்கெனச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப் பட்டிருப்பின், அப்போது, அத்தகைய பராயமடையாத பிள்ளையின் கட்டுக்காவல் சம்பந்தமான பிணக்கு எதுவும் அத்தகைய நீதிமன்றத்தினால் இன்னும் சீரானமுறையில் கையாளப்படலாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் திருப்திப்படின், அது, அத்தகைய பராயமடையாத பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பில் அந்த நீதிமன்றத்திலேயே விண்ணப்பம் செய்யும்படி கட்சிக்காரர்களைப் பணிக்கலாம்.

**மறியற்காரர்களைக் கொணருவதற்கும் அகற்றுவதற்கு மான தத்துவம்**

**142.** மேன்முறையீட்டு நீதிமன்றம் மறியற்காரர் தொடர்பில் பின்வருமாறு பணிக்கலாம் ; அதாவது –

(i) ஏதேனும் மறியற்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற் காரர் ஒருவரை, இராணுவ நீதிமன்றம் ஒன்றின் முன்னர் அல்லது குடியரசின் சனாதிபதியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஆணையின் அதிகாரத்தின் கீழ்ச் செய்யப்படும் எவையேனும் ஆணையாளரின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் எவை யேனும் விடயங்கள் தொடர்பில் விளக்கப்படுவதற்காக அல்லது விசாரணை செய்யப்படுவதற்காக, முறையே அத்தகைய ஏதேனும் இராணுவ நீதிமன்றத்தின் முன்பாக அல்லது ஆணையாளர் முன்பாக அவரைக் கொண்டுவருமாறு பணிக்கலாம் ; அல்லது

(ii) மறியற்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர் ஒருவரை, விளங்கும் நோக்கத்துக்காக, ஒரு கட்டுக்காவலிலிருந்து வேறு ஒன்றுக்கு அகற்றும்படி பணிக்கலாம்.

**உத்தரவுகள் வழங்குவதற்கான தத்துவம்**

***143.*** உத்தரவுக்காக விண்ணப்பஞ்செய்யும் கட்சிக்காரர், ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு முன்னர் நிகழ்ந்துவிடக் கூடியதும் நிகழ்ந்தபின் நிவர்த்தி செய்யமுடியாததுமான அத்தகைய ஏதேனும் கேட்டினைத் தடுப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவுகளை அனுமதிப்பதற்கும் வழங்குவதற்கும் தத்துவம் உடையதாதல் வேண்டும்;

ஆயின், ஏதேனும் நீதிமன்றத்திலுள்ள ஏதேனும் வழக்குக் கட்சிக்காரரா யுள்ளவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய்வதை அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றைத் தொடர்வதைத் தடுப்பதற்கு, அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்குக் கட்சிக்காரராயுள்ள எவரும், வழக்குக்கான எதிர்வாதத்துக்கான அல்லது மேன்முறையீட்டுக்கான ஏதேனும் காரணத்தை வற்புறுத்துவதைத் தடுப்பதற்கு, அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடர்ச்சி செய்யாதவாறு அல்லது குற்றவழக்குத் தொடுக்காதவாறு அவரைத் தடுப்பதற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு ஒன்றை வழங்குதல் (ஒரே வழக்குக் காரணத்துக்காகவும் அதே காரணம் தொடர்பிலும் தனித்தனியான இரு வழக்குகளை இருவேறு நீதிமன்றங்களில் அவ்வாள் தொடர்ந்திருக்கு மிடத்தன்றி) அதற்குச் சட்டமுறையானதாகாது ; அத்தகைய சந்தர்ப்பத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தக்கதெனத் தோன்றக்கூடியவாறு அவ்வழக்குகளில் ஒன்றை அல்லது மற்றதைத் தொடர்ந்து நடாத்தாதவாறு உத்தரவுமூலம் தடுப்பதற்கு அது தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்**

***144.*** பாராளுமன்ற உறுப்பாண்மைக்கான தேர்தல் சம்பந்தமான தேர்தல் ஆட்சேபனை மனுக்களை, அது தொடர்பில் அப்போதைக்கு ஏற்புடையதாக விருக்கும் ஏதேனும் சட்டத்திற்கிணங்க விளங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதனைப் பிரயோகித்தலும் வேண்டும்.

**பதிவேடுகளைப் பரிசோதனை செய்தல்**

***145.*** மேன்முறையீட்டு நீதிமன்றம் தானாகவே செயற்பட்டு அல்லது ஏதேனும் விண்ணப்பஞ் செய்யப்பட்டதன்மேல், ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் எந்தப் பதிவேட்டினையும் சமர்ப்பிக்குமாறு கேட்கலாம், சோதனையிடலாம் அத்துடன் பரிசோதிக்கலாம். மேலும் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நீதி நிருவாக நலன்கள் தேவைப் படுத்தக்கூடிய வகையில் அது பற்றி ஏதேனும் கட்டளையினை ஆக்கலாம்.

**மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வுகள்**

***146.*** (1) மேன்முறையீட்டு நீதிமன்றம் சாதாரணமாக அதன் நியாயாதிக் கத்தினை கொழும்பிலேயே பிரயோகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பிரதம நீதியரசர் அவ்வாறு செய்தல் உசிதமானதெனக் கருதுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்ற பணிப்பில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீதி நிருவாக வலயத்தில் அல்லது மாவட்டத்தில் அதன் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும் எனவும் அதன் நியாயாதிக் கத்தினைப் பிரயோகித்தல் வேண்டும் எனவும் பணிக்கலாம்.

[131][(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது, நீதிமன்றத்தின் பல்வேறு நீதிபதிகள் தனித்தனியே அமர்வதன்மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம் :

ஆயின் -

(i) (அ) நீதாய விளக்கமொன்றில் எடுத்து மொழியப்பட்டனவான மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் தொடர்பிலான அதன் நியாயாதிக்கம், நீதிமன்றத்தின் ஆகக்குறைந்தது மூன்று நீதிபதிகளினாலாவது பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) மேல் நீதிமன்றத்தின் ஏனைய தீர்ப்புகளும், கட்டளைகளும் தொடர்பிலான அதன் நியாயாதிக்கம், நீதிமன்றத்தின் ஆகக் குறைந்தது இரண்டு நீதிபதிகளினாலாவது பிரயோகிக்கப் படுதல் வேண்டும் ;

(ii) உறுப்புரை **144** இன் கீழான அதன் தத்துவங்கள் தொடர்பிலான அதன் நியாயாதிக்கம், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலை வரினால், அல்லது தலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அந்நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதியினால் அல்லது தலைவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் அவர் களுள் ஒருவராகத் தலைவரும் இருக்கக்கூடியவர்களுமான ஒன்றோ பலவோவாய அத்தகைய நீதிபதிகளினால் பிரயோகிக்கப் படுதல் வேண்டும் ;

(iii) ஏனைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலுமான அதன் நியாயாதிக்கம், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பொதுவான அல்லது சிறப்பான கட்டளைமூலம் வேறுவகையில் பணித்தாலன்றி, நீதிமன்றத்தின் தனியொரு நீதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.]

(3) தவிசாளராக அமையும் இரு நீதிபதிகளிடையே அபிப்பிராயபேதம் எதுவும் ஏற்படின், நீதிமன்ற முடிபானது, அத்தகைய விடயத்தை மீளாய்வு செய்ய மூன்று நீதிபதிகள் அமரும்வரை இடைநிறுத்திவைக்கப்படல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு, நீதிபதிகளின் ஏகமனதான முடிபொன்றாக இல்லாதிருப்பின், அது, வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் முடிவானதாகவிருத்தல் வேண்டும்.

**மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகமும் பதிவாளர் பதவியும்**

**147**. மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகம், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயர் சூட்டப்படும் அலுவலரொருவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும் ; அவர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் கண் காணிப்புக்கும், பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

---

131 அரசியலமைப்புக்கான பதினொராவது திருத்தத்தின் 6 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

அத்தியாயம் XVII

## நிதி

**148.** பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் அல்லது அப்போதுள்ள ஏதேனும் சட்டத்தின் அதிகாரத்தினால் அல்லது அதன் கீழ்த் தவிர, ஏதேனும் உள்ளூரதிகார சபையினால் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க அதிகாரசபையினால் வரி, வீதவரி அல்லது வேறு ஏதேனும் அறவீடு எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

*பாராளுமன்றம் பகிரங்க நிதிமீது கொண்டுள்ள கட்டுப்பாடு*

**149.** (1) குறித்த நோக்கங்களுக்கெனச் சட்டத்தினால் குறித்தொதுக்கப்படாத குடியரசின் நிதிகள் ஒரு திரட்டு நிதியமாக அமைதல் வேண்டும் ; குறித்த நோக்கங்களுக்கெனக் குறித்தொதுக்கப்படாத குடியரசின் எல்லா வரிகள், விதிப்பனவுகள், வீதவரிகள், தீர்வைகள் என்பவற்றின் வரவுகளும் மற்றெல்லா வருமானங்களும் வரவுகளும் இதனுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

*திரட்டு நிதியம்*

(2) பகிரங்க கடன் மீதான வட்டி, கடனாழ்நிதியக் கொடுப்பனவுகள், திரட்டு நிதியத்துக்கான பணங்களைச் சேகரித்தல், அதனை முகாமை செய்தல், அதற்கெனப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றின் இடைநேர்விளைவான செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் என்பனவும் பாராளுமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செலவுகளும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**150.** (1) இவ்வுறுப்புரையின் (3) ஆம், (4) ஆம் பந்திகளில் வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கைப்பட ஆக்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழல்லாது பணத்தொகை எதுவும் திரட்டு நிதியத்திலிருந்து மீளப்பெறப்படுதலாகாது.

*திரட்டு நிதியத்திலிருந்து பணத் தொகைகளை மீளப்பெறுதல்*

(2) எந்த நிதியாண்டினபோது அந்தப் பணம் மீளப் பெறப்படவுள்ளதோ அல்லது வேறுவிதமாகத் திரட்டு நிதியத்தில் சட்டப்படி பொறுப்பிக்கப் படவுள்ளதோ அந்த நிதியாண்டுக்கான குறித்துரைக்கப்பட்ட பகிரங்க சேவைகளுக்காகப் பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அப்பணத்தொகை அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய ஆணைப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

*(3)* அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது சட்டமாக நிறைவேற்றப்படுமுன்னர் சனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைக்கின்ற விடத்து, பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, புதிய பாராளுமன்றம் கூடுவதற்கென நிருணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கொண்ட ஒரு காலப்பகுதி முடிவடையும்வரை, பகிரங்க சேவைகளுக்கு அவசியமானவை எனச் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத் தொகைகளைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

*(4)* சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயிக்கின்றவிடத்து, அதற்கெனப் பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, தேர்தல்கள் ஆணையாளருடன் ஆலோசனையின் பின்னர், அத்தகைய தேர்தலுக்கு அவசியமானவையெனச் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத் தொகைகளைத் திரட்டுநிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

**எதிர்பாராச் செலவு நிதியம்**

**151.** *(1)* நூற்று நாற்பத்தொன்பதாம் உறுப்புரையின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், பாராளுமன்றம், அவசரமானவையும் எதிர்பாராதவையுமான செலவுகளுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்திற்காக, எதிர்பாராச் செலவு நிதியமொன்றைச் சட்டத்தினால் உருவாக்கலாம்.

*(2)* நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்–

(அ) அத்தகைய ஏதேனும் செலவுக்கு அவசியம் உள்ளது என்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய செலவுக்கான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றும்,

திருப்திப்பட்டால், அவர் சனாதிபதியின் சம்மதத்துடன் எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து முற்பணம் வழங்குவதன்மூலம் அதற்காக ஏற்பாடு செய்வதற்கு அதிகாரமளிக்கலாம்.

*(3)* அத்தகைய முற்பணம் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட பின்னர், இயன்ற அளவு விரைவாக, அவ்வாறு முற்பணமாக வழங்கப்பட்ட தொகையைத் திருப்பிக்கொடுக்கும் நோக்கத்துக்காக, குறைநிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**152.** திரட்டு நிதியத்தை அல்லது குடியரசின் வேறு நிதியங்களைக் கையாளுவதற்கு அல்லது அந்த நிதியங்கள் மீது பொறுப்புகளைச் சுமத்துவதற்கு, அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு, அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வரியை நீக்குவதற்கு, கூட்டுவதற்கு, அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டமூலம் அல்லது பிரேரணை எதுவும் அமைச்சரொருவரால் தவிரவும், அத்தகைய சட்டமூலம் அல்லது பிரேரணை ஒன்றில் அமைச்சரவையினாலோ அல்லது அமைச்சரவை அதிகாரமளிக்கக்கூடிய அத்தகைய முறையிலோ அங்கீகரிக்கப்பட்டிருந்தா லொழியவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதலாகாது. *பொது அரசிறையைப் பாதிக்கும் சட்டமூலங்கள் பற்றிய சிறப்பேற்பாடுகள்*

[132] **153.**["(1) தகைமைபெற்ற கணக்காய்வாளராக இருக்க வேண்டியவரும் சனாதிபதியினால் [133] [அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய] நியமிக்கப்பட வேண்டியவருமான கணக்காய்வாளர் தலைமையதிபதியொருவர் நன்னடத்தையின்போது பதவி வகித்தல் வேண்டும்.] *கணக்காய்வாளர் தலைமையதிபதி*

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும் ; அது, அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவி –

(அ) அவர் இறப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(ஆ) அவர் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(இ) அவர் அறுபது வயதை அடைவதன்மேல் வறிதாதல் வேண்டும் ;

(ஈ) சுகவீனம் காரணமாக, அல்லது உடற்பலவீனம் அல்லது மனப்பலவீனம் காரணமாக அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும் ; அல்லது

(உ) அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளு மன்றத்தின் பிரேரணையின் பேரில் அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

[134] [(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக உள்ளபோதெல் லாம், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இடத்திற் செயலாற்று வதற்குச் சனாதிபதி தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரை [135][அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய] நியமிக்கலாம்.]

132 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 32(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

133 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் வாசகம் 18(1) ஆல் மாற்றீடு செய்யப்பட்டது,

134 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 32(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

135 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 18(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[136][கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவின் அமைப்பு

**153அ.** (1) (இவ்வத்தியாயத்தில் ''ஆணைக்குழு'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பிரதி கணக்காய்வாளர் தலைமையதி பதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

(ஆ) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதி மன்றம் அல்லது இலங்கை மேல் நீதிமன்றத் தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

(இ) இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I அலுவலர்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர்-

(அ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலேலொழிய;

(ஆ) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வந்தாலொழிய.

மூன்று ஆண்டுகள் பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது மேலதிக காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(4) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத் துக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும் (1) ஆம் பந்தியின்கீழ் ஆணைக் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் எவரேனும் ஆளை பதவியிலிருந்து அகற்றலாம்.

---

136 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் மூலம் 19 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

(5) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக்காலத்தின் போது குறைக்கப் படுதலுமாகாது.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல் லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

***153ஆ.*** (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழு வின் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1) ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச கணக்காய்வு சேவை தாபிக்கப்படுதல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர் விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**ஆணைக் குழுவின் தத்துவங்களும் பணிகளும்**

***153இ.*** (1) இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்னும் தத்துவங்கள் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கொள்கைக்கு அமைவாக, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் பற்றிய திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் கொள்கைக்கு அமைவாக அவை தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல்; அத்துடன்

(இ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

(3) ஆணைக்குழு (2)ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு விதியும் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் இதற்குமுன் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக் குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் ஏதேனும் முடிபை செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செல்வாக்கு செலுத்த எத்தனித்தல் தவறொன்றாதல்**

**153ஈ.** (1) ஆணைக்குழுவின், அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் ஏதேனும் முடிபில், அவரது கடமையின்போது தவிர, நேரடியாக அல்லது மறைமுகமாக, தானாக அல்லது எவரேனும் வேறு ஆளினூடாக, எத்தன்மைத்தான ஏதேனும் முறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டு களை விஞ்சாதவொரு காலப் பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**153உ.** நூற்று இருபத்தாறாம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்தின்மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்துக்கமையவும் மற்றும் 153எ என்னும் உறுப்புரையின்கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணிகளைப் புரிவதன் பயனாக ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்வதற்கான, வெளிப்படுத்துவதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாயசபையோ கொண்டிருத்தலாகாது.

**சட்ட நடவடிக்கை முறைகளிலிருந்தான விடுபாட்டு உரிமை**

**153ஊ.** ஆணைக்குழுவின் செலவுகளும் செலவினங்களும் திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**செலவுகளும் செலவினங்களும்**

**153எ.** இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் நியமனம், பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பிலான ஏதேனும் கட்டளையினால் அல்லது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஒழுக்காற்று கருமம் அல்லது பதவிநீக்கம் ஒன்றின்மீதான ஏதேனும் கட்டளையினால் இன்னலுற்ற அத்தகைய அலுவலர் 59ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்**

**153ஏ.** ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாதலும் வகைசொல்ல வேண்டியதாலும் கூறற்பாலதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின் அறிக்கையொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.". ]

**ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகை சொல்ல வேண்டியதாக இருத்தல் வேண்டும்**

**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளும் பணிகளும்**

**154.** [137][(1) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், [138][அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம், 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதித்துறைச்சேவை ஆணைக்குழு, [139][அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும்.] ஆணைக்குழுக்கள், மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுக்கள், நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூர் அதிகாரசபைகள், பகிரங்க கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதுமான எந்த கம்பெனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி சபை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனிகள் என்பவற்றை, அவற்றின் கணக்குகள் உள்ளடங்கலாக, கணக்காய்வு செய்தல் வேண்டும்.]

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், [140][அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, தொழிலுக்கு அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிக்கு] பொறுப்பாக உள்ள அமைச்சர், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடனும் [141][அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு, தொழிலுக்கு அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிக்கு] கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கெனத் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாம். அமைச்சரால் அத்தகைய நியமனம் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, [142][அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு, தொழிலுக்கு அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனி] தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென அத்தகைய கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பயன்படுத்துவதற்குத் தாம் உத்தேசித்துள்ளாரென அத்தகைய கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு எழுத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிவிக்கலாம்; அதன்மேல் அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

---

137 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 36(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

138 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 41 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

139 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 20 ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

140 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 36(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

141 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 36(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

142 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 36(2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்தால் சட்டத்தின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது கடமைகளையும் பணிகளையும் புரியும் நோக்கத்துக்காகவும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் அவரது பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயற்படவேண்டியவரான அல்லது வேண்டியவர்களான தகைமைபெற்ற கணக்காய்வாளரை அல்லது கணக்காய்வாளர்களைச் சேவையில் ஈடுபடுத்தலாம்.

(ஆ) கணக்காய்வுக்கு இயைபான ஏதேனும் தொழில்நுட்பப் பிரச்சினையை, உயர்தொழில்சார் பிரச்சினையை அல்லது அறிவியல் சார் பிரச்சினையை ஆராய்வதற்கென உதவிபெறுவது அவசியமென கணக்காய்வாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுவாரெனின், அவர் –

(i) எத்திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகாரசபையின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுகின்றனவோ அத்திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகாரசபையின் ஓர் ஊழியர் அல்லாத ஆள் ஒருவரின் ; அல்லது

(ii) அத்தகைய திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகார சபையின் அலுவல்களை முகாமைசெய்வதில் எந்நிறுவனம் அக்கறை எதுவும் உடையதாகவிருக்கின்றதோ அந்நிறுவன மொன்றாக இராத ஏதேனும் தொழில்நுட்ப நிறுவனத்தின் அல்லது உயர்தொழில் நிறுவனத்தின் அல்லது அறிவியல் நிறுவனத்தின்,

சேவைகளை ஈடுபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஆள் அல்லது நிறுவனம் அவரது பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பணிகளை புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவரது கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் –

(i) எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும், விவரத் திரட்டுகளையும், ஏனைய ஆவணங்களையும் பெறுவதற்கும் ;

(ii) களஞ்சியப் பொருள்கள், ஏனைய ஆதனங்கள் ஆகியவற்றை அணுகிப் பார்ப்பதற்கும் ; அத்துடன்

(iii) அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேவையாகக்கூடிய அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் பெறுவதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

(ஆ) [143][ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, தொழிற் பொறுப்புமுயற்சிக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கம்பெனிக்கு] கணக்குகளைக் கணக்காய்வு செய்யவென நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற ஒவ்வொரு கணக்காய்வாளரும் அல்லது அத்தகைய கணக்காய்வாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளும் அத்தகைய [144][பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு தொழிற் பொறுப்புமுயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கம்பனிக்கு] அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு மேற்கூறியவாறு தகவல்களையும் விளக்கங்களையும் பெறவும், மேற்கூறியவாறு அணுகிப் பார்க்கவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் பத்து மாதங்களுக்குள்ளாகவும் அத்துடன் அவர் அவசியமெனக் கருதுகின்றவாறும் கருதும்போதும் அரசியலமைப்பின் கீழான அவரது கடமைகளையும் பணிகளையும் புரிதல் பற்றியும் நிறைவேற்றுதல் பற்றியும் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியினது ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் தமது அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, அதன் பிரதியொன்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(8) இந்த உறுப்புரையில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

[145][(9) பந்தி 8 இன் (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகள், 153(1) என்னும் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஏற்புடையவையாதல் வேண்டும்.]

143 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 36(3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

144 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 36(3) ஆம் வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

145 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 36(4) ஆம் வாசகத்தினால் சேர்க்கப்பட்ட்து.

[146] [அத்தியாயம் **XVII** அ

**154அ.** (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய மாகாண சபை, எட்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சனாதிபதியால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து அல்லது தேதிகளிலிருந்து தாபிக்கப்படல் வேண்டும். வெவ்வேறு மாகாணங்கள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம். **மாகாண சபைகளைத் தாபித்தல்**

(2) ஓராம் பந்தியின் கீழ் தாபிக்கப்படும் மாகாண சபை ஒவ்வொன்றும், மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பிலான சட்டத்திற்கிணங்க, அத்தகைய சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன்மேல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எது எப்படியிருப்பினும், அருகருகாவுள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள், தெரிவுசெய்யப்பட்ட ஒரு மாகாணசபையையும் ஆளுநர் ஒருவரையும், பிரதான அமைச்சர் ஒருவரையும், அமைச்சர்கள் சபை ஒன்றையும் கொண்ட நிருவாகப் பிரிவொன்றை அமைப்பதற்கும் அத்தகைய மாகாணங்கள் ஒரு நிருவாகப் பிரிவாகத் தொடர்ந்து நிருவகிக்கப்படவேண்டுமா அல்லவா என அல்லது அதன் சொந்த மாகாண சபையையும், தனியான ஆளுநரையும் பிரதான அமைச்சரையும் அமைச்சர்கள் சபையையும் கொண்ட தனியான நிருவாகப் பிரிவாக அத்தகைய மாகாணம் ஒவ்வொன்றும் அமைய வேண்டுமா அல்லவா எனத் தீர்மானிப்பதற்கும், பாராளுமன்றம் ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யலாம்.

**154ஆ.** (1) எந்த மாகாணத்திற்கு 154அ என்னும் உறுப்புரைக்கு இணங்க மாகாணசபை ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும். **ஆளுநர்**

(2) ஆளுநர், சனாதிபதியினால் அவரது கைப்பட்ட ஆணைமூலம் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 4(ஆ) என்னும் உறுப்புரைக்கு இணங்க சனாதிபதிக்கு விரும்பியாங்கு, பதவி வகித்தலும் வேண்டும்.

(3) ஆளுநர், சனாதிபதிக்கு முகவரியிட்ட எழுத்து மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(4) (அ) மாகாண சபையானது, (ஆ) என்னும் உட்பந்திக்கு அமைய, ஆளுநர்–

146 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 04ஆம் வாசகத்தால் அத்தியாயம் XVII அ சேர்க்கப்பட்டது.

(i) அரசியலமைப்பின் ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறியுள்ளார் என்றும் ;

(ii) அவரது பதவிக்குரிய தத்துவங்களின் பிறழ் பிரயோகத்தை உட்படுத்தலும் துர்நடத்தைக்கு அல்லது ஊழற் பழக்கத்துக்கு குற்றவாளியாகவுள்ளார் என்றும் ; அல்லது

(iii) இலஞ்சத் தவறுக்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ளார் என்றும்,

ஏதுவின் மீது ஆளுநரை அகற்றும்படி ஆலோசனையளிக்கும் உரையொன்றை, அத்தகைய உரையைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் (சமுகமளிக்காதவர் உள்ளிட்ட) சபையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்படின், சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) உட்பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதுக்களின்மீது ஆளுநரை அகற்ற ஆலோசனையளித்த சனாதிபதிக்கு உரையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தலானது சமுகமளித்த முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் அரைவாசியினருக்கும் குறையாதோரால் ஒப்பமிடப்பட்டாலொழிய, மாகாண சபையின் தவிசாளரால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது சபையில் கலந்தாராயப்படுதலோ ஆகாது.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆளுநர், அவர் பதவி ஏற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், சனாதிபதியின் முன்னிலையில், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடுவதன் மேல் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழொப்பமிடுவதன் மேல் பதவியேற்றல் வேண்டும்.

(7) ஆளுநர் ஒருவர் அவ்வாறு பதவியேற்றதன் மேல், அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகவிருப்பின், பாராளுமன்றத்தில் அவரது ஆசனத்தை வறிதாக்குதலும் வேண்டும். ஆளுநர் வேறேதேனும் பதவியையோ, இலாபமீட்டும் பதவி யிடத்தையோ வகித்தல் ஆகாது.

(8) (அ) ஆளுநர், காலத்திற்குக் காலம், அவர் பொருத்தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மாகாண சபையைக் கூடுமாறு அழைக்கலாம், ஆனால் ஓர் அமர்வுத்தொடரின் கடைசி அமர்வுக்கு அடுத்த அமர்வுத் தொடரின் முதலாவது அமர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கும் இடையில், இரு மாதங்கள் இடைவருதல் ஆகாது.

(ஆ) ஆளுநர் காலத்துக்குக்காலம் மாகாண சபையின் அமர்வை நிறுத்தலாம்.

(இ) ஆளுநர் மாகாண சபையைக் கலைக்கலாம்.

(ஈ) ஆளுநர், இப்பந்தியின்கீழ் பிரதான அமைச்சரின் ஆலோசனைக் கிணங்க, ஆளுநரின் அபிப்பிராயப்படி அமைச்சர்கள் சபை மாகாண சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும்வரை, அவரது தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(9) முப்பத்துநான்காம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியின் தத்துவங்களுக்குப் பங்கமின்றியும் அவரது பணிப்புரைகளுக்கமைவாகவும் மாகாணமொன்றின் ஆளுநர், அம் மாகாணத்தின் மாகாண சபையொன்றினால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டமொன்றுக்கு அல்லது எந்தக் கருமம் தொடர்பில் மாகாண சபை நியதிச்சட்டங்களை ஆக்குவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருக்கின்றதோ, அந்தக் கருமமொன்றின் மேல் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டமொன்றுக்கு எதிரான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும், அத்தகைய எவரேனும் ஆள் மீது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனையை காலந்தாழ்த்துவதற்கும் அல்லது தளர்த்துவதற்கும் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்;

ஆயின், ஆளுநர் ஏதேனும் விடயத்தில், அமைச்சர்கள் சபையின் ஆலோசனையுடன் உடன்படாதவிடத்தும், அத்துடன் பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது அவசியமென அவர் கருதுகின்றவிடத்தும், அவர் அந்த விடயத்தைக் கட்டளைகளுக்காகச் சனாதிபதிக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(10) (அ) ஆளுநர், மாகாண சபைக்கு உரையாற்றலாம் என்பதுடன் அந்நோக்கத்துக்கென உறுப்பினர்களின் வருகையைத் தேவைப்படுத்தவும் செய்யலாம்.

(ஆ) ஆளுநர், சபையிடம் அப்போது முடிவுறாதிருக்கும் நியதிச்சட்டம் தொடர்பாகவோ அல்லது வேறுவகையாகவோ சபைக்கு செய்திகளை அனுப்பலாம் என்பதுடன், செய்தியொன்று அவ்வாறு அனுப்பப்பட்டபோது, சபையானது, சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டுமென செய்தியினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தை வசதியாகக் கூடியளவு விரைவாக சீர்தூக்கிப் பார்த்தலும் வேண்டும்.

(11) ஒவ்வொரு மாகாணத்திற்குமான பிரதான அமைச்சர்–

(அ) மாகாணத்தின் அலுவல்களது நிருவாகம் தொடர்பிலான அமைச்சர்கள் சபையின் எல்லா முடிவுகளையும், சட்டவாக்கத்துக்கான உத்தேசங்களையும் மாகாணத்தின் ஆளுநருக்குத் தெரிவித்தலும்;

(ஆ) மாகாணத்தின் அலுவல்களது நிருவாகம் அத்துடன் சட்ட வாக்கத்துக்கான உத்தேசங்கள் ஆகியன தொடர்பில் ஆளுநர் கோரக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவு தலும் ; அத்துடன்

(இ) எக்கருமம் பற்றி அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டிருந்து, ஆனால், சபையினால் அது சீர்தூக்கிப்பார்க்கப்படாதிருக்கின் றதோ, அந்த ஏதேனும் கருமம் சீர்தூக்கிப் பார்த்தலுக்கென அமைச்சர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென ஆளுநர் தேவைப்படுத்தினால், அதனை அவ்வாறு சமர்ப் பித்தலும்,

அவரது கடமையாதல் வேண்டும்.

(12) பாராளுமன்றமானது, ஆளுநர் பதவி வகிக்கின்றவர்களின் சம்பளம், படிகள், ஓய்வுபெறும் வயது, ஓய்வூதிய உரித்துக்கள் ஆகியவற்றிற்கு சட்டத்தின்மூலம் அல்லது தீர்மானத்தின்மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**ஆளுநராக நிறைவேற்றுத் தத்துவங்கள் பிரயோகிக்கப் படுதல்**

**154இ.** எக்கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்கள் ஆக்குவதற்கு மாகாண சபை தத்துவமுடையதாகவுள்ளதோ, அக் கருமங்களை உள்ளடக்குவதான நிறைவேற்றுத் தத்துவமானது, அம் மாகாண சபை எம் மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்திற்கான ஆளுநரினால், ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்குக் கீழமைந்த அலுவலர்கள் மூலமாகவோ, 154ஊ என்னும் உறுப்புரைக்கு இணங்க, பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**மாகாண சபையின் உறுப்பாண்மை**

**154ஈ.** (1) ஒரு மாகாண சபையானது, அம் மாகாண சபை எம் மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்தின் பரப்பளவையும், சனத்தொகையையும் கவனத்திற்கொண்டு சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) மாகாண சபையொன்று, அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் தொடங்கும்போது எம்மாகாணத்திற்கென அம்மாகாணசபை தாபிக்கப் பட்டதோ, அம்மாகாணத்தினுள் அத்தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் அடங்குகின்றனவோ அத்தேர்தல் மாவட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சபையின் நடவடிக்கைகளில் பங்குபற்று வதற்கான உரிமையை வழங்குவதற்கு தீர்மானத்தின் மூலம் முடிவு செய்யலாம்.

(ஆ) உட்பந்தி (அ) என்பதன் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று வலுவிலிருக்கின்றவரையில் எம் மாகாணத்திற்கென அம்மாகாண சபை தாபிக்கப்பட்டதோ, அம் மாகாணத்தினுள் எத்தேர்தல் மாவட்டத்தின்

எல்லைகள் அடங்குகின்றனவோ அத்தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அச் சபையின் பதவிக் காலத்தின்போது. அம் மாகாண சபையின் நடவடிக்கைகளில் பேசுவதற்கும், வேறுவகையில் பங்கெடுப்பதற்கும் அத்துடன் அவர் உறுப்பினராக பெயர்குறிப்பிடப்படும் அம்மாகாண சபையின் ஏதேனும் குழுவில் பேசுவதற்கும், வேறு வகையில் பங்கெடுப்பதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும். ஆனால் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அவ்வாறு ஏற்பாடு செய்தால் மாத்திரமே அதில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராவார்.

(இ) இப்பந்தியின் ஏற்பாடுகள், முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் தேதியன்று நடைமுறையில் இல்லாதொழிதல் வேண்டும்.

**154உ.** மாகாண சபையொன்று, முன்னரே கலைக்கப்பட்டாலொழிய, அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குத் தொடர்ந்திருத்தல், வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட ஐந்து ஆண்டுகாலப்பகுதி முடிவடைதல் சபையின் கலைப்பொன்றாகச் செயற்படுதலும் வேண்டும். பதவிக் காலம்

**154ஊ.** (1) ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவிசெய்து, ஆலோசனையளிப்பதற்கென பிரதான அமைச்சரையும் நால்வருக்கு மேற்படாத வேறு அமைச்சர்களையும் கொண்ட அமைச்சர்கள் சபையொன்று இருத்தல் வேண்டும். பிரதான அமைச்சர், சபைக்குத் தலைமைதாங்குவார். ஆளுநர் அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிபில் பிரயோகிக்கும்படி இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப் படுத்தப்படுகின்ற அளவுக்குத் தவிர, அவரது பணிகளைப் பிரயோகிக்கையில் அத்தகைய ஆலோசனைக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும். அமைச்சர்கள் சபை

(2) ஏதேனும் கருமமானது, இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ், ஆளுநர் அவரது தற்றுணிபின்படி செயலாற்றத் தேவைப்பட்டவொரு கருமமா அல்லவா எனப் பிரச்சினை எதுவும் எழுகையில், அவரது தற்றுணிபின்படி ஆளுநரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும் என்பதுடன், ஆளுநரினால் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மை, அவர் தமது தற்றுணிபின்படி செயலாற்றியிருக்க வேண்டுமா அல்லவா என்னும் ஏதுவின்மீது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது. ஆளுநரின் தற்றுணிபைப் பிரயோகித்தலானது சனாதிபதியின் பணிப்பின் மீதானதாதல் வேண்டும்.

(3) அமைச்சர்களினால் ஆளுநருக்கு ஆலோசனை எதுவும் வழங்கப் பட்டதா, அப்படியாயின் என்ன ஆலோசனை வழங்கப்பட்டது என்னும் பிரச்சினை நீதிமன்றம் எதிலும் விசாரணைசெய்யப்படுதல் ஆகாது.

(4) ஆளுநர், அவரது அபிப்பிராயப்படி, அம் மாகாணத்திற்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறுதற்கு இயலுமானவரான அச்சபையின் உறுப்பினரை பிரதான அமைச்சராக நியமித்தல் வேண்டும்:

ஆயின், மாகாண சபையொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களுள், அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினர் களாக இருக்குமிடத்து, ஆளுநர், சபையிலுள்ள அந்த அரசியல் கட்சியின் தலைவரைப் பிரதான அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(5) ஆளுநர், பிரதான அமைச்சரின் ஆலோசனையின்மீது அம்மாகாணத் திற்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களிலிருந்து ஏனைய அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(6) அமைச்சர்கள் சபை, மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடைய தாதலும், வகைசொல்லவேண்டியதாதலும் வேண்டும்.

(7) பிரதான அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது அமைச்சர்கள் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடு கின்றவரையில் அல்லது உறுதியுரை மொழிந்து கீழொப்பமிடுகின்றவரையில், அவரது பதவிக்குரிய கடமைகளை ஏற்றல் ஆகாது.

*மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள்*

**154ஏ.** (1) ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப்பின்னர் "மாகாண சபை நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், எம் மாகாணத்திற்கென அச்சபை தாபிக்கப் பட்டதென அம் மாகாணத்திற்கு ஏற்புடையனவான நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.

(2) இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை அல்லது ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும், அத்தகைய சட்டமூலமானது, வர்த்தமானியில் வெளியிடப் பட்டபின்னரும் பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படும்முன்னரும் ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய காலப்பகுதிக்குள் அச்சட்ட மூலம் மீதான மாகாண சபையின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாண சபைக்கும் சனாதிபதியினால் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலேயொழிய, சட்டமாக வருதல் ஆகாது. அத்துடன்–

(அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படுமிடத்து ; அல்லது

(ஆ) ஒன்றோ பலவோவாய சபைகள், சட்டமூலத்தைத் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய சட்ட மூலமானது 82 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படும்.

(3) மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான சட்டமூலம் எதுவும், அத்தகைய சட்டமூலமானது, வர்த்த மானியில் வெளியிடப்பட்ட பின்னரும், பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடப்படு முன்னரும், ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அச்சட்டமூலம் மீதான மாகாண சபையின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாண சபைக்கும் சனாதிபதியினால் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலொழிய சட்டமாக வருதல் ஆகாது, அத்துடன் -

(அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது, சமூக மளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும் பான்மை கொண்டு நிறைவேற்றப்படும் ; அல்லது

(ஆ) ஒன்றோ பலவோவாய சபைகள், சட்டமூலத்தை நிறைவேற்று வதற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய சட்டமூலமானது 82 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படும் :

ஆயின், அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் மீது, எல்லா மாகாண சபைகளுமல்லாத ஒருசில மாகாண சபைகள் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு அது நிறைவேற்றப்படுவதன்மேல் சட்டமூலத்திற்கு உடன்படும் மாகாண சபைகள், எம் மாகாணங்களுக்கென தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அம்மாகாணத்திற்கு மட்டும் ஏற்புடையதான சட்டமாக வருதல் வேண்டும்.

(4) மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீது சட்டம் ஆக்கும்படி ஒன்றோ பலவோவாய மாகாண சபைகள் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தை வேண்டுமிடத்து, பாராளுமன்றமானது, சமுகமளித்து

வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு, அந்த மாகாண சபைகள் எந்த மாகாணங்களுக்கெனத் தாபிக்கப்பட்டனவோ அம்மாகாணங்களுக்கு மட்டுமே ஏற்புடைத்தாவதான சட்டத்தை அக்கருமம் மீது ஆக்கலாம்.

(5) (அ) ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் பாராளுமன்றம் தோதானதெனக் கருதுகின்றவாறாக எல்லா மாகாணசபைகளுடனுமான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் (இதனகத்துப் பின்னர் "ஒருங்கியை நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பதாம் அட்டவணையில் III ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக பாராளுமன்றம் சட்டங்களை ஆக்கலாம்.

(ஆ) ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் அது தோதானதெனக் கருதுகின்றவாறாக பாராளுமன்றத்துடனான அத்தகைய கலந்தாலோசனை யின் பின்னர், ஒருங்கியை நிரலில் உள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அம்மாகாண சபை எம்மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்டதோ அம்மாகாணத் திற்கு ஏற்புடையனவாகும் நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.

(6) மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தின் ஏற்பாடு எதுவும், இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிருப்பின், அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு வறிதானவையாதலும் வேண்டும்.

(7) ஒரு மாகாண சபையானது (இதனகத்துப் பின்னர் "ஒதுக்குநிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பதாம் அட்டவணையில் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீது நியதிச்சட்டங்களை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டதாதல் ஆகாது.

(8) மாகாண சபைகள் நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான சட்டமொன்று இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியன்று வலுவிலிருந்து ஒரு மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று அதன் பின்னர் அதே கருமம் மீது நியதிச்சட்டமொன்றை ஆக்கியிருப்பதாகக் கருதி, அந்நியதிச்சட்டத்தின் விரிவுப் பெயரில் அது சட்டத்துடன் ஒவ்வாததாகவிருக்கின்றதென விவரிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அப்போது சட்டத்தின் ஏற்பாடுகள், அந்நியதிச்சட்டம் சம்மதம் பெற்ற தேதியிலிருந்து அந்நியதிச் சட்டம் வலுவிலிருக்கின்றவரையில் மட்டுமே, இடை நிறுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அம் மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாதொழிதலும் வேண்டும்.

(9) ஒருங்கியை நிரலிலுள்ள ஒரு கருமம் தொடர்பிலான சட்டமொன்று இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியன்று வலுவிலிருந்து ஒரு மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாணசபையொன்று, அதன் பின்னர் அதே கருமம் மீது அச்சட்டத்துடன் ஒவ்வாததான நியதிச்சட்டமொன்றை ஆக்குமிடத்து, அப்போது, அச்சட்டத்தின் ஏற்பாடுகள், பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் முரணாகத் தீர்மானித்தாலொழிய நியதிச்சட்டம் சம்மதம் பெற்ற தேதியிலிருந்து அந்நியதிச்சட்டம் வலுவிலிருக்கின்றவரையில் மட்டுமே இடைநிறுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அம்மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாதொழிதலும் வேண்டும்.

(10) இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு, ஏதேனும் கருமம் தொடர்பில், (இந்த அத்தியாயம் உள்ளிட்ட) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க, சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை, இந்த உறுப்புரையில் உள்ள எதுவும் மதிப்புக்குறைப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(11) இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியில் எது எப்படியிருப்பினும், பாராளுமன்றமானது வேறு ஏதேனும் நாட்டுடனான உடன்படிக்கையை அல்லது நாடுகளுடனான ஏதேனும், பொருத்தனையை, அல்லது சமவாயத்தை அல்லது சர்வதேச மாநாடு ஒன்றில், கழகத்தில் அல்லது வேறு குழுவில் எடுக்கப்பட்ட எவையேனும் முடிபுகளைச் செயற்படுத்துவதற்கென மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அப்பந்தியில், தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்கவல்லாது வேறு வகையில் சட்டங்களை ஆக்கலாம்.

**154ஏ.** (1) மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய நியதிச்சட்டத்திற்கு சம்மதம் கிடைக்கப்பெற்றதன்மேல், வலுவுக்கு வருதல் வேண்டும். **சம்மதம்**

(2) மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும் அது ஆக்கப்பட்டதன்மேல் உடனடியாக ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆளுநர், ஒன்றில் நியதிச்சட்டத்திற்குச் சம்மதமளித்தல் வேண்டும் அல்லது நியதிச்சட்டம் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இயலுமான விரைவில் நியதிச்சட்டத்தை அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீளச் சீர்த்தூக்கிப் பார்க்கும்படி, குறிப்பாக, செய்தியில் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களை உட்புகுத்தும் சாத்தியத்தை சீர்தூக்கிப் பார்க்கும்படி சபையை வேண்டுவதான ஒரு செய்தியுடன் சேர்த்து அந்நியதிச்சட்டத்தை மாகாணசபைக்குத் திருப்பி யனுப்புதல் வேண்டும் :

*(3) இரண்டாம் பந்தியின்கீழ் ஆளுநரினால் நியதிச்சட்டம் ஒன்று மாகாண சபையொன்றுக்கு திருப்பியனுப்பப்படுகின்றவிடத்து, மாகாண சபையானது ஆளுநரின் செய்தியைக் கவனத்திற்கொண்டு நியதிச்சட்டத்தை மீளச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும் ; அத்துடன் திருத்தத்துடன் அல்லது திருத்தம் இன்றி அத்தகைய நியதிச்சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதுடன், அதனை ஆளுநரின் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.*

*(4) நியதிச்சட்டம் ஒன்று (3) ஆம் பந்தியின்கீழ் ஆளுநருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், ஆளுநர் நியதிச்சட்டத்திற்குச் சம்மதமளிக்கலாம் அல்லது அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இல்லை எனத் தீர்மானிக்கப்படுவதற்காக, இரண்டாவது தடவையாக நியதிச்சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து ஒரு மாதத்தினுள், சனாதிபதியினால் உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவதற்கென, அதனை ஒதுக்கலாம். அவ்வாறு ஆற்றப்படுத்தப்பட்டதன்மீது, நியதிச்சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகின்றதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்ற விடத்து, ஆளுநர், நீதிமன்றத்தின் தீர்மானம் அவருக்குக் கிடைக்கப் பெற்றதன்மீது, நியதிச்சட்டத்திற்கு சம்மதமளித்தல் வேண்டும். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன்மீது, நியதிச்சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடு களுடன் ஒவ்வாததாயிருக்கின்றதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து, ஆளுநர் நியதிச்சட்டத்திற்கான சம்மதத்தை நிறுத்திவைத்தல் வேண்டும்.*

***பொது மக்கள் பாதுகாப்பு***

***154ஒ.*** *(1) அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணல் அச்சுறுத்தப்படுகின்றது என்னும் அல்லது போர் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதப்புரட்சி மூலம் இலங்கையின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுகின்றது என்னும் ஏதுவின்மீது, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் அத்தகைய கட்டளைச் சட்டத்தின் அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொணருவதான பிரகடனம் ஒன்று செய்யப்படுவதன்மேல், சனாதிபதி, எவரேனும் ஆளுநருக்கு அந்த ஆளுநரால் பிரயோகிக்கப்படற்பாலதான நிறைவேற்றுத் தத்துவம் பிரயோகிக்கப்படவேண்டிய முறை பற்றிய பணிப்புகளை வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் பணிப்புகள், அது ஆக்கப்படுவதற்கான அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதுக்களுடன் தொடர்புபட்டனவாக விருத்தல் வேண்டும்.*

*விளக்கம்:- அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணல் அச்சுறுத்தப்படுகின்றதென அல்லது இலங்கையின் அல்லது அதன் ஆள்புலத்தினது ஏதேனும் பகுதியின் பாதுகாப்பு, போர் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதப்புரட்சி மூலம் அச்சுறுத்தப்படுகின்றதென வெளிப்படுத்துவதான பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழான பிரகடனம் ஒன்று வழங்கல்களும் ஒன்று சேவைகளும் உள்ளபடியாகப் பாதிக்கப்படுமுன்னர் அல்லது போரோ, அத்தகைய ஏதேனும் ஆக்கிரமிப்போ, புரட்சியோ உள்ளபடியாக ஏற்படுமுன்னர், அது உடனடியாக நிகழும் அபாயம் உள்ளதென சனாதிபதி திருப்திப்பட்டால், செய்யப்படலாம்.*

ஆயின், அத்தகைய பிரகடனம் இலங்கையின் ஏதேனும் பகுதியில் மட்டுமே நடைமுறையிலிருக்குமிடத்து, இந்த உறுப்புரையின்கீழ் பணிப்புகளை வழங்குவதற்கு சனாதிபதிக்குள்ள தத்துவம், பிரகடனம் நடைமுறையிலிருக்கும் மாகாணம் தவிர்ந்த ஏதேனும் மாகாணத்திற்கும், அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணலை அல்லது இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உசிதமாக இருப்பினும் உறுதிப்படுத்தப்பட்ட உசிதமான அளவுக்கும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

(2) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழான அல்லது பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பாக அப்போதைக்குள்ள சட்டத்தின்கீழான பிரகடனம் ஒன்று, எல்லா நோக்கங்களுக்கும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது. அத்துடன் அத்தகைய பிரகடனத்தை, அது ஆக்கப்படுவதற்கான ஏதுக்களை, அல்லது இந்த ஏதுக்களின் உளதாந்தன்மையை அல்லது இவ்வுறுப்புரையின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், விசாரணை செய்தலோ, அவைபற்றி எடுத்து மொழிதலோ அவற்றை ஏதேனும் முறையில் கேள்விக்குட்படுத்துதலோ ஆகாது.

**பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுகை**

**154ஓ.** ஆளுநர், அல்லது ஏதேனும் மாகாண சபை, அரசியலமைப்பின் இந்த அத்தியாயத்தின்கீழ், அத்தகைய ஆளுநருக்கு அல்லது அத்தகைய சபைக்கு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுக அல்லது அவற்றைப் பயனுறுத்தத் தவறியுள்ளவிடத்து, மாகாணத்தின் நிருவாகத்தை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கொண்டுநடத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என சனாதிபதி அபிப்பிராயம் கொள்ளுதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**நிருவாக ஒழுங்கு முறைத் தவறுகை**

**154ஔ.** (1) ஒரு மாகாணத்தின் ஆளுநரிடமிருந்து அறிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன்மீது அல்லது வேறுவகையாக மாகாணத்தின் நிருவாகத்தினை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கொண்டு நடாத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என சனாதிபதி திருப்தியடைவாராயின், சனாதிபதி பிரகடனம் மூலம்–

(அ) மாகாணத்தின் நிருவாகத்தினது எல்லாப் பணிகளையும் அல்லதுஅவற்றுள் எதனையும் அத்துடன் ஆளுநருக்கு அல்லது மாகாணசபை தவிர்ந்த மாகாணத்திலுள்ள ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது ஆளுநரினால், குழுவினால் அல்லது அதிகாரசபையினால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் தாமே ஏற்றுக்கொள்ளலாம்;

(ஆ) மாகாணசபையின் தத்துவங்கள், பாராளுமன்றத்தின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் பிரயோகிக்கப்படற்பாலனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம் ;

(இ) பிரகடனத்தின் குறிக்கோள்களைப் பயனுறுத்துவதற்கு அவசியமானவையென அல்லது விரும்பத்தக்கவையென சனாதிபதிக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய இடைநேர்விளைவான, மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகளைச் செய்யலாம் ;

ஆயின், ஏதேனும் நீதிமன்றத்திற்குரித்தாக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்களுள் எதனையும் சனாதிபதி தாமே ஏற்றுக்கொள்வதற்கு இப்பந்தியில் உள்ள எதுவும் அதிகாரமளித்தல் ஆகாது.

(2) அத்தகைய பிரகடனம் எதுவும் பின்னையவொரு பிரகடனத்தின் மூலம் ஒழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(3) இந்த உறுப்புரையின்கீழான பிரகடனம் ஒவ்வொன்றும், பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது முன்னைய பிரகடனம் ஒன்றை ஒழிக்கும் பிரகடனம் ஒன்றாக இருக்குமிடத்து தவிர பதினான்கு நாட்கள் முடிவடைந்தவுடன், அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் அது பாராளுமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும் ;

ஆயின், (முன்னைய பிரகடனம் ஒன்றை ஒழிக்கும் பிரகடனம் ஒன்றல்லாத) அத்தகைய பிரகடனம் எதுவும் பாராளுமன்றம் கலைக்கப்படும் நேரத்தில் வழங்கப்பட்டு அல்லது இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதினான்கு நாட் காலப்பகுதியின்போது, பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்பிலான தீர்மானம் எதுவும் அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிராவிடின், பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதன் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் முடிவடையுன் முன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றின், சொல்லப்பட்ட பதினான்கு நாட் காலப்பகுதி முடிவடைந்தவுடன், பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பிரகடனம் ஒன்று, முன்னரே ஒழிக்கப்பட்டாலேயொழிய, பிரகடனம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரு மாத காலப்பகுதியொன்று முடிவடைவதன் மீது நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய பிரகடனம் ஒன்று தொடர்ந்து வலுவிலிருப்பதை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படினும் அத்துடன் அப்படி நிறைவேற்றப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய பிரகடனமானது, அது ஒழிக்கப்பட்டாலேயொழிய, வேறுவகையில் இப்பந்தியின்கீழ் எத்தேதியன்று அது நடைமுறைப்படுத்தப்படாதொழிந்திருக்கக்கூடுமோ அத்தேதியிலிருந்து மேலும் இரு மாத காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும். ஆனால் அத்தகைய பிரகடனம் எதுவும் எவ்விடயத்திலும் ஓர் ஆண்டுக்கு மேல் வலுவிலிருத்தல் ஆகாது ;

ஆயின், மேலும் அத்தகைய ஏதேனும் இரு மாத காலப்பகுதியின்போது பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்ந்து வலுவிலிருப்பது தொடர்பிலான தீர்மானம் எதுவும் சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிராதிருப்பின் பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதன் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் முடிவடையும் முன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, சொல்லப்பட்ட பதினான்கு நாட்காலப்பகுதி முடிவடைந்தவுடன், பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும்.

(5) இந்த உறுப்புரையில் எது எப்படியிருப்பினும், சனாதிபதி (1) ஆம் பந்தியின்கீழான பிரகடனம் ஒன்றை அவர் ஆக்கியதிலிருந்து பதினான்கு நாட்களினுள்ளும், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களுள் எது தொடர்பிலும் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துக்காகவும், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியொருவர், அறுபது நாட் காலப்பகுதிக்குள் அத்தகைய கருமங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கென நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதியொருவர், அத்தகைய விசாரணை தெடர்பாக, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்குள்ள தத்துவங்களைக் கொண்டவராதல் வேண்டும். அத்தகைய நீதிபதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மீது, சனாதிபதி (1) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தை ஒழிக்கலாம்.

(6) இந்த உறுப்புரையின் கீழான பிரகடனம் ஒன்று எல்லா நோக்கங்களுக்கும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம் எதிலும் கேள்விக் குட்படுத்தப்படுதலும் ஆகாது. அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் அத்தகைய பிரகடனத்தை அல்லது அது ஆக்கப்படுவதற்கான ஏதுக்களை விசாரணைசெய்தலோ, அவை பற்றி எடுத்துமொழிதலோ அல்லது ஏதேனும் முறையில் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.

**மாகாணசபையின் தத்துவங்களைப் பாராளுமன்றம் சனாதிபதிக்கு அளித்தல்**

***154க.*** *(1) உறுப்புரை 154ஔ என்பதன் (1) ஆம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பிரகடனம் ஒன்றின்மூலம் மாகாண சபையொன்றின் தத்துவங்கள் பாராளுமன்ற அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ் பிரயோகிக்கப் படற்பாலனவென வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து :–*

*(அ) நியதிச்சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபைக்குள்ள தத்துவத்தை சனாதிபதிக்கு அளிப்பதற்கும், அவ்வாறு அளிக்கப்பட்ட தத்துவத்தை, சனாதிபதி விதிக்கத் தகுதியானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, அதற்கென அவரால் குறித்துரைக்கப்படும் வேறு எவரேனும் அதிகாரிக்கு கையளிப்பதற்குச் சனாதிபதிக்கு அதிகாரமளிப்பதற்கும் பாராளுமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும் ;*

*(ஆ) பாராளுமன்றம் அமர்வுத் தொடரில் இல்லாதிருக்கும்போது, மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்தான செலவினத்திற்கு, பாராளுமன்ற அனுமதி கிடைப்பதனைப் பொறுத்து, அத்தகைய செலவினத்திற்கு அதிகாரமளிப்பதற்கு சனாதிபதி தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.*

*(2) பாராளுமன்றத்தினால் அல்லது சனாபதியினால் அல்லது (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியினால் குறிப்பிட்டு செய்யப்பட்ட வேறு அதிகாரியினால் ஆக்கப்படும் நியதிச்சட்டம் ஒன்று 154 (ஔ) என்னும் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பிரகடனம் ஒன்று தொடர்ந்து வலுவிலிருக்கும் காலத்தின்போது, மாகாண சபையினால் திருத்தப்படுகின்ற வரையில் அல்லது நீக்கப்படுகின்ற வரையில் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.*

**நிதிசார் உறுதிச்சம நிலையின்மை**

***154ங.*** *(1) இலங்கையில் அல்லது அதன் ஆள்புலத்தினது ஏதேனும் பகுதியின் நிதிசார் உறுதிச் சமநிலையை அல்லது பணநிலையை அச்சுறுத்துவதான நிலைமையொன்று எழுந்துள்ளது என சனாதிபதி திருப்தியடைவாராயின் அவர் பிரகடனம் ஒன்றின் மூலம் அப்பயன்பட அமைந்த வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம் –*

*(2) ஓராம் பந்தியின் கீழ் வழங்கப்படும் பிரகடனம் ஒன்று –*

*(அ) பின்னைய பிரகடனம் ஒன்றின்மூலம் ஒழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம் ;*

*(ஆ) பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும் ;*

*(இ) இரு மாத காலம் முடிவடையுமுன்னர் பாராளுமன்றத் தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி, அக்காலப்பகுதி முடிவடைந்தவுடன் நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும் :*

ஆயின், அத்தகைய பிரகடனம் எதுவும், பாராளுமன்றம் கலைக்கப் பட்டிருக்கும் நேரத்தில் வழங்கப்பட்டு அல்லது பாராளுமன்றக் கலைப்பு (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இருமாதகாலப்பகுதியின் போது இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்பிலான தீர்மானம் எதுவும் அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படாதிருப்பின் பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதன் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததுடன், சொல்லப்பட்ட முப்பது நாட் காலப்பகுதி முடிவடையுமுன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்டிருந்தாலன்றி, நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பிட்டவாறான அத்தகைய பிரகடனம் எதுவும் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியின்போது சனாதிபதி, பணிப்புகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிதிசார் தகுதியுடைமைக்கான அடிப்படைத் தத்துவங்களைக் கடைப்பிடிக்கும்படியும் அத்துடன் சனாதிபதி அந்நோக்கத்துக்கு அவசியமானவையும் போதுமானவையும் எனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறுபணிப்புகளை விடுக்கும்படியும் மாகாணமொன்றின் ஆளுநர் எவருக்கும் பணிப்புகளை வழங்கலாம்.

(4) அரசியலமைப்பின் எது எப்படியிருப்பினும், அத்தகைய பணிப்பு எதுவும்–

(அ) மாகாணமொன்றின் அலுவல்கள் தொடர்பில் சேவையாற்றும் எல்லா ஆட்களினதும் அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த ஆட்களினது சம்பளங்களையும் குறைப்பதற்குத் தேவைப்படுத்தும் ஏற்பாடொன்றினையும் உள்ளடக்கலாம் ;

(ஆ) மாகாண நிதியமொன்றுக்கான அல்லது மாகாண நிதியத் திலிருந்தான கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடு செய்யும் எல்லா நியதிச் சட்டங்களும், அவை மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்னர் சனாதிபதியினால் சீர்தூக்கிப் பார்க்கப்படுவதற்கென ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தும் ஏற்பாடொன்றையும் உள்ளடக்கலாம்.

**154ஏ.** (1) இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியிலிருந்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மேல் நீதிமன்றம் இருத்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும் இயைபான மாகாணத்தின் மேல் நீதிமன்றம் எனப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். **மேல் நீதிமன்றம்**

(2) அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான நீதிபதிகளை

பிரதம நீதியரசர் இலங்கை மேல் நீதி மன்றத்தின் நீதிபதிகளிடையேயிருந்து பெயர் குறித்து நியமித்தல் வேண்டும் அத்தகைய ஒவ்வொரு நீதிபதியும் பிரதம நீதியரசரால் இடமாற்றப்படற்பாலராதல் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும் –

(அ) மாகாணத்தினுள் புரியப்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை மேல் நீதிமன்றத்தின் தொடக்கக் குற்றவியல் நியாயாதிக்கத்தை சட்டத்திற்கிணங்க பிரயோகித்தல் வேண்டும் ;

(ஆ) 138 ஆம் உறுப்புரையின் எது எப்படியிருப்பினும், ஏதேனும் சட்டத்திற்கு அமைய, அம் மாகாணத்தினுள் நீதிவான் நீதிமன்றங் களினாலும், ஆரம்ப நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கள் தண்டனைத் தீர்ப்புக்கள், கட்டளைகள் தொடர்பில் மேன்முறையீட்டு மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டும் ;

(இ) பாராளுமன்றம், சட்டத்தின்மூலம் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய வேறு நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் பிரயோகித்தல் வேண்டும்.

(4) மாகாண சபைகள், நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் அத்தகைய ஒவ்வொரு மேல்நீதிமன்றமும் சட்டத்திற்கிணங்க, பின்வரும் கட்டளைகளை வழங்க நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மாகாணத்தினுள் சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பில் ஆட்கொணர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள் ; அத்துடன்

(ஆ) (i) ஏதேனும் சட்டத்தின்கீழ்; அல்லது

(ii) அம் மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாணசபையினால் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தின் கீழ்,

ஏதேனும் தத்துவத்தை அம்மாகாணத்தினுள் பிரயோகிக்கும் எவரேனும் ஆளுக்கு எதிராக உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்செலெனும் எழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, யாதுரிமை எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள்.

(5) நீதிச்சேவை ஆணைக்குழு அத்தகைய மேல்நீதிமன்றத்திற்கு, மாகாணத்தினுள் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் நிருவாகம் பற்றி பார்வையிட்டு அறிக்கை செய்வதற்கான தத்துவத்தைக் கையளிக்கலாம்.

(6) அரசியலமைப்பினதும், ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 3 (ஆ) அல்லது (இ) அல்லது (4) ஆகிய பந்திகளின்கீழ் அத்தகைய ஏதேனும் நீதிமன்றம் அதன் நியாயதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அதனால் ஆக்கப்படும் இறுதிக் கட்டளையினால், தீர்ப்பினால் அல்லது தண்டனைத் தீர்ப்பினால் இன்னலுறுகின்ற ஆள் எவரும் அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு 138 ஆம் உறுப்புரைக்கு இணங்க மேன்முறையீடு செய்யலாம்.

**மாகாண சபைகளின் பணிகள், தத்துவங்கள், தேர்தல், முதலியன**

**154ட.** பாராளுமன்றமானது சட்டத்தின் மூலம் பின்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) மாகாண சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அத்தகைய சபைகளின் உறுப்பாண்மைக்கான தகைமைகளும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு சபையினாலும் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை;

(இ) மாகாண சபை உறுப்பினர்களின் சம்பளங்களும் படிகளும்; அத்துடன்,

(ஈ) இந்த அத்தியாயத்தின் நெறிகளை அல்லது ஏற்பாடுகளை பயனுறுத்தும் நோக்கத்துக்கு அவசியமான வேறு ஏதேனும் கருமம் அத்துடன் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளோடு தொடர்புபட்ட அல்லது ஏற்பாடுகளின் இடைநேர்விளைவான எவையேனும் கருமங்கள்.

**நிதி ஆணைக்குழு**

**154ண.** (1) பின்வருவோரைக் கொண்ட நிதி ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும் -

(அ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ;

(ஆ) திறைசேரிச் செயலாளர் ; அத்துடன்

[147][(இ) மூன்று பிரதான சமுதாயங்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்குச் சனாதிபதியினால் [148][அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் நிதி, சட்டம், நிருவாகம், தொழில் அல்லது கற்றல் துறைகளில் சிறப்பெய்தியுள்ள அல்லது உயர் பதவி வகித்துள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.]

147 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 42 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.
148 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 21 ஆவது வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(2) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், முன்னமே இறந்தாலொழிய பதவியிலிருந்து விலகினாலொழிய அல்லது அகற்றப்பட்டாலொழிய, மூன்று ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) மாகாணங்களின் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்திற்காக, பொதுவான அத்தகைய நிதியங்களை அரசாங்க ஆணைக்குழுவின் விதப்புரை மீதும் அதன் கலந்தாலோசனையுடனும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்குதல் வேண்டும்.

(4) பின்வருவன பற்றி சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்தல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும் –

(அ) மாகாணங்களின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினால், ஆண்டு தோறும் வழங்கப்படுவனவான அத்தகைய நிதிகள், எந்நெறிகளின் மீது பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பங்கிடப்படுதல் வேண்டுமோ அந்நெறிகள் பற்றியும் : அத்துடன்

(ஆ) மாகாண நிதி நிலையம் தொடர்பாக சனாதிபதியினால் ஆணைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம் பற்றியும்,

(5) ஆணைக்குழு, நாட்டின் சமநிலைமை பிராந்திய அபிவிருத்தியை எய்தும் நோக்கத்துடனான அத்தகைய நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டு மென்பதுடன், அதற்கிணங்க பின்வருவனவற்றை கருத்திற் கொள்ளுதல் வேண்டும் :–

(அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை ;

(ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானம் ;

(இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப் படியாகக் குறைப்பதற்கான தேவை ; அத்துடன்

(ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானத்திற்கும், மாகாணங்களுக்கிடையிலான அதியுயர் தலைக்குரிய வருமானத் திற்குமிடையேயான வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை.

*(6) ஆணைக்குழு அதன் சொந்த நடவடிக்கை முறையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அதன் கடமைகளைப் புரிகையில் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் அதற்கு அளிக்கக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*(7) சனாதிபதி, இந்த உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழுவினால் செய்யப்படும் விதப்புரை ஒவ்வொன்றையும் பாராளுமன்றத்தின் முன்னர் இடச்செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவித்தலும், வேண்டும்.*

*(8) நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் அத்தகைய நிதிகளின் போதுமாந்தன்மை அல்லது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரை அல்லது வகுத்தமைக்கப்பட்ட நெறி என்பன தொடர்பிலான ஏதேனும் பிரச்சினைபற்றி விசாரணை செய்தலோ, தீர்ப்பளித்தலோ அல்லது எம்முறையிலேனும் ஏற்றுக் கவனித்தலோ, தீர்மானித்தலோ அல்லது தீர்ப்பு வழங்கலோ ஆகாது.*

***இந்த அத்தியாயத்தின் கீழ் மாகாண சபைகள், அவற்றின் தத்துவங்களைப் பிரயோகிக்காமல் இருக்க இயலச் செய்வதற்கான சிறப்பேற்பாடுகள்***

***154த.****(1) ஒரு மாகாண சபை தீர்மானம் வாயிலாக ஒன்பதாம் அட்டவணையின் மாகாண சபைகள் நிரலில் அல்லது ஒருங்கியை நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது அதன் பாகம் தொடர்பில் 154எ என்னும் உறுப்புரையின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கா திருப்பதற்கு முடிவுசெய்யலாம்.*

*(2) ஓராம் பந்தியின்கீழ் மாகாண சபையொன்றினால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், அத்துடன் அத்தகைய தீர்மானத்தின் நியதிகள் தீர்மானத்தின்மூலம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுமிருக்கு மிடத்து, 154எ என்னும், உறுப்புரையின் கீழான அத்தகைய மாகாண சபையின் தத்துவங்கள், அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமத்திற்கு நீடிப்பதல்ல எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றமும், அக்கருமம் தொடர்பாக 154எ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தவிர வேறுவகையில், எந்த மாகாணத்திற்கென அம்மாகாணசபை தாபிக்கப்பட்டதோ அந்த மாகாண சபைக்கு ஏற்புடைத்தான சட்டத்தை ஆக்கலாம்.*

***நிலைமாறு கால ஒழுங்குகள்***

***154ந.*** *சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான அல்லது அதற்கவசியமான நிருவாக மாற்றங்களுக்குப் பயன்கொடுப்பதற்காக அல்லது ஏதேனும் வில்லங்கத்தை அகற்றும் நோக்கத்துக்காக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவையுமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் அல்லது அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம்.*]

அத்தியாயம் XVIII

## பொதுமக்கள் பாதுகாப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு

**155.** (1) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருக்கின்ற திருத்தப்பட்டவாறான பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதான சட்டத்தின்கீழ் அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவமானது, அரசியலமைப்பினது ஏற்பாடுகள் தவிர்ந்த, ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒதுக்கித்தள்ளுகின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்திவைக்கின்ற சட்டப்பயன்கொண்ட ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒதுக்கித்தள்ளுகின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்திவைக்கின்ற சட்டப்பயனைக்கொண்ட அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குச் சனாதிபதிக்குத் தத்துவமளிப்பதும் பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றியதும் ஆன ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின் கீழானதும் அத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதுமான ஒரு பிரகடனத்தைச் செய்ததன் மேல் தவிர, நடைமுறைக்கு வருதலாகாது.

[149][(3அ) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அல்லது மாகாணசபையொன்றினால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டமொன்றினால் நடைமுறையைப் புறக்கணிப்பதான, திருத்துவதான அல்லது இடைநிறுத்துவதான பயன்கொண்ட அவசரகால ஒழுங்கு விதிகள் ஆக்கப்படுவதை, அரசியலமைப்பின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், தடைசெய்வதாகக் கருதப்படுதல் ஆகாது.]

(4) அத்தகைய ஒரு பிரகடனஞ் செய்யப்பட்டதன்மேல், அதனைச் செய்தமைக்கான சந்தர்ப்பம் பற்றி, இவ்வுறுப்புரையின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, பாராளுமன்றத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க –

(i) அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டால் பாராளுமன்றம் கூடுவதற்கென முன்னரான ஒரு தேதியை அப்பிரகடனம் நியமித்தாலொழிய (இத்தேதி பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாத தேதியாக இருக்கும்) அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து பத்தாம் நாளன்று கூடும்படி பாராளுமன்றத்தை

149 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 5ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

அழைப்பதாக அத்தகைய பிரகடனம் தொழிற்படுதல் வேண்டும். அவ்வாறு கூடும்படி அழைக்கப்பட்ட பாராளுமன்றமானது, அத்தகைய பிரகடனம் அல்லது அதற்கடுத்த வேறு ஏதேனும் பிரகடனம் அற்றுப்போகும்வரை அல்லது ஒழிக்கப்படும்வரை அல்லது பொதுத்தேர்தல் முடிவுறும்வரை, இவற்றில் எது முன்னர் நிகழ்கின்றதோ அதுவரையில், அமர்விலிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மேல் கலைந்துவிடுதல் வேண்டும்;

(ii) அத்தகைய பிரகடனம் செய்யப்படும் தேதியன்று, பாராளுமன்றம், பத்து நாட்களுக்குள் அற்றுவிடாத அத்தகைய ஏதேனும் ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வு நிறுத்துகையினால் கூடாதிருப்பின் பத்து நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட வேண்டும் என்று கூறும் பிரகடனம் ஒன்று விடுக்கப்படுதல் வேண்டும்.

(5) பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தைச் செய்வதன் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பிரகடனம், இவ்வுறுப்புரையின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய பிரகடனத்தைச் செய்த தேதியிலிருந்து ஒரு மாதகாலத்துக்கு, ஆனால் அத்தகைய பிரகடனத்தை முன்னராகவே ஒழிப்பதற்கோ அக்காலம் முடிவடையும்போது அல்லது முடிவடையுமுன்னர் மேலும் ஒரு பிரகடனஞ் செய்வதற்கோ பங்கமின்றி, நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான பொதுமக்கள் பாதுகாப்புப்பற்றிய ஏதேனுஞ் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள், அத்தகைய சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தைச் செய்வதன் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பிரகடனமானது பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, அத்தகைய ஏற்பாடுகள் எத்தேதியன்று நடைமுறைக்கு வந்திருக்குமோ அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் கொண்ட காலத்தின் பின்னர் அத்தகைய பிரகடனமானது அற்றுப்போதல் வேண்டும் :

ஆயின் –

(அ) அத்தகைய பிரகடனம் செய்யப்பட்ட தேதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(ஆ) பாராளுமன்றம், அத்தகைய தேதியில், இவ்வுறுப்புரையின் (4) (ii) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வு நிறுத்துகை யினால் கூடாதிருப்பின் ; அல்லது

(இ) இவ்வுறுப்புரையின் (4) (i) ஆம், (4) (ii) ஆம் பந்திகளின் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கூடும்படி அழைக்கப்படும்போது பாராளு மன்றம் கூடாதுவிடின்:

அப்போது, அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் அடுத்தமுறை கூடி அமரும் தேதியில் நடைபெறும் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய அவ்வாறு கூடிய தேதியிலிருந்து பத்து நாட்கள் முடிந்ததும் அற்றுப்போதல் வேண்டும்.

(7) பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ள தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் கொண்ட காலத்துக்குள் இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பிரகடனம் ஒழிக்கப்படுவதன் மேல், அல்லது (6) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகையவொரு பிரகடனம் அற்றுப்போவதன்மேல், அடுத்துவருகின்ற முப்பது நாட்களுக்குள் செய்யப்படும் பிரகடனம் எதுவும், அப்பிரகடனத்தைச் செய்வதற்கு பாராளுமன்றத் தீர்மானமொன்றினால் அங்கீகாரம் அளிக்கப்படும்வரை, நடைமுறைக்கு வருதலாகாது.

[150] [நீக்கப்பட்டது.]

[151] (8) [ ] இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் ஏதேனும் பிரகடனத்தைப் பாராளுமன்றம் அங்கீகரிக்க மறுத்தால் அத்தகைய பிரகடனம், அத்தகைய அங்கீகார மறுப்பை உடனடுத்து ஆனால், அதன்கீழ்சட்ட முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, செல்லுபடியில்லாதொழிதலும், சட்டவலுவெதுவும் இல்லாதொழிதலும் வேண்டும்.

[152](9) பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படும்போது அது கூடாத காரணத்தினால் ஒரு பிரகடனம் செய்யப்பட்டமை பற்றி பாராளுமன்றத்துக்கு அறிவிக்க முடியாமலும் அதனால் அங்கீகரிக்கப்பட முடியாமலுமிருப்பின், [153][இவ்வுறுப்புரையின் (6) ஆம், அல்லது (7) ஆம் பந்தியில் அடங்கியுள்ள எதுவும்,] அத்தகைய பிரகடனத்தின் செல்லுபடியை அல்லது செயற்பாட்டைப் பாதித்தலாகாது:

ஆயின், அத்தகைய சந்தர்ப்பத்தில், அதன்பின்னர், கூடிய விரைவில், பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படுதல் வேண்டும்.

---

150 அரசியலமைப்புக்கான பத்தாவது திருத்தத்தின் 2 (1) ஆம் வாசகத்தால் 08ஆம் 09ஆம் பந்திகள் நீக்கப்பட்டன.

151 அரசியலமைப்புக்கான பத்தாவது திருத்தத்தின் 2 (2) ஆம் வாசகத்தால் 10 ஆம் பந்தி 8 ஆம் பந்தியாக மீளிலக்கமிடப்பட்டது.

152 அரசியலமைப்புக்கான பத்தாவது திருத்தத்தின் 2 (2) ஆம் வாசகத்தால் 11ஆம் பந்தி 9ஆம் பந்தியாக மீளிலக்கமிடப்பட்டது.

153 அரசியலமைப்புக்கான பத்தாவது திருத்தத்தின் 2 (3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[154][ *அத்தியாயம்* XVIII **அ**

**தேசிய பொலிசு ஆணைக்குழு**

**தேசிய பொலிசு ஆணைக்குழுவின் அமைப்பு**

***155அ.*** [155][*(1) சனாதிபதியினால்* [156]*அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது நியமிக்கப்பட்ட ஐந்துக்குக் குறையாத மற்றும் ஏழுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதும் (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) தேசியப் பொலிசு ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். சனாதிபதி தவிசாளராக ஓர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.*]

*(2) ஆளெவரும், பாராளுமன்றத்தின், ஒரு மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வருவாராயின் அவர் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகித்தலோ ஆகாது.*

*(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவரது நியமனத்தின் உடன் முன்னராக அரசசேவையில் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக இருந்த ஒவ்வோராளும், அத்தகைய நியமனம் பயனுறுவதன்மீது, அத்தகைய பதவியை வகியாதொழில் வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேலும் நியமிக்கப்படுவதற்குத் தகவற்றவராதலும் வேண்டும்;*

*ஆயினும், அத்தகைய எவரேனும் ஆள், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்றவரைக்கும் அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருக்கின்றபோது, விடயத்திற்கேற்ப, அவர் ஒரு பகிரங்க அலுவலராக அல்லது நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின் எந்த வயதில் ஓய்வுபெறும்படி தேவைப்படுத்தப்படுவாரோ அந்த வயதை எய்தினால், அவர், அத்தகைய சேவை தொடர்பிலான ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் அத்துடன் வேறு படிகள் பற்றிய ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கத்திற்கென ஒரு பகிரங்க அலுவலராகவும் அல்லது ஒரு நீதித்துறை அலுவலராகவும் அத்துடன் அரச சேவையில் ஓய்வூதியங்கொண்ட பதவியொன்றை வகிக்கின்றவராகவும் கருதப்படுதல் வேண்டும்.*

[157][*(4) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலொழிய, அல்லது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்குச் சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவருக்குக் குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின்கீழ் அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.*]

---

*154 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 20 ஆம் வாசகத்தால் புதிய அத்தியாயம்* XVIII *அ சேர்க்கப்பட்டது.*

*155 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 43 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

*156 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 22 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

*157 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 43 (2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

(5) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையராதல் வேண்டும். ஆனால் உறுப்பின ரொருவராக அவரது பதவிக் காலம் முடிவுற்றதன் பின்னர் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது. உறுப்பினரெவரும் இரண்டு தடவைகளுக்கு மேல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகப் பதவிவகிப்பதற்குத் தகவுடைய வராதலாகாது.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர் ஆணைக் குழுவின் முன்கூட்டிய அனுமதி இல்லாமல் ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும்பட்சத்தில் அவர் அத்தகைய மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து அவரது பதவியை வறிதாக்கி யுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவற்றவராதலும் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் பாராளு மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(8) ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

**155ஆ.** (1) ஆணைக்குழுவின் கூட்டமொன்றிற்கான [158][கூட்டநடப்பெண் ஐந்து] உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன், அவர் வருகைதராதபோதும் சமுகமா யிருக்கும் உறுப்பினர்களால், அவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒரு உறுப்பினர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவெடுக்கப்படும் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையொன்றினா லானதாதல் வேண்டும் என்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில் தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன் றையுடையவராதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது அதன் உறுப்பாண்மையின் வெற்றிட மொன்றுள்ளது என்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் அத்தகைய வெற்றிடத்தின் காரணத்தினால் அல்லது தவிசாளரின் அல்லது உறுப்பினரின் நியமனத்தின் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

---

158 அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தின் 44 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[159](5) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவர் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தவிர்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங்களில் சமுகமாயிருப் பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமையை அவர் கொண்டிருத்தலாகாது.

**155இ.** [160]“நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின்கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப் பட்டுள்ள தத்துவங்களுக்கும் அமைய” நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்தின்கீழ் வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழு வுக்கு, குழுவொன்றுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி அத்தகைய ஆணைக் குழுவால், ஒரு குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரிப்பதற்கான அல்லது அதன்மீது எடுத்து மொழிவதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

*சட்ட நடவடிக்கை களிலிருந்து விடுபாட்டுரிமை*

**155ஈ.** ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் ஆணைக்குழுச் செயலாளர் ஒருவரும் அத்தகைய வேறு அலுவலர்களும் இருத்தல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் செயலாளர*

**155உ.** ஆணைக்குழுவின் கிரயச் செலவுகளும் மற்றும் செலவுகளும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*கிரயச் செலவுகளும் மற்றும் செலவுகளும்*

**155ஊ.**(1) தமது சட்டமுறையான கடமையின்போது தவிர, வேறுவகையாக, [161][நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், தானாகவோ அல்லது வேறெவரேனுமாள் மூலமாகவோ அல்லது அவருடன் சேர்ந்தோ, எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது ஒரு குழுவின் முடிபின்மீது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் அல்லது குழுவின் எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்,] குற்றத் தீர்ப்பளிக்கப்பதன்மேல் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றபணமொன்றுக்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஆணைக்குழுவுடன் தலையிடுதல்*

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்று (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கேட்டு தீர்மானிப்பதற்கான தத்துவமுடையதாக வேண்டும்.

---

159 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 23 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

160 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தால் 24 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

161 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 46 ஆம் வாசகத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது.

**ஆணைக்குழுவின் தத்துவங்கள்**

[162] [**155ஊஊ.** ஒரு பொலிசு அலுவலருக்கெதிராக அல்லது பொலிசுப் படையினருக்கெதிராகப் பொது மக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆளிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக்கவனிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிவர்த்தியளித்தலும் வேண்டும். இந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது, பொதுமக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆட்களிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக் கவனித்துப் புலனாய்வு செய்வதற்கான நடவடிக்கை முறைகளைத் தாபிப்பதற்கு விதிகளை யாக்கலாம்.]

**ஆணைக் குழு விதி களையாக்குதல்**

[163][**155ஊஊஊ.** ஆணைக்குழுவானது, காலத்துக்குக்காலம், எக்கருமங்கள் விதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்துமோ அக்கருமங்களுக்காக விதிகளையாக்குதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.]

**ஆணைக் குழுவின் தத்துவங்கள்**

[164] **155எ.** (1)(அ) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டால் அல்லது தாபிக்கப்படும்போது, அத்தகைய ஆணைக்குழுக்களுக்கு குறித்தொதுக் கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் எவரேனும் இன்னலுற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டு மென்பதுடன், சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நிவாரணத்தை ஏற்பாடுசெய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும் பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பொலிசு அலுவலர்கள் தொடர்பில் பின்வருவன உள்ளிட்ட எல்லாக் கருமங்களையும் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும்:-

---

162 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் இருபதாவது திருத்தத்தின் 47 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

163 அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் 27 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

164 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 25 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது,

*(அ) ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான அமைச்சரவை யினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக அவற்றுக்கான திட்டங்களை வகுத்தமைத்தல்;*

*(ஆ) பயிற்சியளித்தல் மற்றும் பொலிசு சேவையின் வினைத்திறனையும் மற்றும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்;*

*(இ) தேசிய பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும்; அத்துடன்*

*(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள்.*

*(4) ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கியுள்ள நிரல் I இன் பின்னிணைப்பு I இன் கீழ் அதற்குரித்தாக்கப் பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாக் கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.*

*ஆணைக் குழுவின் குறித்த சில தத்துவங்களைக் குழுவொன்றுக்குக் கையளித்தல்*

***155ஏ.*** *(1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கத் தத்துவங் களை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழுவொன்றுக்கு கையளிக்கலாம்.*

*(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித் தல் வேண்டும்.*

*(3) ஓராம் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடிமுறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக்குழு வினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.*

*ஆணைக்குழுவினால் குறித்தசில பணிகள் கையளிக்கப்படுதல்*

***155ஒ.*** *(1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவி நீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.*

*(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.*

மேன் முறையீடு செய்யும் உரிமை

***155ஓ.*** *(1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலான அதன் தத்துவங்களை எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஒ ஆம் உறுப்புரையின்கீழ் கையளித்துள்ளவிடத்து, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அத்தகைய பொலிசு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.*

(2) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஒ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவொன்றினால் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவிநீக்கம் மீதான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற பொலிசு அலுவலர் ஒருவர், ஆணைக்குழுவினால் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கும் கேட்கப்படுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையையும் நேர காலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழு வுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1)ஆம் பந்தியின் கீழ் அல்லது (2)ஆம் பந்தியின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லா தாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புகளை வழங்குவதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின்கீழ் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) உறுப்புரை 155ஏ மற்றும் 155ஒ என்பவற்றின் கீழ் குழுவொன்றுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின்மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில், இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறைவேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

**நிருவாக மேன் முறையீட்டு நியாய சபைக்கு மேன் முறையீடு செய் தல்**

**155ஔ.** எவரேனும் பொலிசு அலுவலர் தொடர்பில், உறுப்புரை 155ஓ என்னும் நியதிகளின் படி ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது பதவிநீக்கம் என்பன தொடர்பான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59ஆம் உறுப்புரை யின்கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். நியாயசபை, அந்நிருவாக மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு, இல்லாதாக்குவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது.".

**உளதாம் விதிகளையும் ஒழுங் கு விதிகளையும் பேணுதல்**

[165] **155க.** ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை, பொலிசுப்படை தொடர்பில் இவ்வுறுப்புரை நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும் ஒழுங்கு விதிகளும் மற்றும் நடவடிக்கைமுறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.".

---

165 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 26 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

**155ங.** ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்குப் பொறுப்பைக் கொண்டதாதலும் அத்துடன் வகைசொல்லற்பாலதாதலும் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை யொன்றைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புதலும் வேண்டும்.]

**ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு வகை சொல்லற்பாலதாதல்**

அத்தியாயம் XIX

## நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்

**156.** (1) அரசாங்க அலுவலர்கள், பகிரங்கக் கூட்டுத்தாபன அலுவலர்கள், உள்ளூர் அதிகாரசபை அலுவலர்கள் அதையொத்த வேறு நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார்கள் என்றும் வேறு அநீதிகளை இழைத்துவிட்டார்கள் என்றும் கூறுகின்ற முறைப்பாடுகள் அல்லது சார்த்துதல்கள் பற்றி அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அவற்றுக்கமைவாகவும் புலனாய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளவாறான நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்) என்ற பதவியினைத் தாபிப்பதற்காகச் சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்**

[166] [(2) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், [167] அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் நன்நடத்தையின்போது பதவி வகித்தலும் வேண்டும்.]

(3) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின் சம்பளமானது பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரது பதவிக்காலத்தின்போது அச்சம்பளம் குறைக்கப்படுதலுமாகாது.

(4) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவியானது -

(அ) அவர் இறப்பதன்மேல்;

(ஆ) அவர் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிப்பதன் மேல்;

(இ) அவர் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் வயதை அடைவதன்மேல்;

(ஈ) சுகவீனம் காரணமாக அல்லது உடற்பலவீனம் அல்லது மனப் பலவீனம் காரணமாக அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப் படுவதன் மேல்; அல்லது

(உ) அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மீது சனாதிபதியினால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்;

வறிதாதல் வேண்டும்.

---

166 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 54 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

167 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 27(1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

[168](5) [நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் தமது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாத வராகவுள்ள போதெல்லாம், சனாதிபதி அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு [169] அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.]

## [170]"அத்தியாயம் XIXஅ

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

**இலஞ்சம் அல்லது ஊழலை விசாரணை செய்வதற்கான ஆணைக் குழு**

**156அ.** (1) பாராளுமன்றம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழு வொன்றினைத் தாபிப்பதற்கு சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய சட்டம் பின்வருவன வற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியி னால் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வ தற்கும்;

(ஆ) அதனது சொந்தப்பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றின்மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களின் ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துதல் அல்லது புலன் விசாரணை செய்தலை பணிக்கின்ற தத்துவம் மற்றும் இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பிலான நடைமுறையில் உள்ள சட்டத்தின்கீழ் தவறுகளுக்கான குற்றவழக்கு தொடருவதற்கான தத்துவம் உட்பட ஆணைக் குழுவின் தத்துவங்களுக்கும்; அத்துடன்

(இ) ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் இலங்கை திறத்தவராக உள்ள ஊழலைத் தடுப்பது தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறை களிற்கும்.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும்வரை 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், ஆணைக்குழு அதனது சொந்தப் பிரேரணைமீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாடு ஒன்றின்மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் ஒன்றை

---

168 அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் 54 (2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

169 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 27(2) வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

170 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 28 ஆம் வாசகத்தால் அத்தியாயம் XIXஅ மற்றும் XIXஆ சேர்க்கப்பட்டன.

விசாரிப்பதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்ட ஆணைக்குழுவிற்கு அது சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும் என்ற திரிபுகளுக்கு அமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

### அத்தியாயம் XIXஆ

### தேசிய பெறுகை ஆணைக்குழு

**தேசிய பெறுகை ஆணைக்குழு**

**156ஆ.** (1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) தேசிய பெறுகை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிருவாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தை உடைய ஆட்களிடையேயிருந்து ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மைந்ததாதல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின்மூலம் பதவியை முன்னரே துறந்தாலன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப் பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றிற்கு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாணசபை ஒன்றின் அல்லது உள்ளூரதிகாரசபை ஒன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டி ருந்தாலன்றி அல்லது அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்டி ருந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதி யொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின்மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

**ஆணைக் குழுவின் பணிகள்**

***156இ***. *(1)* எல்லா அரசாங்க நிறுவனங்களினாலும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமை கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத்திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டிநெறிகளையும் வகுத்தமைத்தலும், அவ்வழிகாட்டி நெறிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்தலும் மற்றும் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் இடச்செய்வித்த லும் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும்.

*(2)* ஓராம் பந்தியில் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றைச் செய்தல் ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்:-

(அ) அரசாங்க நிறுவனங்களினது பண்டங்கள் மற்றும் சேவைகளின், வேலைகளின், ஆலோசனை சேவைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் எல்லா பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டங்களின் அடிப்படையானதா என்பது பற்றி, கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஆ) அரசாங்க நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான தகைமை பெற்ற விலைகூறுபவர்கள் யாவருக்கும் அப்பண்டங்கள் மற்றும் சேவைகளையும், வேலைகளை யும், ஆலோசனை சேவைகளையும் மற்றும் தகவல் முறைமைகளையும் வழங்குவதற்காக விலைகூறும் செயற்பாட் டில் பங்குபற்றுவதற்கான சமமான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தலும், தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுத லும்;

(இ) அரசாங்க நிறுவனங்களிற்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்வதற்கும், ஒப்பந்தங்கள் வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாய மானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின் றனவா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) அரசாங்க நிறுவனங்களினால் நியமிக்கப்படும் பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியனவற்றின் உறுப்பினர்கள், பொருத்தமான தகைமையுடையவராக இருக்கின்றார்களா என அறிக்கையிடுதலும்; அத்துடன்

(உ) தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கும் வழிகாட்டி நெறிகளுக்கும் புறம்பே அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்கு பொறுப்பான அலுவலர்களை அவசியமான நடவடிக்கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்.

**ஆணைக் குழுவின் தத்துவங்கள்**

***156ஈ.*** *(1)* ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல்மூலம் பின்வருவனவற்றைச் செய்ய எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்:-

(அ) ஆணைக்குழுவினால் கேள்விக்குட்படுத்தப்படுவதற்காக ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளிப்பதற்கு;

(ஆ) அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு காண்பிப்பதற்கு;

(2) (அ) ஓராம் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படும் போது, ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற;

(ஆ) அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதில் ஆணைக் குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக்குழுவால் அவரிடம் கேட்கப்பட்ட எவையேனும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற; அல்லது

(இ) ஓராம் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் காண்பிக்கப்படுதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

ஒவ்வோராளும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஒ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஆணைக் குழுவின் கூட்டங்கள்**

**156உ.** (1) ஆணைக்குழுவானது அதன் பணிகளை புரிதலுக்காக அவசியமாக இருக்கக்கூடியவாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்கத் தவறின், சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையே யிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவு எடுக்கப்படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில், தவிசாளர் அல்லது கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக, ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களின் விடயங்களையும் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிட மொன்றுள்ளது எது எவ்வாறிருப்பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக் குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாகக் அல்லது செல்லுபடியற்றதாக்கப்படுவதாகக் கருதப்படுதலாகாது.

**ஆணைக் குழுவின் பணியாட் டொகுதி**

**156ஊ.** (1) ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென கருதப்படக் கூடியவாறாக, செயலாளர் நாயகம் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்களையும் ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின்கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய பணிகளைப் புரிவதில் அவரால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்கு துடர்ச்சியெதுவும், வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கைமுறையெதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

**ஆணைக் குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப் படுதல்**

**156எ.** (1) ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்**

**156ஏ.** இவ்வத்தியாத்தில் "அரசாங்க நிறுவனம்" என்பது சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம், 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆணைக்குழுக்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், அமைச்சுகள், அரசாங்க திணைக்களங்கள், மாகாணசபை, உள்ளூரதிகாரசபை, பகிரங்க கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில் அல்லது வேறு தொழில்முயற்சி மற்றும் 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.".

அத்தியாயம் XX

## பொது

*சர்வதேச பொருத்தனைகளும் உடன்படிக்கைகளும்*

**157.** பாராளுமன்றமானது, அதன் முழு எண்ணிக்கையினரில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாதோர் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின்மூலம், இலங்கை அரசாங்கத்துக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசுக்கும் இடையிலானதும், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின்கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும் கம்பனிகளினாலும் ஏனைய கழகங்களாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்கும் ஆன ஏதேனும் பொருத்தனையை அல்லது உடன்படிக்கையை அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக உள்ளதென அங்கீகரிக்கின்றவிடத்து, அத்தகைய பொருத்தனை அல்லது உடன்படிக்கை இலங்கையில் சட்டவலுக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பொருத்தனையின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக எழுத்திலான சட்டமெதுவும் தேசிய பாதுகாப்பு நலன்களுக்காகவன்றி வேறுவித்தில் இயற்றப்படுதலோ ஆக்கப்படுதலோ ஆகாது என்பதுடன், ஆட்சித்துறை நடவடிக்கையோ நிருவாக நடவடிக்கையோ எடுக்கப்படுதலுமாகாது.

*இலங்கையின் ஆட்புல கட்டுக்கோப்பை மீறுவதற்கெதிரான தடை*

[171][**157 அ.** (1) இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல், ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது.

(2) அரசியற்கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எதுவும், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றினைத் தாபித்தலைத் தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருத்தலாகாது.

(3) ஓராம் பந்தியின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆளெவரும், குற்றப்பகர்வின் மீதும் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறைக்கிணங்கவும் ஆனவிளக்கத்தின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்–

(அ) அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு குடியியற்றகுதியீனத்துக்கு உட்பட்டவராதல் வேண்டும்;

---

171 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் மூன்றாம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

(ஆ) அத்தகைய ஆளினதும் அவரது குடும்பத்தினதும் சீவனத்திற்கு அவசியமானவையாக உள்ளவையென அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆதனங்கள் தவிர்ந்த அவரது அசைவற்றதும் அசைவுள்ளதுமான ஆதனங்களை இழத்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலப்பகுதிக்கு குடியியல் உரிமைகளுக்கு உரித்துடையவராதலாகாது ; அத்துடன்

(ஈ) அவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது 165 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய சேவையிலுள்ள அல்லது அத்தகைய பதவியை வகிக்கின்ற ஆளொருவராக இருப்பின், அத்தகைய உறுப்பினராக இல்லாதொழிதல் அல்லது அத்தகைய சேவையில் இருப்பதினின்றும் இல்லாதொழிதல் அல்லது அத்தகைய பதவியை வகியாதொழிதல் வேண்டும்.

(4) அரசியற் கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எதுவும், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றினைத் தாபித்தலைத் தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய அரசியற் கட்சியானது அல்லது வேறு கழகமானது அல்லது ஒழுங்கமைப்பானது, இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றினைத் தாபித்தலைத் தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருக்கின்றதென்ற வெளிப்படுத்துகையொன்றுக்காக ஆளெவரும் உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய அரசியற் கட்சியின் அல்லது வேறு கழகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் செயலாளர் அல்லது வேறு அலுவலர் அத்தகைய விண்ணப்பத்துக்கு எதிர்வாதியொருவாராக ஆக்கப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் பந்தியின்கீழ் உயர்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றைப் பின்பற்றி அரசியற் கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எதுவும் தொடர்பில் அப்பந்தியின்கீழ் வெளிப்படுத்துகையொன்றை உயர்நீதி மன்றம் செய்கின்றவிடத்து,

(அ) அந்த அரசியற்கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் தடைசெய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் பாராளுமன்ற உறுப்பினரொருவராகவுள்ள அத்தகைய அரசியற் கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பின் உறுப்பினர் எவரும், அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் பாராளுமன்றத்தில் அவரது ஆசனத்தை

வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அரசியற் கட்சியினால் அல்லது வேறு கழகத்தினால் அல்லது ஒழுங்கமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரமெதுவும் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடி யற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதிக்குப் பின்னர், அந்த அரசியற்கட்சியில் அல்லது வேறு கழகத்தில் அல்லது ஒழுங்கமைப்பில் பதவி வகிக்கின்ற அல்லது உறுப்பின ரொருவராக இருக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றப் பகர்வின் மீதும் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறைக்கிணங்கவும் ஆன விளக்கத்தின் பின்னர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மேல்,–

(i) அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு குடியியற்றகுதியீனத்துக்கு உட்பட்டவராதல் வேண்டும்;

(ii) அத்தகைய ஆளினதும் அவரது குடும்பத்தினதும் சீவனத்திற்கு அவசியமானவையாக உள்ளவையென அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆதனங்கள் தவிர்ந்த அவரது அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனங்களை இழத்தல் வேண்டும்;

(iii) அத்தகைய நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக, ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலப்பகுதிக்கு குடியியல் உரிமைகளுக்கு உரித்துடைய வராதலாகாது;

(iv) அவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது 165 ஆம் உறுப்புரையின், (1) ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு, அத்தகைய சேவையிலுள்ள அல்லது அத்தகைய பதவியை வகிக்கின்ற ஆளொருவராக இருப்பின் அத்தகைய உறுப்பினராக இல்லாதொழிதல் அல்லது அத்தகைய பதவியை வகியாதொழிதல் வேண்டும்.

(6) மூன்றாம் பந்தியின்கீழ் அல்லது (5) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் சுமத்தப்படும் ஏதேனும் தண்டனைத்தீர்ப்பின் நிறைவேற்றுகையானது, அத்தகைய தண்டனைத் தீர்ப்புக்கெதிரான அல்லது எந்தக் குற்றத்தீர்ப்பின் விளைவாக அத்தகைய தண்டனைத்தீர்ப்பு சுமத்தப்பட்டதோ அந்தக் குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடு எதுவும் தீர்மானிக்கப்படுதல் முடிவுறாதிருக்கும் வரை நிற்பாட்டப்படுதலோ அல்லது இடைநிறுத்தி வைக்கப்படுதலோ ஆகாது.

(7) சத்தியத்தை அல்லது உறுதியுரையை செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்கு 32 ஆம் உறுப்புரையினால் அல்லது 53 ஆம் உறுப்புரையினால் அல்லது 61 ஆம் உறுப்புரையினால் அல்லது 107 ஆம் உறுப்புரையினால் அல்லது 165 ஆம் உறுப்புரையினால் அல்லது 169 (12) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தவரான அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளவரான அலுவலர் அல்லது ஆளொவ்வொருவரும், உள்ளூரதிகார சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், அபிவிருத்திச் சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொரு வரும், பிரதேச சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், கிராமோதய சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொரு வரும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும் அத்துடன் சட்டத்தரணி ஒவ்வொருவரும் –

(அ) இந்த உறுப்புரை வலுவுக்கு வரும் தேதியன்று அத்தகைய அலுவலகரொருவர் பதவி வகிக்கின்றவராக இருப்பின் இந்த உறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவ்வுறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஆள் அல்லது குழு எவரேனும் அல்லது ஏதேனும் இருப்பின், அவர் அல்லது அதன் முன்னிலையில், பொருளளவில், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுதல் அல்லது மொழிந்து கீழொப்பமிடுதல் வேண்டும்;

(ஆ) இந்த உறுப்புரை வலுவுக்கு வந்ததன் பின்னர் அத்தகைய ஆள் அல்லது அலுவலர் அத்தகைய பதவிக்கு நியமிக்கப்படின், அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டு ஒருமாதத்திற்குள், அவ்வுறுப்புரையிற், குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய ஆள் அல்லது குழு எவரேனும் அல்லது ஏதேனும் இருப்பின், அவர் அல்லது அதன் முன்னிலையில், பொருளளவில், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுதல் வேண்டும்;

இப்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒரு சத்தியத்தை அல்லது ஒரு உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்குத் தவறுபவரான எவரேனும் ஆளுக்கும் அல்லது அலுவலருக்கும் அத்துடன் ஆள் தொடர்பிலும் அல்லது அலுவலர் தொடர்பிலும், 165 ஆம் உறுப்புரையினதும் 169 (12) ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) (அ) இந்த உறுப்புரை வலுவுக்கு வருவதன் மேல் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக உள்ள ஆளொவ்வொருவரும், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையை அவர் செய்து கீழொப்பமிட்டாலன்றி அல்லது மொழிந்து கீழொப்பமிட்டாலன்றி பாராளுமன்றத்தில் அமருவதற்கும் வாக்களிப்பதற்கும் உரித்துடைய வராதலாகாது.

(ஆ) இந்த உறுப்புரை வலுவுக்கு வருவதன்மேல் அல்லது அதன் பின்னர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவாறான அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளவரான ஆளொவ்வொருவரும் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையை செய்து கீழொப்பமிட்டாலன்றி அல்லது மொழிந்து கீழொப்பமிட்டாலன்றி பாராளுமன்றத்தில் அமருவதற்கும் வாக்களிப்பதற்கும் உரித்துடையவராதலாகாது.

(9) ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையை செய்து கீழொப்பமிட்டுள்ளவரான அல்லது மொழிந்து கீழொப்பமிட்டுள்ளவாரான ஆளெவரும், அரசியலமைப்பில் முரணாகவுள்ள ஏற்பாடெதுவும் எப்படியிருப்பினும், அரசியலமைப்பின் கீழ் செய்து கீழொப்பமிடப்படுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்ப மிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையினைச் செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(10) ஏழாம் பந்தியின் ஏற்பாடுகள் வேறு எந்த வகுதியினரான ஆட்களுக்கு அல்லது அலுவலர்களுக்கு ஏற்புடையனவராதல் வேண்டுமோ அந்தவேறு வகுதியினரான ஆட்களை அல்லது அலுவலர்களைப் பாராளுமன்றம் தீர்மானம் மூலம் தீர்மானிக்கலாமெனபதுடன், அதன்மேல் அந்த வகுதியினரான அலுவலர்களுக்கும் அல்லது ஆட்களுக்கும் அத்துடன் அலுவலர்கள் தொடர்பிலும் அல்லது ஆட்கள் தொடர்பிலும் அத்தகைய பந்தியின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(11) இவ்வுறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவங்கள் தொடர்பில் அந்நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கமானது, 146 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(12) இவ்வுறுப்புரையில் "குடியியல் உரிமைகள்" என்பது -

(அ) வெளிநாட்டுக் கடவுச்சீட்டொன்றைப் பெறுவதற்கான உரிமை ;

(ஆ) பகிரங்கப் பரீட்சை எதற்கும் தோற்றுவதற்கான உரிமை ;

(இ) அசைவற்ற ஆதனம் எதனையும் சொந்தத்தில் வைத்திருப் பதற்கான உரிமை ;

(ஈ) எந்தவொரு வியாபாரத்தில் அல்லது உயர்தொழிலில் ஈடுபடு வதற்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உரிமம், பதிவு அல்லது அதிகாரமளிப்பு ஒன்று தேவைப்படுகின்றதோ அந்த ஏதேனும் வியாபாரத்தில் அல்லது உயர்தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை ;

எனப்பொருள்படும்.]

**கையளிப்பு**

**158.** ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எவரேனும் ஆளுக்குக் கையளிப்பதற்கு ஆள் எவருக்கும் அரசியலமைப்பின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கும் அத்தகைய ஆள், அவ்வாறு கையளிக்கப் பட்டிருப்பினும் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன், எந் நேரத்திலும் அத்தகைய கையளிப்பினை ஒழிக்கலாம்.

இவ்வுறுப்புரையில் "ஆள்" என்பது ஆட்கள் குழு எதனையும் அல்லது ஏதேனும் அதிகாரசபையினையும் உள்ளடக்கும்.

**பிரதிச் சபாநாயகர் சபாநாயகருக்காகப் பதிற் கடமையாற்றுதல்**

**159.** சபாநாயகர் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டினால் சபாநாயகருக்கு அளிக்கப்பட்ட, அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட, அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களும், கடமைகளும் பணிகளும் (அரசியலமைப்பின் 31 (4), 37 , 38 (2) (ஆ), 39 (2), 40 ஆகிய உறுப்புரைகளால் சபாநாயகருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் நீங்கலாக) பிரதிச் சபாநாயகரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

அத்தியாயம் XXI

## நிலைமாறுகால ஏற்பாடுகள்

**முதலாவது சனாதிபதி**

**160.** அரசியலமைப்பின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்விதமிருப்பினும், அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் சனாதிபதிப் பதவியை வகிக்கின்ற ஆளே அரசியலமைப்பின்கீழான முதலாவது சனாதிபதியாதல் வேண்டும் என்பதோடு, எல்லா நோக்கங்களுக்காகவும் குடியரசுச் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவர், [172][31 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக,] 1978, பெப்புருவரி 4 ஆந் தேதி தொடங்கி ஆறு ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

சனாதிபதியானவர், 32 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்வித மிருப்பினும், அரசியலமைப்புத் தொடங்கியதன்மேல் உடனடியாக அவரது பதவியை மேற்கொண்டுவிட்டவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், அரசியலமைப்பினாலோ அல்லது வேறுவகையாகவோ சனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும். சனாதிபதி அதன்பின்னர் இயன்றவரை விரைவாக பாராளுமன்றக் கூட்டமொன்றில் நான்காம் அட்டவணையிற் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும்.

**முதலாவது பாராளுமன்றம்**

**161.** அரசியலமைப்பின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்விதமிருப்பினும் –

(அ) முதலாவது பாராளுமன்றம் நூற்றறுபத்தெட்டு உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இவ்வுறுப்புரையின் இனிமேல்வரும் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்புத் தொடங்கு வதற்கு நேர்முன்னர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களாக இருந்த எல்லா ஆட்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களெனக் கருதப்படுதல் வேண்டும் ;

172 அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(ஆ (i) முதலாவது பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்பட்ட ஒருவர் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினராக முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டமை அப்போதைக்கு நடைமுறை யிலிருக்கும் சட்டத்தின் கீழ் வறிதானதென வெளிப்படுத்தப் பட்டிருப்பதோடு, வேறாள் எவரும் முறைப்படி தெரிந்தனுப்பப்பட்டவராக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவராகத் தீர்மானிக்கப்படாமலும் இருப்பின், அத்தகைய உறுப்பினரின் ஆசனம் வெற்றிடமாதல் வேண்டும் என்பதோடு, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் உள்ளவாறான அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் ஒன்று, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் நடைமுறையிலிருந்த தேசிய அரசுப் பேரவைக்கான தேர்தல் பற்றிய சட்டத்திற்கிணங்கவும், அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கு ஏற்புடையதும், அரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர் முந்திய நாளன்று பயன்படுத்தப்பட்டதுமான தேருநர் இடாப்பின் அடிப்படையிலும் நடாத்தப்படுதலும் வேண்டும்;

(ii) ஓராம் உட்பந்தியின் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நடாத்தப்பட்ட ஒரு தேர்தல் பற்றிய தேர்தல் ஆட்சேபனை மனுக்களுக்கு ஏற்புடையதான சட்டமானது, அரசியலமைப்புத் தொடங்கும்போது வலுவிலிருந்த சட்டமேயாதல் வேண்டும் என்பதோடு அத்தகைய ஒரு தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் (i) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்;

(இ) முதலாவது பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்பட்ட ஒருவர், தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினராக முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டமை வறிதானதென அல்லது முறையற்றதென வெளிப்படுத்தப்பட்டிருப்பதோடு வேறெவரேனும் ஆள் தெரிந்தனுப்பப்பட்டாரெனவும் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்டாரெனவும் தீர்மானிக்கப்பட்டால், அத்தகைய மற்ற ஆள் முதலாவது பாராளுமன்றத்துக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) (i) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் இருந்துள்ள விடத்து, அல்லது முதலாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் களிடையே, வெற்றிடமொன்று இந்த உறுப்புரையின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழல்லாமல் வேறுவகையில் ஏற்படுகின்றவிடத்து, அத்தகைய வெற்றிடம் இதன் (iii) ஆம் உட்பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட விதமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

[173][(ii) முதலாவது பாராளுமன்றக் காலப்பகுதியின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசியலமைப்புத் தொடங்கியபோது அல்லது தொடங்கியதன்பின்னர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த அரசியற் கட்சியில் இருந்து விலகிக்கொள்வதன் மூலம், விலக்கப்படுவதன் மூலம் அல்லது வேறுவகையாக அந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிகின்றவிடத்து, அத்தகைய கட்சியின் செயலாளர், அத்தகைய உறுப்பினர் அத்தகைய கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்த தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அந்த நிகழ்வு பற்றியும் அது நிகழ்ந்த தேதி பற்றியும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவிப்பு கிடைத்ததன் மேல் செயலாளர் நாயகம் அதனைச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த அரசியற் கட்சியிலிருந்து விலக்கப்பட்டமை காரணமாக அத்தகைய கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிகின்றவிடத்து, அவர், அவ்வாறு விலக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதகாலத்தினுள், அவ்வாறு விலக்கப்பட்டமை செல்லுபடியற்றது என்று தீர்மானிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்திற்கு எழுத்திலான மனு மூலம் விண்ணப்பித்தற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் விண்ணப்பம் செய்யப்படுமிடத்து உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் உடனடியாக அத்தகைய விண்ணப்பத்தைப் பற்றி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் மூன்றுக்குக் குறையாதவர்களான உயர் நீதிமன்ற நீதிபதிகளினால் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த நீதிபதிகள், அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அவ்வாறு விலக்கப்பட்டமை செல்லுபடியுள்ளதா அல்லவா எனத் தீர்மானித்தலும் வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த அரசியற் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளார் எனச் சார்த்தும் அறிவிப்பு ஒன்று மேற்சொல்லப்பட்ட முறையில் கிடைத்ததன் மேல், சபாநாயகர், அத்தகைய உறுப்பினர் எந்தச் சூழ்நிலைகளில் அத்தகைய அரசியற் கட்சியிலிருந்து விலகியுள்ளார் என அல்லது விலக்கப்பட்டுள்ளார் என அல்லது வேறு வகையாக அக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளார் எனச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்தச் சூழ்நிலைகள் பற்றியும்

173 அரசியலமைப்புக்கான இரண்டாவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

விலக்கப்பட்டமைக்கான காரணங்கள் பற்றியும் விசாரணை செய்வதற்கும், அவை பற்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கும் என, ஐந்துக்குக் குறையாதவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும் ; அவர்களுள் ஒருவர் தெரிவுக் குழுவின் தவிசாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினரொருவர் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த அரசியற் கட்சியிலிருந்து விலக்கப்பட்டமை காரணமாக அந்த அரசியற் கட்சியின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்துள்ளாரென அந்த அறிவிப்புச் சார்த்துமிடத்து, அவ்வாறு சார்த்தப்பட்ட விலக்கத் தேதியிலிருந்து ஒரு மாதகாலம் முடிவடையும் வரையும், அத்துடன் அவ்வாறு விலக்கப்பட்டமை செல்லபடியற்றது என்று தீர்மானிக்குமாறு கோரி அத்தகைய உறுப்பினர் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துள்ள ஏதேனும் விடயத்தில், அவ்வாறு விலக்கப்பட்டமை செல்லுபடியானதென உயர் நீதிமன்றம் தீர்மானித்தாலன்றியும் தீர்மானிக்கும் வரையும், மேலே சொல்லப்பட்டவாறான தெரிவுக் குழுவெதுவும் நியமிக்கப்படுதலாகாது.

மேலே சொல்லப்பட்டவாறாக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு வொன்றின் முன்னிலையிலான நடவடிக்கைகள், அதன் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன தொடர்பாகப் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கென அத்தகைய தெரிவுக் குழு ஒவ்வொன்றும், ஆட்களையும், பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்குப் பாராளுமன்றத்தின் கட்டளையினால் முறைப்படி அதிகார மளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

மேலே சொல்லப்பட்டவாறாக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு வொன்றினால் செய்யப்பட்ட அறிக்கையைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர், பாராளுமன்றம், எண்பத்தைந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களிப்பதன்மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம், அத்தகைய அறிக்கை எந்த உறுப்பினர் பற்றியதோ அந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டுமெனத் தீர்மானிக்கலாம். அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒவ்வொன்றிலும் சபாநாயகர் பின்வரும் படிவத்திலான சான்றுரையொன்றைப் புறக்குறிப்பிடுதல் வேண்டும் :-

"இந்த தீர்மானம் அரசியலமைப்பின் 161 (ஈ) (ii) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட பெரும்பானமை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது."

அத்தகைய உறுப்பினரின ஆசனம் அத்தகைய சான்றுரைத் தேதியிலிருந்து வறிதாதல் வேண்டும்.

அத்தகைய சான்றுரை ஒவ்வொன்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது ; அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், அத்தகைய சான்றுரை எந்தத் தீர்மானத்தின் மீது புறக்குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்தத் தீர்மானத்தின் செல்லுபடியை எத்தன்மைத்தானதுமான எந்த ஏதுவின்மீதும் விசாரணை செய்தலோ, அதன்மீது எடுத்து மொழிதலோ அல்லது அதனை எவ்விதத்திலேனும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.]

(iii) முதலாம் அல்லது இரண்டாம் உட்பந்தியில் குறிப்பிட்டவாறான வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்றவிடத்து அத்தகைய வெற்றிடம் பற்றி பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அதன்மேல் தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனக் கட்சியின் ஓர் உறுப்பினரைப் பெயர்குறித்து நியமிக்கும்படி அத்தகைய உறுப்பினர் எக்கட்சியைச் சேர்ந்தவராகவிருந்தாரோ அக்கட்சியின் [174][செயலாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். இவ்வுட்பந்தியின் கீழ் அத்தகைய அரசியற் கட்சியின் செயலாளரினால் செய்யப்பட்ட பெயர் நியமனமொன்று, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளினால், விடயத்துக்கேற்றாற்போல் செய்து கீழொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கீழொப்பமிடப்பட்ட ஏழாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலான, விடயத்துக்கேற்றாற்போல சத்தியத்துடன் அல்லது உறுதியுரையுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய சத்தியத்துடன் அல்லது உறுதியுரையுடன் சேர்த்தனுப்பப்படும் அத்தகைய பெயர் நியமனத்தைப் பெற்றதும்] ஆணையாளர் அந்தவெற்றிடம் எந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பில் ஏற்பட்டதோ அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கு அத்தகைய ஆள் உறுப்பினராகியுள்ளாரென வெளிப்படுத்துதல் வேண்டும்.

[175] [ஆயின், அத்தகைய அரசியற் கட்சியின் செயலாளர், இவ்வுட்பந்தியின் கீழ் முன்போந்த ஏற்பாடுகளின்கீழ், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புதற்கென அத்தகைய அரசியற் கட்சியின் உறுப்பினரொருவரை [176][மேற் சொல்லப்பட்ட முறையிலும் பெயர் குறித்தும் நியமிக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுள்] அவ்வாறு

174 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 4(1) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

175 அரசியலமைப்புக்கான ஐந்தாவது திருத்தத்தில் 2 (ஆ) வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

176 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 4(2) (அ) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

செய்யத் தவறுமிடத்து, அல்லது அத்தகைய ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அத்தகைய அரசியற் கட்சியின் உறுப்பினரொருவரைப் பெயர் குறித்து நியமிக்குமாறு இக்காப்பு வாசகம் வலுவுக்கு வருமுன்னர் தேவைப்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய செயலாளர் இக்காப்புவாசகம் வலுவுக்கு வருவதிலிருந்து முப்பது நாட்களுள் அத்தகைய ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கென அத்தகைய அரசியற் கட்சியின் உறுப்பினரொருவரைப் பெயர் குறித்து நியமிக்கத் தவறுமிடத்து [177] [அல்லது அத்தகைய அரசியற் கட்சியானது 157 அ என்னும் உறுப்புரையின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளதாகக் கருதப் படுமிடத்து] அப்போது, தேர்தல்கள் ஆணையாளரானவர் உடனடியாக சனாதிபதிக்கு அதனை அறிவித்தல் வேண்டும்; சனாதிபதி, அத்தகைய தகவல் அவரால் பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், வர்த்தமானியில் வெளியிடப் படும் அறிவித்தல் மூலம், எந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பில் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டுள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கெனத் தேர்தலொன்றை நடாத்துமாறு தேர்தல்கள் ஆணையாளருக்குக் கட்டளையிடுதல் வேண்டும். அதன்மேல், தேர்தல்கள் ஆணையாளர், அரசியலமைப்புக்கு நேர்முன்னராக உளதாயிருந்ததான அத்தகைய தேர்தல் மாவட்டத்துக் கும், 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க. தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டதும் நடைமுறையிலுள்ளதுமான இடாப்பின் அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கு நேரொத்ததான, அத்தகைய பாகத்தின் அடிப்படையின்மீதும், 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் I ஆம் பாகத்துக்கும் IV முதல் VI வரையிலான (இரண்டுமுட்பட) பாகங்களுக்கும் இணங்க தேர்தலொன்றினை நடாத்துதல் வேண்டும். 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளையின் மேற்கூறப்பட்ட பாகங்கள், அத்தகைய தேர்தலின் நோக்கங்களுக்காகவும் அத்துடன் அந்த அரசப் பேரவைக் கட்டளை நீக்கஞ்செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், வலு விலிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏற்ற மாற்றங்களுடனும் அத்துடன், அரசியலமைப்பில் வேறு விதமாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறன்றியும் அத்தகைய தேர்தலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

அத்தகைய தேர்தல் மாவட்டம் தொடர்பிலான தேர்தல் மனுக்களுக்கு ஏற்புடையதான சட்டமானது, மேற்கூறப்பட்டவாறு ஏற்புடைத் தாவதான, அத்தகைய அரசுப்பேரவைக் கட்டளையின், மேற்கூறப்பட்ட பாகங்களாதல் வேண்டும்; அத்துடன், அத்தகைய தேர்தல் வறிதானதாக வெளிப்படுத்தப்படுவதும் வேறு ஆளெவரும் முறைப்படி தெரிவு செய்யப்பட்டுள்ளாரென அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தீர்மானிக்கப்படாதுள்ளதுமான சந்தர்ப்பத்தில் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தலானது, இக்காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.]

[178] [(iv) பொருளளவில் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியமொன்றை அல்லது உறுதியுரையொன்றை செய்து

177 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 4(2) (ஆ) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

178 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 4(3) ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

கீழொப்பமிட்டுள்ள அல்லது மொழிந்து கீழொப்பமிட்டுள்ள உறுப்பினர் ஒருவராக இருந்து, (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, அல்லது தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்கின்றவிடத்து, ஆக்கமளிக்கின்றவிடத்து, ஊக்குவிப்பு அளிக்கின்றவிடத்து, நிதியுதவுமிடத்து, ஊக்கமளிக்கின்றவிடத்து அல்லது பரிந்துரைக்கின்ற விடத்து, இலங்கையின் ஆள்புலத்துக் குள்ளாகத் தனி அரசொன்றைத் தாபித்தலை அத்தகைய உறுப்பினர் இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்துள்ளார். ஆக்கமளித்துள்ளார், ஊக்குவிப்பு அளித்துள்ளார், நிதி உதவியுள்ளார், ஊக்கமளித்துள்ளார் அல்லது பரிந்துரைத் துள்ளார் என்ற வெளிப்படுத்துகையொன்றைப் பெறுவதற்காக ஆள் எவரும் மேன்முறையீட்டு நீதின்மன்றத்துக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பத்தின் மீது, இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுதலை அத்தகைய உறுப்பினர் நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளித்துள்ளார், ஆக்கமளித்துள்ளார், ஊக்குவிப்பு அளித்துள்ளார் நிதியுதவியுள்ளார், ஊக்கமளித்துள்ளார் அல்லது பரிந்துரைத்துள்ளார் என்ற வெளிப்படுத்துகையொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் செய்யுமாயின், அத்தகைய உறுப்பினரின் ஆசனம் அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து வெற்றிடமானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு பாராளுமன்றத்தில் அமர்வதற்கும், வாக்களிப்பதற்கும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படு வதற்கும் தகைமையற்றவராதலும் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் ஏற்படும் வெற்றிடம் (iii) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நிரப்பப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பந்தியின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவங்கள் தொடர்பில் அந்நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கமானது, 146 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பிரியோகிக்கப்படுதல் வேண்டும்.]

[179] [(உ) முன்னராகவே கலைக்கப்பட்டாலன்றி, முதலாவது பாராளு மன்றமானது 1989 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 4 ஆம் நாள்வரை தொடர்ந்திருத்தல் வேண்டுமேயன்றி அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அல்ல ; அதன்மேல், அது கலைக்கப்பட்டிருப்பதாதல் வேண்டு மென்பதுடன், 70 (5) (ஆ) என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.]

**குறித்த சில ஏற்பாடுகளின் ஏற்புடைமை**

***162.*** (1) முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும் முதலாவது பொதுத் தேர்தல்வரை 98 ஆம் உறுப்புரையின் (அதன் (8) ஆம் (9) ஆம் பந்திகள் தவிர்ந்த) ஏற்பாடுகளும் 99 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளும் நடைமுறைக்கு வருதல் ஆகாது.

(2) அவ்வாறு கலைக்கப்பட்ட நேரத்தில் 97 ஆம் உறுப்புரையால் தேவைப் படுத்தப்பட்டவாறு, தேர்தல் மாவட்டங்கள் பற்றிய அறிவிப்பு பிரகடனப் படுத்தப்படாதிருப்பின், முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன்மேல் நடாத்தப்படவேண்டிய முதலாவது பொதுத் தேர்தலுக்கான தேர்தல் மாவட்டங்களும், 96 ஆம் உறுப்புரையின் (4) பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக அத்தகைய மாவட்டம் ஒவ்வொன்றும் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் தொகையும் ஆறாம் அட்டவணையில் தரப்பட்டவாறாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்குமாக தேருநர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, அத்தகைய இடாப்புக்கள் அரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருந்த இடாப்பின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**உயர் நீதிமன்ற நீதிபதிகளும் மேல் நீதிமன்ற நீதிபதிகளும் பதவி வகியாதொழிதல்**

***163.*** அரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னரான நாளன்று பதவி வகிப்பவர்களான, 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள், ஆகிய யாவரும் அரசியலமைப்பு தொடங்கியதும் பதவி வகியாதொழிதல் வேண்டும்.

**நீதிபதிகளும், பகிரங்க அலுவலர் களும், ஏனையோரும், பதவியில் தொடர்ந்திருத்தல்**

***164.*** நூற்றறுபத்துமூன்றாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய, இவ்வரசியலமைப்பு தொடங்குவதன் நேர்முன்னர் –

(அ) 105 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக, பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஒரு நீதிமன்றமென அல்லது நியாய சபையெனக் கருதப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் பதவிவகித்த ; அல்லது

(ஆ) குடியரசின், ஏதேனும் உள்ளூரதிகார சபையின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்த ;

(இ) ஏதேனும் உள்ளூரதிகார சபையில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் பதவிவகித்த ; அல்லது

179 அரசியலமைப்புக்கான நான்காவது திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(ஈ) இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நியமனத்தை வகித்த,

ஆளொவ்வொருவரும், அதே நியதிகளின்கீழும் நிபந்தனைகளின் கீழும் அத்தகைய சேவையில் தொடர்ந்திருத்தல் வேண்டும் அல்லது அத்தகைய பதவியை அல்லது நியமனத்தை வகித்தல் வேண்டும்.

**பகிரங்க அலுவலர்களாலும் ஏனையோராலும் செய்யப்பட வேண்டிய சத்தியம் அல்லது மொழியப்பட வேண்டிய உறுதியுரை**

**165.** (1) பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும் நீதித்துறை அலுவலர் ஒவ்வொருவரும் அத்துடன் தமது பதவியின் கடமைகளை மேற்கொள்ளும் போது சத்தியஞ் செய்துகொள்ளல் வேண்டுமென அல்லது உறுதியுரை மொழிந்துகொள்ளல் வேண்டுமென அரசியலமைப்பினால் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஒவ்வோர் ஆளும், இப்போதுள்ள சட்டத்தின்கீழ் பதவிச் சத்தியஞ்செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்பட்ட பதவி வகிப்போர் ஒவ்வொருவரும், ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையினதும் ஒவ்வோர் அரச கூட்டுத்தாபனத்தினதும் சேவையிலுள்ள ஆள் ஒவ்வொருவரும், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும். அரசியலமைப்பு நடைமுறைக்கு வரத்தொடங்கியதன் பின்னர் முதலமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் விதிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிட அல்லது அத்தகைய உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடத் தவறுகின்ற அத்தகைய பகிரங்க அலுவலர் எவரும், நீதித்துறை அலுவலர் எவரும், ஆளெவரும் அல்லது பதவிவகிப்போர் எவரும் சேவையிலிருந்து நீங்கியவராதல் வேண்டும் அல்லது பதவி வகியாது நீங்கியவராதல் வேண்டும்.

(2) அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்தக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட பகிரங்க அலுவலர், நீதித்துறை அலுவலர், ஆள் அல்லது பதவிவகிப்போர் எவரையும், விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அவர் சத்தியஞ்செய்துகொள்ள அல்லது உறுதியுரை மொழிந்து கொள்ளத் தவறியமை, சுகவீனத்தினால் அல்லது வேறு ஏதேனும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஏற்பட்டது எனத் திருப்திப் பட்டால், தமது தனித்தற்றுணிபின்பேரில், விதித்துரைக்கப்பட்ட தேதியின் பின்னரும் அப்பந்தியிற் குறிப்பிடப்பட்ட சத்தியத்தைச் செய்துகொள்ள அல்லது உறுதியுரையை மொழிந்து கொள்ள அனுமதிக்கலாம். அவர் அத்தகைய சத்தியஞ்செய்து கொள்ளுவதன்மேல் அல்லது அத்தகைய உறுதியுரை மொழிந்து கொள்ளுவதன்மேல், அவர், இவ்வுறுப்புரையின் (1) பந்தியின்கீழ் விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய சத்தியத்தைச் செய்துகொண்டாற் போன்று அல்லது அத்தகைய உறுதியுரையை மொழிந்து கொண்டாற் போன்று அவர் சேவையில் தொடர்ந்திருத்தல் வேண்டும் அல்லது பதவி வகித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி பிரகடனத்தின்மூலம் –

(அ) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், பகிரங்க அலுவலர்களில் எவரேனும் வகுதியினருக்கு ஏற்புடையனவாதலாகாதென விலக்கலாம்;

(ஆ) இப்போதுள்ள சட்டத்தின்கீழ் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட ஆட்களோடு மேலதிகமாக, அத்தகைய சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதவிக்கக்கூடிய ஆட்களை அல்லது ஆட்களின் வகுதிகளை விதித்துரைக்கலாம்.

**குடியரசின் தத்துவங்களும், சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும்**

**166.** பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர், இலங்கைக் குடியரசு உடைமைகொண்டிருந்த, பிரயோகித்த அல்லது பிரயோகிக்கக்கூடியனவாயிருந்த எத்தன்மைத்தாயினுமான எல்லாத்தத்துவங்களையும், சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், உரிமைகளையும், இலங்கைக் குடியரசு தொடர்ந்தும் உடைமைகொண்டிருத்தலும், பிரயோகித்தலும் வேண்டும்.

**குடியரசின் உரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளும்**

**167.** அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர், இலங்கை அரசாங்கத்திற்குரியனவாக அப்போதிருந்துவந்த எல்லா உரிமைகளையும், எல்லாக் கடமைகளையும் அல்லது கடப்பாடுகளும், அவை எவ்வகையால் எழுந்தனவாயினுஞ்சரி, அரசியலமைப்பின்கீழான இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் உரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளுமாகவிருத்தல் வேண்டும்.

**சட்டங்களின் சென்றகாலச் செயற்பாடு முன்னைய, செயல்கள், தவறுகள், முடிவுறாதிருக்கும் வழக்குகள் முதலியன**

**168.** (1) பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்தாலன்றி, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருந்த எல்லாச் சட்டங்களும், அதாவது, எழுத்திலான சட்டங்களும், எழுத்தில்லாச் சட்டங்களும் அரசியலமைப்பில் வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தால் தவிர, ஏற்றமாற்றங்களுடன், தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இப்போதுள்ள எழுத்திலான சட்டங்களும், எழுத்திலில்லாச் சட்டங்களும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளாகா என்பதுடன் அவ்வாறு எவ்வகையிலும் கருதப்படுதலுமாகாது.

(3) இப்போதுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது எழுத்திலில்லாத சட்டத்தின் அல்லது அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாடு, பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும்வரை அல்லது ஏற்பாடு செய்தாலொழிய தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென அரசியலமைப்பு ஏற்பாடுசெய்யுமிடத்து, அவ்வாறு ஏற்பாடுசெய்து பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டம் எதுவும், சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படலாம்.

(4) இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும் வரையில் அல்லது ஏற்பாடு செய்தாலொழிய தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென அரசியலமைப்பு

ஏற்பாடுசெய்யுமிடத்தும், அத்துடன் அவ்வாறு குறிப்பீடு செய்யப்பட்ட இப்போதுள்ள எழுத்திலான சட்டமானது துணைநிலைச் சட்டவாக்கங்களைக் கொண்டுள்ளவிடத்தும், பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும் வரை அல்லது ஏற்பாடுசெய்தாலொழிய இப்போதுள்ள எழுத்திலான அத்தகைய சட்டம் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும் என்று கூறும் ஏற்பாடானது, எந்த ஆளுக்கு அல்லது குழுவுக்கு, அத்தகைய துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கும், ஆக்கப்பட்டபின்னர் அவற்றைத் திருத்துவதற்கும், வேறுபடுத்துவதற்கும், ஒழிப்பதற்கும் அல்லது நீக்குவதற்குமான தத்துவம் வழங்கப்பட்டதோ, அந்த ஆள் அல்லது ஏற்பாடு செய்தாலொழிய, அவ்வாறு வழங்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குக் கொண்டுள்ள தத்துவத்தை எவ்வகையிலேனும் குறைப்பதாகக் கருதப்படுதலாகாது.

(5) அரசியலமைப்பு வேறுவகையில் ஏற்பாடுசெய்தாலொழிய, அரசிய லமைப்புத் தொடங்குவதன் முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் சட்டத்தின் சென்றகாலச் செயற்பாடு, அல்லது அரசியலமைப்புத் தொடங்குவதன் முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் சட்டத்தின் கீழ் முறைப்படி செய்யப்பட்ட அல்லது செய்ய அனுமதிக்கப்பட்ட எதுவும் அல்லது புரியப்பட்ட தவறு எதுவும் அல்லது பெறப்பட்ட அல்லது உறப்பட்ட உரிமை, விடுதலை, கடப்பாடு அல்லது தண்டம் எதுவும், அரசியலமைப்பு வலுவுள்ளதாக வருவதனால் எவ்வகையிலும் பாதிக்கப்படுதலாகாது, அல்லது பாதிக்கப்படுவதாகக் கருதப்படுதலாகாது.

(6) இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் உட்பட, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் நடைபெற்றுக்கொண்டிருந்த அல்லது முற்றுப்பெறாதிருந்த எல்லா வழக்குகள், குற்றவழக்குத் தொடுப்புக்கள், நடவடிக்கைகள், கருமங்கள் அல்லது விடயங்கள் எல்லாம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவும், ஏற்றமாற்றங் களுடனும், தொடர்ந்திருந்து வருவனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அரசியலமைப்புத் தொடங்கியதன் பின்னர் கொண்டு நடாத்தப்பட்டு முற்றுவிக்கவும்படலாம்.

**நீதித் துறை தொடர்பிலான ஏற்பாடுகள்**

**169.** பாராளுமன்றம் வேறுவிதமாக ஏற்பாடு செய்தாலொழிய –

(1) அரசியலமைப்புக்கு ஒவ்வாதனவாகவுள்ள 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாக சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள், அத்தகைய ஒவ்வாமையின் அளவுக்கு, நீக்கப்பட்டுவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்;

(2) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றம் அரசியலமைப்புத் தொடங்கியதும் இல்லாதொழிதல் வேண்டும்; அத்துடன், அதற்கிணங்க சொல்லப்பட்ட உயர்நீதிமன்றத்தைத் தாபித்தல் பற்றிய அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள், நீக்கப்பட்டுவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும். அரசியலமைப்பில் வேறு விதமாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தாலொழிய, இப்போதுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் உயர்நீதிமன்றம் பற்றிக் காணும் ஒவ்வொரு குறிப்பீடும், மேன்முறையீட்டு நீதிமன்றம் பற்றிய ஒரு குறிப்பீடாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(3) *1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் அரசியலமைப்புத் தொடங்கு வதற்கு நேர்முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருக்கும் மேன் முறையீட்டு நடவடிக்கைகள் எல்லாம் (இவை மீளாய்வு என்ற வகையிலான நடவடிக்கைகள், தொன்னிலை மீட்பு என்ற வகையிலான நடவடிக்கைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதோடு மேன்முறையீட்டு நீதிமன்றம், மேற்சொல்லிய நடவடிக்கைகளைக் கவனத்துட்படுத்தவும், விளங்கவும், தீர்மானிக்கவும், நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன், மேற்சொல்லிய உயர்நீதிமன்றத்தினால் அரசிய லமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் மேன்முறையீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புக்களும் கட்டளைகளும், அவை மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டன என்றாற்போன்று அல்லது ஆக்கப்பட்டன என்றாற்போன்று, அதே வலுவும் பயனும் கொண்டிருத்தலும் வேண்டும் ;*

(4) *1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தில், அரசியலமைப்புத் தொடங்கு வதற்கு நேர்முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருக்கும், உயர் தற்கிழமை எழுத்தாணைகளை விடுப்பதற்கான விண்ணப்பங்கள் என்ற வகையாகவும், வேறேதேனும் நிவாரணத்துக்கான விண்ணப்பங்கள் என்ற வகையாகவும், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் தீர்க்கப்படாதிருக்கும் உத்தரவுகளுக்கான விண்ணப்பங்கள் என்ற வகையாகவுமுள்ள முதனிலை நடவடிக்கைகள் எல்லாம், இந்த மேன் முறையீட்டு நீதி மன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதோடு, மேற்சொல்லிய நடவடிக்கைகளைக் கவனத்துட்படுத்தவும் விளங்கவும், தீர்மானிக்கவும் அல்லது தொடர்ந்து நடாத்தி முடிவுக்குக் கொண்டு வரவும் அத்தகைய நீதிமன்றம் அதே நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தினால் முதனிலை நடவடிக்கைகள் தொடர்பில் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புக்களும், சட்டங்களையும், அவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட தீர்ப்புக்களும் கட்டளைகளும் என்றாற்போன்று, அதே வலுவும் பயனும் கொண்டிருத்தலும் வேண்டும் :*

*ஆயின், பாராளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று கூறும் ஏதேனும் சார்த்தல் பற்றியதும் உயர் நீதிமன்றத்தில் முடிவுறாதிருப்பதும் ஆன எவையேனும் நடவடிக்கைகள் அரசியலமைப்பினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட உயர்நீதி மன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும் ;*

(5) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு, கட்டளைக்கு அல்லது தீர்வைக்கு எதிராக அரசியலமைப் பின் கீழ் உருவாக்கித் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யமுடியாது ; ஆனால் விடயத்துக்கேற்ப அத்தகைய தீர்ப்பு, கட்டளை அல்லது தீர்வை அது எந்த வழக்கில், விண்ணப்பத்தில் அல்லது வேறு நடவடிக்கையில் வழங்கப்பட்டதோ அந்த வழக்கிற்கு, விண்ணப்பத்திற்கு அல்லது வேறு நடவடிக்கை களுக்கு கட்சிக்காரர்களாக உள்ளவர்க்கிடையே இறுதியானதாதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய தீர்ப்புக்களும் கட்டளைகளும் தீர்வுகளும், அவை அரசியலமைப்பினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டவை அல்லது ஆக்கப்பட்டவையென்றாற் போன்று, முழுமையாகவும், செவ்வையாகவும் இணங்கியொழுகப்படுதலை உறுதிசெய்து கொள்வதற்குத் தேவையான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் (அதாவது, தீர்வுகள் ஏலவே பதியப்படாவிட்டால் அவற்றைப் பதிதல், வழக்குச் செலவுகளைக் கணித்தல், வழக்குச் செலவுகளை அறவிடல் ஆகியன உள்ளிட்ட எல்லா நடவடிக்கைகளையும்) எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆற்றல் வாய்ந்ததாதல் வேண்டு மென்பதோடு, அத்தகைய நீதிமன்றத்தின் எல்லா அலுவலர்களும் அத்தகைய எல்லா நடவடிக்கை களையும் எடுத்தலும் வேண்டும்.

(6) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 1 ஆம் அத்தியாயத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்வேறு மேல்நீதிமன்றங்களும், எல்லா நோக்கங்களுக்காகவும், பாராளுமன்றத்தால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட "இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்றம்" எனப்பெயர் பூண்ட தனி ஒரு நீதிமன்றமாக அமைவனவாகவும், தீவடங்கிலும் நியாயாதிக்கம் பிரயோகிக்கின்றனவாகவும் அப்போதைக்கு வலுவில் இருக்கின்ற சட்டத்துக்கு இணங்க பல்வேறு வலயங்களில் அந்நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்றனவாகவும் கருதப்படுதல் வேண்டும் ; அதற்கிணங்க, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக் கமையவும் இப்போதுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கு அமையவும் மேல் நீதிமன்றங்கள் பற்றியனவாய் அத்தகைய சட்டத்தின் அடங்கி இருக்கும் எல்லா ஏற்பாடுகளும், இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்துக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(7) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றங்களில் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருக்கும் உத்தரவுகளுக்கான விண்ணப்பங்கள் அல்லாத குற்றவியல் வழக்குகள், கடலாண்மை வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது கருமங்கள் எல்லாம் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்துக்கு

*மாற்றப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய நீதிமன்றம் அதனைக் கவனத்துக்குட்படுத்தவும், விளக்கவும், தீர்மானிக்கவும், அல்லது தொடர்ந்து நடாத்தி முடிவுக்குக் கொண்டுவரவும் நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன், மேற்சொல்லிய மேல் நீதிமன்றங்களால் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புக்களும், கட்டளைகளும், அவை இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புக்களும் கட்டளைகளும் என்றாற்போன்று, அதே வலுவும் பயனும் கொண்டிருத்தலும் வேண்டும் ;*

*(8) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் காலத்துக்குக் காலம் உகந்ததென அவர் கருதக்கூடியவாறு, அவர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வலயங்களில் மேல் நீதிமன்ற நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தற்கென இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்ற நீதிபதிகளைப் பெயர் குறித்து நியமிக்கலாம் ; அத்துடன் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதிநிருவாகச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், மேல்நீதிமன்றத்தில் தீர்க்கப்படாதிருக்கும் அல்லது இனிமேல் தொடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் விளங்கி முடிவுசெய்தல் தொடர்பில் ஏற்றமாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் ;*

*(9) இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தில் இதன்பின்னர் கோப்பிடப்படும் எல்லாக் குற்றப்பகர்வுகளும் இலங்கைக் குடியரசின் பெயரில் இருத்தல் வேண்டுமென்பதோடு, சட்டத்துறைத் தலைமை யதிபதியினால் அல்லது 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 189 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும் ;*

*(10) எவரேனும் ஆளைத் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமை பற்றியதாய் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களில் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருக்கும் தேர்தல் ஆட்சேபனை மனு நடவடிக்கைகள் எல்லாம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதோடு, மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த நடவடிக்கைகளைக் கவனத்துட்படுத்தவும், விளங்கவும், தீர்மானிக்கவும் அல்லது தொடர்ந்து நடாத்தி முடிவுக்குக்கொண்டு வரவும் அதே நியாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தாலும், மேலே சொல்லப்பட்ட மேல் நீதிமன்றங்களாலும் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் அத்தகைய தேர்தல் ஆட்சேபனை மனு நடவடிக்கைகள் தொடர்பில்*

வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புகளும் கட்டளைகளும், அவை விடயத்துக்கேற்ப, அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தாலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தாலும் வழங்கப் பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்ப்புகளும் கட்டளைகளும் என்றாற் போன்று, அதே வலுவும் பயனும் கொண்டிருத்தலும் வேண்டும். ஏதேனும் தேர்தல் ஆட்சேபனை மனுவை விளக்கித் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்பினால் நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அத்தகைய ஏதேனும் தேர்தல் ஆட்சேபனை மனுவை விளங்கித் தீர்மானிப்பதற்கென மேன்முறையீட்டு நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கான தத்துவம் அவருக்கு இத்தால் உரித்தாக்கப்படுகின்றது ;

(11) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாக சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்ச் சட்டத்தரணிமாராக அனுமதிக்கப்பட்டுச் சேர்ந்துக்கொள்ளப்பட்டவர்களாகக் கருதப்பட்ட எல்லாச் சட்டத்தரணிமாரும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்பினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணிமாராக அனுமதிக்கப்பட்டுச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(12) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நிருணயிக்கப் படும் தேதிக்குப் பின்னர் சட்டத்தரணி எவரும் அவர், நான்காம் அட்டவணையில் தரப்பட்டிருக்கும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் நீதிபதியின் முன்னிலையில், அல்லது 114 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணம் கூறப்பட்ட வேறெவரேனும் நீதித்துறை அலுவலரின் முன்னிலையில் செய்து கீழே ஒப்பமிட்டாலொழிய அல்லது செய்து கீழே ஒப்பமிடும்வரை அல்லது மொழிந்து கீழே ஒப்பமிடும்வரை ஏதேனும் நடவடிக்கையில் எவரேனும் கட்சிக்காரருக்குப் பிரதிநிதியாக இருக்கவோ ஏதேனும் நீதிமன்றத்தில், நியாய சபையில் அல்லது வேறு நிறுவனத்தில் உரைப்பதற்கான உரிமை வழங்கப்படவோ உரித்துடையவராதலாகாது ; அத்துடன், அவ்வாறு செய்யப்பட்டு அல்லது மொழியப்பட்டுக் கீழே ஒப்பமிடப்பட்ட சத்தியத்தை அல்லது உறுதியுரையை உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்புதல் அத்தகைய நீதிபதியின் அல்லது நீதித்துறை அலுவலரின் கடமையாதல் வேண்டும் ; பதிவாளர் அதனை அத்தகைய நீதிமன்றத்தின் ஏட்டில் பதிவித்தல் வேண்டும். அத்தகைய சட்டத்தரணி அவ்வாறு சத்தியஞ்செய்து அல்லது உறுதியுரை மொழிந்து கீழே ஒப்பமிட்டார் என்பதற்கு அத்தகைய பதிவொன்றே சான்றாதல் வேண்டும் ;

(13) சட்டத்துறைத் தலைமையதிபதிபற்றியும், சட்டத்தொழில் பற்றியும், அரச சட்டத்தரணிகள் பற்றியும், அரச சட்ட வரைஞர்கள் பற்றியும் கூறும் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் நடைமுறையிலிருப்பன வாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதிநிருவாகச் சட்டத்தின் 33 ஆம் பிரிவு தொடங்கி 36 ஆம் பிரிவு வரையிலான பிரிவுகளிலும் அதுபற்றிய எல்லா விதிகளிலும் ஒழுங்குவிதிகளிலும் உயர்நீதிமன்றம் பற்றியும் ஒவ்வொரு குறிப்பீடும் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றம் பற்றிய குறிப்பீடாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

(14) அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதன் விளைவாக அரசிய லமைப்பிலோ ஏதேனும் எழுத்திலான சட்டத்திலோ ஏற்பாடு செய்யப்படாததும், ஏதேனும் நீதிமன்றத்தில் கடைப்பிடிக்கப் படவேண்டிய ஏதேனும் நடவடிக்கைமுறை அல்லது வழக்காறு தொடர்பிலானதும் ஆன ஏதேனும் கருமம் அல்லது பிரச்சினை எழுமாயின், அநீதியைத் தடுப்பதற்கு தேவையான அல்லது விடயத்தின் நீதி தேவைப்படுத்துவதற்கேற்ப அத்தகைய பணிப்புகளை விடுப்பதற்கும், அரசியலமைப்பின் XV ஆம், XVI ஆம், அத்தியாயங் களின் ஏற்பாடுகளுக்கு முழுமையானதும் நிறைவானதுமான பயன்கொடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கும் பிரதம நீதியரசருக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும் ;

(15) (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிலுள்ள உயர்நீதிமன்றம் பற்றிய குறிப்பீடு எதுவும், அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட உயர்நீதிமன்றம் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக எவரேனும் ஆள் நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள், அரசியலமைப் பின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து விலகினாலொழிய அல்லது செயற்பட மறுத்தாலொழிய அல்லது செயற்பட இயலாதவராக வந்தாலொழிய அல்லது அத்தகைய உறுப்பினராக அவரது கடமைகளைப் புரிவதினின்றும் சனாதிபதியினால்

விடுவிக்கப்பட்டிருந்தா லொழிய, அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும் என்பதுடன் 81 (1) ஆம் உறுப்புரையின் நோக்கங்களுக்காக அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக கருதப்படுதலும் வேண்டும் ;

(iii) விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தாபிக்கும் எழுத்தாணையில் தவிசாளராகக் குறித்துரைக்கப்படும் அத்தகைய உறுப்பினர் எவரும், இப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தவிசாளராகத் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும் ;

(16) (i) அரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னர் இருந்து வந்த தேசிய அரசுப் பேரவையின் சிறப்புரிமைகளை மீறுதலானது, பாராளுமன்றச் சிறப்புரிமைகளை மீறுதலாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கப் பாராளுமன்றமும், உயர்நீதிமன்றமும் அத்தகைய பாராளுமன்றச் சிறப்புரிமை மீறுகைக்காக எவரேனும் ஆள் பற்றிக் கவனத்துட்படுத்துவதற்கும் அவரைத் தண்டிப்பதற்கும் சட்டப்படி தத்துவம் உடையனவாதலும் வேண்டும் ;

(ii) இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வாறான அத்தகைய பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறுகை யொன்றாக அமைகின்றதெனச் சார்த்தப்படும் ஏதேனும் செயல் அல்லது தவிர்வு சம்பந்தமாக அல்லது அவை தொடர்பில், திருத்தப்பட்டவாறான 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் எடுக்கப்பட் டிருகின்றவிடத்து, அத்தகைய நடவடிக்கை செல்லுபடியான முறையில் எடுக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள வாறான அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறான மேலதிக நடவடிக்கைகள் எவையும், (அத்தகைய பாராளுமன்றச் சிறப்புரிமை மீறலாக அமைகின்றதெனச் சார்த்தப்பட்டுள்ள ஏதேனும் செயல் அல்லது தவிர்வு அரசியலமைப்புத் தொடங்கியதற்குப் பின்னர் புரியப்பட்டதென்றாற்போன்று அல்லது இடம்பெற்றுள்ளது என்றாற் போன்று) சார்த்தப்பட்ட அத்தகைய பாராளுமன்றச் சிறப்புரிமை மீறுகை சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் எடுக்கப்படலாம்.

**இராணி வழக்குரைஞர்கள், சிரேட்ட சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பான ஏற்பாடு**

[180] [**169 அ.** (1) (அ) அரசியலமைப்பு வலுவுக்கு வருவதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட இராணி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் ; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பு வலுவுக்கு வந்ததன் பின்னர் நியமிக்கப்பட்ட சிரேட்ட சட்டத்தரணி ஒவ்வொருவரும்,

இவ்வுறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து சனாதிபதி வழக்குரைஞர் என அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டும் என்பதுடன், இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளையும் தொடர்ந்தும் அனுபவித்தலும் வேண்டும்.

(2) சிரேட்ட சட்டத்தரணிகளின் நியமனம் தொடர்பாக 136 ஆம் உறுப்புரையின் கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும், இவ்வுறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் சிரேட்ட சட்டத்தரணி பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் இவ்வுறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து சனாதிபதி வழக்குரைஞர் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.]

---

180 அரசியலமைப்புக்கான எட்டாவது திருத்தத்தின் 4 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

அத்தியாயம் XXII

## பொருள்கோடல்

**பொருள்கோடல்.**

***170.*** அரசியலமைப்பின் –

"குடியியல் தகுதியீனம்" என்பது, அரசியலமைப்புத் தொடங்கிய நேரத்தில், 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அரசியலமைப்பின் தொடக்கம்" என்பது, 172 ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் பிரகடனத்தின் மூலம் நியமிக்கப்படும் தேதி எனப் பொருளாகும்;

"பொதுத்தேர்தல் முடிவுறுதல்" என்பது, 70 (5) ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதியில் அல்லது தேதிகளில் எந்தத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் வாக்கெடுப்பு நடைபெறுகின்றதோ அந்த எல்லாத் தேர்தல் மாவட்டங்களுக்குமான பாராளுமன்ற உறுப்பினர்கள், முறையே தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எந்த நேரத்தில் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என வெளிப்படுத்தப்படுகின்றார்களோ அந்த நேரம் என அல்லது அங்கீகரிக்கப் பட்ட தனியொரு கட்சி அல்லது தனியொரு சுயேச்சைக்குழு எந்த நேரத்தில் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளில் பாராளுமன்ற மொத்த எண்ணிக்கையினரில் அரைவாசிக்கு மேற்பட்டோரைத் தன்கட்சிக்கு அல்லது தன் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகப் பெறுகின்றதோ அந்நேரம் என்று, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அது எனப் பொருளாகும்;

"இப்போதுள்ள சட்டம்", "இப்போதுள்ள எழுத்திலான சட்டம்" என்பன, முறையே அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருந்தன வும், அரசியலமைப்பின் கீழ் தொடர்ந்து வலுவிலிருப்பனவுமான, எவையேனும் சட்டமும், எழுத்திலான சட்டமும் எனப்பொருளாகும்;

"நீதித்துறை அலுவலர்" என்பது [181][111க ஆம் உறுப்புரையில் தவிர] -

(அ) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக, அல்லது மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவி வகிக்கின்ற ஆள் என்று;

(ஆ) மேல் நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி என்று அல்லது நீதி நிருவாகத்துக்கென அல்லது ஏதேனும் தொழிற் பிணக்கை அல்லது வேறு பிணக்கை விளங்கித்தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட வேறெதேனும் முதனிலை நீதிமன்றத்தின், நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின், எவரேனும் நீதிபதி, தலைமை தாங்கும் அலுவலர் அல்லது உறுப்பினர் என்று

181 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 22 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

பொருளாகும் ; ஆனால் நடுத்தீர்ப்பு பணிகளை நிறைவேற்றும் ஆளை அல்லது நீதித்துறை இயல்பினவான பணிகளை நிறைவேற்றுதலைத் தவிர முக்கிய கடமையாக அல்லது கடமைகளாகக் கொண்டிராத பகிரங்க அலுவலரை உள்ளடக்காது.

ஆளொருவர், அரசியலமைப்பின் கருத்தெல்லைக்குட்பட்ட நீதித்துறை அலுவலர் ஒருவரா அல்லரா என்ற கேள்வியைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றம் அல்லது நியாயசபை அல்லது நிறுவனம் எதற்கும் நியாயாதிக்கம் இருத்தலாகாது ; ஆனால் அத்தகைய கேள்வி நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அதன்மீதான அந்த ஆணைக்குழுவின் முடிவானது முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

அவ்வாறு தீர்மானிக்கப்படுவதன் முன்னர் அத்தகைய ஆளினால் புரியப்பட்ட செயல் எதுவும் அல்லது அத்தகைய ஆளின் முன்னர் நடைபெற்ற நடவடிக்கை எதுவும், அத்தகைய தீர்மானத்தின் காரணமாக செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது,

"சட்டம்" என்பது, ஏதேனும் பாராளுமன்றச் சட்டம் எனவும் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் ஏதேனும் சட்டமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டம் எனவும் பொருளாவதுடன், அரசுப் பேரவைக் கட்டளையையும் உள்ளடக்கும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருளாவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும் ;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும் கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினால் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடைய ஏதேனும்கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப்பொருளாகும்;

[182]"பகிரங்க அலுவலர்" என்பது நீதித்துறை அலுவலர் தவிர்ந்த, ஆனால் பின்வருவோரை உள்ளடக்காத, குடியரசின்கீழ் சம்பளத்துக்காக ஏதேனும் பதவி வகிக்கின்ற ஆளொருவர் என்று பொருள்படும்–

(அ) சனாதிபதி;
(ஆ) பிரதம அமைச்சர்;
(இ) சபாநாயகர்;

182 அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 29 ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

(ஈ) உறுப்புரை 44 அல்லது 45 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சர்;

(உ) உறுப்புரை 46 இன் கீழ் நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர்;

(ஊ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(எ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர்;

(ஏ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஐ) உறுப்புரை 41ஆ வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர்;

(ஒ) பாராளுமன்ற செயலாளர் நாயகம்;

(ஓ) பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியின் உறுப்பினர் ஒருவர்;

(ஔ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(க) அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ங) கணக்காய்வாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ச) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.".

"அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி" என்பது, பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்தாலன்றி 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கருதப்படும் அரசியற் கட்சி ஒவ்வொன்றும் எனப் பொருளாகும்;

"ஆள்புல நீர்ப்பரப்பு" என்பது, இலங்கையின் ஆள்புலக்கடற்பரப்பையும், வரலாற்றுவழிச் சொந்தமான நீர்ப்பரப்புக்களையும் உள்ளடக்கும்;

"எழுத்திலான சட்டம்" என்பது, ஏதேனும் சட்டமும் துணை நிலைச்சட்டமும் எனப் பொருளாவதுடன், ஏதேனும் சட்டத்தின்கீழ் சட்டங்களையும் பிரகடனங்களையும் விதிகளையும் துணை விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்குத் தத்துவம் அல்லது அதிகாரம் உடைய ஏதேனும் குழுவினால் அல்லது ஆளினால் ஆக்கப்படும் அல்லது வழங்கப்படும் அத்தகைய [183][மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் நியதிச்சட்டங்கள்,] கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குவிதிகள் என்பனவற்றையும் உள்ளடக்கும்.

183 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 6 ஆம் வாசகத்தில் சேர்க்கப்பட்டது.

*அத்தியாயம்* XXIII

**நீக்கம்**

***171.*** *ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளன்று வகுத்தமைக்கப்பட்டுச் சட்டமாக்கப்பட்ட அரசியலமைப்பு இத்தால் நீக்கப்படுகின்றது.* ***நீக்கம்***

அத்தியாயம் XXIV

## அரசியலமைப்பினைப் பிரசித்தஞ் செய்தல்

***அரசியலமைப் பினைப் பிரசித் தஞ் செய் தல்***

***172.*** *(1) ஓராம் அத்தியாயத்திலிருந்து XXIII ஆம் அத்தியாயம் வரையிலான ஏற்பாடுகள், சனாதிபதியினால் பிரகடனத்தின் மூலம் நியமிக்கப்படும் நாளன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.*

*(2) பாராளுமன்றம் அவ்வாறு நியமிக்கப்படும் நாளன்று கூடுதல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி பாராளுமன்றம் அவ்வாறு கூடவேண்டிய நேரத்தை அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கலாம்.*

**வான் முகில் வழாது பெய்க**
**மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன் முறை அரசு செய்க**
**குறைவிலா துயிர்கள் வாழ்க**

**மங்களம் உண்டாகுக.**

## அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் மற்றைய நிலை பெயர்கால ஏற்பாடுகள்

*30. (1) (அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நிலையாகவுள்ள ஒன்பதாவது பாராளுமன்றம் முன்னரே கலைக்கப்பட்டாலொழிய, 2025ஆம் ஆண்டு ஒகத்து 19 ஆம் தேதிவரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கலைக்கப்படுதலும் வேண்டும். நிலைபெயர்கால ஏற்பாடுகள்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தேதிக்குப் பின்னர் பதவியைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற பின்வரும் ஒவ்வோராளும் அத்தகைய பதவிகளைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும் என்பதுடன் 41இ ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்திக்கமைய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் அப்பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) பிரதம நீதியரசர்;

(ஆ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்;

(இ நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்;

(உ) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்;

(ஊ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(எ) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்;

(ஏ) கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(ஐ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி;

---

* அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்திற்கு வழங்கப்பட்டுள்ள இலக்கங்களின் பிரகாரம் இப்பிரிவின் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஒ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்);

(ஓ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

(ஔ) மேல் நீதிமன்ற நீதிபதிகள்; அல்லது

(க) நீதிமுறை அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப் பட்ட பகிரங்க அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் அல்லது பொலிசு அலுவலர்கள்,

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வொரு ஆளும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்.

(4) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வோராளும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட அத்தகைய பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்,-

(அ) தேர்தல் ஆணைக்குழு;

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(உ) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு;

(ஊ) நிதி ஆணைக் குழு; அத்துடன்

(எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த தேதியன்று, மேல்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது ஓர் உறுப்பினராக பதவிவகிக்கின்ற ஆளொருவர், அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்துக்கிணங்க முறையேயான

ஆணைக்குழுக்கள் அமைத்துருவாக்கப்படும் அத்தகைய தேதி வரை முறையேயான அவர்களது பதவிகளுக்கான தத்துவங்களையும் பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(5) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள –

(அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர்களினால் செய்யப்பட்ட எல்லா மேன் முறையீடுகள் தொடர்பிலான எல்லாக் கருமங் களும்,

அத்தேதியிலிருந்து பயன்பட, 155அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அதற்கிணங்க தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலானதும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லாக் கருமங்களும் 153அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு அத்தேதியிலிருந்து பயன்பட மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

ஐயத்தைத் தவிர்த்தல்

**31.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக,-

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற் போந்த நாளன்று பாராளுமன்றப் பேரவையின் விதப்புரையை அல்லது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் தேவைப்பாடொன்று உள்ளவிடத்து, பாராளுமன்றப் பேரவைக்கான குறிப்பீடு, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக அரசியலமைப்புப் பேரவைக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப்பொருள் கொள்ளப் படுதல் வேண்டுமெனவும்; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் (xiii) ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்படும் தமைமையீனத் திற்கு அமைந்தவராக உள்ளவரான இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாம் ஒன்பதாம் பாராளுமன்றத்தின் எவரேனும் உறுப்பினர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக பாராளுமன்றத்தில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமையற்றவராதல் வேண்டும் எனவும்,

இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

## முதலாம் அட்டவணை

### உறுப்புரை 5

### நிருவாக மாவட்டங்களின் பெயர்கள்

1. கொழும்பு
2. கம்பஹா
3. களுத்துறை
4. கண்டி
5. மாத்தளை
6. நுவரேலியா
7. காலி
8. மாத்தறை
9. அம்பாந்தோட்டை
10. யாழ்ப்பாணம்


[184][11. கிளிநொச்சி]

12. மன்னார்
13. வவுனியா
14. முல்லைத்தீவு
15. மட்டக்களப்பு
16. அம்பாறை
17. திருகோணமலை
18. குருநாகல்
19. புத்தளம்
20. அனுராதபுரம்
21. பொலனறுவை
22. பதுளை
23. மொனறாகலை
24. இரத்தினபுரி
25. கேகாலை

184 அரசியலமைப்புக்கான ஏழாவது திருத்தத்தின் 5(அ)ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

## இரண்டாம் அட்டவணை

### உறுப்புரை 6



தேசியக் கொடி

# மூன்றாம் அட்டவணை

## உறுப்புரை 7

## தேசிய கீதத்தின் சொற்களும் இசையமைப்பும்

ராகம் – யமன்கல்யாணி ராகம் – சதுஸ்ரஏகம்

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கா.. | கா.. | ரீ.. | நீரீ | ஸா.. | -- | -- | ஸாநீ | ஸாரீ | காரீ | காமா | பாதா | பா.. | ..ஸா | நீ.. | ..தா |
| | ஸ்ரீ | லங் | கா | தா | யே | -- | -- | நம் | ஸ்ரீ | — | — | லங் | கா | --ந | மொ | --ந |
| | பா.. | ..மா | கா.. | ..கா | ரீ.. | நீரீ | ஸா.. | -- | | | | | | | | |
| | மோ | -ந | மோ | --ந | மோ | தா- | யே | -- | | | | | | | | |
| 1. | பாஸா | ஸாஸா | ஸாஸா | நீஸா | ரீ.. | ..நீ | ரீகா | ரீகா | மாபா | பா.. | பாபா | *மாதா | பா.. | .... | .... | .... |
| | நல் | வெழில் | பொலி | சீர | ணி | ந | லங்கள் | யாவும் | நிறை | வான் | மணி | லங் | கா | .... | .... | .... |
| | ஸா.. | ஸாபா | தாதா | மாமா | பாபா | காகா | மாமா | ரீகா | மாமா | கா.. | ரீரீ | நீரீ | ஸா | ... | .... | |
| | ஞா | லம்பு | கழ | வள | வயல் | நதி | மலை | மலர் | நறுஞ் | சோ | லைகொள் | லங் | கா | .. | .... | .... |
| | ஸாஸா | ரீரீ | காகா | மாமா | பாபா | மாதா | பா.. | .... | ரீரீ | காகா | மா.. | பாமா | பா.. | .... | .... | .... |
| | நம | துறு | புக | லிடம் | என | ஒளிர் | வாம் | .... | நம | துதி | யேல் | தா | யே | .... | .... | .... |
| | தாதா | நீநீ | ஸாஸா | ரீரீ | நீ.. | ஸா.. | தா.. | பா.. | பாபா | மாமா | ரீ.. | நீரீ | ஸா | .... | .... | ஸாநீ |
| | நம | தலை | நின | தடி | மேல் | வைத் | தோ | மே | நம | துயி | ரே | தா | யே | யே | .... | நம் |
| | ஸாரீ | காரி | காமா | பாதா | பா.. | ..ஸா | நீ.. | ..தா | பா.. | ..மா | கா | ..கா | ரீ | நீரீ | ஸா | .... |
| | ஸ்ரீ | — | — | லங் | கா | --ந | மோ | -ந | மோ | -ந | மோ | ந | மோ | தா | யே | .... |
| 2. | பாஸா | ஸாஸா | ஸாஸா | நீஸா | ரீ.. | .... | .... | ... | ரீரீ | காகா | மாமா | பாமா | பா.. | .... | .... | .... |
| | நம | தா | ருகுன் | ஆ | னாய் | .... | .... | ... | நவை | தவிர் | உணர் | வா | னாய் | .... | .... | .... |
| | பாபா | ஸா.. | நீநீ | தாபா | தா | .... | .... | ... | ரீரீ | காகா | மாமா | பாமா | பா.. | .... | .... | .... |
| | நம | தேர் | வலி | யா | னாய் | .... | .... | ... | நவில் | சுதந் | திரம் | ஆ- | னாய் | .... | .... | .... |
| | பாபா | ஸாஸா | ஸாஸா | நீஸா | ரீ.. | .... | .... | ... | ரீரீ | காகா | மாமா | பாமா | பா.. | .... | .... | .... |
| | நம | தின | மையை | நாட் | டே | .. | .... | .... | நகு | மடி | தனை | யோட் | டே.. | .... | .... | .... |
| | பாமா | ஸாஸா | நீதி | தாபா | தா.. | .... | .... | ... | ரீரீ | காகா | மாரீ | நீரீ | ஸா.. | .... | .... | ஸாநீ |
| | அமை | வுறும் | அறி | வுட | னே | .... | .... | ... | அடல் | செறி | துணி | வரு | னே | .... | .... | நம் |
| | ஸாரீ | காரீ | காமா | பாதா | பா.. | ..ஸா | நீ.. | ..தா | பா.. | மா | கா.. | ..கா | ரீ.. | நீரீ | ஸா.. | .... |
| | ஸ்ரீ- | — | — | லங் | கா-- | ந | மோ- | --ந | மோ | --ந | மோ- | --ந | மோ | தா | யே.. | .... |
| 3. | பாஸா | ஸா.. | ஸாஸா | நீஸா | ரீ | ரீ | ரீகா | ரீகா | மாபா | பாபா | பா.. | *மாதா | பா.. | ... | .... | .... |
| | நம | தார் | ஒளி | வள | மே | ந | றிய | மலர் | என | நில | வும் | தா- | யே- | ... | .... | .... |
| | ஸா.. | ஸாபா | தாதா | மாமா | பாபா | காகா | மாமா | ரீகா | மாமா | காகா | ரீரீ | நீரீ | ஸா.. | ... | .... | .... |
| | யா | மெலாம் | ஒரு | கரு | ணை | அனை | பயந் | நித் | எழில் | கொள் | சேய்கள் | என | வெ | ... | .... | .... |
| | ஸாஸா | ரீரீ | காகா | மாமா | பாபா | *மாதா | பா.. | .... | ரீரீ | காகா | மா.. | பாமா | பா.. | ... | .... | .... |
| | இய | லுறு | பிள | வுகள் | தமை | அற | வே | .... | இழி | வென | நீக் | கிடு | வோம் | ... | .... | .... |
| | தா.. | நீநீ | ஸா.. | ரீரீ | நீ | ஸாஸா | தா.. | பாபா | பாபா | ..மா | ரீ.. | நீரீ | ஸா.. | ... | .... | .... |
| | ஈ | ழசி | ரோன் | மணி | வாழ் | வுறு | பூ | மணி | நமோ | -ந | மோ | தா | யே | ... | .... | நம் |
| | ஸாரி | காரீ | காமா | பாதா | பா | ஸா | நீ.. | ..தா | பா | ..மா | கா.. | கா | ரீ.. | நீரீ | ஸா | .... |
| | ஸ்ரீ | — | — | லங் | கா | ந | மோ | --ந | மோ | --ந | மோ | --ந | மோ-- | தா | யே-- | .... |

* இந்த அடையாளம் பிரதிமத்யமத்தைக் குறிக்கும்.

**நான்காம் அட்டவணை**

*உறுப்புரைகள் 32, 53, 61, 107, 165*

*"........................................................................................................ ஆகிய நான் ................................................... என்ற பதவிக்கான கடமைகளையும் பணிகளையும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்கப் பற்றுறுதியோடு புரிவேன் என்றும், நிறைவேற்றுவேன் என்றும், இலங்கைக் குடியரசுக்கு விசுவாசமுள்ளவனாக இருப்பேன் என்றும் எனது திறமைக்கு இயன்றவரை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக்காப்பேன் என்றும்* **பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்.**

**சத்தியஞ் செய்கிறேன்.".**

**ஐந்தாம் அட்டவணை**

*உறுப்புரை 111 க.*

*எழுதுவினைஞர்கள்*
*[185][பிரதிப் பிசுக்கால் அலுவலர்கள்]*
*பேச்சு மொழிபெயர்ப்பாளர்கள்*
*சுருக்கெழுத்தாளர்கள்*
*தட்டெழுத்தாளர்கள்*
*கட்டுநர்கள்*

---

*185 அரசியலமைப்புக்கான பதினோராவது திருத்தத்தின் 7ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.*

## ஆறாம் அட்டவணை

*உறுப்புரை 162 (2)*

| | |
|---|---|
| *கொழும்பு நகரமும் தெஹிவளை – கல்கிஸையும் (மாநகர எல்லைக்குட்பட்ட பகுதி)* | *1 உறுப்பினர்* |
| *கொழும்பு மாவட்டம் (கொழும்பு நகரமும் தெஹிவளை – கல்கிஸையும் நீங்கலாக)* | *2 உறுப்பினர்கள்* |
| *களுத்துறை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *கண்டி மாவட்டம்* | *2 உறுப்பினர்கள்* |
| *மாத்தளை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *நுவரேலியா மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *காலி மாவட்டம்* | *2 உறுப்பினர்கள்* |
| *மாத்தறை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *அம்பாந்தோட்டை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *யாழ்ப்பாணம் மாவட்டம்* | *3 உறுப்பினர்கள்* |
| *மன்னார், வவுனியா மாவட்டங்கள்* | *1 உறுப்பினர்* |
| *மட்டக்களப்பு மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *திருகோணமலை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *அம்பாறை மாவட்டம்* | *2 உறுப்பினர்கள்* |
| *குருநாகல் மாவட்டம்* | *3 உறுப்பினர்கள்* |
| *புத்தளம் மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *அநுராதபுரம் மாவட்டம்* | *3 உறுப்பினர்கள்* |
| *பொலநறுவை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *பதுளை மாவட்டம்* | *3 உறுப்பினர்கள்* |
| *மொனறாகலை மாவட்டம்* | *1 உறுப்பினர்* |
| *கேகாலை மாவட்டம்* | *2 உறுப்பினர்கள்* |
| *இரத்தினபுரி மாவட்டம்* | *2 உறுப்பினர்கள்* |

*"மாவட்டம்" என்பது (392 ஆம் அத்தியாயமான) நிருவாக மாவட்டங்கள் பற்றிய சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டவையும், 1977 ஆம் ஆண்டு யூலை 21 ஆந் தேதியிலுள்ளபடியாக அதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டவையுமான நிருவாக மாவட்டங்கள் எனப் பொருளாகும்.*

## [186][ ஏழாம் அட்டவணை

*157அ(7) உறுப்புரையும் 161 (ஈ)(iii) ஆம் உறுப்புரையும்*

*"................................................................................................ ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்கவோ, ஆக்கமளிக்கவோ, ஊக்குவிப்பு அளிக்கவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கிறேன் /சத்தியஞ்செய்கின்றேன்.]*

186 அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் 5 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

## [187][எட்டாம் அட்டவணை (உறுப்புரை 154அ)

### மாகாணங்கள்

மேற்கு மாகாணம்
வடமேற்கு மாகாணம்
ஊவா மாகாணம்
சப்ரகமுவ மாகாணம்
மத்திய மாகாணம்
கிழக்கு மாகாணம்
தெற்கு மாகாணம்
வடமத்திய மாகாணம்
வட மாகாணம்]

187 அரசியலமைப்புக்கான பதிமூன்7றாவது திருத்தத்தின் 7 ஆம் வாசகத்தால் எட்டாம் அட்டவணை சேர்க்கப்பட்டது.

[ஒன்பதாம் அட்டவணை[188]

### நிரல் I

### மாகாண சபை நிரல்

1. பொலிசும் பொது ஒழுங்கும் -

பின்னிணைப்பு (1) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, மாகாணத்தினுள் பொது ஒழுங்கும் பொலிசுத் தத்துவங்களின் பிரயோகமும், ஆனால் தேசிய பாதுகாப்பையும், தேசிய பந்தோபஸ்தையும் ஆயுதம்தாங்கிய எவையேனும் படைகளின் அல்லது குடியியல், தத்துவத்துக்கு உதவியாக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழான வேறெவையேனும் படைகளின் பயன் பாட்டையும் இது உள்ளடக்காது; அத்துடன் கொழும்பு நகரையும், ஸ்ரீ ஜயவர்த்தனபுரயையும் அவற்றின் சுற்றயல்களையும் இது உள்ளடக்காது; இவற்றின் எல்லைகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சனாதிபதியினால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

2. திட்டமிடல் -
மாகாணப் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தல்.

3. கல்வியும் கல்விச் சேவைகளும் -
பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, கல்வி.

4. உள்ளூராட்சி -

4.1 உள்ளூராட்சி, கிராம நிருவாகம் என்ற நோக்கங்களுக்காக மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்ற உள்ளூரதிகார சபைகள்; ஆயின், உள்ளூரதிகார சபைகளின் அமைப்பும், மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

4.2 கலைத்தற்கான தத்துவமுட்பட, (சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறு, கலைத்தற்கான ஏதுக்கள்பற்றிய அத்தகைய நீதிமுறை மருவிய விசாரணைகளுக்கும், அவை தொடர்பிலான சட்டப்படியான பரிகாரங்களுக்கு அமையவும், அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறாகக் கணக்காய்வு தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமையவும்), சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல்;

4.3 உள்ளூரதிகார சபைகளுக்குத் தற்போதுள்ள சட்டத்தின்கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே அவை கொண்டிருக்கும். மாநகர சபைகளும், நகர சபைகளும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழும் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருக்கும். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரதேச சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை

188 அரசியலமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் 7 ஆம் வாசகத்தால் சேர்க்கப்பட்டது.

உள்ளூரதிகார சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக் கூடும் ; ஆனால் அவற்றின் தத்துவங்களை அகற்ற முடியாது.

4.4 தற்போதுள்ள சட்டத்தின் கீழ் கிராமோதய சபைகளுக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களையே கிராமோதய சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை கிராமோதய சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக்கூடும்.

5. மாகாண வீடமைப்பும் நிர்மாணமும் –

5:1 உதவியளிக்கப்பட்ட சுய உதவி வீடமைப்புக் கருத்திட்டங்களும், வீடமைப்புக் கடன்களும் கட்டடப் பொருட்களுக்கு ஏற்பாடு செய்தலும் உட்பட, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கருத் திட்டங்கள் அல்லாத மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும், செயற்படுத்தலும், ஒருங் கிணைத்தலும், மேற் பார்வை செய்தலும் கண்காணிப்புச் செய்தலும் ;

5:2 வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் சட்டத்தையும் வாடகைச் சட்டத்தையும் ஒரு மாகாணத்தினுள் செயற்படுத்துதல் ;

5:3 இந்நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பிலான நிர்மாணச் செயற்பாடு.

6. மாகாணத்தினுள், பின்வருவன தவிர, வீதிகளும் அவற்றின் மீதான பாலங்களும், பாதைகளும் –

(அ) தேசியப் பெருவழிகள் ;
(ஆ) தேசியப் பெருவழிகள் மீதான பாலங்களும், பாதைகளும்.

7. சமூகசேவைகளும் புனர்வாழ்வளித்தலும் –

7:1 நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ;
7:2 இலம்பாடுற்ற ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வளித்தல் ;
7:3 உடல், உள, சமூகக் குறைபாடுடைய ஆட்களுக்குப் புனர்வாழ்வளித் தலும் அவர்களின் சேமநலனும் ;
7:4 உடற்குறைபாடுள்ளவர்களுக்கும் ஊழியத்துக்கமர்த்தப்பட முடியாத வர்களுக்கும் நிவாரணமளித்தல்.

8. மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச் சேவைகளையும் மோட்டார் வாகனங்களின் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்வதையும் ஒழுங்கு படுத்தலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும்.

9. கமத்தொழிலும் கமநலச் சேவைகளும் –

9:1 (மாகாணங்களுக்கு இடையேயான நீர்ப்பாசன, காணிக் குடியிருப்புத் திட்டங்கள், அரச காணி, பெருந்தோட்டக் கமத்தொழில் என்பவற்றில் தவிர) மாகாண நோக்கங்களுக்காகவும் கமத்தொழிற் சேவைகளுக் காகவும் கமத்தொழில் விசாலிப்பு, மேம்படுத்துகை, கல்வி என்பன உட்பட, கமத்தொழில் ;

9:2 சிறு நீர்ப்பாசன வேலைகளை மறுசீரமைத்தலும் பேணுதலும் ;

9:3 தேசியக் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களாகப் பெயர் குறிக்கப்பட்ட நிறுவனங்களன்றியும் அவை தவிரவும், கமத்தொழில் ஆராய்ச்சி.

10. கிராமிய அபிவிருத்தி –

11. சுகாதாரம் –

11:1 (போதனா வைத்தியசாலைகளும் விசேட நோக்கங்களுக்காகத் தாபிக்கப்பட்ட மருத்துவமனைகளும் தவிர) பொது மருத்துவ மனைகளையும், கிராம மருத்துவ மனைகளையும், மகப்பேற்று மனைகளையும், மருந்தகங்களையும் தாபித்தலும் பேணுதலும் ;

11:2 பொது சுகாதாரச் சேவைகள், சுகாதாரக் கல்வி, போசணை குடும்பச் சுகாதாரம், மகப்பேற்று, சிறுவர் பராமரிப்பு, உணவும் உடனலமும், சூழல்சார் சுகாதாரம் ;

11:3 மாகாணத்துக்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தையும் ஆண்டுச் சுகாதாரத் திட்டத்தையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் ;

11:4 ஔடதங்களைப் பெற்றுக் கொடுத்தல் நீங்கலாக, மேலே 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட மாகாணத்தினுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

11:5 மேலே 1 இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த ஆளணியினருக்கு இலங்கையினுள் பட்டப்பின் கல்விக்காகப் புலமைப் பரிசில்களை அளித்தல்.

12. சுதேச வைத்தியம் – ஆயுள்வேத, சித்த அத்துடன் யூனானி –

12:1 ஆயுள்வேத மருத்தகங்களையும் மருத்துவ மனைகளையும் தாபித்தலும், அத்தகைய மருந்தகங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் மானியக் கொடைகளை வழங்குதலும் ;

12:2 மருந்து மூலிகைக் கொட்டில்களைத் தாபித்தலும் பேணுதலும்.

13. வாடிவீடுகள் –

13:1 உள்ளூரதிகாரசபைகளினால் பேணப்படும் வாடிவீடுகள் ; அத்துடன்

13:2 அவற்றின் பணிகள் இந்நிரலில் புறநீங்கலாகக் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களினால் தற்போது நிருவகிக்கப்படும் சுற்றுப் பயண பங்களாக்கள்.

14. அடைவு பிடிப்போர் -

வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் அடைவு பிடிப்போர் தொழில் அல்லாத அடைவு பிடிப்போர்.

15. சந்தைகள், முறைச்சந்தைகள்.

16. மாகாணத்தினுள் உணவு வழங்கலும் விநியோகித்தலும்.

17. கூட்டுறவுகள் -

17:1 மாகாணத்தினுள் கூட்டுறவுப் பொறுப்பு முயற்சிகளும், கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தலும், பதிவுசெய்தலும், மேற்பார்வை செய்தலும், கணக்காய்வு செய்தலும்;

17:2 கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும் உட்பட மாகாணத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி.

17:3 மாகாணக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு.

17:4 மாகாணத்தினுள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைத் தொழிலுக்கமர்த்துதல், அவர்களின் பதவியுயர்வு, ஓய்வுபெறுகை சம்பந்தமான கருமங்களும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட கருமங்களும்.

18. காணி -

பின்னிணைப்பு (11) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, காணி அதாவது காணியிலான அல்லது காணியின்மீதான உரிமைகள், காணி ஆட்சி காணியாகக் கைமாற்றுதலும் பராதீனப்படுத்துதலும், காணிப் பயன்பாடு காணிக் குடியிருப்பும் காணிச் சீர்திருத்தமும்.

19. நீர்ப்பாசனம் -

ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களினூடாக ஓடும் ஆறுகள் தொடர்பான நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கிடையேயான நீர்ப்பாசனம் அல்லது காணி அபிவிருத்தித் திட்டங்கள் தவிர, எல்லா நீர்ப்பாசன வேலைகளையும் திட்டமிடுதலும், உருவரையை திட்டமிடுதலும், செயற்படுத்துதலும், மேற்பார்வை செய்தலும், பேணுதலும்.

20. விலங்கு வேளாண்மை -

மாகாணத்தினுள் கால்நடைகளைப் பேணிக்காத்தலும், பாதுகாத்தலும், சீர்ப்படுத்துதலும், விலங்கு நோய்களைத் தடுத்தலும்.

21. அபிவிருத்தியும் திட்டமிடலும் பற்றிய தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலுக்கும் செயற்படுத்தலுக்கும் அமைய, கமத்தொழில், கைத்தொழில் வர்த்தக, வியாபாரத் தொழில் முயற்சிகள், அத்துடன்

வருமானம் தோற்றுவிக்கும் வேறு கருத்திட்டங்கள் என்பனவற்றை மாகாணத்தினுள் உடையதாகவிருப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கும் பகிரங்கக் கூட்டுத் தாபனங்களுக்கும் உள்ள தத்துவத்துக்குப் பங்கமின்றி, அத்தகைய தொழில் முயற்சிகளையும் கருத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கும், தாபிப்பதற்கும் அவற்றில் ஈடுபடுவதற்குமான தத்துவம்.

(இது மாகாணத்தினுள் விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சியை மேம்படுத்தலையும், மாகாணத்துக்கான கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலையும், ஒருங்கிணைத்தலையும் செயற்படுத் தலையும் உள்ளடக்கும்).

22. சீர்திருத்தும் நிலையங்களும், சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களும் அத்துடன் இவைபோன்ற தன்மையினவான வேறு நிறுவனங்களும், அவற்றின்கண் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆட்களும் அத்தகைய நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான ஏனைய மாகாணங்களுடனான ஒழுங்குகளும்.

23. போதையூட்டும் மதுபானங்களை உடைமையில் வைத்திருத்தலும், இடம் பெயர்த்தலும், கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.

24. தேசிய ஞாபகார்த்த மயானங்களெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப் பட்டவை தவிர, புதைத்தல்களும் இடுகாடுகளும், தகனங்களும் சுடுகாடுகளும்.

25:1 மாகாண சபையொன்றினால் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது நிதியளிக் கப்பட்ட நூலகங்கள், நூதனசாலைகள், அத்துடன் இவற்றையொத்த வேறு நிறுவனங்கள் ;

25:2 தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத் தப்பட்டவை தவிர, புராதன, வரலாற்று முக்கியத்துவமான நினைவுச் சின்னங்களும் பதிவேடுகளும்.

26. பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுவரை சுரங்கங்களையும் கனிப்பொருள் அபிவிருத்தியையும் மாகாணத்தினுள் ஒழுங்குபடுத்துதல்.

27. வியாபாரக் கூட்டுத்தாபனங்கள், வங்கித்தொழில், காப்புறுதி அத்துடன் நிதிசார் கூட்டுத்தாபனங்கள் நீங்கலாக, மாகாணத்துக்கென்றே வரை யறுக்கப்பட்ட குறிக்கோள்களுடனான கூட்டுத்தாபனங்களைக் கூட்டிணைத் தலும், ஒழுங்குபடுத்தலும் நீதிமுறையாக ஒடுக்குதலும்.

28. கூட்டிணைக்கப்படாத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய, அத்துடன் வேறு சங்கங்களையும் கழகங்களையும் ஒழுங்குபடுத்துதல்.

29:1 திரையிடப்படுவதற்கும் பகிரங்க அரங்காட்டுகளுக்குமான திரைப்படச் சுருள்களை அனுமதித்தல் நீங்கலாக, படமாளிகைகள், நாடக அரங்காட்டுகள், சங்கீதம், திரைப்படம், களியாட்டங்கள், அத்துடன் பொழுதுபோக்குகள் ;

29:2 (தேசிய விளையாட்டுக்கள் கழகங்கள் அல்லாத) விளையாட்டுக்களை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்.

30. உரிமக் கட்டணங்களையும் வரிகளையும் விதித்தல் தவிர, பணயம் வைத்தலும் சூதாடுதலும்.

31. மாகாணக் கடன்.

32. இந்நிரலில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுள் எது தொடர்பிலும் நியதிச் சட்டங்களுக்கு எதிரான தவறுகள்.

33. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

34. (நீர் – மின்சக்தியும் தேசிய மின்னிணைப்புக்கு மின்வழங்குவதற்குத் தோற்றுவிக்கப்படும் சக்தியும் அல்லாத) மின்வலுவைத் தோற்றுவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மாகாணத்தினுள்ள அமைவிடங்களையும் வசதிகளையும் அபிவிருத்தி செய்தலும், பேணிக்காத்தலும் முகாமை செய்தலும்.

35. பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு பணம் கடன்பெறுதல்.

36:1 பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் விதந்துரைக்கப் பட்டவாறான அத்தகைய எல்லைகளினுள்ளும் அத்தகைய விலக்களிப்பு களுக்கமையவும் மொத்த விற்பனவுகள், சில்லறை விற்பனவுகள் என்பன மீதான மொத்த விற்பனை வரவு வரிகள் ;

36:2 பணய வரிகளும், இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய லொத்தர்களும் அதிஷ்ட லாபச் சீட்டுகளும் தவிர, பரிசுப் போட்டிகளும் லொத்தர்களும் மீதான வரிகள் ;

36:3 பாராளுமன்றத்தினால் சட்டமூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலக்குகளுக்கமைய உரிம வரிகள், சாராயம், கள்ளு, வாடகைகளும், கள்ளு இறக்குதல் உரிமக் கட்டணங்களும், மதுபான உரிமக்கட்டணங்களும் ;

36:4 பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லைகளினுள்ளும் அத்தகைய விலக் களிப்புக்களுக்கமையவும் மோட்டார் வாகன உரிமம் கட்டணங்கள் ;

36:5 ஔடதங்கள், மற்றும் இரசாயனப் பொருட்கள் மீதான வணிகவாண்மை உரிம வரிகள் ;

*36:6* *காணிகள், மோட்டார்க்கார்கள் போன்ற ஆதனங்களின் கைமாற்றல் மீதான முத்திரைத் தீர்வைகள் ;*

*36:7* *ஆயவரிச் சேகரிப்பு ;*

*36:8* *நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் குற்றப்பணங்கள் ;*

*36:9* *மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட கட்டணங்கள் ;*

*36:10* *மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட கட்டணங்கள் ;*

*36:11* *இந்நிரலில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுள் எது தொடர்பிலும் திணைக்களக் கட்டணங்கள் ;*

*36:12* *தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணங்கள் ;*

*36:13* *காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், முடிக்குரிய காணிகள் கட்டளைக் காணி சட்டம் என்பவற்றின்கீழ் பராதீனப்படுத்தப்பட்ட காணிகள் மீதான கட்டணங்கள் ;*

*36:14* *நீதிமன்றத்தினால் காண்பிக்கப்பட்ட ஆவணங்களின் மீதான முத்திரைக் கட்டணங்களுட்பட நீதிமன்றக் கட்டணங்கள் ;*

*36:15* *நிறுவைகள், அளவைகள் கட்டளைச்சட்டத்தின் கீழான ஒழுங்குபடுத்தல் சார் இறுப்பனவுகள் ;*

*36:16* *அரசிறை மதிப்பிடுதல், சேகரித்தல் என்பன உட்பட காணி அரசிறையும் அரசிறை நோக்கங்களுக்காக காணிப் பதிவேடுகளை ஆய்தலும் பேணுதலும் ;*

*36:17* *பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அரச ஆதனம் உட்பட, காணிகள், கட்டிடங்கள் என்பன மீதான வரிகள் ;*

*36:18* *பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் விதித்துரைக் கப்பட்ட அத்தகைய எல்லைகளினுள்ளும் அத்தகைய விலக்களிப்பு களுக்கமையவும் கனிப்பொருள் உரிமைகள் மீதான வரிகள் ;*

*36:19* *போதையூட்டும் மதுபானங்களின் உடைமை, இடப்பெயர்ச்சி, கொள் வனவு, விற்பனை என்பன மீதான உரிமமளித்தற் கட்டணங்கள் ;*

*36:20* *பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாகாண நோக்கங்களுக்காக அரசிறை திரட்டுவதற்கென மாகாணத்தினுள் வேறு வரிவிதிப்பு ;*

37. பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாகாணத்தினுள் சூழலைப் பாதுகாத்தல்.

## பின்னிணைப்பு I

## சட்டமும் ஒழுங்கும்

1. பரவலாக்கப்பட்ட விடயப்பொருள் பின்வருமாறு விபரிக்கப்படுதல் வேண்டும் -
இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மாகாணத்தினுள் பொது ஒழுங்கும் பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தலும், ஆனால் இதில் பின்வருவன உள்ளடங்கமாட்டா :-

(அ) தேசிய பாதுகாப்பு ;
(ஆ) தேசிய பந்தோபஸ்து ; அத்துடன்
(இ) இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் ஆயுதந்தாங்கிய படைகளை அல்லது வேறு எவையேனும் படைகளை குடியியல் தத்துவ உதவியாகப் பயன்படுத்துதல்.

2. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி இலங்கைப் பொலிசுப் படையின் தலைவராகவிருத்தல் வேண்டும். இலங்கைப் பொலிசுப் படை பின்வருமாறு பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(அ) (சிறப்புக் கூறுகள் உள்ளிட்ட) தேசிய பகுதி ; அத்துடன்
(ஆ) ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாணப் பகுதியொன்று.

2:1 தேசிய பகுதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிமார், சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேசிய மட்டத்தில் திரட்டப்படும் வேறு பதவித்தரத்தினர் ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2:2 மாகாணப் பகுதியானது, தேசியப் பகுதியிலிருந்து மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பொலிசுக் கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரையும், அத்துடன் மாகாணத்தில் திரட்டப்பட்டவர்களான மாகாண உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பிரதான பரிசோதகர்கள், பரிசோதகர்கள், உதவிப் பரிசோதகர்கள், சார்ஜண்டுகள், கொஸ்த்தாப்பல்கள், ஆகியோரையும், கொண்டிருத்தல் வேண்டும். மாகாணப் பகுதியின் உறுப்பினர்கள் தேசிய பகுதிக்குப் பதவியுயர்த்தப்படுவதற்குத் தகவுடையவர்களாதல் வேண்டும்.

[189] *3.[தேசிய பொலிசுப் பிரிவிற்கான ஆட்சேர்ப்பும், மாகாணப் பிரிவுகளிலிருந்து தேசியப் பிரிவிற்கு பொலிசு அலுவலர்களின் பதவியுயர்வும், தேசிய பொலிசு ஆணைக்குழுவால் செய்யப்படுதல் வேண்டும்.]*

*3:1* *தேசிய பொலிசு ஆணைக்குழுவானது, மாகாணப் பகுதி எதிலும் சேவையாற்றும் பொலிசு அலுவலர் எவரையும் தேசியப் பகுதிக்குப் பதவியுயர்த்துவதற்கு முன்னர், இயைபான மாகாணப் பொலிசு ஆணைக்குழுவிடமிருந்து அத்தகைய அலுவலர் பற்றிய அந்தரங்க அறிக்கையொன்றைக் கோருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலரைப் பதவியுயர்த்துவதா இல்லையா எனத் தீர்மானிப்பதில் அத்தகைய அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைக் கவனத்திற் கெடுத்தலும் வேண்டும்.*

*3 : 2* *ஆணைக்குழுவானது, கீழே தரப்பட்டுள்ள 4 : 1 என்னும் பந்திக்கு அமைவாக பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்தவர்களான தேசியப் பகுதியினது உறுப்பினர்களின் பதவியுயர்வு, இடமாற்றம் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.*

*3 : 3* *இது, மாகாணப் பகுதிகளுக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப் பட்டவர்களும், அவர்களுக்கு எதிராக மாகாணப் பொலிசு ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றவர்களுமான அலுவலர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் மேன்முறையீடுகளைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.*

*3 : 4* *இது, எல்லாப் பதவிகளுக்கும் பொலிசு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கும், அவர்களின் பதவியுயர்வுக்குமான தரங்களை வகுத்தல் என்பதுடன், அத்தகைய தரங்கள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரு சீராகவமைதலும் வேண்டும்.*

*4.* *ஒவ்வொரு மாகாணப் பகுதிக்குமான ஆட்சேர்த்தல் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட, மாகாணப் பொலிசு, ஆணைக்குழு வொன்றினால் செய்யப்படுதல் வேண்டும். இது பின்வருவோரைக் கொண்டிருக்கும் :-*

*(அ)* *மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதி ;*

*(ஆ)* *சனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ; அத்துடன்*

*(இ)* *மாகாணத்தினது பிரதான அமைச்சரின் நியமத்தர் ஒருவர்.*

---

*189 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 23 (1) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.*

*4 : 1* மாகாணப் பொலிசு ஆணைக்குழுவொன்று மாகாணப் பகுதியின் அலுவலர்களினது இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும், மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான தேசியப் பகுதியின் அலுவலர்களை சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப்பாளர் பதவித் தரம் வரையில் பதவியுயர்த்துவதற்கும், பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்தவர்களான மாகாணப் பகுதிக்கு மாற்றுச்சேவைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களின் இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் பொறுப்பான தாகவிருத்தல் வேண்டும்.

ஆயின், மாகாணப் பகுதி எதற்கும் மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவரும் அவருக்கு எதிராக மாகாணப் பொலிசு ஆணைக்குழுவொன்றினால் ஒழுக்காற்று, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றவருமான தேசியப் பகுதியின் அலுவலர் எவரும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்மீது தேசிய பொலிசு ஆணைக் குழுவின் முடிவு இறுதியானதாதலும் வேண்டும்.

5. தேசிய பொலிசு ஆணைக்குழு அல்லது மாகாணப் பொலிசு ஆணைக் குழுவொன்று அதன் தத்துவங்களுள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகையவற்றை, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது அதிகாரசபைக்குக் கையளிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

6. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மாகாணத்தின் பிரதான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஒவ்வொரு மாகாணத்திற்குமான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கும் பிரதான அமைச்சருக்கும் இடையில் உடன்பாடு எதுவும் காணப்படாவிடில், இவ்விடயம் [190][தேசிய பொலிசு ஆணைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப் படும் என்பதுடன், அது] பிரதான அமைச்சருடன் முறையாகக் கலந்தா லோசித்த பின்னர் நியமனத்தைச் செய்தலும் வேண்டும்.

7. தேசிய பகுதியின் எல்லாப் பதவித்தரங்களையும் சேர்ந்த பொலிசு அலுவலகங்களின் ஊழியர் கோப்புக்கள் இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாகாணப் பகுதியினதும் அலுவலர்களினதும் வேறு பதவித்தரத்தினரதும் ஊழியர் கோப்பு :-

(அ) மாகாணத்தின் பரப்பளவு ;

(ஆ) மாகாணத்தின் சனத்தொகை ; அத்துடன்

(இ) உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அல்லது விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அளவைக் கட்டளைகள்.

---

190 அரசியலமைப்புக்கான பதினேழாம் திருத்தத்தின் 23 (2) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, [191] [தேசிய பொலிசு ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன்] மாகாண நிருவாகத்தினால் நிர்ணயிக்கப் படுதல் வேண்டும்.

இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரு சீராக ஏற்புடையன வாதல் வேண்டும்.

7 : 1 மாகாணப் பகுதிகளில் ஊழியர் கோப்புக்களானவை, சனத்தொகை, பரப்பளவு, சம்பந்தப்பட்ட பொலிசு நிலையங் களில் எண்ணிக்கை போன்ற நிச்சயிக்கப்பட்ட நெறிகளையும், வேறு இயைபான காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் பாகுபாடு இன்றி ஏற்புடையனவாதல் வேண்டும்.

7 : 2 தேசிய, அத்துடன் மாகாணப் பகுதிகளில் உள்ள பல்வேறு பதவித் தரத்தினராலும் துய்க்கப்படும் சம்பள அளவுத்திட்டங்களும், அலுவலக மேலதிக வருவாய்களும் மாகாணங்களின் பிரதான அமைச்சர்களைக் கலந்தாலோசித்த பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மாகாணப் பகுதிகளின் உறுப்பினர்களால் துய்க்கப்படும் சம்பள அளவுத் திட்டங்களும் அலுவலக மேலதிக வருவாய்களும் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒருசீராக ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. தேசியப் பகுதிக்கான சுடுபடைக் கலங்களினதும், வெடிமருந்துகளினதும் வேறு சாதனங்களினதும் தன்மையும், வகையும், அளவும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். எல்லா மாகாணப் பகுதிகளுக்குமான சுடுபடைக்கலங்களினதும், வெடிமருந்துகளினதும் வேறு சாதனங்களினதும் தன்மையும், வகையும், அளவும் மாகாணப் பொலிசு ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் தேசியப் பொலிசு ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரு சீரான தரங்களும் நெறிகளும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

9. தேசியப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, பொலிசுக் கொஸ்த்தாபல், உதவிப் பரிசோதகர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ஆகிய பதவித் தரங்களில் செய்யப்படுதல் வேண்டும். மாகாணப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு பொலிசுக் கொஸ்த்தாபல், உதவிப் பரிசோதகர்கள், (மேலே 2 : 2 என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவித்தரமாகிய) மாகாண உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் ஆகிய பதவித்தரங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

9 : 1 ஆட்சேர்ப்புத் தராதரங்களையும், அதற்கென விதித்துரைக்கப் படும் ஏனைய கட்டளைகளையும் கவனத்திற்கொண்டு தேசியப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு தேசியப் பொலிசு ஆணைக்குழுவினாலும், மாகாணப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, மாகாணப் பொலிசு

191 அரசியலமைப்புக்கான பதினேழாம் திருத்தத்தின் 23 (3) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

ஆணைக்குழுவினாலும் செய்யப்படுதல் வேண்டும். ஆயின், சேர்க்கப்படும் ஆள் ஒருவர், நியமிக்கப்பட்டதன் மேல், அவர் எப்பகுதியில் சேவையாற்ற விரும்புகின்றாரோ அப்பகுதி பற்றிய அவரது முந்துரிமைகளைத் தரலாம். அத்துடன் இயலுமாயின், அவர் விரும்பும் பகுதியில், சம்பந்தப்பட்ட பகுதியின் சம்மதத்துடன் பதவிக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

9 : 2 இலங்கைப் பொலிசுப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட எல்லோரினதும் அத்துடன் இலங்கைப் பொலிசுப் படையின் எல்லாப் பகுதிகளினதும் உறுப்பினர்களினதும் பயிற்சிக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

[192] [தேசிய பொலிசு ஆணைக்குழு, அது அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து,] ஏதேனும் மாகாணப் பகுதியின் உறுப்பினர்களுக்கு மாற்றுப்பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

10. தேசியப் பகுதியினதும், மாகாணப் பகுதிகளினதும் உறுப்பினர்கள் ஒரே சீருடையையும் பதவித்தரத்திற்குரிய சின்னங்களையும் அணிதல் வேண்டும். ஆயின் ஒவ்வொரு பகுதியினதும் உறுப்பினர்களின் சீருடைகள், அவர் எப்பகுதியைச் சேர்ந்தவரோ அப்பகுதியினைச் சுட்டிக்காட்டும் தனிவேறான தோள்பட்டியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10:1 மாகாணப் பகுதியின் உறுப்பினர்களையும், அதற்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களையும் கொண்டமைந்த ஒரு சீரான பொலிசுப் படையொன்று ஒவ்வொரு மாகாணத்திலும் இருத்தல் வேண்டும். தேசியப் பகுதியின் உறுப்பினர்கள் வழமையாக சாதாரண உடையில் இருத்தல் வேண்டும். ஆயின், அவர்கள் 12:2, 12:3, 12:4 ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ளவாறு பொது ஒழுங்கமைதியைப் பேணுதல் அல்லது நிலைநாட்டுதல் சம்பந்தமான கடமைகள் எவற்றையும் புரியும்போது சீருடைகளை அணியலாம். ஆயின், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியும், குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏனைய அலுவலர்களும் பொதுவான சீருடை அணிந்திருத்தல் வேண்டும்.

11. தேசியப் பகுதியின் கூறுகளிலும் ஏதேனும் மாகாணத்தின் மாகாணப் பகுதிகளிலும் சேவையாற்றும் எல்லாப் பொலிசு அலுவலர்களும், அத்தகைய மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பணியாற்றுதல் வேண்டும்.

192 அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் 23 (4) ஆம் வாசகத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

11:1 மாகாணத்தில் பொது ஒழுங்கமைதியைப் பேணுதல் அத்துடன் இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான மாகாணத்தில் பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தல் ஆகியன தொடர்பில் மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அம்மாகாணத்திற்கான பிரதான அமைச்சருக்குப் பொறுப்பாளியாக விருத்தல் வேண்டும் என்பதுடன், அவரது கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதலும் வேண்டும்.

11:2 மேற்கூறிய 11:1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்வரும் தகைமைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் :-

(அ) மாகாணத்தில் அவசரகால நிலைமை வெளிப்படுத்தப்பட்டதன்மேல், சனாதிபதி, ஒழுங்கு விதிமூலம் ஏற்பாடு செய்யக்கூடியவாறாக பிரதான அமைச்சரின் அத்தகைய தத்துவங்களையும் பொறுப்புடைமைகளையும் அத்துடன் மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதி சம்பந்தமான மாகாண நிருவாகத்தையும் பொறுப்பேற்கலாம் ; அத்துடன்

(ஆ) ஒரு மாகாணத்தின் பந்தோபஸ்து நிலைமை அல்லது பொது ஒழுங்கமைதி, கடுமையான உள்ளகக் குழப்பநிலை காரணமாக அச்சுறுத்தப்படுகின்றதென சனாதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர் அவசரகால நிலைமையை வெளிப்படுத்தாமல் ஆனால் அத்தகைய மாகாணத்தின் பிரதான அமைச்சரின் கலந்தாலோசனையுடனும், பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவும், பொது ஒழுங்கமைதியை நிலை நாட்டும் நோக்கத்துக்காக, மாகாணத்தில், சிவில் தத்துவத்திற்கு உதவியாக, தேசியப் பகுதியின் ஏதேனும் கூறினை, கட்டளை மூலம் அமர்த்தலாம் :

ஆயின், அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், பொது ஒழுங்கு கமைதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றதென சனாதிபதி திருப்திப்பட்டதன் பின்னர் விரைவில் அல்லது கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் மேல், இவற்றுள் எது முந்தியதோ அப்போது, வலுவிலில்லாதொழிதல் வேண்டும்.

12 :1 மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதியை பேணிக்காப்பதற்கும், (அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தவிர்ந்த) எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனாய்வு செய்தல் ஆகியவற்றுக்கும் அத்துடன் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச்சட்டத்தின் நியதிகளின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களில் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் மாகாணப் பகுதி பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

இலங்கைப் பொலிசுப்படையின் தேசியப் பகுதியானது, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டு பிடித்தல், புலனாய்வு, செய்தல் ஆகியவற்றுக்கும், அத்துடன் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டத்துறை தலைமையதிபதியின் தத்துவங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் தொடுப்பதற்கும் பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

12 : 2 பிரதான அமைச்சர் ஒரு மாகாணத்தினுள் பொது ஒழுங்கமை தியைப் பேணிக்காப்பதற்குத் தேசியப் பகுதியின் உதவியை நாடுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அந்நோக்கத்துக்கு அவசியமாக கூடியவாறான தேசியப் பகுதியின் அத்தகைய ஆளணியினரை அமர்த்தலாம் என்பதுடன், அவர்களை மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்தலும் வேண்டும்.

12 : 3 மாகாணத்தில் அவசரகால நிலைமையொன்று வெளிப்படுத்தப் படுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அத்தகைய மாகாணத்தினுள் பொது ஒழுங்கை நிலைநாட்டிப் பேணுவதற் கென அவசியமானதென அவர் கருதுகின்றவாறான தேசியப் பகுதியின் அத்தகைய கூறுகளை அம்மாகாணத்திற்கு அமர்த்த லாம்.

12 : 4 சாதாரணமாக மாகாணப் பகுதியொன்றினால் புலனாய்வு செய்யப்படக்கூடிய தவறு எதுவும் –

(அ) அத்தகைய புலனாய்வு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினால் பொறுப்பேற்கப்பட வேண்டுமெனப் பிரதான அமைச்சர் வேண்டுமிடத்து ; அத்துடன்

(ஆ) பொதுமக்கள் நலன்கருதி அத்தகைய தவறு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினால் புலனாய்வு செய்யப்பட வேண்டியது அவசியமானதென பொலிசுப் பரிசோகர் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டு, பிரதான அமைச்சரின் கலந்தாலோசனையின் பின்னரும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடனும், அத்தகைய தவறு குற்றவியல் புலனாய்வுத் திணைக் களத்தினால் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினால் புலனாய்வு செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கின்றவிடத்து.

குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினால் புலனாய்வு செய்யப்படலாம்.

13. தேசியப் பகுதியானது, ஏதேனும் மாகாணத்தில், மாகாணப் பகுதியொன்றுக்கு உரித்தாக்கப்படும் எல்லா பணிகளையும் ஓராண்டு காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய மாகாணத்தில் மாகாணப்பகுதி யொன்றுக்கு தாபிக்கப்படுகின்ற வரையில், இவற்றுள் எது முந்தியதோ அதுவரையில் புரிந்துவருதல் வேண்டும்.

14. தேசியப் பகுதியினதும், மாகாணப் பகுதிகளினதும் எல்லா கசெற் அலுவலர்களும் சிங்களத்திலும் தமிழிலும், விதித்துரைக்கப்பட்ட தரத்தை எய்தும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவித் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரத்திலும் உள்ளவர்களான எல்லா அலுவலர்களும் ஆங்கிலத்திலும் விதித்துரைக்கப்பட்ட தரத்தை தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பொலிசுப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் ஒவ்வொரு வரும் அவரது தாய்மொழியில் திறமை பெற்றவராக இருத்தல் வேண்டும். முதலாவது பதவியுயர்வுக்கு அவர் தமது தாய்மொழி தவிர்ந்த ஒரு மொழியில் திறமை பெறுதல் வேண்டும். அடுத்த பதவியுயர்வுக்கு அவர் மூன்றாவது மொழியின் அறிவு பெறுதல் வேண்டும். இந்நோக்கத்திற் கென ஏற்றங்கீகரிக்கப்பட்ட மூன்று மொழிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியனவாகும்.

### அட்டவணை

### தேசிய பொலிசுப்பிரிவினால் புலனாய்வு செய்யப்படவேண்டிய தவறுகள் பற்றிய நிரல்

1. அரசுக்கெதிரான தவறுகள்.
2. கடற்படை, தரைப்படை, வான்படை தொடர்பான தவறுகள்.
3. தேர்தல்கள் தொடர்பான தவறுகள்.
4. குற்றி நாணயங்கள், நாணயத்தாள்கள், அரசாங்க முத்திரைகள் தொடர்பான தவறுகள்.
5. சனாதிபதிக்கெதிராக புரியப்படும் ஏதேனும் தவறு.
6. பகிரங்க அலுவலர், நீதித்துறை அலுவலர், அல்லது சபாநாயகர் அல்லது முதலமைச்சர் அல்லது அமைச்சர் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர், அல்லது பகிரங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர் அல்லது பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அல்லது சனாதிபதியின் பணியாட்டொகுதி உறுப்பினர் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதி உறுப்பினர் ஒருவருக்கெதிராகப் புரியப்படும் ஏதேனும் தவறு.

7. அதன் மூலதனம் முழுவதும் அல்லது அதன் பகுதி அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டதான, அரசுக்கு அல்லது ஓர் கூட்டுத் தாபனத்திற்கு அல்லது கம்பனிக்கு அல்லது தாபனத்துக்குச் சொந்தமான ஆதனம் தொடர்பில் புரியப்படும் ஏதேனும் தவறு.

8. தேசிய பந்தோபஸ்துக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளின் பேணுகைக்குப் பங்கம் விளைவிக்கும் ஏதேனும் தவறு.

9. வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சனாதிபதி தவிர்க்கக்கூடியவையான அத்தகைய தவறுகள் நீங்கலாக ஒதுக்கிய நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு.

10. எத்தகைய தவறு தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்கள் நியாயாதிக்கங் கொண்ட அத்தகைய ஏதேனும் தவறு.

11. சர்வதேசக் குற்றங்கள்.

## பின்னிணைப்பு II

### காணியும் காணிக்குடியேற்றமும்

அரச காணி, தொடர்ந்து குடியரசுக்கு உரித்தாதல் வேண்டுமென்பதுடன், உறுப்புரை 33 (ஈ) என்பதற்கும் அவ்விடயத்தை ஆளுகின்ற எழுத்திலான சட்டத்துக்கும் இணங்க கையாளவும் படலாம்.

மேற்கூறியதற்கமைய, காணியானது, பின்வரும் விசேட ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபை விடயமாக இருத்தல் வேண்டும் :-

**1. அரச காணி**

1:1 ஒதுக்கிய அல்லது ஒருங்கிய விடயமொன்று தொடர்பில் மாகாணத்தில் அரசாங்கத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் அரச காணி, அவ்விடயத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கிணங்க அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படலாம். அத்தகைய விடயம் தொடர்பில் அத்தகைய காணியைப் பயன்படுத்துதல் பற்றி, அரசாங்கமானது, இயைபான மாகாண சபையைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

1:2 மாகாண சபை விடயமொன்றுக்கு அத்தகைய சபையினால் தேவைப்படுத்தப்படும் மாகாணத்தினுள் உள்ள அரச காணியை அரசாங்கம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் கிடைக்கக்கூடிய தாக்குதல் வேண்டும். மாகாண சபையானது, அத்தகைய அரச காணியை அவ்விடயத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கும் நியதிச் சட்டங்களுக்கும் இணங்க, நிருவகித்தலும், கட்டுப்படுத்தலும் பயன்படுத்தலும் வேண்டும்.

*1 : 3* எவரேனும் பிரசைக்கு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு மாகாணத்தினுள் அரச காணியைப் பராதீனப்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் அவ்விடயத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கிணங்க, இயைபான மாகாண சபையின் ஆலோசனையின்மேல், சனாதிபதி யினால் செய்யப்படுதல் வேண்டும்.

**2. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, மற்றும் காணி அபிவிருத்தி செயற்றிட்டங்கள்.**

*2: 1* அத்தகைய செயற்றிட்டங்கள் –

(அ) அம்மாகாணத்துக்குள்ளான அரசினால் ஆரம்பிக்கப்பட்டனவும் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கூடாகப் பாயும் ஆறுகளி லிருந்து பெறப்பட்ட நீரைப் பயன்படுத்துவனவுமான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி திட்டங்களை உள்ளடக்கும் ; எனினும் ஒரு மாகாண சபையானது அத்தகைய ஆறுகளிலிருந்து நீரைப் பயன்படுத்தி அதன் மாகாணத்துக்குள்ளாக நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கலாம்.

(ஆ) மாகாணத்துக்கு வெளியேயுள்ள நீர்த்தொகுதிகளிலிருந்து திசை திருப்புவதன் மூலம் பெற்ற நீரைப்பயன்படுத்தும் மாகாணத்துக் குள்ளாக இருக்கும் நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை உள்ளடக்கும் ; அத்துடன்

(இ) மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்று முக்கிய இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்குள் வரும் எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கும்.

*2 : 2* இச்செயற்றிட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

*2 : 3* இச்செயற்றிட்டங்கள் மூலம் தோன்றும் கமத்தொழில் மற்றும் குடியிருப்புக் காணிகள் வைத்திருக்கப்படும் அளவு தொடர்பான நெறிகளும் கோட்பாடுகளும் மாகாண சபைகளின் ஆலோசனை யுடன் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும்.

*2 : 4* காணியற்றோர் அளவு, விண்ணப்பக்காரரின் வருமானம், விண்ணப்பக்காரரது குடும்பத்தின் அளவு, மற்றும் அவரது கமத்தொழில் பின்னணி என்பன உட்பட குடியிருப்பவர்களைத் தெரிவு செய்யும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய கோட்பாடு களைக் கருத்திற்கொண்டு அத்தகைய காணிகளைக் குறித்தொதுக்கப் படுவோரைத் தெரிவு செய்தலானது இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும். இக்கோட்பாடுகளை உள்ளபடியாகக் கடைப்பிடித்தல் காணி குறித்தொதுக்கப்படுபவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட இடைநேர்விளைவான ஏனைய கருமங்கள் மாகாண சபைகளின் தத்துவத்துக்குட்பட்டன வாக இருக்கும்.

2 : 5 அத்தகைய செயற்றிட்டங்களில் அத்தகைய காணிகளைக் குறித்தொதுக்கிப் பகிர்தலானது தேசிய இனவிகித அடிப்படையில் இடம்பெறும். அத்தகைய விகித அடிப்படையில் குறித்தொதுக்கலைப் பகிரும்போது அச்செயற்றிட்டத்தின் மூலம் காணி பறிக்கப்பட்டவர்களான ஆட்களுக்கும், அச்செயற்றிட்டம் அமைந்துள்ள மாவட்டத்தினுள்ள காணியற்றோருக்கும் அதன் பின்னர் மாகாணத்தில் உள்ள காணியற்றோருக்கும் முதலிடமளிக்கப்படுதல் வேண்டும்.

2 : 6 ஏதேனும் அத்தகைய செயற்றிட்டத்தில் ஏதேனும் சமூகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட உரித்து நிலங்களைப் பெறாதுவிட்டால் அல்லது பெறமுடியாதிருந்தால், அவர்களை வேறுமாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன அல்லது காணி அபிவிருத்தித் திட்டத்தில் சம அளவான குறித்தொதுக்கல்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உரித்துடையவர்களாவர். இத்தகைய பயன்படுத்தப்படாத காணியின் அளவு, கொடுக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்குள்ளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

2 : 7 மேற்சொல்லப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அத்தகைய செயற்றிட்டங்களில் குறித்தொதுக்கல்களைப் பகிர்தலானது அம்மாகணத்தின் குடிநிலைப் புள்ளியியல் அமைப்பை பெருமளவில் பாதிக்காத விதமாகவும் மனித குடியிருப்புகளில் சமுதாய ஒட்டுறவை உறுதிப்படுத்தும் கோட்பாட்டுக்கிணங்கவும் இயலக்கூடியவரை செயற்படுத்தப்படும்.

2 : 8 அத்தகைய செயற்றிட்டங்களின் நிருவாகமும் முகாமையும் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்படும்.

### 3. தேசிய காணி ஆணைக்குழு

3: 1 இலங்கை அரசாங்கம் தேசிய காணி ஆணைக்குழுவொன்றைத் தாபிக்கும். இது அரச காணியின் பயன்பாடு தொடர்பாக தேசிய கொள்கையொன்ன்றை உருவாக்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். இவ்வாணைக்குழு தீவின் சகல மாகாண சபைகளினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

3: 2 தேசிய காணி ஆணைக்குழுவுக்குத் தொழில்நுட்பச் செயலகம் ஒன்றிருக்கும். இயற்கை மூலவள முகாமைக்கு இயைபான பௌதிக மற்றும் சமூக பொருளியல் காரணிகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவைப்படும் இயைபான அறிவுத்துறைகளை இது பிரதிநிதித்துவப் படுத்தும்.

3 : 3 காணிப் பயன்பாடு மீதான தேசிய கொள்கை தொழில்நுட்ப அம்சங்களை (அரசியல் அல்லது இனவாரி அம்சங்கள் அல்ல) அடிப்படையாகக் கொண்டிருக்கும்; மண்வளம்,காலநிலை, மழை வீழ்ச்சி, மண் அரிப்பு, காட்டுவனப்பு, சுற்றாடல் காரணிகள், பொருளாதார நிலைப்பாடு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு

காணிப்பயன்பாடு தொடர்பான பொதுக் கோட்பாடுகளை ஆணைக்குழு வகுக்கும்.

3 : 4 மாகாண சபைகள், அவற்றுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அத்தத்துவங்கள் தேசிய காணி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கையைக் கருத்திற்கொண்டு மாகாண சபைகளினால் பிரயோகிக்கப்படவேண்டும்.

## பின்னிணைப்பு III

### கல்வி

1. குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத எல்லா அரச பாடசாலைகளுக்கும் வசதிகளைச் செய்துகொடுத்தல், (தேசிய பாடசாலைகள், சேவை ஆளணியினர்க்கான சிறப்புப் பாடசாலைகள், குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான பாடசாலைகள் ஆகியன குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகளாகவிருக்கும்.)

2. (அ) எல்லா ஆரம்பப் பாடசாலைகளினதும் ; அத்துடன்
   (ஆ) மேலே கூறப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த எல்லா அரசாங்கப் பாடசாலைகளினதும் முகாமையை மேற்பார்வை செய்தல்.

   (தராதரங்களை உறுதிப்படுத்துவதற்கென பாடசாலைகளின் முகாமையைப் பார்வையிடுவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான உரிமை கல்வி அமைச்சிடம் இருக்கும்)

3. எல்லாக் கல்வி ஆளணியினரதும், அதாவது ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரினதும் இடமாற்றமும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும், தேசிய சேவையைச் சேர்ந்தவர்களும், மாற்றுச் சேவையின் மீது மாகாண அதிகாரசபையில் சேவையாற்றுகின்றவர்களுமான அலுவலர்கள், பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவர்களாவர், மாகாணச் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள், வேலை நீக்கத்திற்கு எதிராக பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவர்களாவர்.

4. போதனா தகைமைகளாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட திப்புளோமாக்களையும், அத்துடன் கல்விக் கல்லூரிகளிலிருந்தும் பல்கலைக் கழகங்களிலிருந்தும் பெறப்பட்டனவான பட்டங்களையும் கொண்டவர்களான ஆட்களை சேவையில் சேர்த்துக் கொள்ளுதல்.

5. இந்த வகுதிகளைச் சேர்ந்த போதிய எண்ணிக்கையினர் கிடைக்கத் தக்கவராக இருக்கின்றவரையில், ஆசிரிய சேவைக்கு ஏனையோரைச் சேர்த்துக் கொள்ளுதலானது, பகிரங்க ஆணைக்குழுவினால் நடாத்தப் படும் ஆட்சேர்ப்புப் பரீட்சைகளின் முடிவை பொறுத்ததாகவிருக்கும். இத்தகைய பரீட்சைகளின் முடிவைப் பொறுத்து நேர்முகப் பரீட்சையும் தெரிவும் மாகாண அதிகாரிகளுடன் சேர்த்து நடாத்தப்படும்.

6. வகுதிகள் 1அ, ஆ, இ என்பவற்றைச் சேர்ந்தவர்கள் அல்லாத எல்லாப் பாடசாலைகளினதும் அதிபர்களை நியமித்தல். (கட்டளைகள் கல்வி அமைச்சரினால் விதிக்கப்படும்.)

7. வகுதிகள் 1அ, ஆ, இ பாடசாலைகளின் அதிபர்களின் நியமனம், மாகாண அதிகார சபையின் ஒருப்பாட்டுடன் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அல்லது பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

8. ஆசிரியர்களுக்கும், ஏனைய கல்விசார் ஆளணியினருக்கும் பயிற்சி யளித்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கெல்லைக்குள் அடங்கும். மாகாண அதிகாரசபைகள் தங்கள் தேவைகளை கல்வி நிறுவகத்திற்கு அறிவிக்கும்.

9. மதியுரைப் பணிகளைக் கொண்ட மாகாண கல்விச் சபைகளை நியமித்தலானது கல்வி அமைச்சரின் பொறுப்பாகும். எவ்வாறாயினும், இது மாகாண அதிகாரசபையின் பிரதான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் செய்யப்படும்.

10. மாகாண அதிகாரசபைகள் கல்வி அமைச்சரினால் விதிக்கப்படும் விபரக்குறிப்பீடுகளுக்கு இயைவதாக பாடசாலைச் சபைகளைத் தாபிக்கும்.

11. மாகாண அதிகாரசபைகள் பாடசாலைச் சபைகளின் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும்.

12. திட்டங்கள் (கல்வி அபிவிருத்தித்திட்டமும் வருடாந்த செயற்படுத்தற் திட்டமும்) தயாரித்தல் மாகாண அதிகாரசபையின் பொறுப்பாகும்.

13. வருடாந்த கல்வி அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்தல்.

14. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

15. தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னங்கீகாரம் கிடைக்கப்பெற்றனவான சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

16. பரீட்சை ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படும் உண்ணாட்டுப் பரீட்சைகளை நடாத்துதல்.

17. விதிமுறைப்பட்டனவல்லாத கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற் படுத்தல்.

18. ஆரம்பப் பாடசாலைகளைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

19. முதனிலை பாடவிதானத்திலும், இரண்டாந்தர பாடவிதானத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களிலும் உள்ளக வேறுபாடுகளுக்கு தேசிய கல்வி நிறுவகத்தில் அங்கீகாரத்தைப் பெறுதல்.

20. கல்விசார் கட்டிடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை நிருமாணித்தலும் பேணிவருதலும்.

21. கற்பித்தல் உபகரணங்கள், கட்புல உபகரணங்கள், செவிப்புல – கட்புல சாதனங்கள், தளபாடங்கள், வேறு சாதனங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்தலும் பகிர்ந்தளித்தலும்.

22. அமைச்சினால் காட்டப்பட்ட குறித்தசில குறித்துரைக்கப்பட்ட விடயப் பொருட்கள் அல்லாத விஞ்ஞான சாதனங்களைப் பெற்றுக்கொடுத் தலும் பகிர்ந்தளித்தலும்.

23. பாடசாலைப் பாடப்புத்தகங்களை அமைச்சின் அங்கீகாரத்தின் பின்னர் தயாரித்தலும் பகிர்ந்தளித்தலும்.

24. தேசிய நூலகச் சேவைகள் சபையினால் அளிக்கப்படும் வழிகாட்டல் நெறிகளுக்கு இணங்க பாடசாலை நூலகங்களை ஒழுங்கமைத்தலும், அபிவிருத்தி செய்தலும்.

மேற்போந்தவை அரசியற் கட்சிகள் மாநாட்டின் ஓராம் குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டவை

## நிரல் II

### (ஒதுக்கிய நிரல்)

எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசிய கொள்கை.

பாதுகாப்பும் தேசிய பந்தோபஸ்தும் ; உள்நாட்டுப் பாதுகாப்பு ; 1 ஆம் நிரலின் 1 ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு தவிர, சட்டமும் ஒழுங்கும் குற்றங்களைத் தடுத்தலும் கண்டுபிடித்தலும்.

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) பாதுகாப்புக்குத் தயார்ப்படுத்துதல், போர் நிலைமைகளின்போது போரை மேற்கொள்ளுவதற்கும் அந்நிலைமை முடிவடைந்ததன் பின்னர் சேர்க்கப்பட்டவர்களை பயனுறுவகையில் விடுவிப்பதற்கும் உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களும் உட்பட இலங்கையினதும் அதன் ஒவ்வொரு பாகத்தினதும் பாதுகாப்பு ;

(ஆ) கடற்படை, இராணுவப்படை மற்றும் வான்படைகள் ; இலங்கை அரசாங்கத்தின் வேறு எவையேனும் ஆயுதந்தாங்கிய படைகள் ;

(இ) குடியியல் தத்துவத்துக்கு உதவியாக ஏதேனும் மாகாணத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஆயுதந்தாங்கிய ஏதேனும் படையை அல்லது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைவான வேறு ஏதேனும் படையை அல்லது அதன் ஏதேனும் படையணியை அல்லது படைப்பிரிவை சேவையிலீடுபடுத்துதல் ; அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது அத்தகைய படைகளைச் சார்ந்த உறுப்பினர்களின் தத்துவங்களும், நியாயாதிக்கமும், சிறப்புரிமைகளும், பொறுப்புக்களும் ;

(ஈ) படைமுகாம் இடப்பரப்புகளின் எல்லையை வரையறுத்தல், அத்தகைய இடப்பரப்புகளில் உள்ளூர் சுயாட்சி, அத்தகைய படைமுகாம் இடப்பரப்புகளில் அதிகாரசபைகளை அமைத்தலும் அவற்றின் தத்துவங்களும், (வாடகைகள் மீதான கட்டுப்பாடு உட்பட) அத்தகைய இடப்பரப்புகளில் வீடமைப்பு இடவசதியை ஒழுங்கு படுத்தலும் ;

(உ) கடற்படை, இராணுவ மற்றும் வான்படை வேலைகள் ;

(ஊ) படைக்கலங்கள், சுடுபடைக்கலங்கள், ஆயுதங்கள், வெடி பொருள்கள் ;

(எ) அணுசக்தியும் அதன் உற்பத்திக்கு அவசியமான கனிய மூலவளங்களும் ;

(ஏ) பாதுகாப்பு நோக்கத்துக்காக அல்லது போரை மேற்கொள்ளுவதற்காக அவசியமானவையெனச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்ட கைத்தொழில்கள் ;

(ஐ) குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ;

(ஒ) இலங்கையின் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அல்லது பந்தோபஸ்து என்பவற்றுடன் தொடர்புபட்ட காரணங்களுக்காகத் தடுத்து வைத்தல் ; அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் ; அத்துடன்

(ஓ) ஏதேனும் மாகாணத்துக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடப்பரப்புக்கு அம்மாகாணத்தைச் சேர்ந்த பொலிசுப் படை உறுப்பினர்களின் தத்துவங்களையும், நியாயாதிக்கத்தையும் விசாலித்தல், ஆனால் ஒரு மாகாணத்தைச் சேர்ந்த, ஏதேனும் பொலிசுப் படையினரை அம் மாகாணத்துக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடப்பரப்பில், அவ்விடப் பரப்பு அமைந்துள்ள மாகாண சபையின் சம்மதமில்லாது தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் பிரயோகிக்க இயலச் செய்யமுடியாது. ஏதேனும் மாகாணத்துக்கு வெளியேயுள்ள புகையிரத இடப்பரப்புகளுக்கு அம்மாகாணத்தைச் சேர்ந்த பொலிசுப் படையினரின் தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் விசாலித்தல்.

**வெளிநாட்டு அலுவல்கள் :**

**இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –**

(அ) வெளிநாட்டு அலுவல்கள் ; இலங்கை அரசாங்கத்தை வேறு ஏதேனும் வெளிநாட்டுடன், உறவுகொள்ளவைக்கும் எல்லாக் கருமங்களும் ;

(ஆ) இராஜதந்திர, காவற்றூது மற்றும் வியாபாரப் பிரதிநிதித்துவம் ;

(இ) ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்பு ;

(ஈ) சர்வதேச மாநாடுகள், கழகங்கள் மற்றும் வேறு குழுக்கள் ஆகியவற்றில், பங்குபற்றுதலும் அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தலும் ;

(உ) வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் சமவாயங்களையும் வெளிநாடுகளுடன் நடைமுறைப்படுத்துதலும் ;

(ஊ) போரும் சமாதானமும் ; அத்துடன்

(எ) வெளிநாட்டு நியாயாதிக்கம்.

**அஞ்சல், தொலைச்செய்திப் போக்குவரத்து, ஒலிபரப்பு, தொலைக்காட்சி**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) அஞ்சல் மற்றும் தந்திச்சேவை, தொலைபேசிகள், கம்பியிலி ஒலிபரப்பு மற்றும் அதையொத்த செய்திப் பரிமாற்ற வழிகள் ; அத்துடன்

(ஆ) திரையிடப்படுவதற்காக சினிமாப் படச்சுருள்களை அனுமதித்தல்.

**நீதித்துறையையும், நீதிமன்ற அமைப்பையும் பொறுத்தவரை நீதி**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) உயர்நீதிமன்றத்தின் அமைப்பும், ஒழுங்கமைப்பும், நியாயாதிக்கமும், தத்துவங்களும் (இது அத்தகைய நீதிமன்ற அவமதிப்பையும் உள்ளடக்கும்) அங்கு பெறப்படும் கட்டணங்கள் ; உயர் நிதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்கள் ஆகியவற்றின் தொழில்புரிவதற்கு உரித்துடைய ஆட்கள் ;

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமைப்பும், ஒழுங்கமைப்பும், நியாயாதிக்கமும், தத்துவங்களும், அங்கு பெறப்படும் கட்டணங்களும் ; அத்துடன்

(இ) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன தவிர்ந்த மற்றெல்லா நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கமும் தத்துவங்களும்.

**தேசிய வருமானம், பணக்கொள்கை, வெளிநாட்டு மூலவளங்கள் என்பன தொடர்பில் நிதி : சுங்கப்பகுதி**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) இலங்கை அரசாங்கத்தின் பகிரங்கக்கடன் ;

(ஆ) தாள்நாணயம் ; குற்றிநாணயம், சட்டப்பூர்வப்பணம், வெளிநாட்டு நாணயமாற்று ;

(இ) வெளிநாட்டுக் கடன்கள் ;

(ஈ) இலங்கை மத்திய வங்கி ;

(உ) தேசிய சேமிப்பு வங்கி ;

(ஊ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது மாகாண சபையினால் ஒழுங்கு படுத்தப்படும் தேசிய லொத்தர்கள் ;

(எ) வங்கித்தொழில் ;

(ஏ) நாணயமாற்று உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் இவைபோன்ற வேறு சாதனங்கள் ;

(ஐ) காப்புறுதி ;

(ஒ) பங்குத்தொகுதி மாற்றுக்களும், எதிர்காலஞ்சார் சந்தைகளும்;

(ஓ) இலங்கை அரசாங்கத்தினதும் மாகாணங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு ;

(ஔ) தனியாட்களினதும், கம்பனிகளினதும், கூட்டுத்தாபனங்களினதும் வருமானம், மூலதனம், செல்வம் என்பவற்றின் மீதான வரிகள் ;

(க) இறக்குமதி, ஏற்றுமதித் தீர்வைகளுட்பட சுங்கத் தீர்வைகளும், கலால் தீர்வைகளும் ;

(ங) ஓராம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட அளவுவரை தவிர, மொத்த விற்பனை வரவு வரிகளும் முத்திரைத் தீர்வைகளும் ;

(ச) ஓராம் நிரலில் குறித்துரைக்கப்படாத வேறேதேனும் வரி அல்லது கட்டணம்.

**வெளிநாட்டு வியாபாரம் ; மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும்.**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) வெளிநாடுகளுடன் வியாபாரமும் வர்த்தகமும் ; சுங்க முகவிடயங்களுக் கூடாக இறக்குமதி, ஏற்றுமதி ; சுங்க முகவிடயங்களை வரையறுத்தல் ; அத்துடன்

(ஆ) மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும்.

**துறைமுகங்களும் இறங்குதுறைகளும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) துறைமுகங்களின் எல்லைவரையறை, அங்குள்ள துறைமுக அதிகார சபைகளின் அமைப்பு, தத்துவங்கள் என்பன உட்பட, பாரிய துறை முகங்களென பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது இப்போதுள்ள சட்டத்தின்கீழ் அல்லது சட்டத்தினால் வெளிப் படுத்தப்பட்ட துறைமுகங்கள் ; அத்துடன்

(ஆ) துறைமுகத் தொற்றுத்தடைத் தனிப்படுத்தல், அதனோடு தொடர்புபட்ட வைத்தியசாலைகள் உட்பட, கடலோடிகளின் மற்றும் கடல்சார்ந்த வைத்தியசாலைகள்.

**விமானப் போக்குவரத்தும் விமானத்துறைகளும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

விமானவழிகள், வானூர்தி மற்றும் வான் கலமோட்டுச் சேவைகள் விமானத்தளங்களை ஏற்பாடுசெய்தல், விமானப் போக்குவரத்தையும் விமானத்தளங்களையும் ஒழுங்குபடுத்தலும் ஒழுங்கமைத்தலும், வானூர்திக் கலைக் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடுசெய்தலும், மாகாணங்களினாலும், ஏனைய முகவர் நிலையங்களினாலும் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய கல்வி மற்றும் பயிற்சி முதலியவற்றை ஒழுங்கு படுத்தலும்.

**தேசிய போக்குவரத்து**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) புகையிரதச் சேவைகள் ;

(ஆ) தேசிய பெருந்தெருக்கள் என பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத் தினால் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பெருந்தெருக்கள் ; அத்துடன்

(இ) புகையிரத, தரை, கடல், வான்மார்க்கமாக அல்லது இயந்திரப் பொறி முறையால் உந்தப்படும் கலன்கள் மூலம் தேசிய நீர்வழிகள் மார்க்கமாக பயணிகளையும் பண்டங்களையும் காவுதல்.

ஆறுகளும், நீர்வழிகளும், கப்பற்றொழில் மற்றும் கப்பற்போக்கு வரத்து, வரலாற்று நீர்ப்பரப்புக்கள், ஆள்புல நீர்ப்பரப்புகள் என்பன புறநீங்கலான பொருளாதார வலயம், கண்டமேடு, உள்நாட்டு நீர்நிலைகள் என்பன உட்பட

கரையோர வலயங்கள் ; 1 ஆம் நிரலின் 18 ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்குத் தவிர அரச காணிகளும் துறைமுகமும்.

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) கடற்கொள்ளைகள், வானில் அல்லது ஆழ்கடலில் புரியப்படும் குற்றங்கள், தரையில், ஆழ்கடலில் அல்லது வானில் தேசங்களின் சட்டத் துக்கெதிராக புரியப்படும் தவறுகள் ;

(ஆ) பொறிமுறையால் உந்தப்படும் கலன்களைப் பொறுத்தவரை, தேசிய நீர் நிலைகள் என சட்டத்தின்மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப் பட்ட உள்ளூர் நீர்வழிகள் மீதான கப்பற்றொழிலும் கப்பற்போக்கு வரத்தும் ; அத்தகைய நீர்வழிகளில் வீதியின் விதிப்பயன்பாடு ;

(இ) அலைபாய் நீர்ப்பரப்பு மீதான கப்பற்றொழிலும் கப்பற் போக்குவரத்தும் உட்பட கரையோரக் கப்பற்றொழிலும் கப்பற்போக்குவரத்தும் ; வணிகக் கடற்றுறைக் கல்விக்கும் பயிற்சிக்குமான ஏற்பாடும், மாகாணங்களி னாலும் வேறு முகவர் நிலையங்களினாலும் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய கல்வியையும், பயிற்சியையும், ஒழுங்குபடுத்துதலும் ;

(ஈ) ஒளிக்கப்பல்கள், கலங்கரை விளக்கங்கள் என்பன உட்பட வெளிச்ச வீடுகள் மற்றும் பாதுகாப்பான கப்பற்றொழில் மற்றும் வானூர்திப் போக்குவரத்துக்கான வேறு ஏற்பாடு ;

(உ) இலங்கை அரசாங்கத்தினது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும் பொதுமக்கள் நலனுக்கு உசிதமான தென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்படாது இருக்குமளவுக்கு மாகாணங்களுக்கிடையிலான ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஊ) ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அப்பால் மீன் பிடித்தலும் மீன் பிடித்தொழிலும் ; அத்துடன்

(எ) இலங்கை அரசாங்கத்தின் ஆதனமும் அதிலிருந்து கிடைக்கும் வருமானமும் ; ஆனால் ஒரு மாகாணத்தில் அமைந்துள்ள ஆதனத்தைப் பொறுத்தவரை பாராளுமன்றம் சட்டத்தினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யும் அளவுக்குத்தவிர, மாகாணத்தினால் ஆக்கப்படும் நியதிச் சட்டங் களுக்கு அமைவாக இருக்கும்.

**கனிப்பொருள்களும் சுரங்கங்களும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) எண்ணெய்படுமிடங்களையும் கனிஎண்ணெய் மூலவளங்களையும் ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தி செய்தலும் ; பெற்றோலியம்

பெற்றோலியப் பொருட்களும் ; அபாயகரமாகத் தீப்பற்றுமியல்பின வெனச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்படும் ஏனைய திரவங்களும் பதார்த்தங்களும் ; அத்துடன்

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் கீழுள்ள அத்தகைய ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும் பொதுமக்கள் நலனுக்கு உசிதமானதென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டதாக இருக்கு மளவுக்கு சுரங்கங்களையும் கனிப்பொருள் அபிவிருத்தியையும் ஒழுங்கு படுத்துதல்.

**குடிவரவும் குடியகல்வும் குடியுரிமையும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) குடியுரிமை, நாட்டுரிமைப்பேறு அத்துடன் அந்நியர் ;

(ஆ) புறத்தொப்படைத்தல் ; அத்துடன்

(இ) இலங்கைக்குள் சேர்த்துக்கொள்ளல், இலங்கையை விட்டு வெளியேறுதல் அத்துடன் வெளியேற்றப்படுதல், கடவுச் சீட்டுக்களும் விசாக்களும் ;

**சனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் உட்பட தேர்தல்கள்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூரதிகாரசபை, மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் ; தேர்தல்கள் திணைக்களம்.

**குடிசன மதிப்பும் புள்ளிவிபரமும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) குடிசன மதிப்பு ; அத்துடன்

(ஆ) இந்த நிரலிலுள்ள கருமங்கள் எதனதும் நோக்கத்துக்காக விசாரணை கள், அளவீடுகள் மற்றும் புள்ளிவிபரங்கள்.

**உயர் தொழில் உத்தியோகங்களும் பயிற்சியும்**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்கள் ;

(ஆ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டனவும், முழுமையாகவோ பகுதியளவிலோ இலங்கை அரசாங்கத்தினால் நடாத்தப்படுவனவுமான அறிவியல் அல்லது தொழில்நுட்பக் கல்விக்கான நிறுவனங்கள் ;

(இ) (i) பொலிசு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் உட்பட உயர் தொழில், வாழ்க்கைத்தொழில் அல்லது தொழில்நுட்ப பயிற்சி ; அல்லது

(ii) விசேட கற்கைகளை அல்லது ஆராய்ச்சியை ஊக்குவித்தல் ; அல்லது

(iii) குற்றப்புலனாய்வில் அல்லது துப்புத்துலக்குவதில் விஞ்ஞான ரீதியான அல்லது தொழில்நுட்ப ரீதியான உதவி,

என்பவற்றுக்கான மாகாண முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ; அத்துடன்

(ஈ) உயர்கல்விக்கான அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்களிலும் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப நிறுவனங்களிலும் தராதர ஒன்றிணைத்தலும் தீர்மானித்தலும்.

தேசிய சுவடிக்கூடம் : தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவென பாராளுமன்றத்தினால் ஏதேனும் சட்டத்தின்மூலம் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்படும் தொல்பொருளியற் செயற்பாடுகளும் அமைவிடங் களும் தொல்பொருள்களும்.

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

புராதன மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங் களும் பதிவேடுகளும், தேசிய முக்கியத்துவம்வாய்ந்தனவென பாராளுமன்றத்தினால் சட்டத்தின்மூலம் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட தொல்பொருளியல் அமைவிடங்களும் புராதன சின்னங்களும்.

**I ஆம் நிரலில் அல்லது III ஆம் நிரலில் குறித்துரைக்கப்படாதனவான எல்லா விடயங்களும் பணிகளும்.**

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் –

(அ) இலங்கைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு யாத்திரைகள் ;

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் நிதிக்கூட்டுத்தாபனங்கள் உட்பட, வியாபாரக்கூட்டுத்தாபனங்களை கூட்டிணைத்தல், ஒழுங்குபடுத்துதல், அத்துடன் ஒடுக்குதல் ;

(இ) பல்கலைக்கழகங்கள் நீங்கலாக, ஒரு மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப் பட்டிராத குறிக்கோள்களையுடைய வியாபார அல்லது அதுவின்றிய கூட்டுத்தாபனங்களை கூட்டிணைத்தல், ஒழுங்குபடுத்துதல், அத்துடன் ஒடுக்குதல் ;

(ஈ) ஆக்கவுரிமைகள், புத்தாக்கங்கள், வடிவமைப்புக்கள், பதிப்புரிமை வியாபாரக் குறிகள், வணிகக் குறிகள் ;

(உ) நிறை மற்றும் அளவு தராதர நியமங்களைத் தாபித்தல் ;

(ஊ) இலங்கைக்கு வெளியே ஏற்றுமதிசெய்யப்படவுள்ள அல்லது ஒரு மாகாணத்திலிருந்து வேறொரு மாகாணத்துக்கு ஏற்றிச்செல்லப் படவுள்ள பண்டங்களின் தராதர நியமங்களைத் தாபித்தல் ;

(எ) எக்கைத்தொழில்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடு பொது மக்களின் நலனுக்கு உசிதமானதென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டதோ அக்கைத்தொழில்கள் ;

(ஏ) சுரங்கங்களின் தொழிலாளர்களையும் பாதுகாப்பையும் ஒழுங்கு படுத்தல் ;

(ஐ) இலங்கை அரசாங்கத்தின் முகவர் நிலையங்களினால் உப்பு உற்பத்தி செய்யப்படுதல், வழங்கப்படுதல், விநியோகிக்கப்படுதல்; ஏனைய முகவர் நிலையங்களினால் உப்பு உற்பத்தி செய்யப்படுதலையும், வழங்கப் படுதலையும் விநியோகிக்கப்படுவதையும் ஒழுங்குபடுத்தலும் கட்டுப் படுத்தலும்;

(ஒ) ஏற்றுமதிக்காக அபினை பயிரிடல்; உற்பத்திசெய்தல் மற்றும் விற்பனை செய்தல்;

(ஓ) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கைத்தொழில் பிணக்குகள்;

(ஔ) இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்டனவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டனவான அரும்பொருட்காட்சிச்சாலைகள், போர் நினைவிடங்கள் போன்ற நிறுவனங்கள்;

(க) இலங்கையின் பரப்பு அளவீடு, இலங்கையின் புவிச்சரிதவியல், தாவர வினவியல், விலங்கினவியல், மற்றும் மனிதவியல் அளவீடுகள், வளிமண்டலவியல் நிறுவனங்கள்;

(ங) தேசிய பகிரங்க சேவைகள்; தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு;

(ச) ஓய்வூதியங்கள் அதாவது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து கொடுபடற்பாலதான ஓய்வூதியங்கள்;

(ஞ) பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் என்போரின் சம்பளங்களும் படிகளும்;

(ட) பாராளுமன்றத்தினதும் உறுப்பினர்களினதும் பாராளுமன்றக்குழுக் களினதும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், பாதிப்பின்மைகளும், பாராளுமன்றக் குழுக்கள் அல்லது பாராளுமன்றத்தினால் நியமிக் கப்பட்ட ஆணைக்குழுக்கள் முன்னிலையில் கொடுப்பதற்காக அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்காக சமூகந்தரும் ஆட்களின் வரவை வலியுறுத்தல்;

(ண) சனாதிபதி மற்றும் ஆளுநர்கள் என்போரின் வேதனாதிகள், படிகள், சிறப்புரிமைகள், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகள், இலங்கை அரசாங்க அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளங்களும், படிகளும், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகளும், சேவை நிபந்தனைகளும்;

(த) மாகாணங்களுக்கிடையிலான குடியகல்வு, மாகாணங்களுக்கிடையிலான தொற்றுநோய்த்தடைத் தனிப்படுத்தல்;

(ந) இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான சட்டங்களுக் கெதிரான தவறுகள்; அத்துடன்

(ப) ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

## நிரல் III

**(ஒருங்கியை நிரல்)**

**1. திட்டமிடல்**

1:1 மாகாண மட்டத்தில் திட்டம் செயற்படுத்தல் ;
உபாயங்களை வகுத்தமைத்தலும் கணிப்பீடுசெய்தலும் ;

1 : 2 முன்னேற்றக் கட்டுப்பாடு ;

1 : 3 பகிரங்க, தனியார் துறை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்புச் செய்தல் ;

1 : 4 பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினதும் தொழில் முயற்சிகளினதும் செயற்பாட்டை மதிப்பீடு செய்தல் ;

1 : 5 திட்ட இலக்குகளை எய்துவதில் இயைபான தரவுகளை முன் வைத்தல் ;

1 : 6 திட்ட இலக்குகளின் எய்துகை சம்பந்தப்பட்ட தகவலைப் பரப்புதல் ;

1 : 7 செயற்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பிரசித்தஞ்செய்தல் ;

1 : 8 ஆள்வலுத் திட்டமிடுதல், ஊழியத் தரவு வங்கி ;

1 : 9 போசணைசார் திட்டமிடலும் நிகழ்ச்சித்திட்டங்களும்.

2. அத்துடன் 3. கல்வியும் கல்விச் சேவைகளும் - நிரல் 1 இன் (3) ஆம், (4) ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை தவிர, கல்வி.

4. உயர் கல்வி -

4:1 புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

4 : 2 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் பட்டமளிக்கும் நிறுவனங்களையும் அத்துடன், மூன்றாம் நிலை தொழில்நுட்ப, பாடசாலைப்பின் கல்விக்கும் பயிற்சிக்குமான வேறு நிறுவனங்களையும் தாபித்தல்.

5. தேசிய வீடமைப்பும் நிர்மாணமும் -

ஒன்றிணைந்த திட்டமிடல், மேம்படுத்தலும், நகர அபிவிருத்தி இடப்பரப்புக் களின் பொருளாதார சமூக, பௌதிக அபிவிருத்தியைச் செயற்படுத்தலும்.

6. ஆதனத்தைக் கொள்ளுதலும் தேவைக்கெடுத்தலும்.

7. சமூக சேவைகளும் புனர்வாழ்வளித்தலும்.

7 : 1 இடம்பெயர்க்கப்பட்ட ஆட்களுக்கு நிவாரணமளித்தலும், புனர்வாழ்வளித்தலும் அவர்களை மீளக் குடியிருத்தலும் ;

7 : 2 வெள்ளம், வரட்சி, கொள்ளைநோய்கள் அல்லது வேறு புற நீங்கலான காரணங்களின் விளைவான இடர்பாட்டுக்கு நிவாரணமளித்தலும், பாதிக்கப்பட்டோருக்குப் புனர்வாழ்வளித்தலும் அவர்களை மீளக்குடியிருத்தலும் ;

7 : 3 அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட பட்டினங்கள், கிராமங்கள், பகிரங்க நிறுவனங்களும் ஆதனங்களும், கைத்தொழில்கள், தொழிலிடங்கள், வழிபாட்டிடங்கள் வேறு ஆதனங்கள் என்பவற்றை மீளப் புதுப்பித்தலும் மீள நிர்மாணித்தலும், மறுசீரமைத்தலும் நட்டம் அல்லது சேதமுற்றுள்ள ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நட்டஈடு அல்லது நிவாரணம் அளித்தலும், குடியியல் வாழ்க்கையை மீள ஒழுங்கு படுத்தலும்.

8. கமத்தொழிலும் கமநலச் சேவைகளும் –

8 : 1 கமத்துடன் இணைந்த கைத்தொழில்களைத் தாபித்தலும் மேம்படுத்தலும் பண்ணைகளைத் தாபித்தலும் பேணுதலும், தனியார் நாற்று மேடைகளை மேற்பார்வை செய்தலும் ;

8 : 2 மண் வளம் பேணல் ;

8 : 3 தாவரப் பீடைகள்.

9. சுகாதாரம் –

9 : 1 துணைநிலையான மருத்துவ ஆளணியினருக்குப் பயிற்சியளிப்பதற்கான பாடசாலைகள் ;

9 : 2 ஒரு மாகாணத்தினுள் தனியார் மருத்துவப் பராமரிப்பை மேற்பார்வை செய்தலும், ஆதுலர் மனைகளையும் நோய்குறி கண்டறிதல் வசதிகளையும் கட்டுப்படுத்தலும் ;

9 : 3 சனத்தொகைக் கட்டுப்பாடும் குடும்பத் திட்டமிடலும் ;

9 : 4 மாகாண மருத்துவ சபைகளின் அமைப்பு

10. பிறப்புக்களை, திருமணங்களை, அத்துடன் இறப்புகளைப் பதிவு செய்தல்.

11. பட்டினங்களுக்கும் கிராமங்களுக்கும் மீளப் பெயரிடுதல்.

12. மாகாணத்தினுள் தனியார் லொத்தர்கள்.

13. விழாக்களும் கண்காட்சிகளும்.

14. உணவைப் பங்கீடு செய்தலும் உணவுக் கையிருப்புகளைப் பேணுதலும்.

15. கூட்டுறவுகள் – கூட்டுறவு வங்கிகள்.

16. நில அளவைகள் - மாகாண அல்லது ஒருங்கியை நிரலில் எடுத்துக் கூறப்பட்ட கருமங்களுள் எதனதும் நோக்கத்துக்காக.

17. நீர்ப்பாசனம் -

17 : 1 நீர் களஞ்சியப்படுத்தலும் முகாமை செய்தலும், வடிகாலமைப்பு அணைக்கட்டுகளும், வெள்ளப்பாதுகாப்பு, நீர் மூலவளங்களைத் திட்டமிடுதல் ;

17 : 2 கிராமிய அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, அத்துடன் தொழில் முறைப் பயிற்சி, கூட்டுறவு வேறு வசதிகளும் தொடர்பான அத் தகையனவாகவுள்ள, மாகாணங்களுக்கு இடையேயான காணி, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள்.

18. சமூகக் காடுவளர்ப்பும் காட்டு விலங்குகளையும் பறவைகளையும் பாதுகாத்தலும்.

19. கடற்றொழில் - ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கப்பால் மீன்பிடித்தல் அல்லாதது.

20. விலங்கு வேளாண்மை -

20 : 1 கால்நடைகளையும் கால்நடை உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்தலும், பதனிடுதலும், விநியோகித்தலும், விற்பனை செய்தலும் ;

20 : 2 விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் விஞ்ஞான சாதனத்தையும் ஏற்பாடு செய்தலுட்பட, விலங்கு மருத்துவப் பயிற்சிச் சேவைகளும் ஆராய்ச்சியும் ;

20 : 3 விலங்கு வளர்ப்பு, பராமரிப்பு, அத்துடன் சுகாதாரம் ;

20 : 4 மேய்ச்சல் நிலங்களைத் தாபித்தல்.

21. வேலைவாய்ப்பு -

21 : 1 மாகாண மட்டத்தில் வேலைவாய்ப்பு திட்டமிடல் ;

21 : 2 மாகாணம் தொடர்பான விசேட வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ;

21 : 3 மாகாணம் தொடர்பான இளைஞர் வேலைவாய்ப்புச் செயற்பாடு களை மேம்படுத்துதல் ;

21 : 4 மாகாணம் தொடர்பான தொழில்நுட்ப ஆள்வலு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.

22. உல்லாசப் பயணம் - மாகாணத்தில் உல்லாசப் பயணத் தொழிலை அபிவிருத்தி செய்தலும் கட்டுப்படுத்தலும்.

23. பின்வருவனவற்றிலான வியாபாரமும் வர்த்தகமும், அவற்றின் உற்பத்தியும், வழங்கலும், விநியோகமும் -

(அ) மத்திய அரசாங்கத்தினால் ஏதேனும் கைத்தொழிலின் கட்டுப்பாடு பொது மக்கள் நலனுக்கு உசிதமானதெனப் பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து அத்தகைய கைத்தொழிலின் உற்பத்திப் பொருட்களும், அத்தகைய உற்பத்திப் பொருட்களைப் போன்ற அதேவகையினவான இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களும் ; அத்துடன்

(ஆ) உணவுப் பொருட்களும், ஆடு, மாடுகள் தீனியும்.

24. செய்தித்தாள்களும், புத்தகங்களும், பருவவிதழ்களும் அத்துடன் அச்சகங்களும்.

25. இந்நிரலில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்களுக்கெதிரான தவறுகள்.

26. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

27. தருமங்களும் தரும நிறுவனங்களும், தரும, சமய அறக்கொடைகளும் அத்துடன் சமய நிறுவனங்களும்.

28. விலைக் கட்டுப்பாடு.

29. இந்நிரலில் அல்லது மாகாண சபை நிரலில் உள்ள கருமங்களுள் எதனதும் நோக்கத்துக்கான விசாரணைகளும் புள்ளிவிபரங்களும்.

30. உணவுப் பொருட்களையும் ஏனைய பண்டங்களையும் கலப்படம் செய்தல்.

31. ஔடதங்களும் நஞ்சுகளும்.

32. மாகாணத்தினுள் மின்னிணைப்பு வழங்கலை விசாலித்தலும், மாகாணத்தினுள் மின்சக்தி பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்துதலும் ஒழுங்குபடுத்துதலும்.

33. சூழலைப் பாதுகாத்தல்.

34. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, தொல்பொருள்சார் அமைவிடங்களும் புராதன விடங்களும்.

35. மனிதர்களை, விலங்குகளை அல்லது தாவரங்களைப் பாதிக்கின்ற தொற்று நோய்கள் அல்லது தொடுநோய்கள் அல்லது பீடைகளை ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குப் பரவுவதைத் தடுத்தல்.

36. யாத்திரைகள்.]